# தமிழ் உரை நடை

அ. மு. பரமசிவானந்தம்

தமிழ்க்கலைப் பதிப்பகம்
சென்னை-30.

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# தமிழ் உரை நடை

அ. மு. பரமசிவானந்தம்,

தமிழ்க்கலைப் பதிப்பகம்
சென்னை-30.

முதற் பதிப்பு, ஜூலை, 1959
இரண்டாம் பதிப்பு ஜூலை, 1967
மூன்றும் பதிப்பு ஏப்ரல், 1976

உரிமைப் பதிப்பு

விலை ரூ. 8-00

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை-1.

மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ், சென்னை-2

# முன்னுரை

இன்றைய உலகம் ஆராய்ச்சி உலகம். எதையும் ஆய்வுக் கண்ணோடு காண வேண்டி மக்கள் உழைக்கின்றார்கள். விண்ணையும் மண்ணையும் ஆராய்வதோடு, தங்கள் உணவு உடை முதலியவற்றின் தன்மைகளை ஆராய்வதோடு, தாங்கள் வாழும் நாட்டு வரலாறு, தாங்கள் பேசும் மொழி வரலாறு முதலியவற்றையும் ஆராய்கின்றார்கள் அறிவுடை மக்கள். அவ்வாராய்ச்சிகளின் பயனாக நாள்தோறும் பலப் பல புது நூல்கள் புதுப்புதுக் கருத்துக்கள் தாங்கிப் பல்வேறு மொழிகளில் வந்துகொண்டே இருக்கின்றன. இந்திய நாட்டிலேயும் தமிழிலும் பிறமொழிகளிலும் எத்தனையோ புத்தம் புதிய நூல்கள் வெளிவருகின்றன. அவற்றுள் சில மொழி வரலாறு பற்றி ஆராய்ந்த கருத்துக்களைத் தாங்கி வருகின்றன. தமிழிலும் அவ்வாறான நூல்கள் வருதல் வேண்டும்.

மொழி ஆராய்ச்சியாளர் திராவிட மொழிக் குடும்பமே பழமையானதென்றும், அக்குடும்பத்தே தமிழே தொன்மை வாய்ந்ததென்றும் கூறுகின்றார்கள். அத்தொன்மைத் தமிழ் மொழியை அறிஞர் பல துறைகளில் பல வகைகளில் ஆராய்கின்றனர். தமிழ் பற்றி ஆராய அறிஞர் பலரது பெரு முயற்சி தேவை. பல ஆண்டுகள் பல துறைகளில் முயன்று ஆராயின், எத்தனையோ உண்மைகள் புலப்படும். அந்த முயற்சியில் நல்லறிஞர் பலர் முன்னின்று தமிழன்னையை அணி செய்யும் இந்நாளில் நானும் ஓரளவு அத்துறையில் முயல நினைத்தேன். அம்முயற்சியின் பயனே இச்சிறு நூல்.

தமிழில் பாட்டும் உரையும் தொல்காப்பியனார் காலத்துக்கு முன்பிருந்தே நாட்டில் நிலவி வந்துள்ளன.

எனினும், சங்க காலத்திலும் இடைக்காலத்திலும் உரையினும் பாட்டே பலரால் போற்றப்பட்டு, பயிலப்பட்டு, நல்ல இலக்கியமாக வளர்ச்சியுற்றது. உரை தமிழில் இல்லையோ என்னுமாறு மறைந்துவிட்டது. இடைக்காலத்திலே சில பெருநூல்களுக்கு எழுந்த உரை நூல்களைத் தவிர்த்து, வேறு தனியான உரை நூல்கள் நாட்டில் உண்டாகவில்லை என்பதை அறிகிறோம். ஆனால், இன்று பாட்டினும் உரை நூல்களே நாட்டில் அதிகமாகப் பரவுகின்றன. இடைக்காலப் பா நூல்கள் பல இருந்தவிடம் தெரியாமல் மறைந்துவிட்டன. உரைநடை இடைக்காலத்தில் அதிகமாக வளராவிடினும், இன்று அது மிக அதிகமாக வளர்ந்து வருவதைக் காண்கிறோம். தொல்காப்பியர் காலத்தில் வாழ்ந்த உரைநடை இடையிடையே நிலை கெட்டிருப்பினும் இன்று தலை நிமிர்ந்து உள்ள கராணத்தால் அதன் வளர்ச்சிபற்றி அறிய விரும்புதல் இயல்பாகும். அந்தத் துறையில் உரைநடை ஆராய்ச்சியில் கருத்திருத்தியவர் மிகச் சிலரே. அவருள்ளும் திரு. செங்கல்வராயப் பிள்ளை அவர்களே ஆராய்ந்து ஆங்கிலத்தில் தொகுப்பாக ஒரு நூல் எழுதியுள்ளார்கள். ஒரு சிலர் சில கட்டுரைகளை எழுதியுள்ளார்கள். எனினும், தமிழில் தமிழ் உரைநடை பற்றி விளக்கமாக அன்று முதல் இன்று வரை உள்ள உரை நலம் கண்டு ஆராய்ந்து வெளி வந்த நூல் இல்லை. எனவே, அத்துறையில் கருத்திருத்தினால் நாட்டுக்கும் மொழிக்கும் பயன் உண்டு என்ற கருத்தால் இந்நூலை எழுத நினைத்தேன். தொல்காப்பியர் காலந்தொடங்கி இன்று வரை வளர்ந்த உரைநடைகளைக் காலந்தொறும் வகுத்து வைத்த முறையில் எடுத்துக் காட்டியுள்ளேன். உரைநடை என்பது என்ன என்ற ஆராய்ச்சியில் மேலைநாட்டுப் பேரறிஞர்கள் அது பற்றிக் கொண்ட கருத்துக்களை ஓரளவு காட்டியும், அவை தமிழ் உரைநடைக்கும் பொருந்தும் வகையினை விளக்கியும் உள்ளேன். வடமொழி தமிழொடு கலந்து உரைநடையில் பயில்வதைத் தனியாக எடுத்துக் காட்டியுள்ளேன். அழியா எழுத்துக்களாகிய கல்வெட்டுக்களைத் தனியாகப் பிரித்துள்

ளேன். உரையாசிரியர்களை இரு பகுப்பாகப் பிரித்து, காலத்தால் முன்னைய பின்னைய உரையாசிரியர்களாக்கி, அவரவர் தொண்டுகளையும் காட்டியுள்ளேன். பிற்காலத்தில் மேலை நாட்டார் உரைநடைக்குச் செய்த தொண்டினையும், இன்று உரைநடை வளரும் நிலையையும் காட்டியுள்ளேன். இவ்வாறு என் ஆய்வு நிலைக்கேற்பத் தமிழ் உரைநடை பற்றியும், அது அன்று தொட்டு இன்றுவரை வளர்ந்த நிலைபற்றியும் இந்நூலில் ஓரளவு எடுத்துக்காட்ட முயன்றுள்ளேன். 'தமிழ் உரைநடை இலக்கியங்களின் வளர்ச்சி வரலாற்றைத் திட்டமாய்த் துணிந்து எழுதுவதற்கு வேண்டிய துணைக் கருவிகள் இலவெனினும், கிடைக்கின்ற கருவிகளைக் கொண்டு ஒருவாறு துணிந்து எழுதலாம்' (கலைக் களஞ்சியம், Vol. V பக். 499-500) என்ற கூற்றின்படி இவ்வுரைநடை ஆராய்ச்சி பற்றி ஆராய்ந்து நான் என்னால் இயன்ற அளவு முயன்று இந்நூலை முடித்திருக்கிறேன். இத்துறையில் தமிழில் இது முதன் முயற்சி. தவறுகள் இருப்பின், காணும் அறிஞர்கள் காட்டுவார்களாயின், அடுத்த பதிப்பில் இந்நூல் திருத்தம் பெற வழியாகும்.

இந்நூல் வெளிவர உதவிய அனைவருக்கும் நன்றியுடையேன்.

தமிழ்க்கலை இல்லம்
சென்னை 30
1. 7. 59

அ. மு. பரமசிவானந்தம்.

## மூன்றாம் பதிப்பின் முன்னுரை

இந்த நூலை முதன் முதல் வெளியிடும்போது இதன் இரண்டாம் பதிப்பு வெளிவரும் என நான் கருதவில்லை. நாட்டில் இத்தகைய ஆய்வு நூல்கள் அன்று மட்டுமன்றி இன்றும் அதிகமாகப் போற்றப் பெறவில்லை என்பது கண்கூடு. எனினும் மொழி ஆய்வு செய்யும் வகையில் பல்கலைக் கழகங்கள் தமிழ் உரைநடை பற்றியும் ஆய்வு காணும் முறையில் இந்நூலையும் உயர் கல்வி பயில்வார்க்கு உறுதுணை ஆக்கி உள்ளமையின் இதன் மூன்றாம் பதிப்பு இப்போது வெளிவருகின்றது.

இவ்வுரை நடை பற்றி அன்பர்களும் அறிஞர்களும் தத்தம் கருத்துக்களை எழுதி, இதைப் பாராட்டியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் என் நன்றி உரித்து.

இன்று மொழி உணர் நெறி வளர்கின்ற காரணத்தாலும் பலரும்—தமிழரும் பிறரும்—இம்மொழி வளர்ச்சியை அறிந்து கொள்ள விரும்புவதாலும் இத்துறையில் இன்றும் பலர் கருத்திருத்தின் பயன் விளையும் என்று நம்புகிறேன். அதன் வழி தமிழ் உரை நடையின் ஏற்றமும் சிறக்கும்.

மறுமுறையும் அனைவருக்கும் நன்றிகூறி அமைகின்றேன்.

தமிழ்க்கலை இல்லம்
சென்னை-30
5—4—1976.

அ. மு. பரமசிவானந்தம்

# பொருள்


| | | |
|---|---|---|
| 1. | உரை நடையின் தோற்றமும் வளர்ச்சியும் | ... 1 |
| 2. | எது உரை நடை? | ... 27 |
| 3. | சிலப்பதிகார உரை நடை | ... 63 |
| 4. | தமிழ் உரை நடையில் ஒரு மைல் கல் | ... 78 |
| 5. | முன்னைய உரையாசிரியர்கள் | ... 97 |
| 6. | கல்வெட்டுக்கள் | ... 126 |
| 7. | தமிழும் வடமொழியும் | ... 143 |
| 8. | பிற்கால உரையாசிரியர்கள் | ... 164 |
| 9. | மேலை நாட்டார் தொண்டு | ... 185 |
| 10. | இருபதாம் நூற்றாண்டின் விடியலிலே | ... 203 |
| 11. | நேற்றும் இன்றும் | ... 219 |
| | Books Referred | ... 233 |
| | எடுத்தாண்ட தமிழ் நூல்கள் | ... 234 |

# I

# உரைநடையின் தோற்றமும் வளர்ச்சியும்

மொழிகள் தோன்றிய நாளை இன்று ஆசிரியர் சிலர் ஆய்ந்து கண்டுகொண்டிருக்கின்றனர். உலகில் உள்ள மக்கள் இன்று பல்வேறு மொழிகளைப் பேசுகின்றார்கள்; என்றாலும், அவற்றை ஒரு சில இனங்களாகப் பிரித்து, அவ்வவற்றின் இலக்கணங்களை மொழிநூல் ஆராய்ச்சி யாளர் காட்டுகின்றனர். ஆயினும் அம்மொழிகளின் தொன்மையையும், அவை தோன்றிய நாளையும் வரை யறுக்கப் பெரிதும் இடர்ப்பட வேண்டியுள்ளது. மனித வரலாறு எப்படி வரையறுக்க முடியாத ஒன்றாகிக் காலத் தால் நீண்டுகொண்டே செல்லுகிறதோ, அப்படியே மொழி வரலாறும் செல்கிறது என்பர் ஆய்வாளர். அப் படித் தோன்றிய மொழியும், அன்றே இன்றுபோலப் பல வகைகளாகப் பிரிந்தோ, பண்பட்டோ இருக்கவழியில்லை. மனித வரலாற்றில் எந்நிலையில் பழங்கால மனிதன்-கற் காலத்துக்கு முன் வாழ்ந்த மனிதன்—வாழ்ந்தானோ, அதே நிலையில் அக்கால மொழியும் வாழ்ந்திருக்கும்; அம்மொழி ஒன்றிலிருந்து பல கிளைத்து, மக்கள் பிரியப் பிரியப் பல்கிப் பெருகியிருக்க வேண்டும்.

தென்னிந்தியாவைப் பொறுத்த வரையில் **திராவிட மொழிக்** குடும்பமே அன்றும் இன்றும் ஆட்சி செலுத்து கிறது. அக்குடும்பத்துள் சிறந்தது **தமிழ்மொழியே** என் றும் காலத்தால் முந்தியதும் அதுவே என்றும் வரலாற் றாளரும் மொழி ஆய்வாளரும் ஒருசேர ஒப்புக்கொள்ளு கின்றனர். இத்தகைய தமிழ் மொழியில் என்று இலக்கிய

இலக்கணங்கள் தோன்றின என்பதை ஆராய்கின்றனர். பெரும்பாலரான ஆய்வாளரும் வரலாற்று ஆசிரியர்களும் இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வளமான இலக்கியங்களும் அவை பற்றி எழுந்த இலக்கண நூல்களும் தமிழில் உள்ளன எனக் காண்கின்றனர். அக்காலத்தில் எழுந்த எத்தனையோ நூல்கள் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. என்றாலும், தமிழில் மிகப் பழையதாகக் காணப்பெறும் தொல்காப்பியத்தை இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நூலாகக் காண்கின்றார்கள் அறிஞர்கள். எனவே, கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் பல வகைகளில் வளர்ந்து வருகின்றது என்னலாம்.

தொல்காப்பியர் காலத்திற்கு முந்தியும் அக்காலம் தொட்டும் தோன்றிய இலக்கியங்கள் இன்றுவரை வளர்கின்றன. அவ்விலக்கியத்தைப் பாட்டும் உரையும் என இரண்டாகப் பிரிக்கின்றனர் அறிஞர். பாட்டினைப்பற்றி பல இலக்கியங்களும் இலக்கணங்களும் தோன்றி உள்ளன. ஆனால், உரை அல்லது உரைநடையைப் பற்றிய இலக்கண நூல்களே இல்லை. ஏன் அப்படி? தொல்காப்பியர் காலத்தில் உரைநடை நூல்கள் இருந்தனவெனக் காண்கின்றோம். அவை கால வெள்ளத்தில் வாழாது வீழ்ந்தன போலும்! என்றாலும், உரை நாட்டில் அடியோடு அழியவில்லை; அப்படியே நீறுபூத்த நெருப்பாய் இருந்து இடைக்காலத்திலும் இந்த நூற்றாண்டிலும் நன்கு சிறக்கத் தலை நிமிர்ந்து ஓங்கியுள்ளது. இவ்வாறு தமிழில் தோன்றி வளர்ந்த உரை நடையின் சிறப்பைக் காண்பதே நம் நோக்கமாகும்.

தமிழில் உரைநடையின் தோற்ற வளர்ச்சியைக் காண்பதன்முன், முதலில் தோன்றியது பாட்டா உரையா என்பதை ஒரு சிறிது எண்ணிப் பார்க்கலாம். இன்று காண்கின்ற இலக்கியங்களை வைத்துக்கொண்டு, 'பழங்

காலத்தில் பாட்டுக்களே இருந்தன. எனவே, பாட்டே முன் தோன்றிற்று,' என்று சுலபமாக யாரும் கூறிவிட முடியாது. ஏனெனில் தொல்காப்பியத்திலேயே உரை நடையைப் பற்றிய இலக்கணம் உள்ளது. 'இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்புதல்' மரபாதலின், அக்காலத்தில் வாழ்ந்த உரைநடை இலக்கியத்தைக் கண்டே அவர் அத்தகைய இலக்கணத்தைச் செய்தார். எனவே, பாட்டும் உரையும் மிகு பழங்காலந் தொட்டே தமிழில் வாழ்ந்து வருகின்றன என்பது பொருந்தும்.

தமிழில் மட்டுமல்லாது, பொதுவாக எல்லா மொழி களிலும் பாட்டும் உரையும் பயின்று வந்தாலும், அவற் றுள் எது முன் தோன்றியது என்பது ஆராய வேண்டிய ஒன்றேயாகும். எனது கருத்து, பாட்டினும் உரை நடை தான் முன்னே தோன்றியிருக்க வேண்டும் என்பது. மொழி வளர்ச்சியை நன்கு ஆராய்ந்தாலும், பாட்டு முதலில் தோன்றக் காரணம் இல்லை என்பது நன்கு புலனாகும். மொழியின் முதல் நிலையாய எழுத்துக்கள் தோன்றி, அவ்வெழுத்துக்களைத் தனித்தனியாக நாவால் சொல்லிச் சொல்லி, இரண்டோர் எழுத்துக்களைப் பிணைத்து, பிறகு மெல்லப் பேசத் தொடங்கியிருப்பார்கள் முன்னைய மனிதர்கள். அவர்கள் அவ்வாறு பேசியது உரைநடையே யன்றிப் பாட்டாக அமையாது. இலக்கிய இலக்கணங் கள் நன்கு பயின்ற மக்கள்கூட இன்று ஒருவருடன் ஒருவர் கலந்து பேசும்போது உரைநடையில் பேசுவதைத்தான் காண்கின்றோம். இப்படியிருக்க, அந்த முதல் மனிதர்கள் மட்டும் எப்படிப் பாடி யிருப்பார்கள்? கரடு முரடான சொற்களை நிறுத்தி நிறுத்தி, ஒன்றன் பின் ஒன்றாக மெள்ளப் பொருத்தி, உரை நடையாகவே அவர்கள் பேசி யிருக்க வேண்டும். மொழி தோன்றிய அந்த நாளிலேயே எந்த மனிதனும் அழகாகப் பாடிவிடமாட்டான் என்பதை

அனைவரும் ஏற்றுக்கொளவர். எனவே, முதலில் கூட்டிப் பேசும் - சொல் சேர்த்து எழுதும்-உரை நடையே உண்டாகியிருக்கவேண்டும். பின்பு காலப்போக்கில் மனிதனது அறிவும் கற்பனைத் திறனும் வளர வளர, அவற்றிற்கேற்ப மொழியும் செம்மை நிலையுற்ற பிறகு நெடுங்காலம கழித்தே பாட்டுத் தோன்றியிருக்க வேண்டும்!

சில மேலைநாட்டு ஆய்வாளர்களும் அவர்களை ஒட்டி எழுதும் நம் நாட்டவர் சிலரும் பாட்டுத்தான் முதலில் தோன்றி யிருக்கவேண்டும் என்று எழுதியுள்ளார்கள். அவருள் **சர் பிலிப் சிட்னி**[1] என்பார் கூற்றை இங்குக் காணலாம். அவர் பழங்கால இலக்கிய வளம் சான்ற கிரீக்கு இலக்கியத்தை எடுத்துக்கொண்டு, **ஹோமர்** முதலியவர்களைக் காட்டி, அவர்களுக்கு முன் வேறு இலக்கியங்கள் இல்லாமையாலும், அவை அனைத்தும் பாட்டுக்களாகவே இருப்பதாலும் பாட்டு உரைநடைக்கு முற்பட்டு, முதலில் தோன்றியது எனக் காட்ட விரும்புகிறார்.[2] அதற்கு ஏற்ற நிலை தமிழ்நாட்டிலும் உள்ளது. இன்று தமிழில் நாம் காணும் பழம் பேரிலக்கியங்கள் பாட்டிலேதான் இருக்கக் காண்கிறோம். ஆனால், இதைக்கொண்டு அதற்குமுன் ஒன்றும் இல்லை என்று சொல்ல முடியுமா? அவரே மற்றோரிடத்தில் காட்டுமாறு செய்யுள் அல்லது பாட்டு, புலவனுடைய உயர்ந்த கற்பனைத் திறனைக் காட்டும் சிறந்த கண்ணாடியாய் விளங்குகிறது[3]. கற்பனை நிலைக்கு மனிதன் வருமுன் எத்தனை எத்தனையோ காலங்களைக் கடக்க வேண்டுமே! கற்பனை உளத்தை உலகுக்கு உருவாக்கி எடுத்துக்காட்ட

1. Sir Philip Sidney in *Apology for Poetry* (Apologie for Poetrie)

2. Ibid. page, 3.

3. Ibid. page, 10.

அவன் எத்துணை மொழி வளம் பெற்றவனுய் இருக்க வேண்டும்! அந்த மொழி எப்படி வளர்ந்தது? திடீரெனக் கற்பனையும் மொழியும் ஒன்ருகத் தோன்றிவிட்டனவா? ஆம் என்பாரும் உளரோ?

பிறந்த குழந்தை மொழி அறிந்தவுடன் பாடத் தொடங்கிவிடுகிறதா? முதல் முதல் சிறு சிறு சொற்களாக-'அப்பா, அம்மா' போன்றவைகளாக-அவற்றையும் மெள்ள மெள்ள எழுத்தெழுத்தாகத்தானே பேசத் தொடங்குகின்றது? அப்படித்தானே மனித வாழ்வின் குழந்தைப் பருவமும் அமைந்திருக்க வேண்டும்? ஆகவே, மெள்ள மெள்ள ஒலி வடிவிலே தான் பெற்ற எழுத்தைத் தனித் தனியாக உச்சரித்துப் பதமாக்கி உரைநடையில் பேசிய பின்பே, பல காலம் கழித்தே அவன் பாடத் தொடங்கியிருக்க வேண்டும். சிலர், 'குழந்தை முதலில் அழத்தானே செய்கிறது? அந்த அழுகையில் இனிய பாட்டொலி இருக்கிறதே! அதனுல், பாட்டுத்தான் முதலில் பிறந்திருக்க வேண்டும்' என்பர். இது எவ்வாறு பொருந்தும்? அழுகை ஒலி அழகான முகாரி இராகமாகலாம். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனுல், அது எம்மொழியில் உள்ளது? அல்லது அது அழும்போது பாட்டுப் பாடியா அழுகிறது? எனவே, குழந்தை அழுகை ஒலி எழுப்புகிறதே ஒழிய, அது தமிழில் பாடத் தொடங்கிவிடவில்லை யன்ருே? முதலில் தோன்றிய ஒலி பாட்டொலியாகலாமே ஒழிய, அந்த ஒலியே மொழிக்கு முதலாக நிற்கும் எழுத்தொலியாக - பொருள் பொதிந்த ஒலியாக - பாட்டாய் விளங்கிற்று எனக் கொள்ள முடியுமா? அப்படியானுல், குழந்தை கற்காமலே பிறந்தவுடன் தன் மொழியில் பாடத் தொடங்குமா? இவையெல்லாவற்றையும் ஆய்ந்து நோக்கின், குழந்தை வளர்ச்சியிலாயினும் சரி, மனித இன வளர்ச்சியிலாயினும் சரி, மொழி சிறுகச் சிறுக எழுத்தாகி, எழுத்து சொல்லாகி,

சொல் சொற்றொடர் அல்லது வாக்கியம் அல்லது உரை நடையாகி, பிறகு கடைசியாகக் கற்பனையோடு கலந்தோ, அன்றித் தனித்தோ, பாட்டு உருவாகியிருக்கவேண்டும் என்ற முடிபு ஏற்றுக்கொள்ளத்தக்க முடிபாகவே நிற்கும். இந்த நிலை எந்த மொழிக்கும் இயைந்த ஒன்றெனக் கொள்ளலே பொருத்தமானதாகும். பழங்காலத்துக் கிரேக்க, உரோம, தமிழ் நாட்டு மொழிகளுக்கும், பிற்காலத்தில் தோன்றிய ஆங்கிலம் போன்ற மொழிகளுக்கும் இவ்வுண்மை ஒன்றேயாம். பழங்காலத்தின் மொழி வளர்ச்சியை நம் கண்ணுலும் கருத்தாலும் காணமுடியவில்லை. ஆனல், இக்காலமொழிகளைக் காண முடிகின்றதே! அதைக் கொண்டாயினும் பழங்கால இலக்கியத் தோற்றத்தையும் அதன் அடிப்படையான மொழித்தோற்றத்தையும் அறிந்து கொள்ளவேண்டாவா?

'தமிழில் மிகு பழங்கால இலக்கியம் எனக் காண்பன வெல்லாம் பாட்டாகவே இருக்கின்றன. எனவே, தமிழில் உரைநடையே தோன்றவில்லையோ!' எனச் சிலர் ஐயுறுவர். அது தவறு; மொழி வரவாற்றுக்கு முரணனது. தமிழில் முதன்முதல் உரைநடையே தோன்றி வளர்ந்திருக்க வேண்டும். பல காலம் கழித்தே பாட்டு உருப்பெற்றிருக்கும். தமிழ், காலத்தால் மிகு பழமை வாய்ந்த ஒரு மொழியாதலால், என்று உரை தோன்றிற்று, என்று பாட்டுத் தோன்றிற்று என்பதை இன்று நம்மால் வரையறுக்க முடியவில்லை. என்ருலும், தமிழில் உரை நடை பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் நன்கு பயின்றிருந்த காலம் ஒன்று இருந்து, கழிந்திருக்க வேண்டும் என்பதை மறுப்பார் யார்?

மக்கள் நல்ல தெளிந்த அறிவு நலம் பெற்று, எளிமையில் மொழி கைவரப் பெற்ற அந்தக் காலத்திலே தான் பாட்டு உருப்பெற்றிருக்க வேண்டும். ஒருவர் தம் கருத்தை மற்றவருக்குப் பாட்டிலே இசைத்துச் சொல்லவும்.

அப்பாட்டினைக் கேட்டே பொருள் அறிந்து மற்றவர் செயலாற்றவும் வல்லவராயின், அவர்கள் அம்மொழியில் வல்லவராகவே இருக்க வேண்டும் என்பது ஒருதலை யன்றோ! ஆம்! அந்நிலை கொண்டு நோக்கின், சங்க காலம் தமிழ்நாட்டு அறிவறிந்த—பண்பட்ட—சிறந்த ஒரு பொற்காலமாய் விளங்கியிருந்ததென்பதை யாவரே மறுக்கற் பாலர்? அக்காலத்தில் அரசன் முதல் ஆண்டி வரை ஆண்களே யன்றிப் பெண்களுங்கூட இனிய தமிழில் பாட்டாகத் தத்தம் கருத்தை எடுத்துக்காட்டி விளங்க வைத்த திறமும், அப்பாட்டின் பொருளறிந்து செயலாற் றிய மக்கள் திறமும் போற்றக்கூடியன அல்லவா? ஆம்! அந்தக் கடைச்சங்க காலத்திலே மக்கள் அறிவறிந்த வராய் இருந்தமையின், அவர்தம் கருத்துப் பரிமாற்றத் திற்குப் பாட்டே பயன்பட்டது. என்றாலும், அது கொண்டு, அதற்கு முன் தமிழில் உரையே வழக்கத்தில் இல்லை என்று யார் கூற முடியும்?

தமிழ்நாட்டில் உரையும் பாட்டும் ஒன்றினோடொன்று (விரவிக்) கலந்தே வந்தன என்றும், மக்கள் இரண்டை யுமே நன்கு பயின்று போற்றி வந்தார்கள் என்றும், மக்களது இரு செவிகளிலும் அவ்விரண்டும் பயின்று வந்தன என்றும், அவ்வாறு பயிலாத—இரண்டையும் கற்றுக் கேட்டு அறியாத—செவிகள் இருப்பினும் பய னில்லை என்றும் ஒரு பாடல் நமக்கு நன்கு அறிவுறுத்து கின்றது. அதனால், பாட்டும் உரையும் பயின்று வந்து மக்களிடை விரவி உள்ளமையும் அதனாலேயே அவ் விரண்டையும் மக்கள் நன்கு உணர்ந்தார்கள் என்பதையும் நாம் அறிகிறோம்.

**‘ பாட்டும் உரையும் பயிலா தனஇரண்டு**
**ஓட்டைச் செவியும் உள ’**

என்ற பாட்டிலே எவ்வளவு வேகமாகப் பாட்டையும் உரையையும் பயிலாத செவிகளை ஓட்டைச் செவி என்கின்றார்! இப்பாட்டு காலத்தால் பிந்திய தாகலாம். கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கதுதானே? எனவே, பழங்காலத்திலே பாட்டும் உரையும் பயின்றே வழக்கத்தில் இருந்தன என அறிகின்றோம்.

சோழன் **நலங்கிள்ளி** சங்க காலத்திலே வாழ்ந்த சிறந்த மன்னன். அவனை **முதுகண்ணன் சாத்தனார்** என்ற புலவர் பாராட்டிப் புகழ்கின்றார்; 'வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி, அருள வல்லை யாகு மதி,' என அவனுக்கு வாழ் வாங்கு வாழ வேண்டிய அற நெறியை வற்புறுத்தி உரைக்கின்றார். அதில் அவர் மன்னர் நில்லா உலகத்து நிலைமை தூக்கி மற்றவருக்கு உதவவேண்டிய நெறி இவை இவை என எடுத்துக் காட்டுகின்றார்; நில்லா உலகில் நிலைபெற வேண்டுமானால், அவர்கள் புலவர் பாடும் புகழைப் பெற்றவர்களாக வாழ வேண்டுமென்றும், புலவர் புகழ் இன்றேல், என்றென்றும் அவர்தம் பெயர் உலகில் நின்று நிலவாது என்றும் எடுத்துக் காட்டுகின்றார்; புலவர் பாடும் புகழுடையவரே இம்மையில் இசைபட வாழ்ந்து மறுமை இன்பத்தையும் மறுவிலா வகையில் எய்துவர் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றார். அப்படிக் காட்டும்போது புலவர் பாடும் புகழை அவர் அலசிக் காண்கின்றார். சேற்றிலே செந்தாமரை பிறக்கின்றது. அதில் ஆயிரக்கணக்கான இலைகள் தோன்றிக் கேட்பாரின்றி மறைகின்றன. ஆயினும், ஒரு சில பூக்கள் தம் அழகாலும் தோற்றத்தாலும் மக்களை தம் வழி ஈர்க்கின்றன. ஆம்! அம்மலர்கள் நிலையிலே புலவரால் பாடப்படும் புகழுடையோர் வாழ்வார்கள் என்கின்றார். அப்புலவர்கள் எப்படிப் பாடுவார்கள்? இப்பாடலைப் பாடிய புலவர் முது கண்ணன் சாத்தனார் சிறந்த கவிஞர்.

அழகிய பாடலிலே தான் தாம் சொல்ல வந்த கருத்துக்களைச் சொல்லுகிருர். ஆயினும், புகழ் பாட அப்பாட்டே முடிந்த முடிபாகக் காட்டவில்லை. பாட்டு நாட்டில் பயின்று வந்த நெடுங்காலத்துக்கு முன்னே நாட்டில் இருந்தது உரையே என்பதை அவர் மறைக்கவில்லை; மறுக்கவு மில்லை. பாட்டுக்கு முன் உரையே பயின்ற வழக்கத்தில் இருந்ததென்பதைக் காட்டப் பாட்டுக்கு முன் உரைநடையினை வைத்தே காட்டுகின்ருர். "வண்ணத் தாமரை போன்று வையத்துப் புகழ் பெற்று வாழ்வார் யார்?' என்று கேட்பின், அவர் உரையும் பாட்டும் உடைய ஒருவரே," என்கின்ருர். எனவே, பாட்டால் புகழ் பாடுமுன் புலவர்கள் உரையாலேயே மன்னரையும் மற்றவரையும் புகழ்ந்து போற்றினுர்கள் என்பது தெரிகின்றது. ஆகவே, பாட்டின்முன் தமிழ் நாட்டில் உரை நடை வழக்கத்தில் இருந்தது என்பது நன்கு தெரிகின்றது.

**' சேற்றுவளர் தாமரை பயந்த ஒண்கேழ்**
**நூற்றிதழ் அலரின் நிரைகண் டன்ன**
**வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து**
**வீற்றிருந் தோரை எண்ணுங் காலை**
**உரையும் பாட்டும் உடையோர் சிலரே;**
**மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே.'** (புறம்-27)

என்ற பாடலின் அடிகள் **உரையுடைமையை** நன்கு காட்டுகின்றன வன்றோ?

இனி, உரைக்கும் பாட்டுக்கு முள்ள வேறுபாட்டினைக் காண்போம். ஆங்கிலத்தில் உரைநடையை 'Prose' என்று வழங்குகிருர்கள். Prose என்பதற்குச் சாதாரணமாக எழுதுவது என்றும், உள்ளதை உள்ளவாறே உரைத்தல் என்றும் பொருள் காண்கின்றனர். எனவே, ஒரு பொருளை இயல்பாக அதன் தன்மையால் போற்ற

வேண்டுவதற்குப் பயன்படுவது உரைநடை என்பது நன்கு தெரிகின்றது. ஆனால், பாட்டு அத்தகையதன்று; உள்ளது சிறத்தலோடு கவிஞனுடைய கற்பனையும் கலந்து எதுகை மோனைகள் விரவப் பாடுவதாகும். சங்க காலப் பாடல்களில் அத்துணை எதுகை மோனைகளைக் காண இயலாது. அக்காலப் புலவர்கள் வெறுஞ்சொல் லடுக்குகளைக்கொண்டு பாட்டிசைக்காது பொருளுக்கே ஏற்றம் தந்தவர்கள். ஆகவேதான் அவர்தம் பாடல்கள் பெரும்பாலும் உரைநடை ஒத்து, ஆசிரியப்பாவிலேயே அமைந்தனவாகி, எடுத்த பொருளை விளக்கும் திறத்தில் அமைந்து நிற்கின்றன. எனினும் அவை பாடல்களே. தொல்காப்பியத்தில் பல சூத்திரங்கள் பா, பாவினம் பற்றி விளக்கிக் காட்டுகின்றன. இந்த விளக்கங்களை நோக்கும்போது கடைச் சங்க காலத்துக்கு நெடுநாட் களுக்கு முன்னரே பாக்கள் தமிழில் விரவி இருக்க வேண்டும் என்பது நன்கு தெரிகின்றது, எனினும், அதற்கு முன்பே தமிழில் உரைநடை சிறந்திருக்க வேண்டும் என்பதை மறுக்க முடியுங்கொல்? உரைநடைதானே மொழியின் முதல் வளர்ச்சி!

தமிழ்ப் பாவிற்கு இலக்கணம் காணும்போது உரை நடைக்கு ஏன் இலக்கணம் காணவில்லை என்ற ஐயம் தோன்றக் கூடும்? பேச்சு நடைக்குத் தனித்த இலக்கணம் தேவையோ! இயல்பாக உள்ளதை உள்ளவாறே பேசியும் எழுதியும் வரும் உரை நடைக்குத் தனித்த இலக்கணம் தேவை இல்லையே! பொதுவாக மொழியின் இயல்பு கூறி, அதில் சொற்கள் வழங்க வேண்டிய வகைகளையும், இன்னின்ன சொற்கள் இன்னின்ன பொருள்வழி வழங்க வேண்டும் என்ற மரபு நெறிகளையும், பெயரும், வினையும் இடையும், உரியும் இயைந்து செல்லும் உரைநடை நெறி இத்தகையது என்ற முறை வகைகளையும் விளங்கக்

கூறுவன எல்லாம் உரை நடைக்கு வகுத்த இலக்கணங்க ளன்றி வேறென்ன?

செய்யுள் இயலிலும், உவம இயலிலும் சிறப்பாகப் பாட்டின் இலக்கணத்தையும், பொது இலக்கண அமைப்பில் அளபெடை, வழுவமைதி போன்ற செய்யுள்களுக்கு வேண்டிய சில சிறப்பிலக்கண நெறிகளையும் விதந்து கூறிப் பாட்டின் நலத்தை விளங்க வைத்த இலக்கண ஆசிரியர்கள், பிற எல்லாவற்றையும் உரை நடை இலக்கணத்துக்காக அமைத்துள்ளார்க ளன்றோ? ஒருமைப் பன்மை இலக்கண மும், உயர்திணை அஃறிணை இலக்கணமும் சொல்லாக்கங் களின் இலக்கணங்களும் பிற அனைத்தும் சாதாரணமாக மொழியை எழுதவும் பேசவும் பயன்படுகின்றவை அல்லாது வேறு என்ன? எனவே எந்த மொழியிலும் இலக்கண அமைப்புகளுள் பெரும்பாலானவை உரை நடை பற்றி வந்தன என்று கொள்ளலே பொருந்துவதாகும்.

இவ்வாறு வரையறை செய்யப்பட்ட இலக்கண வரம் புக்கு உட்பட்ட உரைநடையே மொழியில் பாட்டு உண்டா வதற்கு முன் தோன்றியிருக்க வேண்டும். மனிதன் மொழி யறிந்து, எழுத்துணர்ந்து பேசத் தொடங்கிய அந்தக் காலத் தில் பாட்டிலேயே பேசினன் என்பது சிறிதும் பொருந்தாத ஒன்றாகும். மொழி, ஒருவர் உள்ளத்துத் தோன்றிய எண்ணங் களை மற்றவருக்குப் புலப்படுத்தப் பயன்படுவதேயாகும். அந்தத் தொடக்க காலத்திலேயும் மொழி இதே பணியைத் தான் செய்து வந்தது. எனவே, மற்றவருக்குத் தன் கருத்தை விளக்க விரும்பிய ஒருவன், கேட்பவர் புரிந்துகொள்ளும் வகையில் எளிய முறையிலேதான் பேசியிருக்கவேண்டும். சொல், சொல்லாக வளர்ந்ததுதான் மொழி. முதலில் சிற்சில சொற்களே வழக்கத்தில் இருந்திருக்கும். வாழ்வின் இன்றி யமையாத் தேவையான பொருள்களுக்கே மனிதன் முதன் முதல் சொற்களை ஆக்கிக் கொண்டிருப்பான். அச்சொற்

களாலேயே தன் உள்ளக் கருத்தை மற்றவருக்கு உணர்த்தியிருப்பான். எனவே, அந்தத் தொடக்க நாளில் எதுகையும், மோனையும், கற்பனையும், அளபெடையும், பிற செய்யுள் இலக்கணங்களும் இருந்திருக்க வழியில்லை. ஓரளவு அறிவு வளரப்பெற்ற அந்தத் தொடக்க நாளில் மற்றவர் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய உரைநடையே வழக்கத்தில் இருந்தது என்பது தேற்றம்.

சரி; பின் ஏன் பாட்டு உண்டாயிற்று? அது எப்போது உண்டாயிற்று? மொழியின் வளர்ச்சியில் எத்தனையோ மாறுதல்களைக் காண்கிறோம். எழுத்துக்கள் மாற்றமும் வளர்ச்சியும் மொழிவளர்ச்சியில் ஒரு கூறு. அது போன்று பேச்சு வழக்கும், எழுத்து வழக்கும் பல்வேறு காலங்களில் பல்வேறு வகையில் மாறுபட்டிருக்கும். தோன்றி நெடுநாட்களான மொழியில் இந்த மாற்றங்களை எளிதில் காண்பதரிது, ஏனெனில் எத்தனையோ நூற்றுண்டுகளுக்கு முன்பே அது பெறக்கூடிய மாற்றங்களையெல்லாம் மிகுதியாகப் பெற்று, ஒரு நிலைத்த இடத்தே தனக்கென வரையறுக்கப்பட்ட இலக்கண வரம்பு பெற்று அமைந்த ஒரு மொழியாகிவிட்டது. முன்னர் பலப்பல நூற்றுண்டுகளில் மொழி பெற்ற மாற்றங்களை நாம் அறிய வரலாறு நமக்கு இடம் கொடுப்பதில்லை. தமிழ் அத்தகைய ஒரு தொன்மொழி. எனினும் காலத்தால் பெரிதும் பின் தோன்றிய ஆங்கிலம் போன்ற மொழிகளில் நடைபெறும் மாற்றங்களை நாம் நூற்றுண்டுதோறும் காண்கின்றோம். சென்ற நூற்றுண்டின் உரைநடை (19th century Prose) இன்று வழக்கழிதல் காண்கிறோம். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வந்த உரைநடை, இன்றைய உரை நடையினும் வேறுபட்டதாய் இருக்கிறது. இன்னும் அது பல மாற்றங்களைப் பெறும்போலும்! இவ்வாறு பல மாற்றங்களைப் பெற்றே இறுதியில் ஒரு நிலைத்த வகை

யில் அம்மொழி நிலைத்து நின்று வேறு பெருமாற்றங் களுக்கு இடமில்லாத வகையில் அமைந்து நிற்கும். ஆம். இந்த நிலையைத் தமிழ் மொழி இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே பெற்று விட்டது என்னலாம். எனவே, அதற்கு முன்பே உரையும் பாட்டும் தோன்றி தமிழ் மொழியைச் சிறக்கவைத்தன என்பது பொருந்தும்.

உரைநடை பாட்டினும் முந்திய ஒன்று என்பதைத் தொல்காப்பியம் வாயிலாகவும் நிறுவ வழி உண்டு. செய்யுள் என்னும் சொல் செய்யப்படும் அனைத்துக்கும் பொருந்துவதாகும். சொல்லைக் கொண்டு செய்யப் பெறு வதே செய்யுள். சொற்கோவை உரையாய் இருப்பின் **உரைச் செய்யுள்** எனவும், அதே சொற்கோவை பாட் டாய் இருப்பின் **பாச் செய்யுள்** எனவும் வழங்கப் பெறும். இச்செய்யுள் வகையையும் சிறப்பையும் பிறிதோரிடத் தில் காணலாம். இங்குச் செய்யுள் இலக்கணம் கூறவந்த தொல்காப்பியனுர், அந்த இயலில் உரை, பாட்டு இரண்டையுமே அடக்கிக் காட்டுகின்ருர். அவ்விரண்டினுள் எது தொன்மை வாய்ந்தது என்பதையும் அவர் காட்டத் தவறவில்லை. தொல்காப்பியச் செய்யுளியல் 238-ஆம் சூத்திரம்,

**“ தொன்மை தானே**
**உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே ”**

என்பதாகும். இது உரைபற்றி நன்கு விளக்குகின்றது என்பதை யாரே மறுக்கவல்லார்? இதற்கு உரையெழுத வந்த **இளம்பூரணர், ‘நிறுத்த முறையானே தொன்மைச் செய் யுள் உணர்த்துதல் நுதலிற்று’** என்று கூறி, தொன்மை யாவது, **உரையொடு பொருந்திப்** போந்த பழமைத்தாகிய பொருண் மேல் வருவன. அவை இராம சரிதமும் பாண்டவ சரிதமும் முதலாகியவற்றின்மேல் வரும் செய்

யுள்,' என்கின்ருர். பேராசிரியரும், "தொன்மை என்பது உரை விராய்ப் பழைமைவாகிய கதை பொருளாகச் சொல்லப்படுவது. பெருந்தேவனுராற் பாடப்பட்ட பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன" என்கின்ருர். நச்சினுர்க்கினியரோ, சிலப்பதிகாரமும் இதன்பாற்படு மெனக் கூறுகின்ருர்.

இவற்றையெல்லாம் ஒத்து நோக்கி ஆராயின், செய்யப்படுகின்ற உரைநடை பாட்டிற்கு முந்தியது எனக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அத்துடன் உரைநடை என்பது முன்னர் நடந்த நிகழ்ச்சிகளைக் கற்ருர் மட்டு மன்றிக் கல்லாரும் நன்கு புரிந்துகொள்ளக் கூடிய வகையில் விளங்கிய நடையில் பேசியோ எழுதியோ காட்டும் வகையது என்பதும் நன்கு புலனுகின்றது. எனவே, கற்பனையோடு கலந்த—ஒரு சிலர் மட்டும் அறிந்து பயன் கொள்ளக் கூடிய—பாட்டு நடையைக் காட்டிலும், உரை நடை முந்திய தாகி, எல்லா மக்களும் எளிதில் அறிந்து கொள்ளக் கூடியதாய், பண்டைக்காலத்தில் பெரும் பாலும் பழங்கதை பற்றியே வருவதாய் அமைந்த ஒன்ருகும். இன்று அவ்வுரைநடையே பிரிந்து பல்வேறு துறைகளில் புகுந்து பணியாற்றுகின்றது.

உண்மைதான். ஆனுல், அன்று தோன்றிய உரை நடை எங்கே? பாட்டு எப்படிப் பல்கிப் பெருகிற்று? அறிவு வளர வளரப் பாட்டும் பெருகும் என்பதை மேலே கண்டோம். ஒரு கால் தமிழ் நாட்டில் அனைவரும் நன்கு கல்வி கற்றிருந்தனர். அவர்கள் ஒருவரோடொருவர் பேசுவதெல்லாம் பாட்டிலேயே என்பது நன்கு தெரி கின்றது. உரைநடையைக் காட்டிலும் பாட்டைப் புரிந்துகொள்வது சற்றுக் கடினந்தான் என்ருலும், அதைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு நாட்டில் கல்வி சிறந்திருந்தது ஒரு காலத்தில். அக்காலத்தையே நாம்

**சங்க காலம்** என்கிறோம். சிறந்த புலவர் மட்டுமின்றி, சாதாரண மக்களுங்கூடத் தாம் சொல்ல வேண்டிய கருத்தைப் பாட்டாலேயே சொல்வதைக் காண்கின்றோம். மன்னர் செய்யும் தவறுகளை எடுத்துரைக்க நினைத்த சாதாரணக் கிராமங்களில் உள்ள பெண்டிருங்கூடத் தம் கருத்தைப் பாட்டாகவே கூறியுள்ளனர். காதல் இன்ப நினைவுகளையெல்லாம் பாட்டாலேயே விளக்குகின்றனர். கரிகாலன் முன் **வெண்ணி** என்ற ஊரில் வாழ்ந்த **குயத்தியார்** பேசியது பாட்டுத்தானே? இன்னும் **நச்செள்ளையார் மாசாத்தியார்** போன்ற மகளிர் எங்கோ சிற்றூர்களில் வாழ்ந்து நன்கு கற்றுத் துறைபோகிய காரணத்தால் தாம் தாம் கூறவந்த கருத்துக்களைப் பாட்டாகவே பாடிவிட்டனர். சங்ககாலப் புலவர் வரிசையைப் புரட்டிப் பார்ப்போமானால், கபிலர், ஔவையார், பரணர் போன்ற பெரும் புலவர்களே யன்றிச் சாதாரண மக்களுள் பலரும் எளிய கருத்துக்களையும் பாட்டாகவே பாடியதைக் காண இயலும். நாட்டில் கல்வி நலம் சிறந்தோங்கி நின்ற காரணமே மக்கள் இவ்வாறு உரைநடையை விட்டு, பாட்டுக்குப் போக நேர்ந்த ஒரு காரணமாகும். என்றாலும் இதைக்கொண்டே பாட்டுக்கு முன் வாழ்ந்த உரைநடையை இல்லை என்று சொல்ல முடியாது.

சங்ககாலத்துக்கு முன் வாழ்ந்த மக்கள் தாங்கள் பேசிய அத்தனையையும் எழுதி வைக்க வேண்டும் என்று நினைத்திருக்கமாட்டார்கள். அது தேவையற்றதுங்கூட. அவர்தம் உரைநடைகள் எழுதி வைக்கப்பெற்றிருப்பின், அவைகளே பல பேரிலக்கியங்களாய் விளங்கி இருக்கலாம். என்றாலும், சாதாரணப் பேச்சுக்களை யார் எழுதி வைப்பார்கள்? இன்றும் அவ்வாறு செய்பவரைக் காண்கிலோம். சங்க காலத்தில் கற்ற அறிவு காரணமாக, இயற்கைக்கு மாறுபட்ட நிலையிலே பேச்செல்லாம்

பாட்டாக வந்தமையின், அவற்றை எழுதி வைக்க வேண்டிய எண்ணம் அவர்களுக்குத் தோன்றியிருக்கக் கூடும். எனவே, அவர்கள் எழுதி வைத்தார்கள். வீட்டில் வைக்கும் புளிக்குழம்பின் சுவை முதல், நாட்டில் நடை பெறும் பெரும் போர் வரை—தனிப்பட்ட மனிதன் வாழ்வு முதல் சமுதாய வாழ்வு வரை—எல்லாவற்றையும் எழுதி வைத்து விட்டார்கள். எனவே, அவை அப்படியே இலக்கியங்களாகிவிட்டன. தாங்கள் பெற்ற இன்பத்தை இயற்கை வகையில் உரைநடையில் பேசியிருப்பார்களா யின் இத்துணை இலக்கியம் பெருகி இரா. தாங்கள் கற்ற அறிவின் திறத்தைப் பாட்டாக்கிப் பேசிய காரணமே இலக்கியப் பெருக்கத்துக்குக் காரணமாகியது. இவ்வாறு கற்றவர் மிக்கு இருந்த காலத்தில் பாட்டு வளர அதற்கு முன் இருந்த உரைநடை மெள்ள மெள்ள மறையலா யிற்று. அதை யாரும் எழுதி வைக்க நினையாமையும் பின் வந்த அறிவறிந்த மக்கள் கூட்டத்தின் கட்டுப்பாடும் ஒருசேரத் தமிழில் முதலில் தோன்றிய உரைநடையை இல்லையாகச் செய்துவிட்டன என்னலாம். இன்றைக்கும் நாளிதழ்களில் சாதாரணமான செயல்களைப் படிப்பதை விட்டு, இயற்கைக்கு மாறுபட்ட சில அற்புதத் திடீர் நிகழ்ச்சிகளைத்தானே ஆழ்ந்து காண்கிறோம்? பரபரப்பு அதைப் படிப்பதில்தானே உண்டாகிறது? இயற்கையாக வாழும் ஒருவனை யாரும் மதிப்பதில்லை. இயற்கைக்கு மாறு பட்டு உயர்ந்தோ தாழ்ந்தோ வாழ்வானாயின், அவனை உலகு நோக்குகிறது. எனவே, இந்நிலையில் இயல்பான உரை நடையை விட்டு, கற்பனைக் கவிதைகளையே அன்று எழுதி வைத்தனர். நாள்தோறும் இயல்பாக நிகழும் நிகழ்ச்சி களையா பத்திரிகைகள் எழுதிவைக்கின்றன? நம் நாட்குறிப் பிலும் நாள்தோறும் இயல்பாக நடப்பன பற்றியா நாம் எழுதுகிறோம்? அது போன்றே நாள்தோறும் சாதாரணப்

பேச்சு வழக்கில் உள்ள உரை நடையை எழுதாது சிறந்த முறையில் வந்த பாட்டுக்களையே பழங்காலத்தில் எழுதி வைத்தார்கள் என்னலாம்.

என்றாலும் உரைநடை அடியோடு அழிந்துவிடவில்லை. சில பாட்டுக்கள் உரைநடையைப் போலவே இருந்து வந்தன. நீறு பூத்த நெருப்பைப்போல உரைநடை பற்றிய உணர்ச்சி நல்ல மக்கள் மனத்தில் இருந்து கொண்டே வந்தது. எனவே அது கால வேகத்தில் மெல்லத் தலைகாட்டத் தொடங்கிற்று என்னலாம். சங்ககாலப் பாடல்களுள் பல உரை நடையாகக் கொள்ளத்தக்க வகையிலே அமைந்து கிடப்பதைக் காணலாம். 'நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே; மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்; அதனால், யான் உயிர் என்பது அறிகை, வேல் மிகு தானை வேந்தர்க்குக்கடனே', என்னும் இப்பாட்டில் உள்ள ஏகாரங்களை நீக்கிவிடின், இது உரை நடைதானே? 'அதனால்' என்ற தனிச்சொல் பேச்சு உரைநடை வழக்கத்தைத்தானே நமக்கு நினைவூட்டு கிறது? இதுபோன்று உரை நடை போல அமைந்து பாட்டாய் நிற்கும் பல பாடல்களைச் சங்க இலக்கியத்தில் காணலாம். அகவற் பாக்களுள் பெரும்பாலன உரை நடையாகத்தக்க வகையில்தானே அமைகின்றன? இது நிற்க,

இந்தச் சங்க காலத்தை ஒட்டி மறைந்த உரைநடை மீண்டும் தலை தூக்க ஆரம்பித்தது. மக்கள் உள்ளத்திலே மறைந்து கிடந்த உரை நடை வேட்கை பின் உருப்பெற்று வளரலாயிற்று. என்றாலும், இந்த உரையின் நடை சற்று உயர்ந்ததாய் இருந்தது. பாட்டிலும் உரைநடை உயர்ந்த தாய் இருக்கவேண்டும் என அக்கால உரைநடை நாட்டிய புலவர்கள் கருதியிருக்கக்கூடும். பாட்டிசைப்பவர் சிறந்த புலவர் என்றும் சாதாரணப் பேச்சுக்களையும் பாட்டாகவே பாடினர் என்றும் காணும்போது, அவர்கள் முன் மிகச்

சாதாரண உரைநடையை எழுதுதல் தம் மேதைத் தன்மைக்கு இழுக்கு என அவர்கள் நினைத்திருக்கலாம். ஆயினும், அதே வேளையில் அதற்காக முன் ஒருகால் வளர்ந்து வாழ்ந்த உரைநடையை விட்டுவிட அவர்கள் உள்ளம் இடம் தந்திராது. எனவே, பாட்டு நடையைக் காட்டிலும் கடினமான வகையிலே உரைநடையை ஆக்க வேண்டும் என்று திட்டமிட்டிருப்பார்கள் அக்கற்றறிந்தவர்கள். எனவேதான் சங்க காலத்தை ஒட்டி எழுந்த உரை நடைகள், செய்யுள் நடையைக் காட்டிலும் சற்றுக் கடினமானவையாக, உயர்ந்தனவாகவே அமைந்துவிட்டன போலும்!

இவ்வாறு மறைந்த உரைநடை தமிழில் புது உணர்ச்சியோடும், புதுநடையோடும் தோன்றி வளர்ந்து வரலாயிற்று. இன்றைய ஆராய்ச்சியின்படி சிலப்பதிகாரந்தான் இந்தப் புதிய உரைநடைக்கு வித்திட்டது என்பதைச் சிலப்பதிகாரத்துக்கே 'உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்ற பெயர் உண்டு என்பதனால் அனைவரும் அறிவர். இளங்கோவடிகள் மறைந்த உரைநடையை எடுத்துப் போற்றி மககள் முன் புது மெருகோடு கொண்டு வந்து நிறுத்தினார். ஆம்! அவர்தம் முயற்சி அப்போதே சிறந்த பயனைத் தரவில்லை என்றாலும், சில நூற்றாண்டுகள் கழித்து இந்த இருபதாம் நூற்றாண்டில் உரைநடை இலக்கியங்களே உலக இலக்கியங்களாகும் வகையில் வளர்ந்து வாழ்வதைக் காண, நாம் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப பட்டு இருக்கிறோம். இளங்கோவடிகள் புது மெருகிட்டுத் தோற்றி வைத்த அந்த உரைநடை இலக்கியம், நூற்றாண்டு தோறும் பல்வேறு சூழல்களுக்கு உட்பட்டு, சிறுகச் சிறுக வளர்ந்து, இன்று நம்முன் ஒரு பெருமலையாகக் காட்சி தருகின்றது. அவர் தொடங்கிய பணியை இதுவரையிலும்

சிறக்கவைத்த அறிஞர் பலர்; இன்றும் சிறக்க வைக்கின்ற அறிஞர் பலப் பலர்.

தமிழில் பாட்டும் உரைநடையும் மிகவும் பரவி வருகின்ற இக்காலத்தில் அவற்றின் தோற்ற வளர்ச்சிகளை ஆராய வேண்டிய இன்றியமையாத நிலை ஏற்பட்டுவிட்டது. மேலை நாட்டு அறிஞர்கள் பல காலமாகவே பாட்டையும் உரையையும் பகுத்துப் பார்த்து ஆராய்ந்து ஒவ்வொன்றைப் பற்றியும் அரிய பல நூல்களை எழுதி வெளியிட்டு வந்துள்ளார்கள். மேலும், ஆங்கில மொழியில் உரைநடை நூல்கள் பல நூற்றுண்டுகளாகவே தோன்றி வளர்ந்து வந்துள்ளன. இலத்தீன், கிரீக்குப் போன்ற பழம்பெரு மொழிகளில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உரைநடை இலக்கியங்கள் தோன்றி வளர்ந்துள்ளன என அறிகின்றோம். எனவே, அந்த நாட்டு மொழிகளிலே உரைநடை பற்றிய ஆய்வு நூல்களும் மிகு பழங்காலத்திலிருந்தே வளர்ந்து வந்து உள்ளன. தமிழிலே அந்த நிலையைக் காண இயலவில்லை. தொல்காப்பியர் காலத்திலே உரைநட இருந்ததாக இரண்டொரு சூத்திரங்கள்[1] காட்டுகின்றன. ஆயினும் அக்காலத்து உரைநடைகளை நம்மால் காண இயலாது. உரையாசிரியர்கள் அக்கால உரைநடைக்குத் **'தகடூர் யாத்திரை'** போன்றவற்றை உதாரணமாகக் காட்டுகின்றார்கள். ஆயினும், அவ்வாறு காட்டப்பட்ட உரை நூல்களும் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. எனவே, பழங்காலத்தில் தமிழ்நாட்டில் உரைநடை வழக்கில் இருந்தாலும் அது எவ்வகையில் இலங்கிற்று என்பதை அறிந்து கொள்ளும் வாய்ப்பு நமக்கு இல்லையாகிவிட்டது.

---

1. ' பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே '
(தொல் - செய். 79.)

' பாட்டிடை வைத்த குறிப்பி னானும் '
(தொல் - செய். 173.)

சங்க காலத்திலும் நாம் உரைநடையைப் பெற்றேமில்லை. சங்க காலத்தை ஒட்டி, சற்றுப் பின் எழுந்த காப்பியங் களுள் தலையாய சிலப்பதிகாரத்தைத்தான் 'உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்று ஆசிரியர்கள் காட்டு கின்றார்கள். என்றாலும், அதிலும் தொடர்ந்து உரைநடை யைக் காணுதல் அரிது என்னலாம். பின் நெடுங்காலம் கழித்து எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேதான் நாம் தெளிந்த உரைநடையைக் காண்கின்றோம். **இறையனார் களவியல் உரையே** அந்த உரைநடை நூலாகும். அதில் இறையனார் சூத்திரங்களுக்கு விளக்கமாக உரை எழுதப் பெற்றுள்ளது. அவ்வுரையில் மேற்கோட் செய்யுள்கள் தவிர்த்த மற்றவை உரைநடையாகவே அமைகின்றன. எனவே, அந்தக் காலத்திலேதான் தமிழ்மொழியின் உரை நடை இத்தகையது என்பதை அறியமுடிகின்றது.

எட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு இறையனார் களவியல் உரையைப் போன்ற பல தோன்றியிருக்கக் கூடும். அவற்றைப் பற்றி நம்மால் ஆய்ந்து பார்க்க இயலவில்லை. என்றாலும், அதற்கடுத்த இரண்டொரு நூற்றாண்டுகள் கழித்து, தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களுக்கும் பத்துப்பாட்டுப் போன்ற இலக்கியங்களுக்கும் உரை எழுத அறிஞர் பலர் முன் வந்தனர். அவர்தம் உரைவழித் தமிழில் உரைநடை நன்கு வளர்ந்தது என்னலாம். அவரவர் காலத்து நாட்டு நிலை, பிறநாட்டாரது கலப்பு, அவர்தம் மொழி ஆதிக்கம் முதலியவற்றின் அடிப்படையிலே உரைகள் செல்கின்றன என்னலாம். உரையாசிரியர்களுள் **இளம் பூரணர், பேரா சிரியர், நச்சினார்க் கினியர், பரிமே லழகர், சேனு வரையர் அடியார்க்கு நல்லார்** போன்ற ஒரு சிலர் மிக முக்கியமான நிலையில் நல்ல நூல்களுக்கு உரை கண்டுள்ளார்கள். சுமார் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கும் பதினைந்து பதினாறும்

நூற்றுண்டுக்கும் இடையில் வாழ்ந்த இவர்கள் தமிழில் நூல்களுக்கு உரை எழுதுவதன் மூலம் உரைநடையை வெளியிட்டு வளர்த்தார்கள் என்னலாம்.

ஏறக்குறைய இக்காலத்திலேயே வேருெரு வகையில் உரைநடை வளர்ந்தது என்னலாம், அதுதான் **கல்வெட்டு** முறை. பல்லவர் காலத்திலேயே செப்புப் பட்டயங்கள் தோன்றி விட்டன என்ருலும், தெளிந்த நல்ல நடையில் தோன்றிய கல்வெட்டுக்களின் காலம் பிற்காலச் சோழ பாண்டியர் காலமேயாகும். அக்கல் வெட்டுக்களில் ஒரு சில பகுதிகள் ஆசிரியப்பா வெனும்படி பா நடையில் அமைகின்றன என்ருலும், பெரும்பாஃலும் உரை நடையா லேயே அமைந்தன என்னலாம். வாழ்ந்த அரசர் தம் வரலாற்று வழி, போர், வெற்றி முதலியன பற்றிய பகுதிகள் அகவல் முறையில் பலவிடங்களில் அமைகின் றன. எனினும், ஒருசில உரைநடைகளாகவே அமைகின் றன. மற்றும் கல்வெட்டுக்களின் பிற்பகுதிகளில் வரும் நன்கொடைகள் பற்றிய வாசகங்கள் அனைத்தும் உரை நடையிலேயே அமைந்து உள்ளன. கல்வெட்டுக்களில் பழையன பெரும்பாலும் உரைநடையா லாகியவைகளே.

இடைக்காலத்தில் தமிழொடு ஆரியமும் கலந்து வழங்கி வந்தது. வடமொழிக் காவியங்கள் பல இடைக்காலத்தில் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்றன. சொற்களும் வடமொழியிலிருந்து அப்படியே எடுத்தாளப் பெற்றன. உரைநடையே இருமொழியும் கலந்து வழங்க வளர்ந்து வந்தது. அந்த உரைநடையை **'மணிப் பிரவாள நடை'** என்பர். மணியும், பவளமும் கலந்து கோத்தாற் போன்று இருமொழிகளும் கலந்து நின்று பொருள் விளக்கி நின்றமையின், இப்பெயர் பெற்றது என்பர். எனினும், இந்நடை நாட்டில் நன்கு ஊன்றி வளரவில்லை.

மக்கள் இயல்புக்கு மாறுபட்ட வகையில் அவை அமைந்தமையினலேயே பெரும்பாலானவை இன்று இல்லை என்னலாம். இத்துறையில் வைணவர்களே அதிகம் கருத்திருத்தினர்கள். **நாலாயிரப் பிரபந்தம்** என்னும் வைணவத் தமிழ்ப் பாமாலைத் தொகுதிக்குப் பலர் உரை கண்டனர். அவை **'படிகள்'** எனப்பட்டன. அவற்றுள் **'ஈடு'** என்பதே மிகச் சிறந்ததாகும். இவையெலாம் இருமொழி பற்றி நின்ற உரை நடைகளே. இவை பெரும்பாலும் வழக்காறற்றன எனினும், தமிழ் உரைநடை நெடுவழியில் இத்தகைய உரை நடையும் ஒரு மைல்கல்லாக நிலைபெற்று விட்டது.

இவ்வாறு சூத்திரங்களுக்கும் பாக்களுக்கும் எழுதப் பெற்ற உரைகளே உரைநடைகளென்னுமாறு நெடுங் காலம் நாட்டில் உரைநடை வாழ்ந்து வந்தது. எனினும், தனியாக உரைநடை நூல்கள் தோன்றி வளர்ச்சி பெறவில்லை என்னலாம். பதினன்காம் பதினைந்தாம் நூற் ருண்டுக்குப் பின்னும் உரைநடை சிறக்க வளரவில்லை. அதற்குச் சற்றுப் பின் வந்த **சிவஞான முனிவர்** போன்ற சிறந்த சித்தாந்தப் பேராசிரியர்களும் உரைநடையில் நல்ல நூல்கள் தனித்த முறையில் எழுதவில்லை என்ன லாம். என்றாலும், சிவஞான முனிவர்தம் உரைநடை தமிழிலேயே ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கி விட்டது என்னலாம். **'சிவஞான பாடியம்'** என்று அவர் பெயரா லேயே வழங்கப் பெறும் **மெய்கண்ட சாத்திரப்** பேருரை யின் விளக்க உரையாய் விளங்கும் அவர்தம் உரைநடை ஈடும் எடுப்பும் இன்றி விளங்குகின்றது. சமயத் துறையில் மட்டுமன்றி, இலக்கண நூல்களின் சூத்திரங்களுக்கும் அவர் செய்த உரைகள் சிறந்தன. **'தொல்காப்பியப் பாயிர விருத்தி, முதற் சூத்திர விருத்தி'** என்னும் இரண்டும் எண்ணத் தக்கன.

இவைகளைத் தவிர்த்து மிகப் பிற்காலத்து என்றே வாழ்ந்த புகழேந்திப் புலவர் பேரில ஒரு சில நூல்கள் வெளிவந்தன. அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை, புலந்திரன் களவு போன்ற நூல்கள் இவை. இவை எல்லாம் அகவற் பாவை ஒத்து நடந்தன என்றாலும், இவை உரைநடையை ஒத்தே நடைபோடுகின்றன என்ன லாம். இவையெல்லாம் அறிஞரால் போற்றப் படாதன வாய்ப் பாமரமக்க ளிடத்து—கல்வியறியா மக்க ளிடத்து— அடைக்கலம் புகுந்துள்ளன என்னலாம்.

மிகவும் பிற்காலத்தில் கடந்த—இரண்டொரு நூற் றாண்டுகளிலேதான் தமிழில் தனித்த உரைநடை நூல்கள் தோன்றின என்னலாம். மேலை நாட்டிலிருந்து இந்திய நாட்டிற்கும் தமிழ் நாட்டிற்கும் சமயம் பரப்ப வந்த பாதிரிகள் தங்கள் சமய நூலாகிய **விவிலிய** நூலைத் தமிழில் மொழி பெயர்க்க அரும்பாடு பட்டார்கள் என் பதை அறியாதார் யார்? அவர்கள் விவிலிய நூல் உரை நடையாலானது. உரைநடையே மக்களுக்கு எளிதில் விளங்குவது. எனவே அவர்கள் உரைநடையிலேயே விவிலியத்தை மொழி பெயர்க்க முயன்றார்கள். என்றாலும் இன்று வரையில் நல்ல தூய தமிழில் அமையப் பெற்ற விவிலியத்தின் உரைநடை இல்லை என்னலாம். மொழி பெயர்ப்பெல்லாம் பிறமொழிக் கலப்பு மிகுந்த தமிழ உரைநடைகளாகவே உள்ளன. என்றாலும், அம்மொழி பெயர்ப்புக்களே தமிழ் உரைநடையை வளர்க்க உதவின என்பதை மறுப்பார் யார்?

இனி, பாட்டாலேயே நாட்டுக் கதைகளைப் பாடி வந்த தமிழ் இலக்கிய வானில் உரையால் கதைகளைப் புனைந்து காட்டும் ஒரு புதுமை தோன்றும் காலமும் வந்துவிட் டது. இத்தாலி நாட்டிலிருந்து இங்கு வந்து தமிழராய் வாழ்ந்த குருமகனார் **பெஸ்கி** என்னும் **வீரமாமுனிவர்.** அவர்

கற்பன கற்றுத் தமிழில் வல்லவரானுர்; தமிழில் பாடல்கள் இயற்றவும் வல்லவரானுர்; காப்பியங்கள் பாடினுர். அவற்றுடன் உரைநடைக் காப்பியங்களை உண்டாக்கிய பெருமையும் அவருக்கு உரியது. **'அவிவேக பூரண குரு கதை, வேதியர் ஒழுக்கம்'** முதலியன அவர்தம் உரைநடை நூல்கள். எனவே, தனித்த உரைநடைக் காப்பியம் தோன்றிய காலம் மேலைநாட்டார் காலமே என்னலாம். பாட்டுக்கு உரை யெழுதியும், சூத்திரத்துக்கு உரை வகுத்தும், கல்வெட்டுக்களில் உரை பொறித்தும் வாழ்ந்த தமிழகத்தில், காப்பியத்தில் முழுக்க முழுக்க உரைநடை தோன்றிவிட்டது. **விக்கிரமாதித்தன் கதை, பன்னிரண்டு மந்திரி கதை** போன்றவைகளும், **பஞ்சதந்திரக் கதைகளும்** இக்காலத்தை ஒட்டித் தமிழில் முழு உரைநடை நூல்களாய் முகிழ்த்தன என்னலாம். இவற்றுடன் உரைநடையில் வந்த **ஆனந்தரங்கம் பிள்ளையின்** நாட்குறிப்பும் நம் நினைவில் இருக்க வேண்டுவதாகும்.

பின்னர், சென்ற நூற்றுண்டின் பிற்பகுதியிலும் இந்த நூற்றுண்டின் தொடக்கத்திலும் தமிழில் உரைநடை மிக்கு வளர்ந்து வந்தது என்னலாம். வேதநாயகம் பிள்ளை அவர்கள் இயற்றிய **பிரதாப முதலியார் சரிதம், குணசுந்தரி கதை** போன்றவை சென்ற நூற்றுண்டின் இறுதிக் கால உரைநடையை நமக்கு நினைவூட்டுகின்றன. இராமலிங்கர் உரைநடை நூல்களும் நாம் போற்றத்தக்கனவே. இந்த நூற்றுண்டின் தொடக்கத்திலே உரைநடை வளர்ச்சியுறத் தொடங்கி விட்டது என்னலாம். **மறைமலை அடிகள், திரு. வி. க.** போன்ற போன்ற பெரியவர்கள் இந்த நூற்றுண்டின் தொடக்கத்தும் இடைக்காலத்தும் பற்பல உரைநடை நூல்களை எழுதி நல்ல வகையில் உரை நடையை வளர்த்தார்கள்.

உரைநடை என்பது வெறுங் காப்பிய வகையில் மட்டும் செல்வதன்று. நாடகமும் உரைநடையில் அடங்

கும். மேலை நாட்டு மக்கள் உரைநடை என்பது வெறுங் கதைகளும் நாடகமும் எனவே நினைக்கிறார்கள். நம் நாட்டில் அந்த நிலை இல்லாவிட்டாலும் நாடகமும் உரை நடையாக ஓரளவு வளர்ந்து வந்துள்ளது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பலப்பல நாடகங்களும், கூத்துக்களும் நடைபெற்றன. அவையெல்லாம் உரைநடையால் ஆக்கப் பெற்றனவே. அவற்றுள் சிறந்தவை **ப. சம்பந்த முதலியார**வர்கள் இயற்றிய நாடகங்களே. அறுபதுக்கு மேற்பட்ட உரைநடை நாடகங்களை எழுதி மறைந்த பம்மல் சம்பந்த முதலியாரவர்கள் உரை நடைக்குச் செய்த தொண்டைத் தமிழ் நாடு மறவாது. நாட்டு அரசியலாரும் அவரை மறவாது சிறப்பித்தனர். **வி. கோ. சூரியநாராயண சாத்திரியார்** அவர்களுடைய இரண்டொரு நாடகங்களும் உரைநடையை வளர்க்க உதவின. சென்ற நூற்றாண்டில் வெளிவந்த **சுந்தரம் பிள்ளை**யவர்கள் இயற்றிய **'மனோன்மணீயம்'** என்னும் நாடகமும் அகவலாலான தென்றாலும், உரைநடையின்பால் சார்த்திக் கூற வாய்ப்புக்கள் உள்ளன. இவ்வாறு நாடகங் களும் தமிழில் உரைநடையை வளர்த்தன என்னலாம்.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் உண்டான பல நாள் இதழ், திங்கள் இதழ், கிழமை இதழ்களும் உரைநடையை வளர்த்து வருகின்றன. **சுதேசமித்திரன்** போன்ற பழைய நாளிதழ்களும் பிறவும் தனித்தமிழ் முறையில் இயங்கவில்லை என்றாலும், அவைகளும் தமிழ் உரைநடையை வளர்க்கப் பெரிதும் உதவின என்பதை யாரே மறுக்கவல்லார்? இப்படி இந்த நூற்றாண்டில் இலக்கிய உரைநடைகள் மட்டுமன்றி, தாள்களின் உரைநடைகளும் தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலைத்த இடம் பெற்றுவிட்டன.

இன்று—சிறப்பாக உரிமை பெற்ற பிறகு—இந்திய நாட்டுப் பல்வேறு மொழிகள் வளர்வன போன்றே தமிழும்

வளர்கின்றது. அதிலும் சிறப்பாக உரைநடை நூல்களே அதிகம். ஆனால் அனைத்தும் என்றும் போற்றக் கூடிய இலக்கியப் பெட்டகங்களாய் இருக்கின்றன என்று கூற முடியாது. மக்கள் மனமறிந்து அவைகளைப் பயில்வதால் இன்பம் தருகின்ற வழியில் பல புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. உயர்ந்த சங்க இலக்கியம் தொட்டுப் பல பாட்டு இலக்கியங்களை எளிய உரைநடையில் எழுதி மக்களை உணரவைக்கின்றனர் நல்லாசிரியர் சிலர். சிலர் ஆங்கிலம் முதலிய மேலை நாட்டு மொழிகளிலிருந்து பலப்பல கதைகள், கட்டுரைகள் முதலியவற்றை நல்ல உரைநடையில் மொழி பெயர்க்கின்றனர். இந்திய நாட்டு மொழிகளாகிய மராத்தி, வங்காளம் போன்றவற்றுள் அண்மையில் வெளிவந்த பலபுதினங்கள் தமிழில் உரை நடையில் மொழிபெயர்க்கப்படுகின்றன. இவ்வாறு பல வகையில் இந்த நூற்றாண்டின் இடைக்காலம் தமிழ் உரை நடை வளர்ச்சியின் பொற்காலம் என்னுமாறு விளங்குகின்றது. இவற்றின் விரிவையெல்லாம் நூல்வழி ஆங்காங்குக் காண்போம்.

இவ்வாறு தொல்காப்பியர் காலம் தொட்டு இன்று வரை வளர்ந்த தமிழ் உரைநடையைத் தனித்தனிக் கால எல்லையில் நின்று ஆராய்வதன் முன் உரைநடை என்பது என்ன என்பதையும், அதுபற்றி இன்றைய மேலைநாட்டு ஆராய்ச்சியாளர்கள் கூறுவன யாவை என்பதையும் காணல் ஏற்புடைத்து என்று எண்ணி, அத்துறையில் சிறிது நேரம் கருத்தைச் செலுத்த நினைக்கிறேன்.

# II

## எது உரைநடை?

உரைநடை என்பது என்ன? அதன் விளக்கம் யாது? உரை நடை என்பது தொடர்மொழி. உரை ஒரு சொல், நடை ஒரு சொல். உரையானது நடந்து செல்லும் நெறியே உரைநடையாகின்றது. பல்வேறு சந்தங்களுக்கும் தாள அமைதிக்கும் ஏற்பப் பாவி நடக்கும் பாவினும் வேறுபடுத்த வேண்டி இதை உரைநடை என்று வழங்கினுர்கள் எனக் கொள்ளுதல் பொருத்தமானதாகும். 'உரை' என்னும் சொல் தமிழில் நெடுங்காலமாகவே வழக்கத்தில் இருந்து வருகின்றது. உரை என்பது எழுத்துக்கள் வரிவடிவாய் அமைந்து ஒலி வடிவாய் அவற்றின் தன்மையை விளக்க வருவது என்றுதான் பலரும் பொருள் கொள்கின்றனர். உரைக்கப்படுவதால் உரையாயிற்று என்பர். அதாவது, வாயினுல் ஒன்றைப் பற்றிப் பொருள் தோன்ற உரைப்பதே உரை எனக் கொண்டனர் என்னலாம். எனினும், வெற்றொலியை இச்சொல் குறித்த காலமும் ஒன்று உண்டு போலும்! உரை என்பது வெறும் முழக்கத்துக்கும் வழங்கிய ஒரு சொல் எனக் காண்கிறோம். மேகங்கள் மலையுச்சியில் சூழ்ந்து இடித்துப் பேரொலி எழுப்புவதை இன்றும் கேட்கின்றோம். அந்தப் பேரொலியாகிய முழக்கத்தையும் பழங் காலத்தில் உரை என்றே வழங்கினுர்கள். 'குன்றம் குமுறிய உரை' என்பது பரிபாடல் அடி.[1] எனவே, அக்காலத்தில் ஒலியும் முழக்கமும் உரையாகப் பேசப்பட்டன என அறிகிறோம்.

---

1. பரிபாடல் 8 : 35

'உரைக்கப்படுவனவவெல்லாம் உரையாயின், பாட்டும் வாய்திறந்து உரைக்கப்படுவதுதானே? அதையும் கொள்ளலாமோ?' எனின் அவ்வாறு வழக்காறு இன்மையின், கொள்ளுதல் பொருத்தமாகாது என்று முடிவு செய்தல் வேண்டும். சிலப்பதிகாரத்தை 'உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்று கூறுவதும் அது பற்றியேயாம். உரை பாட்டினும் வேறுபட்டது என்பதை இத் தொடர் நன்கு விளக்குகின்றதன்றோ? இனி உரை பாட்டினும் வேறுபட்டதாயினும், அதையும் செய்யுளில் அடக்கலாம் என்பர் சிலர். அவர்தம் கருத்துக்கு ஏற்பவே ஆசிரியர் தொல்காப்பியரும் உரையினைச் செய்யுளியலுள் அமைத்துள்ளமை நோக்கற்பாலது. செய்யப்படுவனவெல்லாம் செய்யுள். எனவே பாட்டாகச் செய்யப்படுவன பாட்டுச் செய்யுள்ளானபடி, உரையால் செய்யப்படுவனவெல்லாம் உரை நடைச் செய்யுள் என்று கொள்ளல் பொருந்தும். சொற்குப் பொருள் கூறும் நூல்கள் 'செய்யுள்' என்னும் சொல்லுக்குப் பாட்டு, காவியம், உரை என்ற மூவகைப் பொருள்களும் உண்மையைக் குறிக்கின்றன.[1] உரைச் செய்யுள் (Prose Composition) என்னும் ஒரு பகுதியே உள்ளதாகச் சென்னைப் பல்கலைக் கழக அகராதி[2] குறிக்கின்றது. எனவே, உரையும் ஒருவகைச் செய்யுள் தொகுதி எனக் கொள்ளலாம்.

இனி, உரை என்பதற்குப் 'புகழ்' என்னும் மற்றொரு பொருளும் இருப்பதாகக் கூறி, அதற்கு 'உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்' என்ற சிலப்பதிகார அடியை உதாரணமாகக் காட்டுவார்கள். எனினும், அது உரைக்கு முடிந்த பொருளாக அமையாது என்னலாம்.

1. Tamil Lexicon, Vol. III, p. 1602.
2. Tamil Lexicon. Vol. I, p. 452.

புகழ், உரைகளால் ஆனமையின் - உரைத்து உரைத்து - போற்றிப் போற்றிப் பேசப்படுவதே புகழ் ஆனமையின் - அந்த நிலையிலேதான் உரைக்கப்படும் ஒன்றற்கு உரை ஆகு பெயராய் நின்று புகழை உணர்த்திற்று என்று கொள்ளுதலே பொருத்தமானதாகும். இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும்போது நமக்கு உரை எவ்வாறு அப்பெயர் பெற்றதென்னும் நிலை ஒருவாறு தோன்றும். இன்னும் சற்று ஆழ்ந்து நோக்குவோம்;

உரை என்னும் சொல் வேறு ஒரு பொருளிலும் வழக்கத்தில் உள்ளதை நாமறிவோம். தட்டான் பொன்னின் திறமறியப் பயன்படுத்துவது உரைகல். சந்தனம் உரைக்க உரைக்க மணம் வீசுகின்றது. இரத்தினங்கள் உரைக்க உரைக்க ஒளி வீசுகின்றன. இப்படி உரை என்பது ஒன்றின் தன்மையை விளக்கப் பயன் படு கருவியாய் இருப்பது நன்கு விளங்குகிறது. அதன் வழி உரை என்பதற்குத் தேய், பூசு முதலிய பொருள்கள் இருப்பதைக் காண்கிறோம் இந்நிலையில் நம் உரை நடையையும் நோக்கின், அச்சொல் அதற்கு எத்துணை பொருத்தமாக அமையும் என்பதைக் காணமுடியும். பாட்டுச் செய்யுளினும் இவ்வுரை நடை வேறுபட்டு நிற்க வேண்டிய காரணமும் தெளிவுபெறும்,

மொழி எதற்காகத் தோன்றிற்று? மக்கள் உள்ளக் கருத்தை உதட்டு அசைவினால் மற்றவருக்கு உணர்த்தவே மொழி தோன்றிற்று. பிற விலங்குகளுக்கு இல்லாத ஒரு தனிப் பெருமையை - பேச்சுவன்மையை - மனிதன் பெற்றிருக்கிறான். அந்தப் பேச்சினால் அவன் தன் உள்ளத்தில் எண்ணியவற்றை நன்றாக உலகுக்கு உணர்த்த முடியும். மொழி தோன்றி வளர்ந்ததே அதற்காகத்தான், எனவே, அந்த மொழியினால் மனிதன் தான் எண்ணுகின்ற 'எண்பது கோடி' எண்ணங்களையும்

உலகுக்கு உணர்த்த இயலும். எப்படி உணர்த்துவது? எதை? எதற்காக? மனிதன் தான் கண்ட ஒருபொருளைப் பற்றி, கேட்ட ஒன்றைப் பற்றி, அல்லது நினைத்த ஒன்றைப் பற்றிப் பேசுவனவே உலகில் காணும் நூல்கள் அனைத்தும். அவை பாட்டானும் உரையானும் பயின்று வருகின்றன. அவை எதை உணர்த்துகின்றன? மற்றொரு மனிதனைப் பற்றியோ, ஒரு பொருளைப் பற்றியோதான் அவை உணர்த்த முடியும். அப்படி உணர்த்தும்போது அது பாட்டாகவே இருப்பின், எதுகை மோனை நயம் கலக்கச் சில கற்பனைச் சொற்களையும் கலக்கக்கூடும். இன்று காணும் எத்தனையோ பாட்டிலக்கியங்களில் உண்மையினும் புனைந்துரையும் கற்பனையும் அதிகம் இருக்கக் காண்கின்றோம். தமிழில் மட்டுமின்றிப் பிற மொழிகளிலும் பாட்டுக்களில் இக்கற்பனையைக் காண இயலும். இவ்வாறு கற்பனையோடு கலந்த பாட்டுக்களால் எப்படி ஒரு மனிதனுடைய-ஒரு பொருளினுடைய - உண்மை நிலையினை உரையிட்டுக் காண முடியும்? மேலும், பாட்டின் நடையும் அமைப்பும், உரைகோள் வகைகளும் அனைவருக்கும் எளிமையாகப் புரிவன வல்ல. அத்துடன் பயில்வார்க்குப் புதிய புதிய கருத்துக்கள் தோன்றுவனவாய் - 'இதுவோ அதுவோ' என்று திட்டமாகப்பொருள் காண வகை இல்லாதனவாய் 'இதுவும்-அதுவும்' என்று இரட்டுற மொழியும் சிலேடை வகையினவாய்ப் பாடல்கள் அமைவதைக் காண்கிறோம். இந்த நிலையில் பொருளின் உண்மை நிலையைப் பாட்டு எவ்வாறு உணர்த்த முடியும்? அந்த நல்ல தொண்டினைச் செய்வது உரைநடையேயாகும். ஆம்! ஒரு பொருளின் உண்மை நிலையையோ ஒரு மனிதனது உண்மைத் தன்மையையோ மொழி வழி உலகுக்கு உரையிட்டுக் காட்டுவதே - இந்த வகையில் இருக்கிறது என்று தட்டான் உரையிட்டுப் பொன்னைக் காட்டுவது போலக்

காட்டுவதே - இந்த உரை நடைதான். 'உரை யாணி'[1] என்பது போன்ற தொடர்கள் இது பற்றியே எழுந்தனபோலும்! எனவே, மொழி தோற்றக் காரணமாகிய உள்ளத்தை உணர்த்தும் வழியில் நின்று உலகில் உள்ள பொருள்களின்-மக்களின் - தன்மைகளை உள்ளது உள்ளவாறு சிறக்க, யாதொரு புனைந்துரையும் இல்லாது விளக்கிக் காட்டுவது உரையே யாகும். எனவே,இது உரை எனப் பெயர் பெற்றது மிகப் பொருத்தமான தன்றோ!

இவ்வுரை பற்றி மேனாட்டவர் பலப்பல கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர். ஆங்கிலத்தில் இவ்வுரைநடையைப் 'Prose' என்று வழங்குகிறார்கள். Prose என்ற சொல்லுக்குச் சந்தமற்ற, சாதாரணமாக எழுதும் அல்லது பேசும் மொழி என உரை காண்கின்றனர். உள்ளதை உள்ளபடி உணர்த்தும் எளிய நடை (Plainmatter-of-fact-quality) என்றும் பொருள் காண்கின்றனர்.[2] இப்பொருள் நாம் மேலே காட்டிய உரையிட்டுக் காணும் உண்மை மொழி என்ற தமிழ்ப் பொருளுக்கு ஏற்ப அமைவதாய் இருப்பதை அறியின், மகிழ்ச்சி யுண்டாகிறது. 'Pros' என்ற ஒரு சொல்லும் ஆங்கிலத்தில் வழங்குகிறது. இது பிறமொழியிலிருந்து வந்ததாயினும், அதன் வழி நோக்கித்தான் இவ்வுரைநடையைக் குறிக்கும் 'Prose' வந்ததோ எனக் கருத வேண்டியுள்ளது. 'Pros' என்பதற்குக் 'கூட, அத்துடன்' என்ற வகையில் பொருள் காணும் towards, in addition என்ற பொருள்கள் உள்ளன. இவற்றை நோக்கினாலும், நாம் மேலே கூறிய உண்மை விளங்கும். உள்ளது சிறக்க வைக்க ஒரு பொருளைப் பற்றியோ, மனிதனைப் பற்றியோ கூறப் பயன்படுவது உரைநடை என்ற உண்மை இதன் வழி நன்கு

1. சிவ சமய வாத உரை மறுப்பு, 33.
2. Oxford Dictionary, p. 925.

புலனுகின்றது. அறிஞர்கள் இச்சொல்பற்றி நன்கு ஆராய வேண்டும். இவ்வாறு தமிழிலும் ஆங்கிலத்திலும் ஏறக்குறைய ஒரே பொருள் நலம் பயக்கும் இவ்வுரை நடையினைப் பற்றி அறிஞர் பலர் தம் கருத்தை வெளியிட்டுள்ளனர். 'Encyclopaedia Britanica' என்ற சிறந்த ஆங்கிலப் பெரும் அகராதி இவ்வுரை நடையைப்பற்றி நல்ல விளக்கம் தந்துள்ளது.[1] பல பேரறிஞர்களுடைய கருத்துக்களை உள்ளடக்கியே அது இதன் உண்மைப் பொருளை உலகுக்குத் தந்திருக்கிறது என்பதை அனைவரும் அறிவர். அந்நூற்றொகுதி சிறந்த கலைக் களஞ்சியமாய் உலகமெங்கணும் போற்றப் படும் ஒன்று அன்ருே! ஆம்? அது உரைநடையை (Prose) ஆய்ந்து உணர்த்துகின்றது.

பாட்டுக்கு அமைந்த இலக்கண வரம்பின்றி, மக்களால் எளிமையாக ஒளி மறைவு இன்றி எழுதவும் பேசவும் பயன் படும் ஒன்றே உரைநடையாகும். செய்யுளிலிருந்து உரை நடையைப் பிரித்துக் காட்டுவது எளிதாயினும் இன்னும் திட்டமாக இரண்டையும் வரையறுக்க இயலாது. ஏனெனில் உயர்ந்த நடையில் செய்யுள் இலக்கணத்தோடு கலவாமலே நல்ல ஓசை நயத்துடன் எழுதும் உரைநடையை 'உரைப் பாட்டு'என்று சொல்வதும் உண்டு. எனவே, செய்யுளிலிருந்து உரைநடையைப் பிரித்துக் காண்பதை விட்டு. உரைநடை என்பதை உள்ளவாறு விளக்க முயலலாம். உரைநடை என்பது, இலக்கிய மரபு கெடாத நல்ல நடையில், ஆழ்ந்த கருத்தோடு, செய்யுள் சந்தச் சேர்க்கை இன்றியே நல்ல ஓசை நயம் உடையதாகி, ஒளிமறைவு இன்றி உள்ளதை உள்ளபடி உரை இட்டுக் காட்டும் வகையிலே நேரிய முறையில், கருத்துக்கும் காரணத்துக்கும் பொருத்தமானதாக (ஒன்றனைப் பற்றியோ ஒருவனைப் பற்றியோ) விளக்கி உரைப்பதாகும்,

1. En, Britanica. Vol. 18, pp. 591 and 592.

"எனினும், உரை நடை என்பது கட்டுக்கடங்காது பேசும் அல்லது எழுதும் சாதாரண எல்லா வசனங்களையும் கொள்வதாகாது. உரைநடை வாக்கியங்கள் இழுமென் மொழியால் நல்ல ஒழுகிசை நடையால், தொடர் நலமுடன் ஓசை உணர்த்தும் நெறியான், நன்கு வளர்ச்சியுற்ற தெள்ளிய நடையில் தெளிந்து செல்லுவனவாக அமையவேண்டும். மொழிக்கு இன்றியமையாத பெயர் வினைகளுடன் சேரும் உரிச்சொற்களின் தகுதியும் அளவறிந்து அவற்றைச்சேர்த்து வழங்கும் முறையும் உரைநடையில் வரையறை செய்யப் பெறல் வேண்டும். தேவையற்ற சிலவற்றை விட்டொழி தலும் உரைநடைக்கு இன்றியமையாதது. எனவே, உரை நடை என்பது செய்யுள் விதிகளுக்கு விளக்காய் நின்று இலக்கிய நலம் கெடா வகையில் மக்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை உலகுக்கு எடுத்துக் காட்டப் பயன்படுவது என்று கொள்ளல் பொருந்தும்."[1] அது மிக்க எளிமை வாய்ந்த ஒன்று என்பதையும் நாள்தோறும் உள்ள பேச்சு வழக்குக்கு ஏற்றதென்பதையும் அறிஞர் உணர்வர்.[2] இந்த ஆங்கில உரை விளக்கத்தை வைத்துக்கொண்டு நாம் முன்னே தமிழில் கண்ட விளக்கங்களை ஒப்பு நோக்கின் உண்மை நன்கு விளங்கும். எம்மொழியிலாயினும் அறிஞர் கருத்துக்களின் உண்மைகளை நேரிய முறையில் கண்டு உணர்த்துவார்கள் என்பதற்கு இதனினும் வேறு சான்று வேண்டுங் கொல்! எனவே, உரை நடை என்பது மக்கள் உள்ளத்தில் தோன்றிய எண்ணங்களை உருவாக்கித் தருவது. அது பாட்டின் நடைக்கு மாறுபட்டதாயினும், ஓசை உடையதாகிய செய்யுள் நலப் பண்புடன் கூடி, 'உரைச் செய்யுள்' என்னுமாறு சிறப்பது.

1. En. Britanica. Vol. 18, pp. 591 and 592.
2. The Critical Sence by James Reeves, p. 22.

மற்றவர்களையோ, மற்றப் பொருள்களையோ ஆராய்ந்து அவர்களில்—அவற்றின் உண்மை இயல்புகளைப் புனைந்துரை வகையி லல்லாமல், உள்ளது உள்ளவாறே உரையிட்டுக் காட்டப்பயன் படுவது.[1]

இவ்வுரையைப்பற்றி ஆங்கில நாட்டுப் பேரறிஞர் காட்டுவதைக் கண்டு மேலே செல்லலாம்.

---

1. Prose—the plain speech of mankind, when written or composed without the reference to the rules of verse. It has been usual to distinguish prose very definitely from poetry...*A work of highly wrought non-metrical writing is often called a prose-poem*. This shows that the antithesis between prose an l poetry is not complete. Prose, therefore, is best defined as ccmprising all forms of careful literary expression which are not metrically versified and hence the definition from 'prorsus' (direct or straight), the notion being that it is straight and plain, and is used for stating precisely that which is true in reason or fact.

Prose, however, is not everything that is loosely said. ............................ ...... ........................ .. .........
The sentences must be built up in a manner which displays variety and flexibility. There should be a harmony, and even a rhythm, in the progress of style, care being taken that this rhythm and this harmony are not recognizably matrical. Again, the colour and form of adjectives, and their sufficient yet not excessive recurrence, is an important factor in the construction of prose. The ommission of certain faults too is essential......We must be content to say that prose is literary expression not subjected to any species or metrical law.

Encyclopaedia Britanica, Vol. 18. pp. 591 & 592.

உலக இலக்கிய வழக்கியல் அகராதி[1] உரைநடை என்பது சாதாரண சொற்கள் கொண்டு எளிமையில் உரைப்பதென்றும், பாட்டு என்பது அதனினும் வேறு பட்டு எளிமையிலும் மாறுபட்டதென்றும் காட்டுகின்றது. இவ்வுரைநடை தமிழ் நாட்டிலும் தொல்காப்பியர் கால முதல் இருந்தது என்றாலும், அது எந்த வகையில் இயங் கிற்று என்பதை நாம் காண முடியவில்லை. என்றாலும், மேலை நாடுகளில் மிகவும் பழங்காலத்திலிருந்தே உரைநடை தோன்றி வளர்ந்தது என்பதை அறிஞர் நன்கு காட்டு கின்றனர். மேலை நாட்டு மொழிகளில் மிக்க பழமை வாய்ந்த கிரேக்க, இலத்தீன் மொழிகளில் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பிருந்தே உரைநடை வழக்கத்தில் இருந்தது என அறிகின்றோம். கிரேக்க மொழியில் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே உரைநடை இலக்கியம் இருந்ததாம்.[2] இலத்தீன் மொழியினும் அவ்வாறே மிகவும் பழங்காலத்தில் (கி. மு. 70 அல்லது 60) உரை நடை இலக்கியம் இருந்தது எனக் காட்டுகின்றனர். அக் காலத்தில் உரைநடை கண்டவர் **சிசரோ**[3] என்பவர்.[4] என்றாலும், ஆங்கில, ஜெர்மனி நாடுகளில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிலேதான் உரைநடைகள் தோன்றி வளர்ச்சி புற்றன என்பர். கி. பி. 887ல் **ஆப்பாட்** என்பார் ஆங்கி லத்தில் உரைநடை எழுதினார். ஜெர்மன் மொழியில் கி. பி. 842ல் (The age of Charlemagne) முதல் உரை நடை தோன்றிற்று.[5] இவ்வாறு மிகவும் பழங்காலத்தி

1. Dictionary of World Literary Terms, p 312.
2. En. Britanica, Vol. 18, p. 593.
3. CICERO.
4. En. Britanica, Vol 18. p. 598.
5. En. Britanica, Vol. 18, p. 598.

லேயே மேலை நாடுகளில் உரைநடை தோன்றி வளர்ந்த தோடு அதை ஆராயும் திறம் பெற்றவர்களும் அக் காலத்தில் இருந்தார்கள் என்பதையும், அவர்கள் அதை எவ்வெவ்வாறு ஆராய்ந்தார்கள் என்பதையும் **அட்கின்ஸ்** என்பார் தமது **பழங்கால இலக்கியத் திறனாய்வு**[1] என்ற நூலில் நன்கு விளக்கியுள்ளார். இந்நூலில் இவர் அக்காலப் பழைய உரோம, கிரேக்க நாட்டுப் பல வேறு இலக்கியங்களை எடுத்துக்கொண்டு, ஒவ்வொன்றையும் வகைப்படுத்தி, அவற்றின் சிறப்பியல்புகளையும், அவற்றின் திறன் ஆய்ந்து கண்ட அறிஞர்தம் உரைகளையும் நன்கு விளக்கிக் காட்டியுள்ளார். அவற்றுள் உரை நடை பற்றிய பகுதியும் ஒன்று உண்டு. அதில் இவர் அக் காலத்தில் அப்பழம் பெருநாடுகளில் வழங்கிய உரை வளத் தையும் அவற்றை அறிஞர் ஆய்ந்த கலை நலத்தையும் தெள்ளத் தெளிய ஆய்ந்து காட்டுகிறார்.

கிரேக்க நாட்டு அன்றைய உரை நூல் திறனாய்வுபற்றி ஆசிரியர் நன்கு விளக்குகிறார். அன்றைய (Augustan era) திறனாய்வாளர்களுள் சிறந்தவராக **டயோனிசியஸ்**[2] என்பவரை இவர் காண்கின்றார். அவர் கிரேக்க நாட்டு உரை நடை இலக்கியங்களை நன்கு ஆராய்ந்தவராகக் காண்கின்றார். அவர் வாய்மொழியே துணைகொண்டு இந்நூலாசிரியர் (அட்கின்ஸ்) கிரேக்க நாட்டுப் பழைய பெரிய உரை நடைகளை நமக்குக் கொண்டுவந்து காட்டி, அவ்வுரை நடை இலக்கியங்களின் திறனாய்வு முறைகளையும் நன்கு விளக்குகிறார். அங்கிலையில் அந்த மேலை நாடுகளில் கி. மு.

---

1. Literary Criticism in Antiquity, by J. W. H ATKINS, M. A.

2. Dionysius of Halicarnassus. (Literary Criticism in Antiquity, p. 104.)

நான்காம் நூற்றாண்டிலேயே நல்ல உரை நடைகள் தோன்றிச் சிறக்க வாழ்ந்திருந்தன; அவற்றின் நலம் கண்டு திறனாய்ந்து தெளியும் வகையில் அவை ஏற்றமுற்றிருந்தன என்பதை நமக்கு உணர்த்துகிறார் ஆசிரியர்.[1] இந்த ஆய்வு வழி இவர் அக்காலத்தில் உரை நடை' எவ்வெவ்வாறு இருந்ததென்றும் எவ்வெவ்வாறு இருக்க வேண்டும் என்றும் காட்டுகிறார். பேசும் அல்லது எழுதும் உரைநடை நல்ல பொருள் பொருந்தினதாக, நல்ல நடையில் எடுத்த பொருளை நன்கு விளக்கிக் காட்டுவதாக அமையவேண்டும் என்பர். விளக்குவது உணர்வா சொல் நடையா என ஆயின், உரை நடையில் உணர்வே சொல் நடையினும் சிறந்ததாக விளங்க வேண்டும் எனவும் காட்டுகிறார்.[2] சொல்லழகு ஓரளவு தேவை என்றாலும் அழகுக்காகச் சொல்லடுக்குகளை உபயோகித்துப் பொருள் நலம் இன்றேல் உரைநடை பயன்படாது என்பதை எடுத்துக் காட்டுகின்றார்.[3] என்றாலும், சொல் செல்லும் முறையாகிய ஆற்றொழுக்கு நடையோடு, நிலை கெடாத வகையில் உரைநடை இருக்கவேண்டிய அவசியத்தை ஓமரது இலக்கியத்தின் துணை கொண்டு நன்குவிளக்குகிறார்.[4] எப்படி ஒரு செய்யுளில் ஒரு சொல் நிலை கெடினும் ஓசையும் பொருளும் குறைந்து அவற்றின் இன்றியமையாமையைக் காட்டுகிறதோ, அப்படியே உரைநடையிலும் சொல்அமைப்பும் எழுத்தோசையும் இன்றியமையாது

1. Thus it is with great writers of the fourth century B. C. and earlier that he almost exclusively deals; and it is their work that he sets up as models for imitation. (Literary Criticism in Antiquity. p. 112)

2. ibid. p. 113,

3. ibid. p. 115.

4. Literary Criticism in Antiquity p. 117

இருக்கவேண்டும் என்பதை உணர்த்துகிறார்.[1] சொற்கள் இத்துணை இன்றியமையாதன எனக் காட்டினும், அச்சொற்களே பொருள் பொதிந்தனவாக அன்றி வெற்றுச் சொற்களாக நிற்பின் பயன் இல்லை என்பதையும் கட்டுரை முழுதும் காட்டிக்கொண்டே செல்கிறார். அக்காலத்து எழுத்தாளர்களை அட்டிக் எழுத்தாளர்கள்[2] எனக் குறிக்கின்றனர். இவ்வாறெல்லாம் ஆய்வு நிலை காணும் திறனாய்வாளரது காலம் கி. மு. 300 எனக் காண்கின்றார்.[3] இவ்வாறு அவ்வாய்வாளர் திறனையெல்லாம் விளக்கி, அவற்றின் வழி இன்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் இருந்த கிரேக்க ரோம நாட்டு உரைநடை இலக்கியங்களை எடுத்துக் காட்டி, அவற்றின் தொன்மையையும் சிறப்பையும் விளக்கி, அவற்றை டயோனிசியஸ் பகுத்துப் பகுத்து நலம் காணும் நயங்களை விளக்கி, இன்னும் இலக்கியத் திறனாயும் மேலைநாட்டு அறிஞர்கள் தங்கள் ஆய்வுக்கு அந்தப் பழம் பேரறிஞரைத் துணைக்கு அழைப்பதையும் சொல்லித் தம் கட்டுரையை முடிக்கின்றார் ஆசிரியர். இந்நூலின் வழி மேலை நாடுகளில் 2000 அல்லது 2500 ஆண்டுகளுக்கு முன்பே உரை நடை இலக்கியம் சிறந்து விளங்கியதென அறிகின்றோம்.

இந்த உரை நடை ஆய்வுக்கிடையில் இங்கு மற்றொன்றும் கூறவேண்டியுள்ளது: இந்தக் கிரேக்க உரோம நாட்டு உரை நடைகளின் காலம் இன்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முந்தியது என்பது திட்டமாகத் தெரிகின்றது. அக்காலத்தில் இந்த நாடுகள் தமிழ் நாட்டோடு வாணிபத் தொடர்பும் கலைநலத் தொடர்பும் பிற தொடர்புகளும் கொண்டிருந்தன

1. Literary Criticism of Antiquity p 117.
2. Attic writers.
3. Lit Cri in Ant. page 133.

என்று வரலாற்று ஆசிரியர்கள் காட்டுகின்றார்கள். ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் தொடர்பு கொள்ளவேண்டுமாயின், அது தன்னை ஒத்த வகையில் எல்லாவற்றினும் அமைந்ததாக இருக்க வேண்டும் எனக் காண்பது இயல்பு. தனி மனிதன் நட்பும், நாட்டுக்கு நாடு கொள்ளும் நட்பும் அத்தகைய நிலையில் செல்வதை நாம் இன்றும் காண்கின்றோம். அந்த நிலையில் கலையிலும் வாழ்விலும் இலக்கிய வளனிலும் பல்லாற்றானும் சிறந்திருந்த, ரோம கிரேக்க நாடுகள் அதே நிலையில் பல வகையில் வளமுற்றிருந்த தமிழ் நாட்டோடு தொடர்பு கொண்டிருந்தன என்பதில் வியப்பில்லை அன்றோ! யவன நாடெனப் போற்றப்பட்ட அம் மேலைநாடுகளைப் பற்றியும், அந்நாட்டவர்கள் தமிழ் நாட்டுத் தலை நகரங்களில் தமிழரொடு தமிழராய் வாழ்ந்த நிலை பற்றியும் பல இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த நிலையில் மொழி ஆராய்ச்சி செய்யும் அறிஞர்களும் இருநாட்டு மொழிகளிலும் உள்ள சில சொற்களின் ஒருமைப் பாட்டை ஆராய்ந்து இந்நாடுகளின் நெடுநாள் உறவை உறுதிப் படுத்துகின்றனர், எனவே, மேலைநாட்டு உரோம கிரேக்க நாடுகளும் தமிழ்நாடும் இன்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னமே பல வகையில் இணைந்து வாழ்ந்திருந்தன என்பது வரலாறு திட்டமாக வரையறுத்த ஒன்று அன்றோ?

இவ் வரலாற்று அடிப்படையில் ஆராய்வோமானால் இன்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் கிரேக்க ரோம நாடுகளைப் போன்று தமிழ் நாட்டிலும் இலக்கியங்கள் தோன்றி வளர்ந்திருக்க வேண்டும். அக்காலமே பலருடைய ஆய்வின்படி தொல்காப்பியர் காலத்தை ஒட்டிய காலமாகும். தொல்காப்பியர் காலம் இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னது என்பர். அக்காலத்தில் நாட்டில் இலக்கிய இலக்கணங்கள் நன்கு வளர்ந்து இருந்தன. இந்நூலில் பிறிதோரிடத்தில் குறித்தபடி தொல்காப்பியர் காலத்தில்

பாட்டு மட்டுமன்றி, உரைநடையும் வளர்ந்திருந்தது என்பது நன்கு தெரிகிறது. எனவே, தொல்காப்பியர் காலமும் மேலை நாட்டு **அகஸ்தஸ் (Augustus)** காலமும் ஏறக்குறைய ஒன்ருய் இருக்கலாம் எனக் கொள்ளல் பொருந்தும். இந்த நேரிய முறையைக் கைவிட்டுச் சில 'தமிழர்'கள் தொல்காப்பியரைக் கிறிஸ்துவுக்குப்பின் கொண்டுவர முயன்று அரும்பாடு படுகிருர்கள். தமிழ் வாழ்வின் கால எல்லையைக் குறுக்கி, அதன்வழியே தமிழ் முதல் நூல்களை யெல்லாம் பிற மொழிகளின் வழி வந்தன என்று நிலை நாட்டச் சிலர் நினைப்பதால், இத்தவறுகள் நேர்கின்றன. எப்படியாவது தங்கள் கொள்கையை நிலைநாட்ட வரலாறு மறந்து, வாழ்ந்த பழைமையை மறைத்து, எதேதோ செய்ய நினைக்கின்றனர். அவ்வாறு அவர்கள் செய்யும் செயலுக்கு மாறுபாடாக, தமிழிலக்கியம் இன்றைக்கு 2500 ஆண்டு களுக்கு முன்பே சிறந்து இருந்தது என்பதைத் தமிழர் மேலை நாட்டாரோடு கொண்ட தொடர்பு நன்கு விளக்கு கிறது. தொல்காப்பியரைக் காலத்தால் பிற்பட்டவர் எனக் கூறுபவர், ஒன்று யவன கிரேக்க நாடுகளுடன் தமிழ் நாட்டுத் தொடர்பே இல்லை என்று சொல்ல வேண்டும்; அல்லது தொல்காப்பியம் உள்ளவாறு இன்றைக்கு மூவா யிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். முன்னது வரலாற்ருலும் இலக்கியங் களாலும் பலவாறு ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டமையின் அக்கொள்கையை மறுக்க இயலாது. மறுப்பின், இலக் கியங்களும், மொழி ஆராய்ச்சிகளும், வரலாறும் இல்லை யாகவே கொள்ள வேண்டும். இது நடவாத ஒன்றே. எனவே, பின் கூறியபடி தொல்காப்பியர் காலம் இலக்கியம் செழித்தோங்கிய காலமாகிய இன்றைக்கு இரண்டாயிரத்து ஐநூறுஆண்டுகளுக்கு முற்பட்ட காலமே எனக் கொள்ளு தலே அறிவுடைமையாகும். இது நிற்க.

இன்னும் மேலை நாட்டு அறிஞர் சிலர் காட்டும் உரை நடை விளக்கங்களைக் காணலாம். இலக்கியத்திறனாய்வுத் துறையில் வல்லவர் **வில்லியம் ஹென்றி ஹட்ஸன்**[1] என்பார். அவர் இலக்கியத்தைப் பல்வேறு துறைகளாகப் பகுத்து ஆராய்கின்றார். அவற்றுள் ஒருபகுதி உரைநடை. உரை நடை என்னும்போது மேலை நாட்டு அறிஞர்களுள் பெரும் பாலாருக்குப் பெருங்கதைகளும், சிறுகதைகளும், நாடக முமே முன் நிற்கின்றன. ஆகவே, அவர்களுடைய ஆராய்ச்சி களும் அத்துறையிலேயே செல்லுகின்றன. சிறப்பாக ஆங்கிலமொழியில் பிற்காலத்தில் தோன்றிய பெரும் பான்மையான உரைநடை நூல்கள் நவீனங்களாகிய **(நாவல்கள்)** கதைகளாகவே உள்ளமையின், அவர்கள் கருத்து அந்நெறியில் சென்றது வியப்பன்று. ஆனால், தமிழில் உரைநடை வெறுங் கதையாகமட்டும் செல்லாது பல வகையிலும் பயில்கின்றது. அதைப் பின்னர்க் காண்போம்.

கதை வாயிலாக உரைநடையைக் காணும் ஹட்ஸன் அவர்கள் உரைநடையைப் பற்றி அதிகம் கூறவில்லை என்றாலும், இரண்டொரு கருத்துகளைத் தெளித்துச் சென்றிருக்கிறார். உரைநடையையும் நாடகத்தையும் ஒப்பிட்டுக் காட்டி, உரை நடை மிக எளிமையானது என்கிறார்.[2] உரை நடைக் கதை நூல்கள். சிறியனவாயி னும் பெரியனவாயினும், அமைப்பு, பாத்திரங்கள் நிலை. அவற்றின் பேச்சு முறை. செயலாற்றலின் காலமும் இடமும் கடந்த நிலை, நடைப் போக்கு, வாழ்க்கைக்குத் தேவையான உண்மையை உணர்த்தும் தன்மை ஆகிய வற்றை முக்கியமாகக் கொண்டவையாக இருக்க வேண்டும் என்கின்றார்.[3] இவ்வாறு உரை நடை நூல்

1. William Henry Hudson
1. An Introduction to the Study of Literature, p. 130.
2. ibid. 131.

கள்—நாடகமாயினும், கதையாயினும், கட்டுரையாயினும், வெறுஞ்சொற்களால் ஆக்கப்பட்டுப் பொருளற்ற முறையிலே செல்லாதனவாக, மக்கள் வாழ்வுக்கு ஏற்ற வகையிலே நல்ல பொருள் பொதிந்தனவாக, இனிமையும் எளிமையும் உடையனவாக, செம்மை நடையில் செல்வனவாக அமைய வேண்டும் என்ற உண்மையை அவர் மட்டுமன்றி வேறு மேலை நாட்டு அறிஞர் பலரும் வற்புறுத்தியுள்ளனர்.

இலக்கியம், இலக்கணம் இரண்டும் மொழிக்கு இன்றியமையாதன! இரண்டும் ஒன்றை ஒன்று பிணைத்து வளருவன. எனினும், இரண்டினும் எது முக்கியமானது' என்ற கேள்வி எழின், அறிஞர் சற்று நின்று சிந்திப்பர். பள்ளியிலோ, கல்லூரியிலோ பயிலும் மாணவரைக் கேட்டால், அவர், 'இலக்கணந்தான் முக்கியம். எழுத்துக்கும் சொல்லுக்கும்—ஏன்?—பொருளுக்கும் அமைந்த இலக்கணப்படிதானே ஆசிரியர்கள் எங்களை எழுதச் சொல்லுகிறார்கள்? அவ்விலக்கண முறைக்குச் சற்று மாறுபட்டிருந்தாலும் எங்களைக் கண்டித்தும் தண்டித்தும் வருகிறார்கள். ஆகவே, இலக்கணத்தை ஒட்டித்தான் நாங்கள் எல்லாத் துறையுலும் செல்ல வேண்டியிருக்கிறது. அதனால், இலக்கியத்தைக் காட்டிலும் இலக்கணமே முக்கியம், என்று திட்டமாகச் சொல்லுவர். அவர் சொல்லுவதிலும் உண்மை இல்லை என்று யார் சொல்லக் கூடும்? அது சரிதான். ஆனால், ஆய்ந்து பார்ப்பின், அது முடிந்த முடிபாகாது என்பது விளங்கும். ஆரம்ப நிலையில் கல்வி கற்கும் மாணவருக்கு அவர் செல்லும் வழியை உணர்த்த இலக்கணப் பாதையை வகுத்திருக்கிறார்கள் என்பதை யாரே மறுப்பர்? ஆனால் அந்த இலக்கணம் எவ்வாறு அமைந்தது? அதற்கு முன்னே பல நூற்றாண்டுகளாக—பல ஆயிரமாயிரம் ஆண்டுகளாக

—வாழ்ந்த அறிஞர்கள் எழுதி வைத்திருக்கும் இலக்கியங்களே இலக்கணங்களுக்கு அடிப்படையாகின்றன. இதைத்தான் அகத்திய சூத்திரம் நமக்கு உணர்த்துகின்றது;

**' இலக்கிய மின்றேல் இலக்கண மின்றே**
**எள்ளின் றாகில் எண்ணெயு மின்றே;**
**எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல**
**இலக்கி யத்தினின்று எடுபடும் இலக்கணம் '**

என்னும் சூத்திரத்தின் வழி, மொழிக்கு இலக்கணம் முக்கியமான போதிலும், அவ்விலக்கணம் அதற்கு முன் தோன்றிய இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டே தோன்றிற்று என்பதைக் காணலாம். இவ்வுண்மை தமிழ் மொழிக்கு மட்டும் பொருந்திய தனி விதியன்று. உலக மொழிகள் அனைத்துக்கும் இவ்வுண்மை பொருந்தும். 'நூல் என்பது சில இலக்கண வரம்புகளுக்கு உட்பட்டு நின்ற காரணத்தால் மட்டும் அமைந்து விடாது; ஏனெனில், அவ்விலக்கண வரம்புகள் பெரிய இலக்கியங்கள் வழித் தோன்றியவைகளே.' என்று ஹட்ஸன் நன்கு விளக்கிக் காட்டுகின்றார்.[1] எனவே, இலக்கணம் என்பது இலக்கியத்தினின்று தோன்றியதென்பதும், பின்வருவாருக்கு ஒரு வழிகாட்டியாய் நிற்பதென்பதும் தெளிவு. புதியவராகப் பயில வரும் மாணவருக்கு அவ்விலக்கணம் வழி காட்டியாய் இருப்பதாலேயே அவருக்கு அது முக்கியமாய் இருக்கிறது.[2]

1. A book is not literature because it conforms to certain rules, but rather that these rules are valid because they are drawn from adimitted works of literature (Some Principles of Literary Criticism, p 34.)

2 All rules and principles are derived from literature, not the literature from rules and principles (Some Principles of Literary Criticism by Hudson p. 32.)

இனி இவ்வாறுன இலக்கணம் பாட்டுக்கு அதிகமாக இருக்கிறதே ஒழிய உரைநடைக்கு இல்லை என்னலாம். பாட்டினை வகைப்படுத்தி, அசையும் சீரும் அமைத்து, அவற்றிற்கெல்லாம் வரையறை ஏற்படுத்தும் இலக்கணங்களை 'யாப்பு' எனச் சொல்லுகிறேம். தொல்காப்பியச் செய்யுளியலிலும் உரைநடை பற்றிய இரண்டொரு சூத்திரங்களைத் தவிர்த்து, பிற அனைத்தும் பாட்டினைப் பற்றியனவாகவே அமைகின்றன. பாட்டு உரைநடை ஆகிய இரண்டின் இலக்கணங்களையும் காட்டுவதாலேயே அது **'செய்யுள் இயல்'** என்று பெயர் பெற்றது போலும்! உரைநடைக்கு ஏன் விரிந்த இலக்கணம் இல்லை? நம் தமிழ் மொழியில் மட்டுமன்றிப் பிற மொழிகளிலும் இந்த நிலை இருக்கக் காண்கிறேம். பலவாய **'நாவல்'** போன்ற உரைநடை இலக்கியங்களைப் பெற்ற ஆங்கில மொழியிலும் கூட அதற்கு இலக்கணம் இல்லையே! காரணம் என்ன? அது மொழிக்குத் தேவை யற்றதா? தேவை யற்றது என்று யாரே சொல்ல வல்லார்! பாட்டினைக் காட்டிலும் உரை நடையே மக்களிடம் அதிகமாகப் பயின்று வருகிறது. எனவே, அது மொழிக்கு-மக்கள் வாழ்விற்கு—இன்றியமை யாதது. என்றாலும், அதற்கு இலக்கணம் இல்லையே! ஆம் இல்லைதான். உரைநடை பாட்டினைப் போன்று அத்துணைக் கட்டுப்பாடுகளுக்கும் அளவு முறைகளுக்கும் உட்பட்டதன்று.[1] உள்ளக் கருத்தை மற்றவருக்கு உணர்த் தும் வகையில் எளிய முறையில் எழுதப்படுவதே உரை

1. (a) There are perhaps, fewer general principles to govern-either matter or treatment in fiction than in any other department of Literature. (Some principles of Literary Criticism by Hudson, p. 285.)

(b) For the story is an easier—and not governed by so strict laws of artistic form. (Hudson p. 285.)

நடை. ஆகவே, அதற்கு அத்துணைக் கட்டுப்பாடுகளும் தேவை இல்லை. உரைநடையிலும் நாடகம், நவீனம் போன்றவற்றை எழுதும் ஆசிரியர்கள் அவ்வளவு இலக்கண வரம்பில் நின்று செல்ல வேண்டிய நியதியில் கட்டுப்படத் தேவை இல்லை! எளிமையிலும், மற்றவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையிலும் அவர்தம் உரைநடைகள் அமைவது போதும் போலும்! என்றாலும், உரைநடை இலக்கண வரம்பு அற்றுச் செல்வதென்பது பொருளாகாது. அதற்கு ஒரு திட்ட வரையறை உண்டு. பாவினைப் போன்று பரந்த வரையறை இல்லை என்பதே கருத்து. வரையறை அற்ற ஒன்று என்ற நிலையில் யாரும் உரைநடை எழுதலாம் என்று எண்ணினால் அது பெருந்தவறாகவே முடியும். உரைநடை அமைய வேண்டிய விதத்தையும், அது வளம் பெறும் வழியையும், அதனால் பயன் பெறுமுறையையும் **'பௌல்டன்'**[1] என்பார் நன்கு எடுத்துக் காட்டுகின்றார். அதைப் பின்னர்க் காண்போம்.

உரை நடை எழுதுவோரும் பிற இலக்கியங்கள் எழுதுவோரும் அவரவர்தம் கால நிலைக்கு ஏற்பவே ஏற்றமும் சிறப்பும் பெறுகின்றனர். சிலப்பதிகார உரைநடைக்கும், ஈட்டின் உரைநடைக்கும், இன்றைய உரைநடைக்கும் எத்தனையோ மாறுபாடுகளைக் காண்கிறோம். அவரவர் அவ்வக்கால நிலைக்கும் தகுதிக்கும் ஏற்ப எழுதிச் சென்றிருக்கின்றனர். ஈட்டின் உரையாசிரியர் இன்றிருப்பாராயின், அந்த நடையைக் கையாளமாட்டார். அப்படி எழுதினும் அது பயன் தராது. அது போன்றே, இன்று உரை நடை எழுதும் ஆசிரியர் அன்று இருந்திருப்பாராயின் அவர்தம் நடையே வேறு வகையாய் இருக்கும்.எனவேதான் உரைநடை காலந்தோறும் மாறுபட்டுக் காண்கிறது. அதுமட்டுமன்றி,

1. Marjorie Boulton—The Anatomy of Prose, p. 6.

அவ்வுரையாசிரியர்கள் அவ்வக்காலக் கூறுபாட்டாலேயே சிறக்கிறார்கள். இவ்வுண்மையை ஹட்ஸன் அவர்கள் ஷேக்ஸ்பியர் (Shakespeare), அலெக்ஸாண்டர் போப்பு (Alexander pope) இவர்கள் மேல் வைத்து நன்கு விளக்கு கின்றார்.[1] எனினும், அவை சிறந்தனவாக விளங்குமே யானால், எந்நாளும் போற்றப்பட்டே தீரும், என்பதையும் அவர் எடுத்துக் காட்டத் தவறவில்லை.[2] எத்தனையோ இலக்கியங்கள் - பாவும் உரைநடையும் - தோன்றிய காலத்திலேயே மடிய, ஒரு சில மட்டும் கால வெள்ளத்தைக் கடந்து வாழ்வதை எல்லாமொழி யுள்ளும் காண்கிறோம். எனவே சிறந்த உரை நடை நூல்கள் எக்காலத்தில் தோன்றியவா யினும், சிறந்து, மக்கள் வாழ்வோடு பொருந்தி, இனிமையும் எளிமையும் கலந்து இன்னோசையோடு பீடு நடையில் செல்லுமாயின், அவை என்றென்றும் வாழும். அல்லாதன...? ஒரு சில நூல்கள் தோன்றிய காலத்தில் எல்லோராலும் நன்கு போற்றிப் படிக்கப்படும். எனினும் அவை மறுநாளே வாழ்விழந்தனவாக மாறின், அவை எவ்வளவுதான் மக்களால் விரும்பிப் படிக்கும் அவ்வேளை இலக்கிய மாயினும் (Book for the time) அவை சிறந்த இலக்கியமாகப் போற்றப்படமாட்டா.[3]

எழுத்தாளர் சிலர் அவ்வக்காலத்தில் வாழும் மக்களது வெறி உணர்ச்சிகளையோ அன்றி வேறு கிளர்ச்சி எண்ணங்களையோ உணர்ந்து, அவ்வத்துறையில் தமது விருப்பம் உண்மையில் செல்லவில்லை என்றாலும், மக்கள்

2. Some Principles of Literary Criticism, by Hudson, p. 5.

3. ibid. p. 22.

1. Some Principles of Literary Criticism, by Hudson, p. 283.

விருப்பத்துக்கும் அதன் வழி நூல் விற்பனையாவதற்கும் ஏற்ற வகையிலே, தம் நிலையினின்றும் தாழ்ந்து சாதாரண உரைநடை நூல்கள் எழுதுவதை இன்று காண்கின்றோம். இன்று வருகின்ற கதைகள் அனைத்தும் ஒருவனும் ஒருத்தியும் கண்டு காமுற்றுக் கதை பேசுவன வாகத்தான் இருக்கின்றன. அவை விலக்க முடியாத வியாதியாக அமையினும், நடைமுறையில் அவை எம் மொழியினும் பெருகிக் கொண்டே வருவதைத்தான் காண்கின்றோம். ஆயினும், அவை கால வெள்ளத்தை நீந்தி, தம் ஆசிரியனுக்கு நிலைத்த புகழைத் தேடித் தரும் என்று சொல்ல முடியாதது. ஆனால் அதே காதலை உலகியில்மேல் ஏற்றி, உண்மை நிலையிலே நின்று ஆசிரியன் தன்னை மறந்து காவியம் பாடுவானாயின், அவன் சங்ககாலப் புலவர்களைப்போன்று என்றென்றும் வாழ்வான், காதல், உலகம் உள்ளளவும் வாழும் ஒன்று, ஆகவே, அக்காதலை உலகியல் ஒட்டிக்காட்டும் கவிஞனோ, கட்டுரையாளனோ, என்றும் வாழ முடியும். ஆனால், கால வெள்ளத்தில் மாறுபட்டுச் சிதையும் வெறுங் கற்பனைகளால் அக்காதலைக் காட்ட முயன்றால், அக் கட்டுரையும் அதன் ஆசிரியனும் அன்றைப் பொழுதுக்கு மட்டுமே வாழ முடியும். கட்டுரை எழுதுகின்றவர்கள் ஒப்பற்ற ஓர் உண்மையைக் கருத்திற் கொள்ளவேண்டும் என்பார் ஹட்ஸன். நிலைபெற்று வாழும் உயிர் வாழ்வின் ஒரே குறிக்கோளாகிய வாய்மையைக் கடைப்பிடிப்பதே அந்த உண்மையாகும்[1] என்று ஓர் அமெரிக்க ஆசிரியரை

1. First be ture, and the effect will take care of itself. That fundamental principle runs through everything I attempt—not only everything I write, but everything I teach in the way of literary principle. The only model is life, the only criterion is truth. (Some Principles of Literary Criticism, by Hudson, p. 301)

முன்னிறுத்தி அவர் நமக்கு எடுத்து விளக்குகிருர். இவ்வாறு வாழ்வின் உண்மை உணர்வினை விடுத்து, தான் எடுத்துக் காட்டும் பாத்திரங்களேயோ, பொருள்களேயோ மெய்ம்மை நெறியில் காட்டும் வழி விட்டு ஆசிரியன் விலகிச் சென்று காட்டுவானுயின், அவன் வழி உலகம் செல்லாது என்ற உண்மையையும் அவர் விளக்கிக் காட்டத் தவறவில்லை.[1] எனவே, உரைநடை என்பது வெற்றுணர்ச்சியாலோ, காலப்போக்காலோ தோன்றி மறையும் ஒரு விநோதப் பொருளாக அன்றி, உண்மை வாழ்வை உலகுக்கு உணர்த்தும் உயர்ந்த ஓர் இலக்கியமாகத் திகழ வேண்டும் என்பதை நாம் உணர வேண்டும்.

உரைநடைக்கும் பாடலுக்கும் வேறுபாடு உண்டா என்பதை ஆராய்ந்தனர் பலர். "ஆம்; வேறுபாடு தெரிகிறது. ஆயினும், என்ன வேறுபாடு என்பதைத் திட்டமாகச் சொல்லவும் கூடவில்லை. வெளித் தோற்றத்திற்கு வேறுபாடு உள்ளது போலத்தான் தெரிகிறது. பாட்டுத் தாளநிலைக் கேற்பத் துள்ளிச் செல்லும் சந்தமுடைத்தாகக் காண்கிறது. உரைநடை அவ்வாறு இல்லை. எனினும், ஓசை உடைமை அற்றதென்றும் கூறமுடியாது. செய்யுளை மட்டும் பாட்டு என்றே வரையறுக்க இயலாது. உரைநடையும் செய்யுளினத்தைச் சார்ந்ததாகும். சீரும், தளையும், அடியும், தொடையும் அமைந்திலவேனும், உரைநடையும் செய்யுளின்பாற்பட்டதேயாகும். அதற்கென அமையும் ஓசை உடைமையும், ஆழ்ந்த கருத்தை விளக்கும் நிலையும், நல்ல தெள்ளிய நடையும் இல்லாமல் இல்லை. நம் உளநிலையை ஒட்டியே உரையும் பாட்டும் பகுக்கப்பட வேண்டும் போலும்! இரண்டுக்கும் தோற்ற நிலையில் வேறுபாடு காணப்படுகிறது, தரைக்கும் கடலுக்கும்

1. **Some Principles of Literary Criticism p. 308.**

புறத்தோற்றத்தில் நாம் காணும் வேறுபாட்டின் அளவே அவற்றின் வேறு பாட்டின் அளவும். யாரே அவற்றின் உள்ளீட்டைக் காணவல்லார்!

"எனினும், ஓரளவு பகுத்துப் பார்ப்பின், சில உண்மைகள் தோன்றும். உள்ளம் உணர்ச்சி வயப்பட, அதன் வழியே சற்று உண்மை உணர்ந்து (புனைந்துரையும் புகழுரையும் கூட்டி) செய்யப்படுவதைப் பாடலாகவும் உள்ளதை உள்ளவாறே உரைப்பதை உரைநடையாகவும் கொள்ளலாம். உரைநடை எளிமையாக யாவரா லும் உணர்த்தப் பயன்படுவது. பாட்டோ அவ்வா றன்று. எதுகை மோனை கலந்த சொல்லழகுபடப் புனைவது பாடல்: உரைநடை அத்தகையது அன்று என்றாலும், அதிலும் சொல்லின் ஓசை உடைமை இல்லை என்று சொல்ல முடியுமா? 'Rhythm' என்ற சொல் ஆங்கிலத்தில் வழங்கப்படுகிறது. அதற்கு உரை காண்கின்றவர், பாட்டு உரைநடை இரண்டிலும் சொற்களால் ஆக்கப்பெறும் ஓசை உடைமையே எனக் காட்டுகின்றனர்.[1] இவ்வோசை உடைமை உரைநடையிலும் (measured flow of words and phrases in verse or prose) உண்டு. என்றாலும், பாட்டுக்கு இன்னின்ன வகையில் சொல் அமைப்புக்கள் அமைய வேண்டும் என வரையறை செய்திருப்பது போன்று உரைநடைக்கு வரையறை இல்லை. எனவே, உரைநடை ஓசை யுடைத்தாக இருக்க வேண்டும் என்று கூறுவதன்றி, 'அது எத்தகைய ஓசை உடையதாக வேண்டும்? அதன் எல்லையும் வரம்புகளும் யாவை?' என்பனவற்றை யாராலும் வரை யறுக்க முடியாது." என்னும் முன்னுரையோடு **ஹெர்பர்ட்டு ரீடு**[2] தமது ஆங்கில உரைநடை என்ற நூலைத் தொடங்குகிறார்.

1. The Concise Oxford Dictionary of Current English, p. 1011.
2. Herbert Read in English Prose Style (Introduction)

இவ்வாறு முன்னுரையில் விளக்கங் கூறி உரை நடைக்குத் தேவையான உறுப்புக்களாகிய சொற்கள், அவற்றை விளக்கும் பண்பு, உவமை போன்ற நய நிலைகள், சொல்லாக்கம், பகுப்பு முதலியவற்றையும், உரைநடை அமைப்பின் சிறப்பு, முறை, பயன், மரபு முதலியவற்றையும் தம் நூல் முழுவதும் விளக்கிக்கொண்டே செல்கிறார். அவற் றிற்கெல்லாம் அவர் அவர்தம் நாட்டு உரைநடை ஆசிரியர் பலரையும் அழைத்து அழைத்து நமக்கு அறிமுகப்படுத்தி, அவர்தம் சொற்கள் வழியே நமக்கு எடுத்துக்காட்டுகளை வழங்குகின்றார். அனைத்தையும் ஈண்டு விளக்கின் அது வேறு விளக்கமாக அமைவதோடு, இங்குத் தேவையற்ற தாகவும் முடியும். நம் உரைநடை அமைப்பின் வழி, காலப் போக்கில் அவ்வக்கால உரைகளையும் அவற்றின் அமைப்புக் களையும் ஆழ்ந்து காணுங்கால் தமிழில் உள்ள பல உரை நடைகளையே நாம் மேற்கோள்களாகக் கொள்ளலாம். எனவே, இந்த அளவோடு அவர்தம் விளக்கத்தை நிறுத்தி, மேலும் இரண்டோர் ஆங்கில ஆசிரியர் கருத்தைக் கண்டு, 'எது உரை நடை?' என்பது பற்றி ஒரு முடிந்த முடிவுக்கு வருவோம்.

**பொனமி டோபிரீ**[1] என்பார் உரைநடை பற்றி ஒரு நூல் எழுதியிருக்கிறார். **'இக்கால உரை நடை'** என்னும் தலைப் பில் அவர் நூல் அமைகின்றது. நூல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அழகாகத் தம் முன்னுரையில் அவர் விளக்குகின்றார். எத்தனையோ நூல்கள் உலகில் வெளி வந்துகொண்டே யிருக்கின்றன. அவை அனைத் தையும் மக்கள் விரும்பிப் பயிலுவதில்லை. அவற்றுள் ஒரு சில, மக்கள் உள்ளத்தைத் தொட்டு உணர்வூட்டக் கூடிய வகையில் அமைகின்றன. அதற்குக் காரணம் என்ன? எழுதுகின்ற எழுத்தாளன் தன்னை மறந்து

1. Bonamy Dobree—Modern Prose Style

தானே அந்த எழுத்தாக அமைகின்முன். அதைப் படிக்கும்போது அவன் பேசக் கேட்பது போலவே இருக்கிறது. நாம் அதைப் படிப்பதாக நினைப்பதில்லை. ஆசிரியர் சொல்ல நாம் கேட்கும் நிலையில் நாம் நிற்கின்றோம். இவ்வாறு நம்மையும் நம் உள்ளத்தையும் அந் நூல் மயமாக்கும் திறத்தில் வல்லனுகி, தானே நூலாகக் காட்சியளிக்கும் பண்பில் முகிழ்க்கும் எழுத்தாளனது எழுத்துக்கள் என்றென்றும் வாழும் என்கிருர் அவர். தமிழ் நாட்டில் கலையோடு ஒன்றிய கலைஞர் வாழ்வையும் கலை நோக்கையும் அறிஞர் வாழ்வையும் விளக்கும் பழமொழிகளின் கருத்தையே அவர் இவ்வாறு அழகுபட விளக்குகின்முர். ஆம்! பிறர் உளந்தொட எழுதுவதே ஓர் உயர்ந்த கலை யல்லவா!

பின்பு அவர் நூல்களை மூவகையாகப் பிரிக்கின்முர். அவை அனைத்தும் சிறப்பாக உரை நடை இலக்கியங்களாகவே அமைகின்றன. வருணனை உரை[1], விளக்க உரை[2] உணர்ச்சி உரை[3] என்னும் மூன்று வகைகளே அவர் காட்ட விரும்புவன. ஒரு செயலையோ, ஒரு பொருளையோ, ஒரு மனிதனையோ பற்றி ஆசிரியர் விளக்கி உரைப்பதே வருணனை உரையாகும். எவ்வாறு செயல்கள் நிகழ்கின்றன என்ற அறிவியல் ஆய்வுகளைக் கூறுவதும், திறனுய்வு முறைகளைக் காட்டுவதும் பொருளில் உள்ள சிறப்பியல்புகளை விளக்கிக் காட்டுவதும் விளக்க உரையாகும். துன்ப எல்லையிலோ, இன்பத்தின் பிடிப்பிலோ, மகிழ்ச்சிப் பெருக்கிலோ தம்மை மறந்தும் மீறியும் உரைப்பதே உணர்ச்சியுரை.

1. Descriptive Prose
2. Explanatory Prose
3. Emotive Prose

இவை மூன்றையும் தனித்தனி உரைநடையாசிரியரே உணர்த்த வேண்டுமென்பதில்லை. ஒரே ஆசிரியருங்கூட, தம் மனநிலை, காலநிலை ஆகியவை கருதி மூன்று நிலைகளிலும் நூல் எழுதக்கூடும். சொல்லும் சொற்களின் அமைப்பும், பொருள் நிலையும், பொருட் பாகுபாடும் ஒவ்வொரு வகையில் செல்லும்.சில வெறுஞ் சொல்லோவியங்களாகவே அமைந்து, பொருளற்றனவாகவும் இருக்கலாம். நல்ல கருத்துக் குவியல்களைப் பொதிந்து சொல்லமாட்டாத திறமையினாலே, சொல் நடை முட்டுப்பாட்டினால் கருத்துக்கள் விளக்கமாகக் காட்டப் பெறாவிடினும், சாதாரணச் சொற்களின் அமைப்பிலே காட்டப்பெற்றனவாகவும் இருக்கலாம். ஆசிரியன் எடுத்துக்கொண்ட பொருளை எந்த வகையால் எவ்வகைச் சொற்களால் ஆராய்கின்றான் என்ற வகைகளை எல்லாம் முதலில் எண்ணிப் பார்க்கத்தான் வேண்டும். காய்தல், உவத்தல் அகற்றி ஒரு நூலை ஆராயும் காலத்து அதன் நலக்கேடுகள் தோன்றி உணர்வூட்டும். ஆயினும், அவ்வாராய்ச்சிகளுக்கெல்லாம் மேலாக, ஓர் ஆசிரியன் தன்னை மறந்து, தானே நூலாகி, தன் வாய்மொழியிலே பேசும் நிலையில், படிப்பவர் உள்ளத்தில் உணர்ச்சி ஊட்ட உண்மை நெறி காட்டி இயற்றுகின்ற நூலே எல்லா எல்லைகளையும் தாண்டி என்றென்றும் வாழும் நூலாகும்.

உரையினை உயர்ந்த நடையில் எழுதுவது நல்லது எனச் சிலர் நினைக்கின்றனர். இடைகாலத்துத் தமிழ் உரைகளும், இறையனார் களவியல் உரை போன்றனவும் அத்தகையனவே. எனினும், இக்காலத்தில் மிக எளிய உரைநடையே அறிஞர்களால் விரும்பி எழுதப்படுகிறது. 'நடை என்பது ஆபரணமன்று; பயிற்சியன்று; துள்ளுவதன்று; விளக்க முடியாதது மன்று. அது ஆசிரியனது உள்ளத் துயர்வினது; உணர்த்த விரும்பும் தன்மையின் அளவினது;தகுதியான-தேவையான வார்த்தைகளால் உரைக்

கப்படுவது'[1] என்ற உண்மையை நூலில் பல விடங்களில் ஆசிரியர் விளக்கிக்கொண்டே செல்கின்றார். நடை என்பது என்ன? 'அது எளிமையில் அனைவரும் புரிந்து கொள்ளும்படி விளக்க கூடிய பொருளை விளக்க முடியாத உயர்ந்த நடையில் விளக்குவதுதான் என்பது பலருடைய எண்ணம்; ஆனால், நமக்கு விளங்க முடியாத எந்தப் பொருளையும் அனைவருக்கும் எளிமையில் விளங்கிக்கொள்ளுமாறு உரைப்பதே உரை யாகும்.'[1] என்று **கார்டினர்** என்பார் கூறும்போது நாம் உரை நடையின் ஏற்றத்தை உணர முடிகிறதன்றோ! கூறுவதைத் தானே முற்றும் உணர்ந்தவனாக, தான்கூறும் பொருள் பற்றி உலக நிலைக்கும் கால நிலைக்கும் ஏற்ற உரைநடை எழுது கின்றவன் உணர்வுடையனாக, தான் அதாக இருப்பதை ஆய்ந்து அறிந்தவனாக இருக்க வேண்டும். அவற்றுக் கெல்லாம் மேலாக, அவன் தன்னை மறந்து, தான் அந்த நூலே ஆகுமாறு பொருந்தும் உணர்வு நெறியிலே நின்று, அந்த நல்ல நூலை எழுத வேண்டும்.

கடல்,காடு இரண்டையும் வேற்றுமைப்படுத்தி எதற்கு எது குறைந்தது என்று கூறுவது? அதுபோன்றே பாட்டை யும் உரைநடையையும் வேறுபடுத்தி எது உயர்ந்தது எது தாழ்ந்தது என்று கூறமுடியாது. பாட்டைப் போன்று பல உறுப்புக்கள் உரைநடைக்கு இல்லை என்றாலும், பகுப்பு என்ற ஒரு பிரிவு (Paragraph) அதற்கென வரையறுத்த எல்லையாய் இருக்கின்றது. புதுக் கருத்துக்களைப் புகுத்தும் போதும், உரைக்கும் கருத்துக்களுக்குப் புதுப் பொருள் காட்டும் போதும், தொடர்பு வேறுபடும்போதும் எழுதுவது

1. Introduction to the London Book of English Prose by Herbert Read and Bonamy Dobree. (1931) (Modern Prose Style p. 217)

1. A. H. Gardiner—The Theory of Speech and Language.

சிறுகதையாயினும் கட்டுரையாயினும் இப்பகுப்பு முறை இருந்தாற்றான் சிறந்து நிற்கின்றது.

உரைநடையை மூன்று வகையாகப் பிரித்ததை மேலே கண்டோம். அதை மற்றோர் ஆங்கில ஆசிரியர், ஐந்து வகையாகப் பகுக்கின்றார், கதைப் போக்கு (Narrative), கொள்கை விளக்கு முறை (Argumentative), நாடகம் (Dramatic), செய்தி தரும் முறை (Informative), ஐயமகற்றும் ஆய்வுமுறை (Contemplative) என்ற ஐந்து வகையில் அவர் உரைநடையை அடக்குகிறார். இவ்வாறு பகுக்கப்பட்ட உரைநடைகள் தனித்தனி வெவ்வேறு திறனும் முறையும் பெற்றவையாய் இருப்பினும், அனைத்தும் நல்ல ஓசை நயம் உடைய நடையை மேற்கொண்டாற்றான் சிறக்கும் என்பதை அவர் தெளிவுறக் காட்டுகிறார்.

சொற்களை உபயோகிக்கும் முறையைப் பற்றி **மார்ஜோரி பௌல்டன்**[1] என்பார் கூறும்போது நெடுஞ்சொற்களை உபயோகித்தால்தான் உரைநடை சிறக்கும் என்று எண்ணுவோர் தவறுடையவர் என்பதை விளக்குகின்றார்;[2] நீண்ட சொற்களை உபயோகித்தல் குறை அறிவுடையோர் செயல் என்றும், சிறு சொற்களால் எடுத்ததை விளக்குவதே நிறை அறிவுடையோர் செயல் என்றும் மேற்கோளுடன் எடுத்துக் காட்டுகிறார். இன்றும் ஆங்கில உரைநடை எழுதுபவர்கள் இடையிடையே இலத்தீன் தொடர்களைப் பெய்து எழுதும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். சிலர் பழமையையும் புதுமையையும் விரவி எழுதுவதை விரும்புகின்றனர். இவற்றால் எல்லாம் உண்மையில் பொருளை உணர்த்த முடியாது என்பது அவர் எண்ணம். **ஜேம்ஸ் ரீவ்ஸ்**[3] என்பவர் நீண்ட

1. Marjorie Boulton—The Anatomy of Prose
2. The Anatomy of Prose, p. 11.
3. James Reeves

தொடர்மொழி கொண்ட உரைநடை படிப்போரைக் குழப்பும் என்கிறார்[1]. மேலும், சொல் பயன்படும் வகையையும் அவர் விளக்கத் தவறவில்லை. இச்சொற்கள் பற்றி அவர் கூறும்போது நாமும் நம் தமிழ் உரை நடையை எண்ணிப் பார்க்கத் தோன்றுகின்றது. தமிழில் எளிய சொற்கள் இருக்கவும், அவற்றை விடுத்துத் தேவையில்லா வடமொழிச் சொற்கள் போன்றவற்றை வலியப் புகுத்தும் நல்லோர் சிலர் தமிழை வளர்ப்பதாகக் கூறிக்கொள்ளுகின்றனர். மாருகச் சிலர் இல்லாதவற்றிற்கெல்லாம் எங்கிருந்தோ தோண்டிப் புதுச் சொற்கள் காண்பதாகக் கூறிக்கொண்டு, எடுத்த பொருளை விளக்க முடியாது இடர்ப்படுகின்றனர். இப்படி இரு துருவங்களாய் இருசாரர் இருப்பது மொழி வளர்ச்சிக்கு ஊறு செய்வதேயாகும். இக்கொள்கையை அவர் நன்கு கண்டிக்கிருர்.[2] சொற்கள் உபயோகிப்பதிலும் உரையாசிரியன் தகுந்த சொற்களை உபயோகிக்கப் பழகவேண்டும். ஒரு பொருளுக்குப் பல சொற்கள் இருந்தாலும், அவற்றை உபயோகிக்கும் இடமறிந்து உபயோகித்தல் வேண்டும். பேசு, உரை, அறை, விளக்கு, கூறு, செப்பு என்பன போன்ற பலசொற்கள் எடுத்துக்காட்டிப் பேச இருப்பினும், அவற்றை இடமறிந்து உபயோகிக்கவில்லையாளுல், அவற்ருல் பெறப்படுகின்ற உண்மைப் பொருள் விளங்காமற் போகுமன்ருே?

உரைநடையில் உயரிய மொழிகளையும் தொடர்களையும் உபயோகிக்க வேண்டுவதே முறையாகும். நல்ல

1. The Critical Sense, pp. 50 & 51

2. It is a pity to be a fanatic on either side, for either fanaticism narrows the possibilities of Language (The Anotomy of Prose. p. 11)

ஆசிரியர்கள் தாங்கள் மேற்கொண்ட பொருளுக்கு ஏற்ப இழுமென் ஒலியுடைய நல்ல சொற்களை—இலக்கியத்தில் பயின்று வரும் சொற்களை—எடுத்தாள்வார்கள். எனினும், நாடகம் எழுதும் ஆசிரியர்கள், தாங்கள் பயன்படுத்தும் பாத்திரங்களுக்கு ஏற்ப நிலையில் தாழ்வதும் உண்டு. நாடகத்தில் வரும் ஒரு பணியாளனோ, காவற்காரனோ, அன்றிக் கடையில் பண்டம் விற்பவனோ உயர்ந்த தமிழ் நடையில் பேசுகின்றான் என்றால், கேட்பாருக்கு இயற்கைக்கு மாறுபட்டது போலத் தோன்றும். எனவே, நாடகாசிரியர்கள் உலக வழக்கில் வழங்கும் சாதாரணச் சொற்களை எடுத்தாள்வதைக் காண்கிறோம். ஆனால், அந்த முறை சரியாகுமா என ஆராய்தல் வேண்டும். சரியாகாது என்றால், நாடகப் பாத்திரங்களின் இயல்புகள் அனைத்தையும் எடுத்துக் காட்ட இயலாது. சரியாகும் என்றால் மொழிவழி தவறு செய்தவர்களாவோம், எனவே, இந்நிலை எண்ணிப் பார்க்க வேண்டுவதாகும். என்றாலும், அதற்காக மிக மிகத் தாழ்ந்த நடையில் நாடகப் பாத்திரங்களைப் பேச வைப்பதோ, நம் மொழியில் நல்ல சொற்கள் இருக்கவும் பிறமொழிகளிலிருந்து கடன் வாங்கிப் பேசவைப்பதோ கூடாது என்பதையும் உணர்தல் வேண்டும்.

உரைநடை மற்றவருக்கு எளிமையில் எடுத்துக் கொண்ட பொருள் விளங்க வைப்ப தென்பதை மேலே கண்டோம். எனவே, பாட்டிடைப் பொருந்திய அணி நலன்கள் உரைநடைக்குத் தேவையில்லை. புனைந்துரைகளும், அவற்றை அணி செய்யும் அணிகலன்களும் பாட்டிடை அழகு தரும் அமைப்புக்களாக அமையலாம். ஆயினும், அவை உரைநடைக்குத் தேவையில்லை என்னலாம். எளிய, இனிய, நல்லோசை உடைய உரைநடை எழுதுபவனே சிறந்த எழுத்தாளன்.

இவ்வுரைநடையைப்பற்றி இவ்வாறு மேலை நாட்டு மக்களெல்லாம் ஆராய்ந்து எழுதிக்கொண்டிருக்கும் இதே வேளையில், தமிழ் நாட்டில் இத்துறையில் கருத்திருத்துவார் இல்லை. ஒரு நூலும் உரைநடை பற்றி எழுதப் பெற வில்லை. ரோம கிரேக்க நாட்டு உரைநடை நூல்களைப் போன்று தமிழிலும் தொல்காப்பியர் காலத்திலிருந்து உரைநடை நூல்கள் இருந்தன என்பதைக் காண்கின்றோம். என்றாலும், உரைநடைப்பற்றி அறிஞர் எவரும் ஆராய வில்லை என்னலாம். தனிப்பட்டவர்போக, அரசாங்க உதவி பெற்று இயங்கும் தமிழ் வளர்ச்சிக் கழகம் போன்றவை கூட—அத்துறையில் கருத்திருத்தாதது தமிழ் நாட்டு மக்களுக்கே ஏமாற்றமாகும். மேலை நாட்டுக் கலைக்களஞ்சியமாகிய Encyclopaedia Britannica உரைநடை பற்றிப் பல பக்கங்களில் விளக்கந் தந்து உள்ளது. அதில் ஒரு பகுதியை மேலே கண்டோம். ஆனால், பல ஆயிரமாண்டுகளாக உரைநடையைக் கொண்டுள்ள தமிழ் உரைநடை பற்றிய குறிப்பே களஞ்சியத்தில் இல்லாதது வியப்பன்றோ! ஆம்! அவர்கள் வெளியீட்டின் இரண்டாம் பகுதியில் உரையைப் பற்றிய ஒரு குறிப்பு வருகிறது. அதில் காணும் வாக்கியங்கள் இவ்வளவே:

> "உரை—உரைத்தான் என்பதற்குச் சொன்னான் என்பது பொருள். ஆகையால் உரை என்பதற்குச் சொல் என்றே பொருள் படும். ஆகுபெயராய்ச் சொல்லின் பொருளைக் குறித்து வழங்குகின்றது புலமை மிக்கவர் இயற்றும் நூலைப் பொதுமக்களு உணர்தல் வேண்டின் அதற்கு விளக்கம் வேண்டி யுள்ளது அவ்விளக்கம் உரை எனப்படும்" [1]

என்று கூறிப் பின்பு உரைகள் (Commentaries) இருக்க வேண்டிய வகை பற்றியும் உரையாசிரியர்களைப் பற்றி

1. கலைக்களஞ்சியம், தொகுதி II, பக். 319.

யும் எழுதிக்கொண்டு செல்கின்றனர், இது தவிர உரை நடையைப் பற்றி ஒன்றுமே இல்லை. சிலப்பதிகார உரைப் பாட்டு நடையும், 'பாட்டு உரை நூலே' என்ற தொல் காப்பியர் எடுத்துக்காட்டும் உரைநடையும் அவர்களுக்குப் புலப்படாதிருத்தல் வியப்பே யன்றோ! இப்படித் தமிழ் நாட்டில் உருவாகும் ஒரு கலைக்களஞ்சியத்திலேயே ஆயிர மாயிரமாண்டுகளாக வரும் உரைநடை பற்றிய விளக்கம் இல்லை என்றால், பின் வேறு யாரே உரைநடையை உலகுக்குக் காட்ட வல்லார்? அதுவும் உரைநடை நூல்கள் பல்கிப் பெருகும் இந்த இருபதாம் நூற்றாண்டில் இல்லை என்றால், என்று காட்டுவது? இனி அடுத்து வரும் பகுதி களிலாவது வேறு தலைப்பிலாவது இது பற்றி விளக்கம் வருகிறதா என்று தமிழ் மக்கள் பொறுத்துப் பார்க்க வேண்டுவதுதான்.

திருமணம் செல்வக்கேசவராய முதலியார் அவர்கள் **'தமிழ் வியாசங்கள்'** என்னும் தமது நூலில் **'வசனம்'** பற்றி எழுதியுள்ளவை தமிழில் உரைநடை வழங்கும் நிலை பற்றி விளக்குவதோடு, அவர் தாம் கைக்கொண்ட 'உரை நடை' எத்தகையதாய் அமைந்துள்ளது என்பதையும் காட்டுமாதலால் அதிலிருந்து ஒரு பகுதியை அப்படியே எடுத்துத் தருகிறேன்.

"யுரோபிய பாஷைகளில் சிறுவர் சிறுமியரும், எழுத்து வாசனையுள்ள கூலியாட்களும் ஓதலான வசன நூற்கள், எளிய நடையில் எழுதப்பெற்று, நாளுக்குநாள் மல்கி வருகின்றன. கல்விமான்களான ஆண் பெண் பாலினர் ஆயுள் முழுவதும் படித்து வந்தாலும் படித்து முடியாத அளவாகப் பல திறப்பட்ட வசன நூல்கள் ஏற் பட்டிருக்கின்றன. அவைகளில், அவரவர் தங்கள் மனப் போக்கினுக் கேற்றவைகளைத் தேர்ந்தறிந்து வாசிப்ப

தோன்றுமே அவர்களுக்குக் கஷ்ட சாத்யமான காரியமாக இராநின்றது. செய்யுள் வடிவான நூல்களும், விசேஷ இலக்கணப் பயிற்சி முதலிய கஷ்டங்கள் இல்லாமலே, சிறிது கல்வியுடையவர்களும், அகராதி முதலியவற்றின் உதவியால், எளிதில் ஓதத் தக்கவை. ஆகவே, யுரோபியர் மிக்க பிரயாசையில்லாமலே அறிவு தெளிந்து, காரிய நிர்வாகம் செய்யத்தக்கவர்களாய், நாகரிக நிலைமையில் நம்மினும் சில படி மேற்பட்டவராகி விட்டனர். செய்யுள் வடிவமான நமது நூல்களில் உள்ள கஷ்டம், நமக்குப் பிரத்தியக்ஷ அனுபவம். கல்விமான்கள் பொழுதுபோக்காகப் படிக்கத்தக்க வசன நூல்கள் இன்னின்னவென எடுத்துச் சொல்வது நமக்கு நாணம் தருவதாகும். சிறுவர் சிறுமியர்களும் கூலியாள் வேலையாட்களும் படிக்கலான புத்தகங்கள் வேண்டுமானால், ஏதேனும் கிடைக்குமா எனப் புத்தகக் கடைகள் தோறும் சென்று கேட்டறிதல் வேண்டும். இது விஷயத்தில் நாம் எச்சரிக்கை கொண்டு, ஏழைகளுடைய கண்களைத் திறவாவிட்டால், இனி நமது நாகரிக நிலைமை மேற்படாது. நாம் கடைப்பட்டவர்களாகக் கருதப்படுவோம். இப்பொழுது தமிழ் வசன நூல்களின் பூர்வோத்தரத்தை ஆராய்வோம்.

### 1. வசன நூல்களின் பூர்வோத்தரம்

"வசனம் என்னும் வடமொழி, சொல் என்றும், வாக்கியம் என்றும் பொருள்படும். வாசகம் என்னும் வடமொழி, வசனம் என்னும் பொருட்டு. இவ்விரண்டும் கவியின் வேறுய சொன்னடையை உணர்த்தும். வசனித்தல் என்பது பேசுதல் என்றவாறு. கவியும் வசனமும், வடமொழியில், முறையே பத்தியம் கத்தியம் என்றும் வழங்கும். பத்தியமாவது, பாதங்களால் நடைபெறுவது. கட்டுரைப் போலியும், செய்யுட்போலியுமாக வருவது.

கத்தியம் கவியின் வேருய சொன்னடை, தமிழில் **உரைநடை** எனப்படும். உரை என்பது பேச்சு என்பதற்கும், வியாக்கியானம் என்பதற்கும் வழங்கும் வார்த்தை. பேச்சு என்னும் பொருளில், உரை என்பது உலக வழக்கு என்றவாறு. 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்பதனுல் இது விளக்கமாகும். செய்யுள் என்பது முற்கால வழக்கில், இலக்கியச் செறிவுள்ள உரையையும் தழுவியிருந்தது. 'உரைச் செய்யுள்' என்ற வழக்கு இருந்தது. இதற்குச் சான்று.

**' இலக்கணம் இலக்கியம் உரையெனப் பெயர்பட்**
**டிருககுமென் றெண்ணுக செய்யுளின் இயல்பே '**

என்றது இலக்கணக் கொத்து. உலக வழக்காகப் பேசப்படுவதும் எழுதப்படுவதும், உரைநடை, உரை வாசகம் என வழங்கும். உரை, வாசகம் என்பன இருபெயரொட்டு. தமிழில் வசனம் என்ற வடமொழியே, சில காலமாய் உரைநடையைக் குறிப்பதாய்ப் பெருவழக்கினதாயிற்று. உறுதிச் சொல், ஏற்றசொல், பொருளுள்ள சொல் எனப் பொருள்படும் கட்டுரை என்ற வார்த்தையும், உரைநடையைக் குறிக்கின்றது. இது "கட்டுரை வன்மை" என்பதனுல் போதரும்; "கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்து" எனத் தொல்காப்பியத்திலும் வருகின்றது.

"பழைய சங்க நூல்கள் எல்லாம் பாக்களால் ஆனவை. முற்றும் உரைநடையான வசன நூல் யாதொன்றும் இல்லை. அடிவரையின்றி வரும் செய்யுளின் வகை - நூலும் உரையும் பிசியும் முது மொழியும் மந்திரமும் கூற்றிடை வைத்த குறிப்பும் என ஆறென்றும், அவற்றுள் உரைப்பகுதி வழக்கு, - பாட்டிடை வைத்த குறிப்பும் பாவின்றெழுந்த கிளவியும் பொருளொடு புணராப் பொய்ம்மொழியும் பொருளொடு புணர்ந்த நகை மொழி

யும் என நான்கென்றும், வகைப்படுத்துரைத்தார் தொல்காப்பியர். அவற்றில் பாட்டிடை வைத்த குறிப்பென்பது, ஒரு பாட்டு இடையிடை கொண்டு நிற்கும் கருத்தினுன் வருவது. "தொன்மைதானே, உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" என்ற இடத்தில், 'தொன்மை என்பது உரை விராய்ப்' பழமையவாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது. அவை பெருந்தேவனுரால் பாடப்பட்ட பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன' என்முர் நச்சினுர்க்கினியர். சிலப்பதிகாரமும் ஒருவாறு இதன் பாற்படும். பாவின்றெழுந்த கிளவியென்பது பாட்டின்றிச் சூத்திரத்திற்குப் பொருள் எழுதுவது போல்வன. இறையனுர் அகப்பொருளுரை தொல்காப்பியவுரை திருக்கோவையாருரை திருக்குறளுரை முதலியன இதற்கு உதாரணம். கத்தியத்திற்குக் கொன்றை வேந்தனை உதாரணமாகக் காட்டினர் வீரமாமுனிவர். அது, முதுமொழிக்காஞ்சி போன்று, குறள் வெண்செந்துறையின் பாற்படும்.

"சைனர்கள் ஸ்ரீ புராணம் முதலிய சைன நூல்களையும், வைணவர்கள் அஷ்டாதசர ஹஸ்யம், குருபரம்பராப்ரபாவம் முதலிய வைணவ நூல்களையும் வசனமாக எழுதியுள்ளனர். இவர்களுடைய வசனம், பெரும்பான்மை வடமொழிகளும் வடமொழித் தொடர்களும் நிரம்பி, சிறுபான்மை தமிழிடைச் சொற்களும் எச்சங்களும் முற்றுக்களும் விரவி நடைபெறுவதாயிற்று. இந்நடை மணிப்ரவாளம் எனப்பெறும். வேறு வேருன இரண்டு பாஷையின் தனி மொழிகளும் தொடர் மொழிகளும், மணியும் பவளமும் (பவளம்—ப்ரவாளம்) விரவிக் கோத்த மாலை போன்று, விரவி நடத்தலின், இந்நடை இப்பெயர் பெறுவதாயிற்று. சைனர்களும் வைணவர்களும் தங்கள் மதச் சார்பான தமிழ் நூல்களுக்கியற்றிய வியாக்கியானங்களும் இந்நடையினையே கொண்டொழுகுவனவாம். இவ்

வசன நூல்களையும் வியாக்கியானங்களையும் இயற்றினோர் வடமொழியில் நிரம்பிய புலமை உள்ளவர்கள். மதச் சார்பான விஷயங்களை வடமொழியில் நின்றும் தமிழில் கொணர்ந்து கூட்டினவராதலின், இவர்களுடைய வசனப் பாங்கு இங்ஙனம் மணிப்ரவாளம் ஆயிற்று.''[1]

இது நிற்க, உரைநடை என்பது பற்றிப் பல வகையில் ஆராய்ந்தோம். உரைநடை பாட்டினும் வேறுபட்ட தெனவும், பாட்டினைப் போன்று பல்வேறு வரம்புகளின் கட்டுக்கு உட்படாதேனும், ஓசையுடையதாதல் வேண்டும் எனவும், எனவே பாட்டுச் செய்யுள் என்பதே போல உரைச் செய்யுள் எனவும் அது வழங்கப்பட்ட தெனவும், அவ்வுரைநடை தமிழ் நாட்டிலும் உரோம கிரேக்க நாடுகளிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பிருந்தே வழக்கத்தில் இருந்ததெனவும், அவ்வுரைநடை இனிய எளிய நடையில் ஆசிரியன் தான் எடுத்துக் கொண்ட பொருளை மற்றவர் அறிந்து கொள்ளும்படி விளக்கப் பயன்படுத்தப்படுவதெனவும், அது அவரவர் ஆய்வு மனப்படி மூன்று வகையாகவும் ஐந்து வகையாகவும் அமையுமெனவும், கட்டுப்பாடு இன்றேனும் சொல் அமைப்பு முறையும் சொற்களை ஆளும் முறையும் ஒழுங்கு பெற அமைய வேண்டு மெனவும், பொருளை விளக்குவதற்காக எந்தத் தாழ்ந்த சொல்லையும் உபயோகித்தலாகா தெனவும், ஆசிரியன் தானே அந்த நடையாகித் தன்னை மறந்து நின்ற நிலையில் எழுதும் உரை நடையே சிறக்கு மெனவும் அதுவே காலம் கடந்து வாழ்வது எனவும் அறிந்தோம். இனி அவ்வுரைநடை தமிழில் காலந்தோறும் எவ்வெவ்வாறு மாறுபட்டு வளர்ந்து வந்துள்ளதென்பதைப் பகுத்துக் காணலாம்.

---

1. தமிழ் வியாசங்கள்: செல்வக்கேசவராய முதலியார், பக் 71—74

## III

## சிலப்பதிகார உரை நடை

தொல்காப்பியர் உரையைப்பற்றிய குறிப்புக்களை எழுதிவைத்த போதிலுங்கூட, அவர் காலத்தில் விளங்கிய உரைநடை எத்தகையது என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் அது உணர்வின் எல்லையென் உதட்டு வழிப் பெருக்கெடுத்தோடி வரும் பாட்டின் எல்லையாய் நின்று அதற்கும் மேம்பட்டதாய்—பழமையானதாய் — அமைந்துள்ளமையைக் காண்கிறோம். 'இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்புதலே' தொல்காப்பியர் மரபு. ஆதலின், அவர் காலத்திலோ, அதற்கு முன்போ உரைநடை வழக்கத்தில் இல்லாதிருக்க, தாம் இல்லாத ஒன்றற்கு இலக்கணம் கூறியிருக்கமாட்டார். எனவே, மிகு பழங்காலத்திலே—தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே—இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே—தமிழில் உரைநடை இருந்தது என்பது தேற்றம். எனினும், காலவெள்ளத்தாலோ, கடும்புனலின் சீற்றத்தாலோ, அழிந்த எத்தனையோ இலக்கியங்களுடன் உரைநடை நூல்களும் அழிந்திருக்க வேண்டும். எனவே, நாம் பின்னர் உரைநடையைப்பற்றி அறிவதெல்லாம் சிலப்பதிகாரத் தொடக்கத்தில் இருந்துதான் எனல் பொருந்தும்.

சிலப்பதிகாரம் இன்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் எழுந்த இலக்கியம் என்பதைத் தமிழ்நாட்டு அறிஞர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுகின்றனர். நாமும் சிலப்பதிகார காலத்தை ஆயிரத்து

எண்ணூறு ஆண்டுகளுக்கு முன், கிறித்துச் சகாத்தத் தொடக்க நாளாகவே கொள்வோம். அந்நாளில் யவன நாடு தமிழ் நாட்டோடு தொடர்பு கொண்டிருந்தது. யவனம் என்பது ரோம கிரேக்க நாடுகளே என்பதை வரலாற்று ஆசிரியர்கள் நன்கு விளக்குகிறார்கள். அந் நாடுகளில் கி. மு. முதல் நூற்றாண்டிலும், (இலத்தீன்) கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்னும் (கிரீக்கு) உரை நடை வழக்கத்தில் இருந்தது என்பதை மேலை நாட்டு ஆய்வாளர்கள் நன்கு விளக்கியுள்ளமை கண்டோம். எனவே, அக்காலத்தை ஒட்டி அந்நாடுகளுடன் பழகிய தமிழ் நாட்டிலும் உரைநடை வழக்கத்தில் இருந்தது என்று கொள்ளுவதில் தவறு இல்லை யன்றோ?

சிலப்பதிகாரத்திலும் உரைநடையில் நீண்ட கதையோ, அன்றிப் பெரும்பகுதிகளோ அமையவில்லை. சிலப்பதிகாரத்தை அறிஞர் **'உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்'** என்றே வழங்குகின்றனர். எனவே, பாட்டால் இயற்றப் பெற்ற சிலப்பதிகாரத்தின் இடையிடையே உரைநடை கலக்கப் பெற்றுள்ளது என்ற உண்மைதான் நமக்குப் புலனாகின்றது. சிலப்பதிகார நூல்வழி நுழைந்து நாம் கண்டாலும், இந்த உண்மைதான் நமக்கு விளங்கு கின்றது.

சிலப்பதிகாரம் கோவல கண்ணகியர் கதையை நமக்குக் காட்டும் ஒரு பெருநூல். தமிழில் இதற்கு முன் இத்துணைப் பெருங்காப்பியமாக ஒன்றும் வெளி வர வில்லை. அதுவும் தவிர, இது போன்ற ஒரு தலைவனை அமைத்துப் பாடிய காப்பிய நூல் இதற்கு முன் இல்லை. எனவே, சிலப்பதிகார நூலே தமிழ் இலக்கியத்தில் ஒரு புது மாற்றத்தை உண்டாக்கிவிட்டது என்பர் அறிஞர். அந்த மாற்றத்தோடு, புதிதாகத் தோன்றிய உரைநடை அமைப்பும் கலந்து அந்நூலைத் தமிழ் நாட்டு வரலாற்றி

லேயே—தமிழ் இலக்கிய மொழி வரலாற்றிலேயே—ஒரு நிலைத்த இடத்தில் இருக்குமாறு செய்துவிட்டன என்னலாம்.

சிலப்பதிகாரத்தில் உரைநடை தொடர்ந்து செல்வதாகக் காண இயலாது. **உரை பெறு கட்டுரை, உரைப்பாட்டு மடை** முதலிய தலைப்புக்களில் சிற்சில வகையில் உரை இடையிடையே கலக்கப் பெறுகின்றது. அவற்றுள்ளும் உரைப்பாட்டு, மடை பாட்டெனவே காண்கின்றது. இத் தொடருக்கு உரை கூற வந்த அரும்பதவுரையாசிரியர், 'உரையாகிய பாட்டை இடைப் படுத்தது' என எழுதுகின்றனர். எனவே, உரையையும் பாட்டு என்ற பெயரா லேயே வழங்கினுர்கள் எனவும் கொள்ளவேண்டியுள்ளது. செய்யுள் என்னும் பாட்டுடன் உரையாகிய பாட்டும் இணைந்ததே உரைபெறு கட்டுரையாயிற்று என்பது கருத்து. இக்கருத்தை மேலை நாட்டு ஆசிரியர் சிலரும் வற்புறுத்துகின்றனர். உரைநடை பாடப்படுகின்ற இசை நடை சந்த ஒழுகலாற்றில் நில்லாது, ஆனுல் இழுமென் இன்னெலி நிலை கெடாது, உயர்ந்த நடையில் செல்வது[1] என்பதை ஆங்கில ஆசிரியர்கள் ஒத்துக்கொள்கின்றுர்கள். எனவே, உரைநடை என்பது சிலர் நினைப்பது போன்று, ஏதோ பேச்சு வழக்கில் எழுதுவதுதான் என்ற எண்ணம் மாறவேண்டும். சிலப்பதிகார உரைநடை அந்த உயர்ந்த நிலையிலேதான் நம் உள்ளத்தில் இடம் பெற்றுள்ளது. சில பகுதிகள் பாட்டே போன்று—செய்யுள் போன்று—சென்று முடிவதையும் சிலப்பதிகாரத்தில் நாம் காணக்கூடும். கட்டுரை என்று குறிக்கப்பெற்ற சில, உரைநடை அமைப்பிலும் செய்யுள் நடையில் அமைந்திருப்பதை அறிகிறோம்.

1. There should be a harmony and even a rhythm in the progress of the style. (En. Britannica, Vol. 18, p. 591.)

என்றாலும், அவற்றின் முடிவும் பிறவும் அவை செய்யுள் நடையில் சென்று முடியவில்லை என்பதைக் காட்டுகின்றன.

சிலம்பில் இந்தப் பாட்டிற்கும் உரைக்கும் இடையில் சில சில தனிச்சொற்கள் வந்து நிற்கின்றன. அவை தனித்த சொற்களாயினும், அவையே உரைநடை ஆக்கத்திற்கு உறு துணையாக அமைகின்றன என்று கொள்ளவேண்டியுள்ளது. அத் தனிச் சொற்கள் உரைநடை இணைப்புக்களுக்கு உற்ற துணை செய்கின்றன என்னலாம்.

சிலப்பதிகார உரைநடை உயர்ந்த நடையாகவே அமைகின்றது. 'பாட்டைப் படித்துப் பொருள் கொள்வது கூட எளிமையாகிவிடும்; இந்த உரையைப் பயில இலயாது போலும்!' என்று சொல்லக்கூடிய வகையில் அமைகின்றது. உரைநடை எளிதாகவும், பாட்டுக் கடினமாகவும் அமைய வேண்டும் என்பது பலருடைய எண்ணம். ஆனால், அது முடிந்த எண்ண மன்று. பாட்டை மிக எளிய நடையிலும் பாடி விடலாம். எல்லோருக்கும் புரியும் வகையில் இந்த நூற்றாண்டில் பாரதி பாடியதைப் பாட்டு அன்று என்று யாரால் சொல்ல முடியும்? அதே நிலையில் சிலப்பதிகாரம், இறையனார் அகப்பொருள் உரை முதலியவற்றின் உரை நடையை எளியவை என்று யாரே கூற வல்லார்? எனவே, பாட்டு, உரைநடை என்ற இரண்டின் எளிமையும் கடுமையும் அவரவர் மனப்போக்கு, காலநிலை,பிற சுற்றுச்சார்புகளை யொட்டி அமைகின்றன என்று கொள்ளுதல் பொருத்த மானதாகும். எத்துணை உயர் நடையினதாய் இருந்தாலும் படித்துணர்ந்து அறிந்துகொள்ளும் நல்லவர் வாழ்ந்தநாளில், பாட்டையோ உரை நடையோ மிக எளிய நடையில் எழுதினால் யாரே ஏற்பார்? எனவேதான் இளங்கோவடிகள் தம் கால நிலைக்கு ஏற்ப உரைநடையைப் பாட்டு நடையினும் உயர்ந்த நடையுடையதாகவே ஆக்கியிருக்கிறார் என்பதை உணர வேண்டும். நூல் தொடங்கும்முன் காட்டும் கண்ணகி

யின் வரலாற்று இறுதியில் தமிழ்நாடும் பிற நாடுகளும் அக் கண்ணகிக்கு ஆற்றிய வழிபாட்டை உரைநடையில் சொல்லுகின்ருர்.

ஆசிரியர் **உரை பெறு கட்டுரை** என்ற தலைப்பிலே நான்கு பகுப்பில் கண்ணகி வழிபாட்டையும் அதன்வழி வளமுற்ற தமிழ் நாட்டையும் காட்டுகிருர். உரைக்கப் பெறுகின்ற கட்டுரை அல்லது வசனம் என்ருே, உரையாகக் கட்டுரைக் கப்பெற்ற பகுதியென்ருே இதற்குப் பொருள் கொள்ளலாம். நாட்டிலே வழங்கிய நல்ல சொற்களைத் தொகுத்து அன்று நிகழ்ந்த நிகழ்ச்சியினை உலகுக்குக் காட்டும் கட்டுரையாக இது அமைகின்றது. இதோ அவர் வாக்கு:

> அன்று தொட்டுப் பாண்டியன் நாடு, மழை வறம் கூர்ந்து, வறுமை எய்தி, வெப்பு நோயும் குருவும் தொடர, கொற்கையில் இருந்த வெற்றி வேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிர வரைக் கொன்று களவேள்வியால் விழாவோடு சாந்தி செய்ய, நாடு மலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கிற்று.
>
> அது கேட்டு, கொங்கிளங் கோசர், தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழாவோடு சாந்தி செய்ய, மழை தொழில் என்றும் மாருது ஆயிற்று.
>
> அது கேட்டு, கடல் சூழ் இலங்கைக் கயவாகு என்பான், கங்கைக்கு நாட்பலி பீடிகை கோட்ட முந்துறுத்து, ஆங்கு 'அறந்தை கெடுத்து வரந்தரும் இவள்' என, ஆடித் திங்கள் அகவையின் ஆங்கோர் பாடி விழாக்கோள் பன்முறை எடுப்ப, மழை வீற்றிருந்து, வளம் பல பெருக்கி, பிழையா விளையுள் நாடாயிற்று.
>
> அது கேட்டு, சோழன் பெருங்கிள்ளி, கோழி யகத்து 'எத்திறத்தானும் வரந்தரும் இவள்

**ஓர் பத்தினிக் கடவுளாகும்' என, நங்கைக்குப் பத்தினிக் கோட்டமும் சமைத்து, நித்தல் விழா வணி நிகழ்வித்தோனே.**

மேற்கண்ட பகுதி சிலப்பதிகாரப் பகுதியேயாகும். சேரன் செங்குட்டுவன் விழாவிடை வந்த மன்னர் பலர் கண்ணகிக்குத் தத்தம் நாடு நகரங்களிலே கோவில் எடுக்க ஏற்பாடு செய்து, தத்தம் நாட்டில் பத்தினித்தேவி வழி பாட்டை நிலைநிறுத்த முயன்ற செய்தியை நூலிலே ஆசிரியர் கூறுகின்றார். என்றாலும், இந்த நூலின் அடிப்படை, கடவுள் பத்தினியாம் கண்ணகியைப் பாராறியச் செய்வதே ஆதலின், அந்தப் பயன் பெற்ற மகிழ்ச்சியை முதலாவ தாகக் காட்டிப் பின் கதைக்குள் புகுந்து மங்கல வாழ்த்துக் காதையை ஆரம்பிக்கிறார். எனவே, இளங்கோவடிகள் உரைநடையை முன் வைத்து உள்ளத்தைக் காட்டி மெல்ல மெல்லக் கதையில் செல்வது விளங்கும்.

இனி, இவ்வுரைநடையை ஆராய்து பார்க்குங்கால் நமக்கு இதன் சிறப்பும் ஏற்றமும் அமைப்பும் விளங்கும். கண்ணகிக்கு மூவேந்தர் தமிழ் நாடும், ஈழமும், கொங்கும் செய்த சிறப்பை விளக்க வந்த ஆசிரியர் தம் உரை நடையையே சிறப்புடையதாக்கிச் செல்லுகின்றார். அவர் காலத்துப் பெரு வழக்கிலில்லாத ஓர் உரை நடை இது. புதிதாகப் புகுத்துங்கால் தோன்றும் கிளர்ச்சி, எதிர்ப்புக் களையெல்லாம் எண்ணியிருக்கும் அவர் உள்ளம். என்றாலும், உரை நடையை ஆக்க வேண்டும் என்ற உணர்வு மட்டும் நீங்கவில்லை. எனவே, அம் முதல் உரை நடையை உயர்நடையில் 'செய்யுட் பாட்டோ!' என நினைக்கும் வகையில் எழுதியிருக்கிறார். எனினும், இது அன்றைய சிறந்த உரைநடைக்கு நல்ல எடுத்துக்காட்டாய் அமைந்து நிற்கிறது. இதன் கருத்து என்ன? பாண்டியன் தவறு செய்ய, அதனால் நாடு நல மிழந்தது. அதை அறிந்த வெற்றி

வேற்செழியன் விழாச் செய்தான். நாட்டுத் துன்பம் நீங்கிற்று. அது போன்றே கொங்கு நாட்டிலிருந்த கோசரும், இலங்கை மன்னனும், சோழனும் தம் தம் நாட்டில் விழா வாற்றி, நாட்டில் நலமுண்டாகச் செய்தனர். சேரர் செய்த விழாவைப் பின்னுல் நன்கு சிறப்பித்துப் பேசுகின்ற காரணத் தால் இங்கு விளக்கவில்லை. பொருள் இவ்வளவுதான். எனினும், அதை அறிய உரைநடையில் உயரிய வகையில் இளங்கோ வடிகள் காட்டியிருப்பதை நோக்கின், அக்கால உரைநடை, செய்யுள் நடைக்கு இளைத்த தன்று என்பது விளங்கவில்லையா?

**' அரந்தை கெடுத்து வரம்தரும் இவளென**
**ஆடித் திங்கள் அகவையின் ஆங்கோர்**
**பாடி விழாக்கோள் பன்முறை எடுப்ப'**

என்று அகவற்பா வகையிலே அமைக்கும் முறையில சொற்போக்கு அமைந்த போதிலும் இதை உரைநடை என்று தான் அவர் கொண்டு விளக்குகின்ருர். எனவே, மேலை நாட்டு அறிஞர்கள் ஆய்ந்து கண்ட முடிவுப்படி உரைநடை, உணர்வும் ஆற்ருெழுக்கும் விழுமிய ஓசையும் பெற்ற சொல்லோவியம் என்பதை அன்றே இளங்கோவடிகள் காட்டிவிட்டார் என்று சொல்வது பொருந்துமன்ருே!

இனி நூலுள்ளும் பலவிடங்களில் 'உரைப்பாட்டு மடை' என்ற பகுதியும், கட்டுரைப் பகுதியும் வருகின்றன. தனிச் சொற்கள் சில விடங்களில் வருகின்றன. கட்டுரை என்பது சில விடங்களில் அகவற்பாப் போல அமைந்து சென்ருலும், இரண்டோர் இடங்களில் உரைநடையாகவே வருதலைக் காண்கிருேம். கானல் வரியில் கோவலனும் மாதவியும் கடற்கரையில் அமர்ந்து அழகாகப் பாடுகின்றனர். அவரவர் தம் பாடல் முடிந்த நிலையில் கட்டுரை வருகின்றது. அக் கட்டுரை உரைநடையாகவே அமைகின்றது என்னலாம். கோவலன் கானல் வரிப்பாட்டைப் பாடி முடித்தான், அவன்

உள்ளத்தில் ஏதோ ஒரு குறிப்போடுதான் அப்பாடல்களைப் பாடினுன் என நினைத்தாள் மாதவி. எனவே தானும் அவ்வாறே குறிப்புத் தோன்றப் பாட நினைத்தாள்; அவன் கையிலிருந்த யாழை வாங்கினுள்; பாடத் தொடங்கினுள். இக்கருத்தை ஆசிரியர் இளங்கோவடிகள் தம் கட்டுரை வகையினுலேயே காட்டுகின்றுர். இன்றைய வானெலி நாடகங்களிலும், தெருக்கூத்துக்களிலும் - ஏன் - படக்காட்சிகளிலுங்கூடக் காட்ட முடியாத சில பகுதிகளை இடையில் யாராவது உரை பெறு கட்டுரையால் உணர்த்தி மேலே கதையை நாடகவழி நடத்திச் செல்வதை நாம் காண்கிருேம். ஆம். அந்த வகையில் அமைவது போல, இந்தக் கட்டுரை அமைகின்றது. காதை - கானல்வரி - வரிப்பாட்டுக்களை வாரி வீசுக்கொண்டே செல்கிறது. அதற்கு இடையில் யாழ் கைமாறும் செயலை ஆசிரியர் கூறியாக வேண்டும். அந்த நிலையிலேதான் உரைநடை வருகிறது. இதோ அடிகளின் உரைநடை:

**"ஆங்குக் கானல் வரிப்பாடல் கேட்ட மானெடுங்கண் மாதவியும், 'மன்னும் ஓர் குறிப்பு உண்டு, இவன் தன் நிலை மயங்கினுன்,' எனக் கலவியால் மகிழ்ந்தாள் போல் புலவியால் யாழ் வாங்கித் தானும் ஓர் குறிப்பினள் போல் கானல் வரிப் பாடல் பாணி, நிலத்தெய்வம் வியப்பு எய்த நீள் நிலத்தோர் மனம் மகிழ, கலத்தொடு புணர்ந்து அமைந்த கண்டத்தால் பாடத் தொடங்கு மன்"**

என்பதே அக்கட்டுரை. இதுவும் அகவற் செய்யுளைப் போன்று அமைந்து செல்லினும், ஆய்ந்து பார்க்கின் இது வேருகவே தெரியும். மேலை நாட்டு ஆசிரியர்கள் கண்டபடி, இதில் சந்தம் (Rhythm) காணப்படுமே ஒழிய வேறு செய்யுள் அமைப்பு இல்லை. இருப்பின், இதைக் கட்டுரை என்று பிரிக்கக் காரணமே இல்லையன்ருே!

இதைப் போன்றே மாதவியின் பாடலைக் கேட்ட கோவலன், அவள் மேல் ஐயமுற்று, அவளை விட்டு நீங்கும் இடத்திலும் கட்டுரை வருகின்றது. அமைப்பிலும் நடையிலும் போக்கிலும் இதை ஒத்தே அக்கட்டுரைப் பகுதியும் அமைகின்றது.

> '' எனக்கேட்டு, 'கானல் வரி யான் பாடத் தான் ஒன்றின்மேல் மனம் வைத்து, மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினாள், என, யாழ் இசை மேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்து உறுத்தது ஆகலின், உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக் கை நெகிழ்ந்தனனாய், 'பொழுது ஈங்குக் கழிந்தது; ஆகலின் எழுதும்' என்றுடன் எழாது, ஏவலாளர் உடன் சூழ்தரக் கோவலன் தான் போன பின்னர் ''

என்ற தொடரே அது. இதிலும் பாடல் முடிந்த பின் மனமாற்ற முற்ற கோவலன் செயல் ஆசிரியரால் எடுத்துக் காட்டப்பெறுகின்றது. இவ்வாறு பல கட்டுரைகள் அக்கால உரை நடை என்னும் இசை நலம் கலந்த வாசகத்தால் உணர்த்தப் பெறுவதை இளங்கோவடிகள் வாக்காக இன்னும் காண இயலும்.

நூலின் இறுதியில் வரந்தருகாதைக்கு முன் அமைந்த வாழ்த்துக் காதைத் தொடக்கத்தில் ஓர் உரைப் பாட்டு மடை வருகின்றது. 'உரைப்பாட்டு மடை' என்பதற்கு 'உரைப்பாட்டை நடுவே மடுத்தல்' எனவும் 'உரைச் செய்யுளை இடைநிலை மடுத்தல்' எனவும் அரும்பத உரையாசிரியர் காட்டிய பொருளை மேலே கண்டோம். அஃது இங்கு நினைவுக்கு வருகின்றது. யாப்புவழி வரும் பாவினை - செய்யுளை - பாடலைப் பாடிக் கொண்டு செல்கின்ற புலவர் இடையிடை ஓசை இன்பம் உடைய உரையைக் கலந்து செல்கின்றார் என்பது இவ்வரும்பத உரையாசிரியர்

கருத்தாய் விளங்குகின்றது. இதைப் பற்றித்தான் போலும் நூலுக்கே 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்ற பெயர் வந்தது!

வாழ்த்துக் காதையில் வரும் வாசகம், நீண்ட வாசகமாகும். ஆகவே, அத்தனையும் இங்கு நான் எடுத்துக் காட்ட வேண்டா என எண்ணுகிறேன். கண்ணகிக்குக் கோயிலெடுக்க நினைத்து, நினைத்தது முடித்து, வஞ்சியில் பெருவிழாச்செய்த ஞான்று, நடந்த ஒரு நிகழ்ச்சியையே இங்குத் தொகுத்து 'உரைப்பாட்டு மடை' ஆக்குகின்றார். இதையும் பாடலாகவே செய்திருக்கலாம். எனினும், அடுத்து வரும் இசையொடு கலந்த இசைப்பாடல்களினும் வேறுபடுத்த இதை இவ்வாறு அமைத்தார் போலும் எனக் கொள்ள வேண்டியுள்ளது. சில அடிகளை மட்டும் இங்குக் காணலாம்.

> **'குமரியொடு வடவிமயத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதற்குத் திகழ் ஒளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்ற மைந்தன், கொங்கர் செங்களம் வேட்டுக் கங்கைப் பேரி யாற்றுக்கரை போகிய செங்குட்டுவன்'**

புகழ் கூறி மேலும் செல்லுகிறது உரைப்பாட்டு மடை. இதில் இமயம் வரை செங்குட்டுவன் படை எடுக்க நேர்ந்த காரணமும், அதன் வழிக் கண்ணகிக்குக் கல் எடுக்க இமயம் சென்று திரும்பியதும், வஞ்சியுள் நடந்த விழாச் சிறப்பும், அச்சிறப்புப் பற்றி அறிந்த தேவந்தி முதலியோர் வஞ்சி வந்து விழா நலம் கண்டு அரற்றிய நிலையும் பேசப்படுகின்றன. இவற்றுள் பெரும் பகுதி முன் கதை வழி நாம் கண்டிருக்கிறோம். நிகழ்ச்சிக்கிடையில் வேறு சில பழைய பாத்திரங்கள் வந்து சேர்கின்றன. இவற்றையெல்லாம் காட்டிப் பின் பாட்டின் வழி விழா நிகழ்ச்சியை விளக்குகின்றார் ஆசிரியர். எனவே, இப்பாட்டு மடையும் முன்னதை

யும் பின்னதையும் பின்னிப் பிணைக்கும் ஒன்றாய் அமைகின்ற தென்பதை நாம் நன்கு அறிகின்றோம்.

இனி, கட்டுரை என்பதையே ஒவ்வொரு காண்டத்தின் இறுதியிலும் காண்கின்றோம். நூலின் இறுதியிலும் **கட்டுரை காதை** என்னும் ஒன்றே அமைகின்றது. இவை உரையா, பாட்டா என்று ஆராயத் தோன்றும். முதலாவது கட்டுரை, பத்தாம் காதை இறுதியில் புகார்க் காண்ட முடிவில் வருகிறது. அது பெரும்பாலும் நூல் செல்லும் பாவழியே செல்கிறது என்பது பயில்வோருக்கு விளங்கும். அதன் முடிவில் 'ஒரு பரிசா நோக்கிக் கிடந்த புகார்க் காண்டம் முற்றிற்று' என்னும் தொடர் உரை நடை போன்று அமைகின்றது. அதைப் போன்றே, மதுரைக் காண்டத்து இறுதியில் வரும் கட்டுரையில், 'பாண்டியன் நெடுஞ்செழியனோடு ஒரு பரிசா நோக்கிக் கிடந்த மதுரைக் காண்டம் முற்றிற்று', என்ற தொடரும், வஞ்சிக் காண்டத்து இறுதியில் 'செங்குட்டுவனோடு ஒரு பரிசு நோக்கிக் கிடந்த வஞ்சிக்காண்டம் முற்றிற்று' என்ற தொடரும் உரை நடை போலவே முடிகின்றன. இவற்றைக் கொண்டு தான் கட்டுரை என்ற பெயர் அமைந்ததா, அன்றிக் காண்டத்துக் கூறிய பொருளை ஆங்காங்கே தொகுத்துக் கட்டுரைத்தமையால் கட்டுரை என்று பெயர் அமைந்ததா என்பதை ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும்.

இனி, மதுரைக் காண்டத்தில் இறுதியாக வரும் கட்டுரை காதை, நூலின் பாவழியேதான் செல்கின்றது. இடையில் தனிச் சொற்களோ, கட்டுரையோ, உரைப் பாட்டு மடையோ இடம் பெறவில்லை; உரை நடையில் செல்லும் பகுதியும் காணவில்லை. எனினும், மதுரை நிகழ்ச்சிக்குக் காரணத்தையும், அதன் வழிப் பாண்டியர் கொற்ற இயல்பினையும், பிறவற்றையும் கண்ணகிக்கு

மதுராபுரித் தெய்வம் கட்டுரைத்த காரணத்தினலேதான் இது 'கட்டுரை காதை' எனப் பெயர் பெற்றது எனக் கொள்ளல் பொருந்தும். இம்முறை நோக்கினல், 'கட்டுரை' என்பது உரை நடையை மட்டும் குறிப்பதன்று என்பதும், ஒன்றை இட்டுக் காட்டிச் சொல்லும் வகையில் அமைந்த தென்பதும் கொள்ளல் வேண்டும். எனவே, சிலப்பதி காரத்தில் வரும் கட்டுரை அனைத்தும் உரை நடை என்று கொள்ளல் பொருந்தாது என்பது தெளிவு. இக்கட்டுரை என்பதற்குப் 'பொருள் பொதிந்த சொல், என உரை எழுதுகின்ருர் ந. மு. வே. நாட்டார் அவர்கள். (நாட்டார் உரை பக். 475). அப்படிப் பார்ப்பின், இதில் வரும் கட்டுரைகளெல்லாம் கூறிய பொருளைத் தொகுத்துப் பொருளைப் பொதிந்து வைத்தனவாகவும், மதுராபுரித் தெய்வம் கூறியது 'பொருள் பொதிந்த வாசகம்' எனவும் கொள்ளல் பொருந்துவதாகும். எனினும், மேலே கண்டபடி 'உரைபெறு கட்டுரை' 'உரைப்பாட்டு மடை' போன்றவை வாசகமாகிய வசனத்தை (Prose) இடைபெற்றியங்குவன என்பதும் தெரிகிறது.

**ஆய்ச்சியர் குரவையில்** கருப்பம், எடுத்துக் காட்டு என்ற இரு பகுதிகள் உரை நடைகளாகவே வருகின்றன. இவற்றில் சில தனிச் சொற்களும் இடம் பெறுகின்றன. குரவைக் கூத்தாடுவதன் அவசியத்தை எடுத்துக்கூறி இடைக்குல மாதரை அழைக்கும் முறையில் அமைகின்றது கருப்பம்.

> **"குடத்துப்பால் உறையாமையும், குவி இமில் ஏற்றின் மடக் கண்ணீர் சோர்தலும், உறியில் வெண்ணெய் உருகாமையும், மறி முடங்கி ஆடாமையும், மால் மணி நிலத்து அற்று வீழ்தலும், வருவது ஓர் துன்பம் உண்டு என மகளை நோக்கி, 'மனமயங்காதே! மண்ணின் மாதர்க்கு அணியாகிய கண்ணகியும் தான் காண, ஆயர்பாடியில் எரு**

மன்றத்து மாயவனுடன் தம்முன் ஆடிய வால சரிதை நாடகங்களில், வேல் நெடுங்கண் பிஞ்ஞை யொடு ஆடிய குரவை ஆடுதும் யாம்' என்றாள் கறவை கன்று துயர் நீங்குக எனவே.''

என வருவது உரைநடையாகவே அமைவதைக் காண லாம். அடுத்து எடுத்துக்காட்டு என வரும் பகுதியில்,

''ஆங்கு, தொழுவிடை ஏறு குறித்து வளர்த் தார் எழுவர் இளங்கோதையார் என்று தன் மகளை நோக்கி, தொன்றுபடு முறையான் நிறுத்தி, இடை முதுமகள் இவர்க்குப் படைத்துக்கோள் பெயர் இடு வாள்; குட முதல் இட முறையா, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் விரிதருபூங் குழல் வேண்டிய பெயரே''

என்ற உரைநடை உருவாகின்றது. இங்கேயும் பாடுவார் செயல் பேசப்படுகின்றது. எனவே, தொடர்ந்து பாட்டி சைத்துச் செல்லுவார், தம் செயல்களையும் நிகழ்ச்சிகளை யும் காட்ட, இப்படி இடையிடையே உரைநடையினை இளங்கோவடிகள் கையாண்டார் என்பது நன்று தெரி கின்றது.

இனி, தனிச் சொற்களின் நிலைகண்டு கட்டுரையை முடிப்போம். தனிச் சொற்கள் நூலில் பல இடங்களில் வருகின்றன. சங்க இலக்கியங்களில் வேறு ஒரு சில பாடல்களிலும் இத்தனிச் சொற்கள் வருகின்றன என்ன லாம். 'ஆற்றொழுக்காக ஓடும் பாட்டுப் போக்குக்கு இடையில் இத்தனிச் சொற்கள் என்ன செய்கின்றன?' என்ற வினா எழு மன்றோ? ஆம்! இத்தனிச் சொற்கள் விரைந்து செல்லும் பா நடையைத் தடுத்து நிறுத்தி, ஒரு தனி ஓட்டத்தைப் புதியதாக உண்டாக்குகின்றன என்னலாம். மேலே கண்ட ஆய்ச்சியர் குரவையில் 'அவருள்', 'அவர் தம்', 'என்று யாம்' என்பன போன்ற தனிச் சொற்கள் இடம் பெறுவதைக் காண்கிறோம்.

இவற்றின் இடை வரவால் பாடிச் செல்லும் பாட்டுக்களின் நிலை சிறிது தடைப்பட்டே அசைந்து செல்கிறது என்னலாம். இத்தனிச் சொற்களால் உரைநடை வகையைப் பாட்டிடைப் புகுத்த நினைக்கும் நிலையும் ஒரோ வழிப் புலனாகின்றது.

முதலாவது காதையாகிய **மங்கல வாழ்த்தில்** 'ஆங்கு' 'அதனால்', 'அவளுந்தான்', 'ஆங்கு', 'அவரை', 'அவ்வழி' என்ற தனிச்சொற்கள் கதை ஓட்டத்துக்கு உறுதுணையாய் அமைந்து பாட்டின் வேலையைப் பெரும்பகுதி குறைத்து விடுகின்றன என்னலாம். இத்தனிச் சொற்களுக்குப் பதில் இவற்றின் பொருளை எடுத்து விளக்க வேண்டுமாயின், ஆசிரியர் இன்னும் சில அடிகளைப் பாடியிருக்க வேண்டும் என்பது பயில்வார் அறியும் ஒன்று. எனவே, விரைந் தோடும் பாட்டின் வேகத்தைத் தடுத்து நிறுத்தும் இத் தனிச் சொற்கள், கவிஞனுடைய வேலையைக்கூட ஓரளவு குறைக்கின்றன என்னலாம்.

'முடித்த கேள்வி முழுதுணர்ந்தோர்' என்று பழங் குடிப் பண்பினைக் கூறிய ஆசிரியர், அடுத்துப் புகார் நகரைப் போற்ற வருகின்றார். அதற்கிடையில் அவர் கூறிய அதனால், இதன் சிறப்பு இத்தகையது எனக் காட்ட 'அதனால்' என்ற தனிச் சொல்லைப் பெய்தார். அதே போன்று, கண்ணகியின் சிறப்பைக் கூறி வரு கின்றவர், அவளுக்கு மேலும் ஏற்றம் தர நினைத்தார், அந்த ஏற்றம் பேசப் பெறுமுன் 'அவளுந்தான்' என்ற தனிச் சொல்லைப் பெய்து தொடங்குகின்றார்.

**' மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்**
**ஈகைவான் கொடி அன்னாள் ஈராறு ஆண்டு அகவையாள்;**
**அவளுந்தான்,**
**போதிலார் திருவினாள் புகழ்உடை வடிவென்றும்**
**தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்**
**மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்**
**காதலாள் பெயர்மன்னும் கண்ணகிஎன் பாள்மன்னோ**

என்று செல்கிறது சிலப்பதிகாரம். இதில் வரும் 'அவளுந் தான்' என்ற தனிச்சொல், இத்தொகுதிக்கு இன்றி யமையாததாகக் காண்கின்றது. இவ்வாறே மங்கல வாழ்த்துக் காதையில் வருகின்ற பிற தனிச்சொற்களும் வேறு இடங்களில் வருகின்ற தனிச் சொற்களும் மிகவும் இன்றியமையாதனவாகி இப்பேரிலக்கியத்தைத் தடை படா வகையில் பீடு நடையுடன் நடத்திச் செல்கின்றன என்னலாம். என்றாலும், இத்தனிச் சொற்கள் உரை நடையாகிய வாசகத்தின் இடையில் அமைவன போன்றே செல்கின்ற காரணத்தால், இவை உரையிடைப் பொருத்த முதல் வழியாக அமைந்து நின்றன என்று கொள்ளலே மிகப் பொருத்தமானதாக அமைகின்றது. இவ்வாறே சிலப்பதிகாரத்தில் உரைநடை பல வகையில் பொருந்தி நின்று இச்சிலப்பதிகாரத்தை நடத்திச் செல் கின்றது. எனவே, நூல் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாய் அமைகின்றது. இச்சிலப்பதிகாரத்தில் உரை நடை வளர்ச்சி அடையவில்லை என்றாலும், இது தொல்காப் பியர் காலத்தில் இருந்து பின் எவ்வாறோ மறைந்த இவ் வுரைநடை மீண்டும் தோன்றிய காலமாய் அமைந்து விட்டது. ஆயினும், தொடர்ந்து உரை நடையை வளர்த்ததான முயற்சி ஒன்றும் அக்காலத்தில் நாட்டில் நடைபெறவில்லை என்று தெரிகிறது. இதற்குப் பின் ஆறு ஏழு நூற்றாண்டுகள் கழித்து, எழுதப் பெற்ற **இறையனார் அகப்பொருள்** உரை நடையினையே நாம் காண் கிறோம்.

இவ்வாறு தொல்காப்பியர் காலத்துக்கு முன் இருந்து பின் தோன்றாது நின்ற உரைநடை சிலப்பதிகார காலத்தில் மறைவாகத் தோன்றி மறுபடியும் சில நூற்றாண்டுகள் கழித்தே வளர்ச்சியுற்றது என்று கொள்ளுதல் பொருத்த மானதாகும்.

# IV

## தமிழ் உரை நடையில் ஒரு மைல் கல்

தமிழில் பழங்காலத்தில் உரை நடை இல்லை என்பார் தொல்காப்பியர் சூத்திரத்தையும் அதன் விளக்கங்களையும், அதன்பின் தோன்றிய சிலப்பதிகார உரைநடையையும் கண்டால், தம் எண்ணத்தை மாற்றிக்கொள்வர். ஆயினும், அச்சிலப்பதிகாரத்தில் காணும் சில உரை நடைத் தொடர்களுக்குப் பின் தமிழில் எந்த நூற்றாண்டில் உரை நடை வளர்ந்தது என்று சொல்ல முடியாத நிலையில் நாம் நிற்கிறோம். சிலப்பதிகாரம் கி. பி. முதல் நூற்றாண்டின் இறுதியிலோ, இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ எழுந்த நூல் என்பது பலருடைய துணிபு. அதற்குப் பிறகு சில நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் என்ன நடந்தது, என்ன நூல்கள் எழுதப் பெற்றன என அறிய முடியாதபடி இருண்ட நிலை நிலவியது. எனவே, அந்த இருண்ட காலத்தில் யார் யார் ஆண்டனர். யார் யார் வாழ்ந்தனர் என்பன சொல்ல முடியாதன. அந்த நிலையில் அவர்கள் எழுதிய நூல்பற்றி அறிவது எவ்வாறு?

ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேதான் மறுபடியும் நம்மால் தமிழகத்தைக் காண முடிகின்றது. அந்தத் தமிழகத்திற்கும் சங்ககாலத் தமிழகத்துக்கும் இடையில் எத்தனையோ வேறுபாடுகள் இருக்கின்றன. ஆயினும், அக்காலத்தில் உரை நடை இலக்கியங்கள் தோன்றி வளர்ந்தன என்பதற்குச் சான்றுகள் கிடையா. வேறு இலக்கியங்களும் வளர்ந்தன எனக் காட்டமுடியாவிடினும், இலக்கியமும் பிறவும் வேறு வகையில் வளர்ந்து வந்தன

என எண்ண இடமுண்டு. ஏழாம் நூற்றுண்டின் இலக்கியங்களாகிய தேவாரம் போன்றவற்றிற்கும், சங்க இலக்கியத்திற்கும் உள்ள வேறுபாடுகளை யாவரே அறியார்! இந்த வளர்ச்சியில் வடமொழிவாணருக்கும், பிற வடநாட்டவருக்கும் பங்கு உண்டு என்பதை வரலாறு காட்டும். பல வடசொற்கள் தமிழில் அதிகமாகக் கலந்துள்ளன. பாட்டிடை மட்டுமன்றி, உரையிடையும் வடசொற்களும், வடநாட்டுப் பழக்க வழக்கங்களும் மிகக் கலந்து வந்துள்ளன. இக்கால உரைநடையை விளக்கப் போதிய சான்றுகள் இலவாயினும், 'இறையனுர் களவியல் உரை' ஒன்றே சிறந்த சான்ருய் நிற்கின்றது என்பது உண்மையன்றே? ஆம்! இறையனுர் களவியல் உரை தமிழ் உரைநடையில் ஒரு மைல் கல்லாய் நிற்கிறது.

நூலுக்கு உரை எழுதும் பழக்கம் சங்ககாலத்தில் இல்லை. சங்ககால இலக்கங்களாகிய பத்துப் பாட்டுப் போன்றவற்றுக்கும், தொல்காப்பியத்திற்கும், சிலப்பதிகாரத்திற்கும் மிகவும் பிற்காலத்திலேயே பல அறிஞர்கள் உரை எழுதியுள்ளார்கள். பாட்டுக்கு உரை என்ற வகையில் முதல் தோன்றிய உரை இறையனுர் களவியல் உரையே எனக் கொள்ள வாய்ப்பு இருக்கின்றது. நாட்டு வரலாற்றை நன்கு ஆராய்வாருக்குக் கல்வி நிலை தொல்காப்பியர் - சங்ககாலம் - தொடங்கி வர வரக் குறைந்து கொண்டே வருகின்றது என நினைக்கத் தோன்றும். உரையே தேவையற்ற உயர்ந்த இலங்கியங்களைப் பாடியும் பயின்றும் வாழ்ந்த நிலை மாறி, எல்லாவற்றிற்கும் உரை எழுத வேண்டிய நிலை உண்டாயிற்று. அந்த உரைகளும் சில சமயத்தே உயர்ந்த நடையாய் அமைவதிலிருந்து அக்காலத்திலும் கற்றறிந்தவர் சிறந்திருந்தனர் எனக்கொள்ள இடமுண்டு. உரை எழுதுவதால் பாட்டின் பொருள் நன்கு சிறக்கும் என்பது உண்மையே. என்றாலும், பாட்டுக்கு

உரை இன்றிப் பயில முடியாத நிலையில் கல்வி சற்றுத் தாழ்ந்திருந்தமை உரைப் பெருக்கத்தால் விளங்கும். அவ்வுரைகளுக்கெல்லாம் முற்பட்ட உரை நூலே இறையனர் களவியல் உரை.

இறையனர் களவியல் உரை எழுதியவர் **நக்கீரர்** என்பர். அவரும் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த நக்கீரரே என்பர். அக்கூற்றுச் சற்றும் பொருந்தா வகையில் உரை அமைகின்றது. **நெடுநல் வாடை** போன்ற இலக்கியங்களைப் படைத்த அந்த நக்கீரரா இந்த உரை எழுதியவர்?' என்று கேட்கத் தோன்றுகிறது. உரை நடை வளமாகச் செல்கிறது என்ருலும், அதில் கலந்துள்ள வடமொழிச் சொற் பெருக்கமும், உதாரணப் பாட்டுக்களாகிய **பாண்டிக் கோவையும்**, நக்கீரரைப் பற்றிய சிறப்புரைகளும், பிறவும் நக்கீரர் காலத்துக்குப் பின் யாரராலோ இவ்வுரை செப்பம் செய்யப்பட்டது என்பதைக் காட்டுகின்றன. நூல் வழி ஆராய்ந்து பார்த்தாலும் இவ்வுரை நக்கீரருக்குப் பின் பல கால்வழி கடந்து கடைசியில் ஒருவரால் எழுதி வைக்கப் பெற்றதென்பது நன்கு தெரியும். எனவே, நூலின் போக்கையும் அமைப்பையும், பிற இயல்புகளையும் நன்கு ஆய்ந்து கண்ட அறிஞர், 'இந்நூல் உண்டாகி உரை சொல்லப்பெற்ற காலம் நக்கீரர் காலமாயினும், இன்றைய வடிவில் இது அமைந்த காலம் எட்டாம் நூற்ருண்டே' என அறுதியிடுவர்.

ஒருமொழியின் நடை தூய்மையாய் இருக்கவேண்டும் என்ருல், அது பிற மொழிகளின் கலப்பற்றதாயிருக்க வேண்டும் என்றுதான் அனைவரும் கருதுகின்றனர். ஆயினும், அறிஞர் **திரிகூட சுந்தரனர்** அவர்கள்[1] மிக

1. சுதேசமித்திரன் தீபாவளி மலர், பக். 182 (Nov. 58)

எளிமை வாய்ந்த நடையே தூய்மையானது எனக் குறிக்கின்றார்; அதற்கு **ஆக்ஸ்போர்டு அகராதியைத்** துணை கொள்கின்றார். 'Chaste' என்ற சொல்லுக்கு 'Simple, unadorned' போன்ற பொருள்கள் அதில் கூறப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டுகின்றார். அதே சொல்லுக்கு இவ்விரண்டு சொற்களைக் கூறுமுன் pure, vigin, restrained போன்ற பொருள்களும் இருப்பதைக் காட்டவில்லை.[1] 'பிறமொழி கலந்தாலும் தவறில்லை; எளிமையாய் இருப்பதே மொழிக்கு அழகு,' என்கிறார் அவர். ஆயினும், பிற மொழிக் கலப்பின்றி எளிமையும் கூடினால் பொன் மலர் நாற்ற முடைத்தாகாதா? இந்த நிலைகொண்டு பார்த்தால் இறையனார் களவியலுரை எளிமை இல்லாத நிலையுடன் வடமொழிக் கலப்பையும் மிகுதியாகப் பெற்ற நிலை எண்ணத்தக்கதுதான், இனி அதன் காலம் எட்டாம் நூற்றாண்டு என்பது பொருந்துமா என்பதைக் காண்போம்.

இறையனார் களவியல் உரையை எட்டாம் நூற்றாண்டிற்குக் கொணர்ந்தால், நக்கீரரும் அந்த நூற்றாண்டிற்கு உரியவராகி விடுவரே என்று அஞ்ச நேரிடும். அதன் வழி கடைச்சங்க காலமே மாறும் நிலை உண்டாகு மல்லவா? ஆயினும், உரைவழி நோக்கின் அவ்வாறு எண்ணத் தேவையில்லை. அதில் உரை எவ்வாறு வளர்ந்து வந்தது என்பதை ஒரு பகுதி நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றது. அதைக் காண்போம். உரை நடந்து வந்த முறை இதுதான்:

> **'மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தன் மகனார் கீரங்கொற்றனாருக்கு உரைத்தார்; அவர் தேனூர்கிழாருக்கு உரைத்தார்; அவர் படியங் கொற்றனாருக்கு உரைத்தார்; அவர் செல்வத் தாசிரியர் பெருஞ்சிவனார்க்கு உரைத்தார்; அவர்**

1. **Oxford Dictionary, p. 188.**

மணலூர் ஆசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்த னூர்க்கு உரைத்தார்: அவர் செல்லூர் ஆசிரியர் ஆண்டைப் பெருங்குமரனூருக்கு உரைத்தார்; அவர் திருக்குன்றத் தாசிரியருக்கு உரைத்தார்; அவர் மாதளவனூர் இளநாகனூர்க்கு உரைத்தார்; அவர் முசிறியாசிரியர் நீலகண்டனூருக்கு உரைத்தார். இங்ஙனம் வருகின்றது உரை'

என்று இவ்வுரை வளர்ந்த வரலாற்றை இவ்வுரையே காட்டுகின்றது. எனவே, இது உண்டான அந்த நக்கீரர் காலத்திலேயே எழுத்து வடிவில் உருப்பெறாது ஆசிரிய மாணவ பரம்பரையில் செவிவழிச் செய்தியாக ஒருவர் மற்றவருக்குச் சொல்லும் வகையில் நடைபெற்று வந்தது என்பதை அறிகிறோம். உரை தோன்றிய காலந் தொட்டு வருபவர் பதின்மரர்கின்றனர். அதற்குப் பின்னும் அவ்வாறு நடந்து வந்ததோ என எண்ண இடம் உண்டு. இவ்வாறு செவிவழிச் செய்தியாகக் கேட்ட உரை, தான் தோன்றிய காலத்திலிருந்து சுமார் 600 ஆண்டுகள் கழித்து எழுத்து வடிவில் நூலாக உருப் பெற்றது என்று கொள்ளுதல் பொருந்தும். செவி வழி யாகக் கேட்டு ஒருவருக்கு மற்றவர் சொல்லும் வகையில் தொடர்ந்து வந்த காரணத்தால், தோற்ற நாளிலிருந்து இது எத்தனையோ வகையில் மாறுபட்டிருக்கக் கூடும் என்பதை மறுப்பார் யாரே! நக்கீரரே இப்போது வந்து பார்ப்பாராயின், இந்த உரைக்கும் தாம் கூறிய உரைக் கும் யாதொரு தொடர்பும் இல்லை என்று திட்டமாகச் சொல்லிவிடுவார் என்ப துறுதி. எனவே, தோன்றிய நாள் தொட்டு மாற்றம் பெற்றுக்கொண்டே வந்து, அந்த இடைக்காலத்தில் ஏற்பட்ட பல மாறுதல்களுக்கும் உள் ளாகி, வடமொழிச் சொற்கள் மிகுதியும் விரவப் பெற்ற தாகி, தான் வெளி வந்த அந்த நூற்றாண்டிற்கு ஏற்ப அக்காலத்து ஏற்பட்ட உதாரணப் பாட்டுகளையும் உடன்

கொண்டு வெளி வந்தது இவ்வுரை எனக் கொள்ளல் பொருந்தும். உரை கூறிய முதல்வர் நக்கீரராய் இருக்க, பின்வந்த அவர் உரைவழிப் புலவர்கள் அவருக்கும் நூலுக்கும் ஏற்றம் பல கூற அவற்றையும் சேர்த்து, இறுதியாக, வெளியிட்டவர் தம் கால நிலைக்கு ஏற்ப உரையை முடித்தார் எனக் கொள்ளல் வேண்டும். இவ்வாறு கொள்வது பொருத்தமானதே. எனவே, இதன் உரையாசிரியர் நக்கீரர் என்பதும் பொருந்தும்.

இதன் ஆசிரியர் நக்கீரர் என்பது நூல் முதலில் நன்கு காட்டப்பெற்றுள்ளது. இது அக்கால உரைநடையையும் எடுத்துக்காட்டப் பயன்படுமாதலால், இங்கு எடுத்துரைத்து மேலே செல்லலாம்.

> **"அரசனும் எதிர் சென்று, 'என்னே? நூற்குப் பொருள் கண்டீரோ?' என, 'அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டும்,' என, 'போமின்! நுமக்கோர் காரணிகனை நான் எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மர் ஆயிற்று, நுமக்கு, நிகராவார் ஒருவர் இன்மையின் அன்றே?' என்று அரசன் சொல்லப் போந்து கன்மாப் பலகை ஏறி யிருந்து, 'அரசனும் இது சொல்லினன். யாம் காரணிகனைப் பெறுமாறு என்னை கொல்!' என்று சிந்திப்புழி, 'சூத்திரஞ் செய்தான் ஆலவாயின் அவிர் சடைக் கடவு ளன்றே? அவனையே காரணிகனைத் தரல் வேண்டும் எனச் சென்று வரங் கிடத்தும்,' என்று வரம் கிடப்ப, இடையாமத்து 'இவ்வூர் உப்பூரி குடி கிழார் மகனுவான் உருத்திரசன்மன் என்பான், பைங் கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத்தன், ஒரு மூங்கைப் பிள்ளை உளன்; அவனை அன்னன் என்று இகழாது கொண்டு போந்து, ஆசனத்தின் மேல் இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருள் உரைத்தால்,**

கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும், மெய் யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளாவிருக்கும்: அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தான் தோன்றினன்," என முக்கால் இசைத்த குரல் அனைவருக்கும் உடன் பாடாயிற்று; ஆக, எழுந்திருந்து, தேவர் குலத்தை வலங்கொண்டு போந்து, உப்பூரி குடிகிழாருழைச் சங்கமெலாம் சென்று, இவ்வார்த்தை யெல்லாஞ் சொல்லி, 'ஐயனுவான் உருத்திரசன் மனைத்தரல் வேண்டும்.' என்று வேண்டிக் கொடு போந்து, வெளியது உடீஇ, வெண்பூச் சூட்டி, வெண் சாந்து அணிந்து, கல்மாப் பலகையேற்றிக் கீழிருந்து சூத் திரப் பொருள் உரைப்ப, எல்லாரும் முறையே பொருள் உரைப்பக் கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிள நாகனுர் உரைத்தவிடத்து ஒரோ விடத்துக் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் நிறுத்தி, பின்னர்க் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர் உரைத்த விடத்துப் பதந்தொறும் கண்ணீர் வார்ந்து, மெய்ம் மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து, 'மெய்யுரை பெற்றேம் இந்நூற்கு' என்றார்.''

இவ்விளக்கம் நக்கீரரே உரையாசிரியர் என்பதைக் காட்டுகிறது. இத்துடன் உரை நடந்து செல்லும் விதத்தை யும் இதிலிருந்தே கண்டறியலாம். ஒரே தொடராக, ஒன்றை ஒன்று பற்றிச்செல்வது போன்று, சற்றுக் கடின நடையென இன்று அனைவரும் கூறும் வகையில் இவ்வுரை நடை செல்லுகின்றது.

பாட்டிலிருந்து உரைநடைக்கு வந்த காலம் அது. பலரும் பாட்டை விரும்பிப் படித்திருக்கலாம். பாட்டு நடை உயர்ந்ததாய், அனைவருக்கும் எளிதில் விளங்காத தாய் இருந்தது. உரைநடையும் அந்த வகையில் எழுதி னுற்ருன் சிறக்கும் என ஆசிரியர்கள் நினைத்திருக்கலாம்.

மேலே நாம் கண்ட உரைநடை, இலக்கணத்துக்குப் பொருந்த விழுமிய நடையும் ஒழுகிய ஓசையும் கொண்டு செல்லுகின்றது. மற்றும் அகவற் பாக்கள் நீண்டு செல்வது போன்று, இவ்வுரைநடையும் மிக நீண்டு சென்று முடிகிறது. பாட்டில் அளபெடைகள் வருவன போன்றே, ஈண்டும் அளபெடைகளைக் காண்கிறோம். சாதாரண உரைநடை அமைப்பில் காணும் எழுவாய் பயனிலை வைப்பு முறைக்கு மாறாக முன்பின்னாக மாறிப் பாட்டிடை பயிலும் நிலையும் சிலவிடங்களில் அமைக்கப் பெற்றுள்ளது. இவ்வாறு இவ்வுரைநடை பல வகையில் பாட்டின் தன்மையை ஒட்டி நின்றாலுங்கூட இது பாட்டன்று என்று கூறும் வகையில் உரைநடையாகவே செல்லுதல் உண்மை. இவ்வாறே இவ்வுரைநடை முழுதும் செல்கின்றது.

இவ் வுரைநடையின் வழி எப்படி நூலுக்கு உரை கண்டார்கள் என்பது விளங்குகின்றது, அத்துடன் இது சங்க காலத்தது என்ற உண்மையும் தெளிவாகிறது. சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரும் இந்நூலுக்கு உரை கண்டார்கள் என்பதும், அவற்றுள் சிறந்தது நக்கீரர் உரையே என்பதும் 'உருத்திரசன்மன்' கண்ணீர் வழி இது நிறுவப்பெற்றதென்பதும் அறிகிறோம். இதைக் கொண்டே இவ்வுரை சங்க காலத்தது என வாதிப்பர். அவர் கூற்றுப் பொருந்தாது. நக்கீரர் கூற உருத்திரசன்மர் கேட்டனரே யன்றி, அதை நக்கீரர் எழுதி வைத்துப் பாதுகாக்கவில்லை. அவர் சொல்லிக் கொண்டே வந்தார்; அனைவரும் கேட்டு அதுவே சிறந்தது என ஏற்றுக் கொண்டனர். பின்பு நக்கீரரே கீரங் கொற்றனுக்கு உரைக்க, அது வழி வழி வந்தது என உரையின் அடுத்த பகுதி கூறுகின்றது. நக்கீரர் எழுதி அறுதியிட்டு வைத்திருப்பாராயின், இவ்வாறு பின் கூறப்படுவது எவ்வாறு

பொருந்தும்? நக்கீரர் எந்த நடையில் உரை வகுத்தாரோ நாமறியோம்! எனினும், அவர் வழி கேட்டு வந்த உரை எட்டாம் நூற்றுண்டில் இன்று நாம் காணும் வகையில் எழுதப் பெற்று நிலைத்து விட்டது எனக் கொள்ளலாம். எனவே, சங்க காலத்தில் தோன்றிய அந்த உரை, எட்டாம் நூற்றுண்டில், இடையில் உண்டான எல்லா வேறுபாடு களையும் கொண்டு இன்று காணும் வகையில் அமைந்து நின்றமையின், இந்நூலின் காலத்தை எட்டாம் நூற்றுண்டு என்று கொள்ளுவதே மிகவும் பொருத்தமானதாகும்.

இந்த உரை அமைப்பு இன்றைய உரைநடையொடு மாறுபட்டு உயர்நடையாகச் செல்வது நன்கு விளங்குகின்ற தன்றே! இன்னும் இரண்டொன்று காணலாம். கேட் போர் யார் என்பது பற்றிய இவ்வுரையாசிரியர் கூற்றை நோக்குவோம் :

> "கேட்போர் என்பது, இன்னுர் கேட்டார் என்பது. 'இந்நூல் கேட்டார் யாரோ?' எனின், குற்றமுடைய நூலாயினன்றே குற்றமின்மை ஆராய வேண்டுவது? இது முனைவன் தன்னுற் செய் யப்பட்ட நூலாகலான், குற்றமின்றே! இன்மையிற் கேட்டாரையும் இன்றென்பது. இன்றே யெனினும், உரை நடந்து வாரா நின்றமை நோக்கிக் கேட்டா ரையும் உடைத்தென்பது.யாரோ கேட்டார் எனின், மதுரை உப்பூரி குடிகிழார் மகனுவான் உருத்திர சன்மன் என்பது. அவன் கேட்டதற்குக் காரணம் சொல்லுதும்......" (பக்கம் 5)

'எனப்படுவது' என்ற சொல் சூத்திரத்தில் அமையும் காரணத்தை உரை ஆய்ந்து காட்டுவதைக் காணலாம்.

> " 'அஃதேயெனில், அன்பின் ஐந்திணைக் களவு அந்தணர் அருமறை,' என அமையாதோ? 'எனப் படுவது' என்பது எற்றிற்கோ? எனின், செய்யுள்

இன்பத்தின்பொருட்டு வந்தது என்னும் ஒருவன்; 'அற்றன்று; அதனுல் ஒரு பொருள் உரைப்பல்,' என்னும் ஒருவன். அதனுல் ஒரு பொருள் உரைப் பான் பக்கம் வலியுடைத்து. அஃதியாதோ எனின், களவு என்றற்குச் சிறப்புடைத்து என்றவாறு. 'ஊர் எனப் படுவது உறையூர்,' என்ற விடத்துப் பிறவும் ஊருண்மை சொல்லி, அவற்றுளெல்லாம் உறையூர் சிறப்புடமை சொல்லுப. இங்குப் பிறவும் கள வுண்மை சொல்லி, அக்களவுகட்கெல்லாம் இக்களவு சிறப்புடைத்து, சுவர்க்கம் வீடுபேறுகளை முடிக்குமா கலான், 'எனப்படுவது' என்று சொல்லிச் சிறப் பிக்கப்பட்டது. அது பாயிரத்துள்ளும் உரைத் தாம். மற்று உலகத்துக் களவாயின வெல்லாம் கைகுறைப்பவும் கண் சூலவும் கழு வேற்றவும் பட்டுப் பழியும் பாவமும் ஆக்கி, நரகத் தொடக்கத் துத் தீக் கதிகளில் உய்க்கும். இது மேன்மக்களால் புகழப்பட்டு ஞான ஒழுகத்தோடு ஒத்த இயல்பிற்று கலானும், பழி பாவம் இன்மையானும், 'எனப் படுவது' என்று விசேடிக்கப்பட்டது.'' (பக். 25)

இனித் தலைமகள் - பலநூறு தோழியரோடு கூடி வாழ்ந்த தலைமகள் - எப்படித் தமியளானுள் என்பதை உரை வழிக் காணல் நலம் பயப்பதாகும்:

''யாங்ஙனம் நிற்குமோ எனின், சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலாவும் ஆசினியும் அசோகும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவி யும் மல்லிகையும் மௌவலொடு மணங் கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையும் பிணி யவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னுகமும் முருக் கொடு முகை சிறந்து, வண்டறைந்து தேனூர்ந்து வரிக்குயில்கள் இசைபாட, தண்தென்றல் இடை விராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழிலது

நடுவண், ஒரு மாணிக்கச் செய்குன்றின்மேல், விசும்பு துடைத்து, பசும்பொன் பூத்து, வண்டு துவைப்பத் தண்தேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்; கண்டு, பெரியதோர் காதல் களிகூர்ந்து, தன் செம்மலர்ச் சீறடிமேல் சிலம்பு கிடந்து சிலம்பு புடைப்ப, அம்மலர் அணிக் கொம்பர் நடை கற்பதென நடந்து சென்று, நறை விரி வேங்கை நாள் மலர் கொய்தாள்; கொய்த விடத்து, மரகத விளிம்பு அடுத்த மாணிக்கச் சுனை மருங்கினதோர் மாதவி வல்லி மண்டத்துப் போது வேய்ந்த பூநாறு கொழுநிழற்கீழ்க் கடிக்குருக்கத்திக் கொடி பிடித்துத் தகடுபடு பசும்பொற் சிகரங் களின் முகடு தொடுத்து வந்து இழிதரும் அருவி, பொன் கொழித்து, மணி வரன்றி, மாணிக்கத் தொடு வயிரம் உந்தி, அணி கிளிர் அருவி ஆடகப் பாறைமேல் அதிர் குரல் முரசின் கண்ணிரட்ட, வண்டும் தேனும் யாழ் முரல, வரிக்குயில்கள் இசை பாடத் தண் தாது தவிசுபடப் போர்த்ததோர் பளிக்குப் பாறை மணித்தலத்து மிசை, நீல ஆல வட்டம் விரித்தாற்போலத் தன் கோலக் கலாவம் கொள விரித்து, முனை இளஞாயிறு இளவெயி லெறிப்ப, ஓர் இளமயிலாடுவது நோக்கி நின்றாள்.''

(பக். 32)

இனி, 'இருவயின் ஒத்தல் எவ்வாறு பொருந்தும்?' என்பதை உரையாசிரியர் ஆராயும் திறனும், அதன் வழி அவர் தம் உரை நடையும் காணத்தக்கனவாகும்:

''இனி, இருவயின் ஒத்தல் என்பது என் சொல்லியவாறோ எனின், புணராத முன் நின்ற அன்பு புணர்ந்த பின்னும் அப்பெற்றியே நிற்கும் என்றவாறு. 'ஆயின், உலகினோடு ஒவ்வாத பிற, உலகினிற் புணராத முன் நின்ற அன்பு புணர்ந்த பின்னர்த் தவிர்தலானும், உண்ணுதமுன் நின்ற

வேட்கை உண்ட பின் தவிர்தலானும் என்பது,' என்றாற்கு, அறியாது சொல்லுதி! இவ்வுலகத்துள்ள பான்மை முன்னே கேட்டா யன்றே? இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டது என நூல் எடுத்துக் கோடற் கண்ணே சொல்லிப் போந்து, இனி ஒருகால் உலகினோடு ஒவ்வாதெனல் வேண்டுமோ?' என்பது. 'ஆயின், உலகினுள் அன்பற்றாராக, புணராத முன்னின்ற அன்பு புணர்ந்த பின்னும் அப்பெற்றியே நிற்கும் எனின், புணர்ச்சியானாய பயம் இல்லையாம். பிற, உண்ணாத முன்னின்ற வேட்கை உண்ட பின்றையும் தவறாது அப்பெற்றியே நிற்குமாயின் உண்டதனானாய பயம் இல்லை; அதுபோல,' என்றாற்கு, 'அதுவன்று; புணராத முன் நின்ற வேட்கை புணர்ச்சியுட் குறை படும்; அக்குறை பாட்டைக் கூட்டத்தின் கண் தம்முட்பெற்ற செய்குணங்களானாய அன்பு நிறை விக்கும்; பின்னும் முன்னின்று அன்பு கூட்டத்திற் குறைபடும். அதற்கு இடையின்றியே குணத் தினானாய அன்பு நிறைவிக்கும்; நிறைவித்த பின் முன்னின்ற அன்பு கூட்டத்திற் குறையாது எஞ்ஞான்றும் ஒரு பெற்றியேயாய் நிற்கும் என்பது.'' (பக். 38)

ஒன்றற்குப் பல பொருள் காட்டி முறை நிறுத்தி நல்ல உரைநெறியால் விளக்கும் வகையினையும் காணலாம்:

'' 'உள்ளத் துணர்ச்சி என்பது யாதோ?' எனின், கூட்டம் உண்மை உணர்ந்த உணர்ச்சி என்றுமாம்; அல்லதூஉம், அவர் இக்குறை இன்றி யமையார் என உணர்ந்த உணர்ச்சி என்றுமாம்; அல்லதூஉம், 'யான் குறையுற இவள் இதனை ஆற்றுங் கொல்லோ!' என உணர்ந்த உணர்ச்சி என்றுமாம்; அல்லதூஉம், 'என்னினானாய கூட்டம் முடியாது விடின், இவன் இறந்து படுமாகலான்,

இவனைக் குறை நயப்பித்துக் கொண்டு முடிக்கலாங் கொல்லோ என உணர்ந்த உணர்ச்சி என்றுமாம்.''
(பக். 78—79)

உடன் போக்குக் காலத்துத் தலைவியின் உள்ள நெகிழ் வினையும், கற்பு, நாண் இரண்டினைச் சீர்தூக்கி ஆயும் வகையினையும் உரையாசிரியர் தமக்கே உரிய நடையில் விளக்கிக் கொண்டு செல்லும் திறன் சீரிது:

''அது கேட்டு, 'ஆயின் உடன்போக்கு வலித்தேன்; நீ இதனை அவட்குச் சொல்ல வேண்டும்,' என, 'நன்று, எம்பெருமான் அருளிச் செய்தது எம்பெருமாட்டிக்கு உணர்த்துவல்,' என்று, தலைமகனை வலங்கொண்டு போந்து, தலைமகளுழைச் சென்று, அவள் குறிப்பறிந்து, 'எம்பெருமாட்டி, நம்பெருமான் நம்மைத் தம்மோடு உடன் கொண்டு செல்லக் கருதுகின்றார். நின் குறிப்பு என்னை?' என்னும்; என்றவிடத்து உடன்படுதலும் உடன் படாதொழிதலும் என இரண்டல்லதில்லை; சென்று வழிபடுமேயெனின், நாணிலளாயினளாம்; உடன் படாளாயின், கற்பிலளாயினளாம்; இரண்டி னுள்ளும் எத்திறத்தளாயினளோ எனின், நாணுக் கற்பு என்னும் இரண்டல்லவே அவள் கண்ணுடையன? அவற்றுள் நாணிற் கற்பு வலியுடைத்து; 'என்னை வலியுடையவாறு?' எனின்,

'உயிரினுஞ் சிறந்தன்று நாணே; நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று'

என்பவாகலான், நாண் அழியினும் கற்பு அழியாமை நினைக்கும்; நினைத்து, உடன் போக்கு நேர்ந்து, தலை சாய்த்து நிலங் கிளையா நிற்கும் நிலைமை இது சொல்லுவது போன்றது.''
(பக். 120, 121)

கற்பு நிலையில் பரத்தையிற் பிரிந்த தலைவனை ஏற்றுக் கொள்ளும் தலைவியின் நிலையை உரையாசிரியர் உவமை முகத்தால் உணர்த்துவதும் அறிந்து மகிழற் பாலதாகும்:

"'அல்லதூஉம், 'வண்டோரனையர் ஆடவர்; பூவோரனையர் மகளிர்' என்பது; என்னை? வண்டுகள் தாதூது மிடத்து, 'நன்மலரே ஊதுவோம்; அல்லாதது ஊதேம்.' என்னா; எல்லா மலரும் ஊதும்; இனிப் பூவாயினக்கால், 'எம்மையே ஊதா எல்லாப் பூவையும் ஊதின' என்று புலவா தன்றே? அதுபோலத் தலைமகனும் எல்லாப் பெண்களையும் தலைப்பெய்தற் றன்மையான்; அத்தன்மை அறிவான் போம் பொழுது புறந்தொழுது, வரும் பொழுது எதிர்தொழுது ஏற்றுக் கொண்டு வழிபடுவதல்லது மலைத்தற்கண்ணே மல்லேம்; மலைத்து இப்பெற்றிய மாதல் தலைமை யன்று."

(பக். 187)

இவ்வாறு நூல் முழுவதும் பலப்பல உயரிய உதாரணங்களை எடுத்துக் காட்டிக் கொண்டே போகலாம். உரைத்திறன் ஆராய்ந்து அதன் நலக் கேடுகளைக் கூறு படுத்துவது நம் நோக்கமன்று. அக்காலத்தில் வழங்கிய உரை நடை அமைப்பு இன்ன வகைத்து என்று காட்டுவதே நாம் இங்கு மேற்கொண்டது. இவ்வுரைகள் அனைத்தும் எதுகை மோனை அமையப் பெற்றனவாய், அளபெடை அமைந்தனவாய், தொடர்ந்தனவாய்ச் செல்லுவதைக் காண்கின்றோம். பாட்டாய் இல்லாவிடினும், சிலவிடங் களில் பாடற்சந்தம் பொருந்தியுள்ளமையைக் காண்கின் றோம். காற் புள்ளி, அரைப் புள்ளி முதலியன பொருந்தப் பெரும் பெரு வாக்கியங்களாகவே இவ்வுரை நடை செல்வது நமக்கு நீண்ட அகவற் பாக்களை நினைவூட்டுகின்றதன்றோ! மேலும், காற்புள்ளி இட்டும், புணர்ச்சி இலக்கணம் பொருந்தவும் வகையாக 'ப்' 'க்' முதலிய சந்தியால்

தோன்றும் எழுத்துக்களை இட்டு எழுதுவதையும் காண லாம். இந்த முறை இக்காலத்தில் நாம் கையாளப் பெருத ஒன்று. காற்புள்ளி இடாவிடின் புணர்ச்சியால் வரும் ஒற்றைச் சேர்ப்பதும், புள்ளி இடின் ஒற்றை நீக்குவதும் இன்று மரபாகக் கொள்ளுகிறோம். களவியல் உரையில் அங்ஙிலை இல்லை.

தொல்காப்பியர் காலத்தில் செயப்பாட்டுவினை இல்லை. அது பின்னே தோன்றிற்று என்பர் இலக்கண நூலார். ஆயினும், இவ்வுயையாசிரியர் முதற் சூத்திரத்துக் 'களவெனப் படுவது' என்பதன் உரையில் அந்தப் 'படுவதால்' பெறுவது பொருட்சிறப்பு என்பதை எடுத்துக் காட்டுகின்ருர். இன்னும் ஆங்காங்குப் பின் நன்னூலார் இலக்கண அமைதிக்கு ஏற்பவும், முந்து நூல் இலக்கண அமைதி தழுவியும் தாமே பலவற்றிற்கு இலக்கணம் காட்டிச் செல்லுதல் அறிந்து மகிழத்தக்கதாகும்.

இவ்வுரையில் வடமொழிச் சொற்கள் அதிகமாகப் பயிலப்பெறும் என்பதை மேலே கண்டோம். நாம் காட்டிய சில உதாரணப் பகுதிகளிலேயே அவ்வுண்மை தெற்றென நன்கு தெளிவுறும். சிட்டர், (6) பிராமணன், (7) மூத்திர புரீடம், (10) வாசகம், (59) பரியம் (140) போன்ற சொற்கள் உரையில் பலவாக விரவி உள்ளமை யும் காண்கின்ருேம். மதுரை ஆவணி அவிட்டம், உறை யூர்ப் பங்குனி உத்திரம், கரூர் உள்ளி விழாப் போன்ற னவும் (பக்கம் 101) இவ்வுரையில் எடுத்தாளப் பெறு கின்றன. இவ்விழாக்களைப் பற்றி நாம் சங்க இலக்கி யங்களில் காண்கின்ருே மில்லை. மிக நீண்ட பாடலாக அமைந்த மதுரைக் காஞ்சியிலேயே ஆவணி அவிட்ட விழாக் குறிக்கப்பெற்றிலது. பிற்காலத்தில் ஏழாம் நூற்ருண்டில் தேவாரத்தின் வழியே கோயில்கள் பெருக,

அவற்றில் ஆற்றப்பெறும் விழாக்களுள் இவை சிலவாக அமையும் என்று கொள்ளல் பொருந்துவதாகும்.

இனி, இவ்வுரையில் மேற்கோளாக எடுத்தாளப் பெற்ற **பாண்டிக் கோவையைக்** கண்போம். கோவை நூல் சங்ககாலத்தே அறியாத ஒன்று. எனவே, நக்கீரர் இக்கோவையை மேற்கோளாகக் காட்டியிருக்க மாட்டார். இவ்வுரை வழி வழியாகத் தொடர்ந்து வருங்கால் இடையிலே யாரோ ஒரு புலவர்—கோவை இலக்கணம் தோன்றி வாழ்ந்த காலத்திலிருந்து புலவர்—இந்தக் கோவையை எழுதியோ அன்றிச் சேர்த்தோ உரைக்கு ஏற்றம் தேடி வைத்தார் என்பது பொருந்தும். பின்பு இவ்வுரை ஏட்டிடை எழுதப் பெறுங்காலத்து இப்பாட்டும் சேர்க்கப்பெற்றே இருக்க வேண்டும் என்பது மட்டும் தெளிவு. இப்பாண்டிக் கோவையில் வரும் பல நிகழ்ச்சிகள் காலத்தால் பிந்தியனவாக வேண்டும். இதில் கூறப்பெறும் போர்களுள் பல சங்ககாலத்தில் குறிக்கப் பெருதவை. ஓர் அரசனைப் பற்றிப் போற்றும் இத் துணைப் பெருநூலே சங்ககாலத்துக்குப் பின் நெடுங் காலம் கழித்தே தோன்றியிருக்க வேண்டும். ஆகவே, பாண்டிக்கோவை நூலமைப்பே, இவ்வுரை காலத்தாற் பிந்தியது என்பதைக் காட்டும். இதில் குறிக்கப்பெறும் போர்களும் சங்ககாலத்துக்குப் பிந்தியனவே என்னுமாறு அமைகின்றன.

இவ்விலக்கியத்தில் போற்றப்படும் பாண்டியன் இன்னுன் எனத் திட்டமாகக் காண முடியாவிடினும், அவன் **பராங்குசன் (87), அரி கேசரி (203), நெடுமாறன் (109) நெல்வேலி வென்ருன் (108) சத்துரு துரந்தரன் (20)** முதலிய பெயர்களால் குறிக்கப்பெறுவதை அறிகிறோம். அவற்றுள் சில பெயர்கள் சங்க காலத்தை ஒட்டியவை எனக் கருத வாய்ப்பு உளதேனும், அவர்தம் செயல்வழி

அக்கருத்துப் பொருந்தாது என்னலாம். நெடுமாறனைக் குறிக்கும் பாட்டில் அவன் நெல்வேலி வென்றான் எனக் குறிக்கப்பெற்றுள்ளான். இது திட்டமாக ஏழாம் நூற்றாண்டில் ஞானசம்பந்தர் காலத்து வாழ்ந்த **நின்றசீர் நெடுமாறனைக்** குறிக்கும் என்பது சுந்தரர் தேவாரத்தால்[1] அறியலாம். பிற பெயர்கள் பற்றியும் அவ்வாறே. இதில் சத்துரு துரந்தரன் என்னும் பாண்டியன் பெயரும் குறிப்பிடப் பெறுகின்றது. இவ்வடமொழிப் பெயர் சங்க காலத்தில் இல்லை; இக்கோவையில் பல போர்க்களங்கள் குறிக்கப் பெறுகின்றன. அவற்றுள் விழிஞம் (62), ஆற்றுக்குடி (43), கடையல் (41), கோடாற்று அரண் (88), வல்லம் (40), பூலந்தை (58), பாழி (29), நறையாறு (59), வெண்மா (45), நெல்வேலி (53), சங்கமங்கை (205), செந்நிலம் (67), நெடுங்கடல் (189), குளந்தை (300) முதலியன முக்கிய இடம் பெறுகின்றன. இவை அனைத்திலும் பாண்டியன் ஒருவனே போரிட்டு வெற்றி கொண்டானோ, அன்றி அவன் பரம்பரையில் பலர் கொண்ட வெற்றியை இவை குறிக்கின்றனவோ என்பது திட்டமாகத் தெரியவில்லை. எப்படியாயினும் சோழ பாண்டியரையும் சிற்றரசர் பிறரையும் தோற்கடித்துப் பெருமன்னனாக வாழ்ந்தவன் இப்பாண்டிக் கோவைக்குத் தலைவன் என்பது தேற்றம். எனவே, வடக்கே பல்லவர் சிறந்தோங்கிய காலத்தில் தெற்கே பாண்டியர் நிலையும் ஓங்கியிருந்தது என நாம் காண்கின்ற வரலாற்று நெறியில் நின்று காண்போமானால், நின்ற சீர் நெடுமாறன் காலத்தோ, சற்றுப் பின்னோ எழுந்த இப் பாண்டிக் கோவை அகப்பொருள் உரைக்கு எடுத்துக்

1. **சுந்தரர் தேவாரம் திருத்தொண்டத்தொகை.**
**'நிறைகொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற**
**நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கு மடியேன்'**

காட்டாக அமைய, அடுத்த எட்டாம் நூற்றாண்டில் இந் நூல் எழுத்து வடிவில் உருவாயிற்று என்னலாம்.

இப்பகுதியை முடிக்குமுன் இந்நூல் தோன்றிய வழியையும் சிறிது எண்ணிப் பார்க்க வேண்டும். பெரும்பஞ்சம் நேர்ந்த பின் பொருளதிகாரம் காணுது கவன்ற பாண்டியனது மனக் கவலையை மாற்றுவதற்காக மதுரைச் சொக்கேசர் இந்தச் சூத்திரத்தைச் செய்து பீடத்தின் கீழ் வைக்க, மறுநாள் திருக்கோயில் வழி பாடு செய்பவன் கையில் இது கிடைக்க, பின்பு இதை அரசன் பெற்று மேற்கண்டவாறு சங்க நூற் புலவர்களைக் கொண்டு உரை செய்வித்தான் என்ற வரலாற்றை இவ் வுரையே நமக்குத் தருகின்றது. இது எத்துணைப் பொருத் தம் என்பது நமக்கு ஈண்டு ஆராய்ச்சிக்குத் தேவை இல்லை. என்றாலும், தமிழ்நாட்டில் பொருளதிகாரம் வழக்கத்தில் இல்லாத ஒரு காலத்தில் இந்நூல் தோன் றிற்று என்று கொள்ளல் பொருந்தும். கடைச்சங்க காலத்தில் தொல்காப்பியம் அவைக்கள நூலாக இருந் ததை இந்நூல் உரையே ஒப்புக்கொள்ளுகிறது. தொல் காப்பியப் பொருளதிகாரம் நாட்டில் இருந்திருப்பின், இதை மக்கள் விரும்பியிருக்க மாட்டார்கள். இன்றும் நாட்டில் தொல்காப்பியப் பொருளதிகாரம் மக்கள் உள் ளத்தில் இடம் பெற்ற அளவுக்கு இந்நூல் பெறவில்லை என்னலாம். இதை இறையனுர் என்ற புலவர் ஒருவர் செய்தார் என்று கொள்வது பொருத்தம் என்றும், கடவுளே செய்தார் என்று கொள்வது பொருத்தம் அன்று என்றும் இன்றைய ஆராய்ச்சி உலகம் கொள்ளுகிறது. எப்படி யாயினும், தொல்காப்பியத்தை நோக்க இந்நூல் சிறந்த தன்று என்பது புலவர் துணிபு.

இவ்வுரை தமிழ் உரைநடை வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாகும். சங்க காலத்தில் உரைநடை நூல்கள் இல்லை.

தொல்காப்பியத்தில் உரைநடை பற்றிய குறிப்பு வருகிறது. சிலப்பதிகாரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகின்றது. முதன்முதல் உரைநடை நூலாக அமைந்தது இவ்விறையனார் களவியல் உரையே என்னலாம். இதுவும் தொடர்ந்த உரை நடை நூலாகாது. பாட்டுக்கு உரை கூறுவதாய் அதன் வழிப் பல மேற்கோள் பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது. இதன் உரை நடையும் பா நடையை ஒத்து எதுகை மோனையும் ஓசையும் கொண்டு, அளபெடை முதலிய செய்யுள் இலக்கணம் தழுவி, பல வடமொழிச் சொற்களை உட்கொண்டு எழுதப் பெற்றதாய் அமைகின்றது. அடுத்து வரப்போகின்ற பெரிய உரையாசிரியர்களுக்கெல்லாம் வழி காட்டியாகவும் வடமொழியும் தமிழும் கலந்து நின்ற 'ஈடு' போன்ற மணிப்பிரவாள நடைக்கு வித்திட்டதோ என்னுமாறும் இவ்வுரை செல்கிறது என்பர் சிலர். வைணவ நூலாகிய ஈடொன்றைத் தவிர்த்து, மற்றவை மணிப்பிரவாள நடையில் இல்லை. இந்நூலும் வடமொழியை அதிகமாக எடுத்தாளினும், நடையில் தமிழாகவே அமைகின்றது. எனவே, இது வடமொழிச் சேர்க்கைக்கு இடந்தந்தது என்று கூறுவதல்லது, மணிப்பிரவாள நடை இதன் அடி ஒற்றி எழுந்தது என்பது பொருந்தாது. மற்றத் தொல் காப்பியம், சிலப்பதிகாரம் முதலியவற்றிற்கு உரை செய்த பேராசிரியர்களுக்கெல்லாம் இவ் வுரைநடை ஒரு வழி காட்டியாய் அமைகின்றதென்பதை யாரே மறுக்க வல்லார்! இரண்டடிச் சூத்திரத்திற்கு அறுபது பக்க அளவு விரிந்த உரை எழுதும் இவ்வுரையாசிரியர் திறனைப் போற்றாதிருக்க முடியுங்கொல்! அதுவும் உரை நடை சிறக்கத் தோன்றாத அந்தக் காலத்தில் இத்துணை அழகாகத் திறம்பட உரை எழுதி, தமக்குப் பின்வரும் அனைவருக்கும் வழிகாட்டியாக - தமிழ் உரை நடைப் பாதையிலே ஒரு சிறந்த மைல் கல்லாக - அமைத்த இவ்விறையனார் களவியலுரையை அறிஞர் அறிந்து, ஆய்ந்து, அமைந்து, பயில் தொறும் இன்பம் காண்பார்களாக!

# V

# முன்னைய உரையாசிரியர்கள்

தொல்காப்பியர் காலத்தில் இருந்த உரை நடை எத்தகையது என்பது அறியக் கூடவில்லை. என்றாலும் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் தங்கள் உரைகளை நன்கு எழுதி உள்ளமை காண்கிறோம். இறையனார் களவியல் உரையை அடுத்து இடைக்காலத்தில் பல உரையாசிரியர்கள் தோன்றினார்கள். தமிழில் உள்ள இன்றைய உரை நடை பெரும்பாலும் அவ்வுரையாசிரியர் களாலேயே வளர்ச்சியடைந்தது என்பது உண்மை. பாட்டும் உரையும் கலந்து நின்ற சிலப்பதிகாரம் போலன்றிப் பாட்டுக்கே உரை வகுக்கும் முறையில் இவர்கள் உரைகள் அமைந்திருக்கின்றன. தொல்காப்பியச் சூத்திரங்களுக்கும், **பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், சிந்தாமணி** போன்ற இலக்கியங்களுக்கும் பலர் உரை வகுத்துள்ளனர். அவ்வாறு எழுதப்பெற்ற உரைகள் அத்தனையும் இன்று கிடைத்திருக்கின்றன என்று கொள்ள முடியாது. எத்தனையோ உரைகள் மறைந்தன. இன்று இருப்பன ஒரு சிலவே. தோன்றிய சங்க இலக்கியங்களுள் அழிந்தன போக எஞ்சி இருப்பன ஒரு சிலவாயின போன்று, எழுதிய உரை நூல்கள் எத்தனையோ இருக்க, அவற்றுள் ஒரு சிலவே இன்று வாழ்கின்றன. அவற்றால் தமிழில் உரை நடை வளர்ந்த வகையினைக் காண்போம்:

தொல்காப்பிய இலக்கண நூலை **எழுத்து, சொல், பொருள்** என மூவகையாகப் பாகுபடுத்தியுள்ளனர். ஒவ்வொன்றிற்கும் அறிஞர்கள் உரை எழுதியுள்ளார்கள். மூன்று பகுதிகளுக்கும் உரை எழுதின ஆசிரியர்களும்

உள்ளார்கள், எழுத்ததிகாரத்துக்கு **இளம்பூரணர், நச்சினார்க் கினியர்** என்னும் இருவரும் உரை எழுதியுள்ளனர். சொல்லதிகாரத்துக்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் **சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர்** ஆகிய ஐவர் உரை கண்டுள்ளனர் பொருளதிகாரம் முழுமைக்கும் இளம் பூரணர் உரை கண்டார். அகம், புறம், களவு, கற்பு, பொருள் என்ற ஐந்து இயல்களுக்கு நச்சினார்க்கினியரும், மெய்ப்பாடு, உவமம், செய்யுள், மரபு என்ற நான்கிற்கும் **பேராசிரியரும்** உரை எழுதியுள்ளார்கள். இவ்விருவரும் பொருளதிகாரம் முழுமைக்கும் உரை எழுதி அவற்றுள் சில மறைய, உள்ளவைதான் எஞ்சி நின்றன என்பாரும், இவர்கள் எழுதிய உரைகளே இவ்வளவுதான் என்பாரும் உள்ளனர். எப்படியாயினும், நாம் இன்று பெறுவன கொண்டே அமைதல் நலம்.

தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் தவிர்த்து மேலே கண்ட இல்க்கியங்களுக்கும் பலர் உரை கண்டுள்ள னர். **சீவக சிந்தாமணிக்கும் கலித்தொகைக்கும்** இலக்கண உரை கண்ட நச்சினார்க்கினியரே நல்ல உரைகள் எழுதி யிருக்கிறார். இவரே சிறந்த பத்துப்பாட்டுத் தொகுதிக்கும் உரை கண்டவர். **குறுந்தொகைக்கும்** இவர் உரை எழுதினார் என்பர்.[1] சிலப்பதிகாரத்துக்கு நல்ல விளக்கமாகவே உரை கண்டவர் அடியார்க்கு நல்லாராவர். அவருக்கு முன்பே ஓர் அரும்பத உரை உண்டு. ஆயினும், அவ்வுரை எழுதியவர் இன்னார் என அறிந்து கொள்ள இயலவில்லை. எனவே அவரை **'அரும்பத உரையாசிரியர்'** என்றே வழங்குகிறார்கள். இவ்வாறே திருக்குறளுக்கும் பல உரைகள் உள்ளன. அவற்றுள் சிறந்த உரையாகப் **பரிமேலழகர்** உரையே கொள்ளப்படுகின்றது. அவரைத் தவிர்த்து வேறு

1. குறுந்தொகை (பதிப்பு 3) டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் முன்னுரை. பக். 14.

ஒன்பதின்மர் உரை எழுதியுள்ளனர் என அறிகின்றோம். என்றாலும், எல்லோருடைய உரைகளும் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. அவர்தம் பெயர்களையாவது வெண்பா வழியே காண்போம்.

**' தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்**
**பரிதி பரிமே லழகர்—திருமலையர்**
**மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்**
**கெல்லைஉரை செய்தார் இவர். '**

இவ்வாறு திருக்குறளுக்குப் பதின்மர் உரை செய்தாலும், நால்வர் உரைகளே இன்று நமக்குக் கிடைக்கப் பெறுகின்றன. அந்நால்வர் பரிமேலழகர், மணக்குடவர், பரிதி, காளிங்கர் ஆவர். பரிமேலழகர் குறளுக்கு மட்டுமின்றி, சங்க இலக்கியமாகிய பரிபாடலுக்கும் உரை எழுதியுள்ளார். இவர் உரையால் இரண்டு நூல்களும் சிறந்துள்ளன என்பர். சங்க இலக்கியங்களுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்துக்கும் பழைய உரை ஒன்று உண்டு. அது போன்றே புறநானூற்றுப் பாடல்களுள் சிலவற்றிற்கும் வேறு சிலவற்றிற்கும் பழைய உரைகள் காண்கின்றோம். புறநானூற்று உரை அடியார்க்கு நல்லார் உரையினும் முற்பட்டதென்பது தெரிகிறது.[1] அகநானூற்றிற்கும் பழையதாகிய அரும்பத உரை உண்டு. இப்படிப் பல சங்க இலக்கியங்களுக்கும் அறிஞர் பலர் உரை வகுத்துள்ளனர். இவர்கள் எல்லோருடைய பெயர்களும் நமக்குத் தெரியும் வாய்ப்பு இல்லை; என்றாலும், மேலே கண்டபடி ஒரு சிலர் தம் பெயர்களையும், அவருள் ஒரு சிலருடைய வாழ்க்கை வரலாறுகளையும் அறியும் நிலை இருப்பது மகிழ்வுக்கு உரியதாகும்.

---

1. புறநானூறு, 5-ஆம் பதிப்பு—டாக்டர் ஐயர் அவர்கள் முன்னுரை, பக். 12, 13.

இனி, இவ்வாறு உரை எழுதி உதவியவர்கள் காலத்தை ஒருவாறு காண இயலும். பத்தாம் நூற்றாண்டுக்குப் பின்னும் பதினைந்தாம் நூற்றாண்டுக்கு முன்னும் உள்ள இடைக்காலமே இவ்வுரையாசிரியர்களுள் பெரும்பான்மையோர் - ஏன் - அனைவருமே வாழ்ந்த காலம் என்னலாம். அக்காலத்தே தமிழ் நாட்டில் பிற்காலச் சோழர்தம் பேரரசு நிலைத்து வளர்ந்து நேரிய முறையில் ஆட்சி செலுத்தி வாழ்ந்தது. தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய ஆசிரியர்களுக்குள்ளே பழமையானவர் **இளம்பூரணர்** என்பவர். பின்னர் வந்த ஆசிரியர் யாவராலும் உரையாசிரியர் என்ற சிறப்புப் பெயரால் வழங்கப் பெறுபவர் இவ் விளம்பூரணரே என்பர் சிலர். சிலர் 'உரையாசிரியர்' என வேறு ஒருவர் இருந்ததாகவும் கூறுவர். எப்படியாயினும், இளம்பூரணர் காலத்தால் முந்தியவர் என்பது தவறாகாது. நச்சினார்க்கினியர் காலத்தைப் பதினான்காம் நூற்றாண்டு என்பர். கல்லாடர் காலம் சற்று முந்தியதாய் இருக்கலாம். எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டில் **'கல்லாடம்'** என்னும் பாநூல் எழுதிய கல்லாடரே தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கும் உரை எழுதினரா, அன்றி அவர் வேறா என்பது தெரியவில்லை. எனினும் அவர் உரையே கிடைக்கவில்லையாதலின், அதுபற்றிக் கவலையுற வேண்டா. இவர்களைத் தவிர்த்து மற்றவர்கள் இளம்பூரணருக்கும் நச்சினார்க்கினியருக்கும் இடைப்பட்டகாலத்திலோ, அன்றிச் சற்று முன் பின்னாகவோ வாழ்ந்திருக்கலாம் என்று கொள்வதில் தவறு இல்லை என எண்ணுகிறேன்.

தொல்காப்பிய உரையாசிரியர்களைத் தவிர்த்து ஏனைய உரையாசிரியருள் பெரும்பாலார் காலமும் அந்தக் காலமே எனக் கொள்வார்கள். சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதிய அரும்பத உரையாசிரியர் அடியார்க்கு நல்லாருக்கு முற்பட்டவர் என்பதையும், அவ் வரும்பத உரைக்கு முன்பே

இதற்கு மற்றோர் உரை இருந்திருக்கலாம் என்பதையும் எனினும் கிடைக்கப் பெற்றில தென்பதையும் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் தம் சிலப்பதிகார முன்னுரையில்[1] கூறியுள்ளார்கள். 'நச்சினார்க்கினியரால் மறுக்கப்படுவனவற்றுள் சில இவருடைய கொள்கைகளாக இருத்தல் பற்றி, இவரது காலம் நச்சினார்க் கினியரது காலத்துக்கு முந்தியதாக இருக்கலாம்,[2] என அம்முன்னுரையில் இவரே குறிக்கின்றார். இவர் கருத்தையே திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களும் ஏற்றுக் கொள்ளுகின்றனர்[3]. எனவே அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் பதினன்காம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர் என்று கொள்ளுதல் பொருத்தமானதாகும்.

பதிற்றுப்பத்திற்கும் ஒரு பழைய குறிப்பு உரை உண்டு என்பதைக் கண்டோம். என்றாலும், அவ்வுரை எழுதியவர் இன்னார் என்பது திட்டமாகத் தெரியவில்லை. ஆயினும் அவ்வுரை சிறந்துள்ளது. அவ்வுரை யின்றேல் பதிற்றுப் பத்தின் பொருளை இக்காலத்து உணர்ந்து கொள்ளுதல் அரிது என ஐயர் அவர்கள் தம் முன்னுரையில் குறித்துள்ளார்கள்.[4] அவ்வுரையாசிரியர் **நேமிநாதம்** என்னும் **சின்னூல்** செய்த **குணவீர பண்டிதருக்குப்** பிற்பட்டவர் என்பதை, பதிற்றுப்பத்து 76-ஆம் பாடல் 11-ஆம் அடியின் உரைகொண்டு ஆய்ந்து எடுத்துக் காட்டியுள்ளார்கள் டாக்டர் ஐயர் அவர்கள்.[5] இவற்றை எண்ணிப் பார்ப்பின்

1. சிலப்பதிகாரம், (ஆறாம் பதிப்பு) முன்னுரை பக்கம், xl
2. ஷை ஷை பக்கம் xix
3. சிலப்பதிகாரம், பக்கம், 28
4. பதிற்றுப்பத்து மூலமும் உரையும் (ஆறாம் பதிப்பு) முன்னுரை, பக்கம், vi. 5. ஷை பக் vii.

இந்தப் பதிற்றுப்பத்தின் உரை சிறந்ததாயினும், அவ்வுரையாசிரியர் காலத்தால் பிந்தியவர் எனக் கொள்ளல் பொருந்தும். நேமிநாதர் காலம் இன்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னது என அறிஞர் முடிவு செய்கின்றமையின், இவ்வுரையாசிரியரின் காலம் அதற்குப் பிந்தியதே எனக் கொள்வதில் தவறென்றுமில்லை.

திருக்குறளுக்கும் பரிபாடலுக்கும் சிறந்த உரை எழுதியவர் பரிமேலழகர். அவர் காஞ்சியில் தோன்றி வாழ்ந்தவர் என்பதும், வைணவ குலத்தார் என்பதும் அறிய முடிகிறது. அவர் காலத்தை நச்சினார்க்கினியர் காலத்துக்கு முற்பட்டது என அறிஞர்கள்[1] ஒருவாறு அறுதியிட்டிருக்கிறார்கள். அவர் பதினோராம் நூற்றாண்டிற்கும் பதினான்காம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவர் என்பதைக் குறள் வெளியீட்டாளருள் ஒருவரான **வை. மு. சடகோப ராமாநுசாசாரியார்** அவர்கள் தம் முன்னுரையில் நன்கு எடுத்துக் காட்டுகின்றார். பரிமேலழகர் போசராசன் காலத்துக்குப் பின்னவர் எனவும் உமாபதி சிவத்திற்கு முற்பட்டவராக இருக்கலாமோ எனவும் கூறி, **சேனாவரையர்** காலத்தவர் என முடிக்கின்றார்.

> "காமத்துப்பாலின் முதலில் 'இச்சிறப்புப் பற்றி வடநூலுட் போசராசனும்.....இதனையே மிகுத்துக் கூறினான்,' என்று போசராசனை மேற்கோள் காட்டி இருத்தலால், இவர் காலம் போசராசன் காலத்துக்குப்பின் என்பது தெளிவாகும். போசராசனுடைய காலம் பதினோராம் நூற்றாண்டென்பர். மேற்காட்டிய பாடல்களுள் 'வள்ளுவர் சீர்' என்ற பாடல், உமாபதிசிவாசாரியார் செய்ததென்பது நிச்சயமானால்-அவர் பதினான்காம் நூற்றாண்டில் இருந்

1. பத்துப்பாட்டு (ஐந்தாம் பதிப்பு) முன்னுரை, பக். xiii (டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர்.)

தவர் என்பது திண்ணமாதலால்—இவர் பதினோராம் நூற்றாண்டிற்கும் பதினான்காம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவர் என்பது தேற்றம். சிலா சாசன ஆராய்ச்சியாலும் மற்றும் சில காரணத்தாலும் சேனாவரையருடைய சமகாலத்தவரும் அவருக்குப் பிராயத்தினாற் சிறிது குறைந்தவருமாகக் கி. பி. 1272 ல் வாழ்ந்திருந்தவர் என மு. இராகவ ஐயங்கார் ஸ்வாமிகள் சாசனத் தமிழ்க்கவி சரித்திரம் என்னும் நூலில் எழுதியுள்ளார்,' என்று விளக்குகிறார்.[1]

இனி, இவர்களுள் சிலருடைய காலத்தை நேமிநாதர் காலத்தோடு ஒத்துக் கூறுதலால், அந் நேமிநாதர் காலத்தைக் காண்டல் பொருந்துவதாகும். **நேமிநாதம், வச்சணந்தி மாலை** என்னும் **வெண்பாப் பாட்டியல்** ஆகிய இரண்டையும் எழுதியவர் **குணவீரபண்டிதர்** என்பதைப் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். அவ் வச்சணந்தி மாலை முன்னுரையில்[2] அவர் காலம் நன்கு ஆராயப் பெறுகிறது. அவர் **திரிபுவன தேவன்** என்ற மன்னவன் காலத்தில் வாழ்ந்தவர் என்று ஓர் அகவல் மேற்கோள் காட்டப் பெறுகின்றது.

> ' குருத்தவர் முடிக் கொற்றவர் கோமான்
> திருத்தகு மணிமுடித் திரிபுவன தேவன்

என்னும் அரசன் காலத்தில் இந்நூல் செய்ததென உணர்க,' என்று அது எடுத்துக் காட்டுகிறது. நேமிநாதம் பதிப்பித்த திரு. ரா. இராகவையங்கார் அவர்கள் அதன் முன்னுரையில், 'இவருடைய (அதாவது ஆசிரியருடைய)

---

1. திருக்குறள், வை. மு. சடகோபராமானுஜாசாரியார் பதிப்பு-முன்னுரை, பக்கம் 20—21.

2. கா. ர. கோவிந்தராச முதலியார் (கழகப் பதிப்பு) முன்னுரை, பக்கம் 7.

காலம் இன்றைக்கு எண்ணூறு வருடங்களுக்கு முன் இருந்த திரிபுவன தேவன் எனப் பெயரிய குலோத்துங்கன் காலம்,' என எழுதியுள்ளனர். இவற்றால், 'திரிபுவன தேவன்' என்ற சிறப்புப் பெயர் பெற்ற குலோத்துங்க சோழன் காலத்தில் இந்நேமிநாதர் வாழ்ந்தார் எனக் கொள்ளல் பொருத்தமாக அமைகின்றது. இத் திரிபுவன தேவன் என்ற சிறப்புப் பெயர் மூன்றாம் குலோத்துங்கனுக்கு உரிய பட்டப் பெயர்களுள் ஒன்று.[1] இக்குலோத்துங்கன் கி. பி. 1178 முதல் 1218 வரை அரசாண்டான். எனவே, இக்காலமே நேமிநாதர் காலமாகும். மு. இராகவ ஐயங்கார் இக்காலத்தை மேலே கி. பி. 1272 எனக் குறிப்பிட்டார் என்பது கண்டோம். அவர் அந்நூல் எழுதும் காலத்து வரலாறு வரையறுக்கப்பட்ட நிலையில் இல்லை ஆதலாலும், பின் கல்வெட்டுக்கள் வழியும் அவற்றின் ஆய்வு வழியும் இக்குலோத்துங்கன் காலம் திட்டமாக வரையறுக்கப்பட்டமையாலும், இவனே திரிபுவனன் எனச் சிறக்க விளங்கியவன் ஆதலாலும், மேலே மு. இராகவையங்கார் காட்டிய கி. பி. 1272-ஆம் ஆண்டும் அதைச்சார்ந்த நாட்களும், சோழர் வீழ்ச்சியைக் காட்டும் காலமாதலாலும் மூன்றாம் குலோத்துங்கன் காலமே (1178—1218) நேமிநாதர் காலம் எனக் கொள்ளல் பொருந்தும். இக்கருத்தைச் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் எழுதிய ரா, இராகவையங்காருடைய 'இன்றைக்கு எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்' என்ற தொடர் வலியுறுத்துவதாகும்.[2]

இவ்வாறு பல வகையான ஆராய்ச்சி முடிவுகளும் உரையாசிரியர் அனைவரும் கி. பி. பதினோராம் நூற்றாண்

1. (a) பண்டாரத்தார்—சோழர் வரலாறு.
 (b) தமிழக வரலாறு (அ. மு. ப.) பக். 254
2. நேமிநாதம், மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு.

டிற்கும் பதினான்காம் நூற்றாண்டிற்கும் இடையில் வாழ்ந் தவர் எனக் காட்டுகின்றன. இவ்வாறு காலத்தால் வரையறுக்கப்பட்ட உரையாசிரியர்களது வாழ்க்கையை நம்மால் அறுதியிட முடியாது. உரையாசிரியருள் சிலர் பெயர்கூட நம்மால் அறியமுடியாது போய்விட்டது. ஒரு சிலரைப்பற்றிய குறிப்புக்களே நமக்குக் கிடைக் கின்றன. பலவற்றிற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் மதுரையில் பரத்துவாச குடியில் தோன்றிய ஓர் அந்த ணர் என்பது நன்கு புலனாகின்றது. அது போன்றே பரிமேலழகரும் காஞ்சியில் உலகளந்த பெருமாள் கோயி லுக்குப் பணி புரிந்த வைணவ அந்தணர் குலத்திற் பிறந்தவர் என்பதை அறிகிறோம். நம் கால வரலாற் றுக்கு உறுதுணையாக நின்ற நேமிநாதம் செய்த குணவீர பண்டிதர் தொண்டை மண்டலத்தவர் எனத் தொண்டை மண்டல சதகம்[1] எடுத்துக் காட்டுகிறது. இவ்வாறு உரையாசிரியர்களுள் சிலரைப்பற்றிய குறிப்புக்கள் அங் கொன்றும் இங்கொன்றுமாகக் கிடக்கின்றனவே யன்றி, முறையாக வரையறுத்த வகையில் அவர்கள் வாழ்க்கையை அறிய வழியில்லை. தொல்காப்பியம் முடிய உரை எழுதிய இளம்பூரணரும், சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும், சேனாவரைய ரும், பிறரும் தத்தம் வாழ்க்கையையும், பெயரையும் ஊரையும், புகழையும் உலகினர்க்குக் காட்ட வேண்டும் என்று கருதாது, பழந்தமிழ் நூல்களுக்கு—இலக்கிய இலக்கணங்களுக்கு—உரை கண்டு தமிழை வளர்த்தார் கள் என்பது நன்கு தெரிகிறது. மேலும், அவர்கள் காலமே தமிழர் அரசியல் வாழ்வும் உச்ச நிலையில் இருந்த காலம் என்னலாம். மேற்கே யவன நாடு தொடங்கி, கிழக்கே சீன நாடு வரை தமிழ் நாட்டு மரக்கலங்கள் வாணிபத்தின்

1. தொண்டை மண்டல சதகம், செய். 32.

பொருட்டு இயங்கி வந்ததோடன்றித் தமிழ் நாட்டு மன்னர்கள் கங்கைக் கரையில் உள்நாட்டில் வெற்றி கொண்டும் கடாரம் முதலிய கீழை நாடுகள் வரை கொடி யேற்றியும் வாழ்ந்த காலமும் ஆகும். நாடு நல்ல சோழ மன்னரால் திறம்பெற ஆளப் பெற்ற அந்த நல்ல தமிழ் நாட்டு வரலாற்றின் பொற்காலத்திலே இவ்வுரையாசிரியர் அனைவரும் சிறக்க வாழ்ந்து தமிழையும் உயர்நிலைக்குக் கொண்டு வந்தார்கள் என்பதில் வியப்பில்லையன்றோ!

இக்காலத்தில் உரைநடையிலும் பாட்டிலும் வட மொழி மிகுதியாகவே கலந்து வழங்கி வந்தது. அதன் அடிப்படையிலேதான் வடமொழி வழிக் கிரந்த எழுத்துக் களில் நாலாயிரத்துக்குப் 'படி'களாகிய பல உரைகள் எழுந்தன. அவற்றுடன் தொடர்புடைய ஆளவந்தார் பிள்ளை என்பவரே மேல் - நம் உரையாசிரியர்களுடன் சேர்க்கப்பெற்றவர் என்னலாம். அவரைப் பற்றியும் அவரு டனும் அவருக்கு முன்னும் பின்னும் வாழ்ந்து நாலா யிரத்துக்கு உரை கண்ட நல்லவரைப் பற்றியும் பின்வரும் பகுதிகளில் காணலாம். இனி இவ்வுரையாசிரியர்களுடைய சொற்களை எடுத்துக் காட்டி, அவரவர் உரைச் சிறப்புக்கள் எத்துணை ஏற்றமுடையன எனக் கண்டு மேலே செல்லலாம்.

தொல்காப்பிய உரையாசிரியருள் இளம்பூரணரே மிகப் பழையவரெனப் போற்றக் கூடியவர் என்பது உலகறிந்த ஒன்று. அவரை 'உரையாசிரியர்' என்றே வழங்கவேண்டு மென்பர் பலர். ஏன்? பின்வந்த உரையாசிரியர் சிலர் அவ்வாறே அவரை வழங்கியு மிருக்கின்றனர். அவர் இவ் வாறு உரையாசிரியர்களுள் 'முன்னோடி'யாய் (Pioneer) இருந்த போதிலும் அவர் உரைகள் இனிமையும் எளிமையும்

உடையனவாகி, எடுத்த பொருளைத் தெள்ளிதின் விளக்க வல்லதாகவும் அமைந்துள்ளன.

வரையறை யில்லாது வழங்கும் நிலை ஒழித்து, வரையறுக்கப்பட்ட மெய்ம்மயக்கம் கூறிய தொல்காப்பிய நூல் மரபு 22-ஆம் சூத்திரத்திற்கு விளக்கவுரை கூறிய இளம்பூரணர், அவ்வாறு கூறவேண்டிய இன்றியமையாமையையும், கூறிய நிலையையும் அறுதியிட்டுக் காட்டுவது சிறந்ததாகும்.

> **"உயிர், மெய், உயிர்மெய் என்ற மூன்றனையும் உறழ்ச்சி வகையான் உறழ, ஒன்பதுளவா மன்றே? அவற்றுள் தனி மெய்யொடு தனி மெய் மயக்கம் ஒன்றே கூறியதென்னெனின், மற்றவற்றிற்கு வரையறை யின்மையின், வரையறை யுடைய தனி மெய் மயக்கமே கூறி யொழிந்தார் என உணர்க. மெய் என்றதனால், தனி மெய்யொடு உயிர்மெய் மயக்கமன்றி, தனி மெய்யொடு தனி மெய் மயக்கமாதல் கொள்க'**[1]

என்று எழுத்தின் இலக்கணத்தை இனிய வகையில் நலல உரை நடையில் தெள்ளத் தெளியக் காட்டுவது சிறந்த முறை யன்றோ! இவ்வெழுத்ததிகாரத்திலேயே இன்னும் இரண்டோர் இடங்களும் காணலாம்.

சூத்திரத்தில் சொல் அமைப்பு முறைகளைக் கொண்டே வழக்கிலுள்ள நல்ல பொருள் நிலைகளை எடுத்துக்காட்டும் வகையில் உயிர் மயங்கியல் 37-ஆம் சூத்திரத்திற்கு இவர் திறம்படப் பொருள் கண்டுள்ளார்.

> 'வருமொழி முற்கூறியவதனால், '**இருதூணிப் பதக்கு**' என அடையடுத்து வந்த வழியும் இவ்விதி கொளக. '**கிளந் தெடுத்த**' என்றதனால், **தூணி**

1. தொல், எழுத்து, வ. உ. சி. பதிப்பு, பக். 12.

> முன்னர்ப் பிற பொருட் பெயர் வந்த வழியும், ஆண்டு நிலைமொழி அடையடுத்து வந்த வழியும், தன் முன்னர்த் தான் வந்த வழியும், இம்முடிவு கொள்க. இன்னும் அதனானே, தன் முன்னர்த் தான் வந்த வழி இக்குச் சாரியைப் பேறும் கொள்க'[1]

என்று உரை விளக்கம் கூறி, அதற்கு உதாரணங்களும் காட்டி, மேலே செல்கின்றார். மேலும், விளக்கத்தையும் உதாரணங்களையும் ஒன்றுபடுத்தி,

> 'நாள் முன் கூறாது திங்கள் முன் கூறியவதனால், 'கரியவற்றுக் கோடு' எனவும்; 'அவையத்துக் கொண்டான்' எனவும்; 'வழைங்கோடு, வழைக் கோடு' எனவும், 'கலைங்கோடு, கலைக்கோடு' எனவும் இவ்வீற்று முடியாதன வெல்லாம் கொள்க'[2]

என்று காட்டும் இவர் உரை சிறந்ததாகும். இலக்கணத்தில் மிகக் கடினமான விளக்கப்பெறாத பகுதிகளையும் இனிய முறையில் நல்ல உரைநடையில் இவ்வாசிரியர் விளக்கிக் காட்டும் சிறப்பையே நாம் நோக்கல் வேண்டும்.

இனி, சொல்லதிகாரத்தில் இளம்பூரணர் உரைநடையைக் காணலாம். சொல்லதிகாரத்து முதற் சூத்திரமாகிய 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' என்பதற்குச் சிறந்த விளக்கம் தந்து செல்லுகின்றார் இளம்பூரணர். அவ்வாறு சொல்லும் போது,

> 'உலகத்தின் மக்கள் என்ற பொருளை உயர் திணையென்றது கூறுபாடின்மையின்; அஃறிணை கூறு பாடுடைமையின்; 'அஃறிணை என்மனார் அவரல,' என்னாது, 'பிற' என்றார், அவை உயிருடையனவும்

1. தொல். எழுத்து, வ. உ. சி. பதிப்பு, பக்கம், 86.
2. ஷை பக்கம், 99.

**உயிரில்லனவும் என இரண்டு கூற்றன என்றற்கு. அவற்றது கூறுபாடெல்லாம் அறிந்து கொள்க'**[1]

என நுண்ணிய வகையான் நல்ல நடையில் ஆசிரியர் கொண்ட கருத்தைத் தம் உரை வழி எடுத்துக் காட்டும் திறம் அறிந்துகொள்ளல் வேண்டும்.

'சூத்திரமே தேவையா வேண்டாவா?' என்ற வினா எழுங்காலை, அதன் இன்றியமையாத நிலையைக் கிளவி யாக்கம் முப்பதாம் சூத்திர உரையால் இவர் விளக்கும் திறனும் நோக்கத்தக்கது :

**'இனிச் 'செலவும் கொடையும் தரவும் வரவும்' என்று சூத்திரம் செய்யற்பாலான். எற்றுக்கு? 'செல்லும் காணம், கொடுக்கும் காணம்' என்பன இரண்டும் படர்க்கைக்கு உரிய; 'தரும், வரும்' என்பன இரண்டும் தன்மைக்கும் முன்னிலைக்கும் உரிய; ஆகலான், அவ்வாறு கூறுது மயக்கங் கூறிய வதனுன், 'செல்லும்' என்னும் சொல்லாற் சொல்லப்படுவதனை 'வரும்' என்னும் சொல்லானும் சொல்லுப; 'கொடுக்கும்' என்னும் சொல்லாற் சொல்லப்படுவதனைத் 'தரும்' என்னும் சொல்லினு னும் சொல்லுப என்றலைக் குறித்தற்கு என்க'**[2]

என்று சொற்களை உரைநடையில் தாம் உபயோகிக்கும் திறன் காட்டியும், இலக்கணத்தில் உபயோகிக்கும் முறை காட்டியும் விளக்குகின்ருர்.

தம் கருத்தோடு மற்றவர் கருத்தைப் புணர்த்துப் பேசி, அதையும் ஏற்றுக்கொள்ளும் உரையாசிரியர் திறனை எச்ச வியல் ஐம்பத்தேழாம் சூத்திரத்து உரையால் அறிந்து கொள்ளல் இயல்வதாகும்.

---

1. நமச்சிவாய முதலியார் பதிப்பு, பக். 3.
2. ஷ பக். 24.

'பெற்றன குறையாத போது நின்ற தத்தம் நிறைவு நிலைப் பெயரளவேயாக உணரப்படுமென் பார், 'நிறைப் பெயரியல' என்றார் என்பது; இதுவும் ஒரு கருத்து.'[1]

என மற்றவர் கருத்துக் காட்டி ஏற்கும் திறம் அறிந்து கொள்க.

இவ்விளம்பூரணர் பொருளதிகாரத்துக்கும் உரை கண்டுள்ளார். அவ்வுரையுள் ஒரு சிலவற்றை ஈண்டு மேற் கோள்களாக எடுத்துக்காட்டி மேலே சொல்லலாம் :

"'மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய' என்பது, நால்வகை நிலத்தினும் மேவிய சிறப்பை யுடைய மக்களல்லாத தேவரது படிமையவாகிய பொருள்கள் என்றவாறு. 'முல்லை முதலாச் சொல்லிய' என்பது, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லிய நிலத்தின் மக்கள் என்ற வாறு. 'முறையால், பிழைத்தது பிழையாதாதல் வேண்டியும் பிரிவே' என்பது, மேற் சொல்லப் பட்டன முறைமையில் தப்பிய வழித் தப்பாது அறம் நிறுத்தற் பொருட்டும் பிரிவுளதாம் என்ற வாறு. 'இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே' என்பது, சொல்லப்பட்ட பொருள் முடிய வேண்டி யும் பிரிவு உளதாம் என்றவாறு.'[2]

என அகத்திணையியல் 30 ஆம் சூத்திரத்திற்கும்,

'மிக்க காமத்து மிடலாவது, ஐந்திணைக்கண் நிகழும் காமத்து மாறுபட்டு வருவது. அஃதாவது, வற்புறுத்துந் துணையின்றிச் செலவழுங்குதலும், ஆற்றருமை கூறுதலும், இழிந்திரந்து கூறுதலும், இடையூறு கிளத்தலும், அஞ்சிக் கூறுதலும், மனைவி விடுத்தலிற் பிறன் வயிற்சேறலும், இன்னோரன்ன

1. நமச்சிவாய முதலியார் பதிப்பு, பக். 252
2. கழகப் பதிப்பு, பக். 31

ஆண்பாற் கிளவியும், முன்னுறச் செப்பலும்; பின்னிலை முயறலும், கணவனுள் வழி இரவுத்தலைச் சேறலும், பருவம் மயங்கலும், இன்னோரன்ன பெண்பாற் கிளவியும், குற்றிசையும் குறுங்கலியும் இன்னோரன்ன பிறவுமாகி ஒத்த அன்பின் மாறு பட்டு வருவனவெல்லாம் கொள்ளப்படும்.''[1]

என்று ஐம்பத்து நான்காம் சூத்திரத்திற்கும்;

"'அறனும் பொருளும் இன்பமும்' என்னாது, 'இன்பமும் பொருளும் அறனும்' என்றது என்னை யெனின், பல வகை உயிர்கட்கும் வரும் இன்பம் இரு வகைப்படும். அவையாவன, போகம் நுகர் தலும் வீடு பெறுதலும் என. அவற்றுள் வீடு பேறு துறவறத்தில் நின்றார்க் கல்லாது எய்தல் அரிதா யிற்று. போக நுகர்தல் மனையறத்தார்க் கெய்துவது. அவரெய்தும் இன்பமும் அவ்வின்பத்திற்குக் காரண மாய பொருளும் அப்பொருட்குக் காரணமாகிய அறனும் எனக் காரிய காரணம் நோக்கி வைத்தார் என்க.''[2]

எனக் களவியல் முதலாம் சூத்திரத்திற்கும்,

"இறந்த காலமுதலியவற்றாற் கூறுதலாவது, 'முன்புள்ளார் இவ்வாறு செய்து நன்மை பெற்றார்; இவ்வாறு செய்து தீமை பெற்றார்.' எனவும், 'இப்பொழுது இன்னோர் இவ்வாறு செய்து பயன் பெறா நின்றார்,' எனவும், 'இவ்வாறு செய்தார் பின்பு நன்மை தீமை பெறுவர்' எனவுங் கூறுதல்.''[3]

எனக் கற்பியல் பன்னிரண்டாம் சூத்திரத்திற்கும் :

"பரிபாட்டாவது, பரிந்த பாட்டாம். அஃதாவது, ஒரு வெண்பாவாக வருதலின்றிப் பல

1. கழகப் பதிப்பு, பக். 69
2. ௸ பக். 160.
3. ௸ பக். 303.

உறுப்புக்களோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப் பெறுவது. 'ஒத்தவை' என்பது அளவானும் பொருளானும் இனத்தானும் வேறு பகுக்கப்படாத சமநிலை வெண்பாக்களாம். அவை யாவன, நான்கடியான் வருவன. இவ்வாசிரியர் நான்கினை அளவென்றும், ஏறியவற்றை நெடி லென்றும், குறைந்தவற்றைக் குறள், சிந்து என்றும் வழங்குவராதலின், இவற்றுள் பொருளானும் இனத்தானும் வேறு பகுக்கப்படாத நெடுவெண் பாட்டும் குறுவெண்பாட்டும் சமநிலை வெண் பாட்டும் என மூவகையானும் வரும்.''[1]

எனச் செய்யுளில் 114-ஆம் சூத்திரத்திற்கும் உரை கண்டு, அவ்வவ்விடத்திற்கும் பொருள் அமைப்பிற்கும் ஏற்ற வகையில் ஆசிரியர் இளம்பூரணர் எடுத்த பொருளை விளக்கும்முறை அறிந்து இன்புறற்பாலதன்றோ! இவற்றின் பொருள் நயத்தைப் பற்றி நாம் இங்கே அதிகம் கருத் திருத்த வேண்டா. இவர்தம் உரை நடைப் போக்கும் அவ்வுரை செல்லும் நெறியும், அவ்வுரை நடையால் தாம் விளக்க விரும்பிய பொருளைக் காரண காரியத் தொடர் போடு நிலை நாட்டும் நிலையும் எண்ணத்தக்கன. இவ்வாறே ஒவ்வோர் உரையாசிரியர் தம் உரைத்திறனையும் விளங்க உரைப்பின் நீளும். எனவே, ஒவ்வோர் உரையாசிரியர் வாக்கிலும் இரண்டொன்று எடுத்துக்காட்டி அமைதல் சாலும் என நினைக்கின்றேன்.

**சேனாவரையர்** தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதினவர். அவர் வேறு எந்த நூற்கும் உரை எழுதினார் என்பது திட்டமாகத் தெரியவில்லை. என்றாலும், இந்த ஓர் உரையே அவரது உரைத் திறனை நன்கு விளக்கப் போதிய சான்றாய் அமைந்துவிட்டது.

1. கழகப் பதிப்பு. பக். 482.

'வழுக்களைந்து சொற்களை ஆக்கிக்கொண்டமை யான், இவ்வோத்துக் கிளவியாக்கம் ஆயிற்று. ஆக்கம்—அமைத்துக்கோடல், நொய்யும் நுறுங்கும் களைந்து அரிசி அமைத்தாரை, 'அரிசி யாக்கினுர்' என்பவாகலின். சொற்கள் பொருள்மேல் ஆமாறு உணர்த்தினமையால், கிளவியாக்கமாயிற்று என்றும் அமையும். பொது வகையாற் 'கிளவி' என் றமையால், தனி மொழியும் தொடர் மொழியும் கொள்ளப்படும். கிளவி, சொல், மொழி என்னுந் தொடக்கத்தனவெல்லாம் ஒரு பொருட் கிளவி.'[1]

என்று கிளவியாக்கம் என்ற பெயர்ப் பொருத்தத்தை அவர் நன்கு தெளிவுபடுத்துவதைக் காணலாம். வேறு காட்டி மறுப்பார் கூற்றைப் போக்கித் தம் கொள்கையை நிறுவும் அவர்,

" 'உயர்திணை மருங்கின் பால்பிரிந் திசைக்கும்' எனவே, தமக்கென வேறு ஈறு இன்மை பெறப்படு தலின், 'இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே' எனல் வேண்டா எனின், தமக்கென வேறு ஈறு உடையவாய் ஆடூஉவறிசொல் முதலாயினவற்றிற் குரிய ஈற்றானும் இசைக்கும் சொல் என்னும் ஐயம் நீங்குதற்கு, 'அந்தம் தமக் கிலவே' எனல் வேண்டும் என்பது."[2]

எனத் திறம் பட எடுத்துக் காட்டுகின்ருர். தாம் கொண்ட பொருளை எடுத்துக்காட்டினுல் விளக்கும் திறத்தை,

'கதத்தனுக களியானுக ஒருவன் தெருளாது ஒருவனை வைதான்; அவன் றெருண்டக்கால், வையப் பட்டான், 'நீ என்னை வைதாய்,' என்ற வழித் தன்னலத்தை உணராமையான், 'வைதேனே?' என்னும்; ஆண்டவ் வினுவொடு வந்த வினைச்சொல்

1. கழகப் பதிப்பு, பக். 3.
2. ஷை பக். 6.

'வைதிலேன்' என எதிர்மறைப் பொருள்பட வந்த வாறு கண்டு கொள்க.'[1]

என்பதால் நன்கு உணரலாம். இவ்வாறு பல வகையில் சேனாவரையர் உரைநடை சிறந்ததாகும். விரிப்பிற் பெருகும். மேலே தெய்வச்சிலையார் உரைநடையைக் காண்போம்:

"'அனைய மரபின' என்றதனான், ஈண்டு ஓதப் பட்டனவற்றுள் அடையடுத்து வருவனவும் கொள்க. 'தாழ் குழல்' என்ற வழி அதனை உடையாட்குப் பெயராகி வருதலின், ஆகுபெய ராயிற்று 'இது வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை ஆகாதோ?' எனின் ஆண்டு எடுத்து ஓதாமையினானும், பொருள் ஒற்றுமைப்படுதலா னும் ஆகாது என்க.'[2]

என்று சொல்லதிகாரம் வேற்றுமை மயங்கியல் முப்பதாம் சூத்திரத்திற்குப் பொருள் கண்டு, ஐயமகற்றுகின்றார். இன்னும் எடுத்த பொருளைத் திட்டமாக வரையறுத்து விளக்கும் பான்மையை உரியியல் 98-ஆம் சூத்திர உரையில் நன்கு காட்டுகிறார்:

"எனவே, காரணமுளதென்பதூஉம், அது புலனாகாதென்பதூஉம் கூறியவாறும். 'என்னை புல னாகாமை?' எனின், மிகுதல் என்பதற்குப் பொரு ளாவது, முன்பு நின்ற நிலையில் பெரிதாதல், அப் பொருளின்மையைச் சேரக் காட்டுதற்குக் காரணம் உரைப்ப தரிதாதலான். 'அஃதேல், காரண முளா போலக் கூறியவதனாற் பய னென்னை?' எனின், பொருண்மேற் சொல் நிகழ்தல் தொன்று தொட்டு நின்றதாதலின், உலகினுள் மிக்காரெல்லாம் காரண

1. கழகப் பதிப்பு பக். 153
2. கரந்தைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு, பக். 91.

மின்றி வழங்குபவோ என்று ஐயங்குறித்துக் கூறினார். 'அஃதேல், இன்ன எழுத்து இப்பொருள் படும் எனவும்; இத்தன்மைத்து எனவும், இப்பயன் தரும் எனவும் மற்றை நூலகத்தும் பிறண்டும் உரைக்கப் படுமாதலான், காரணம் உரைப்பரிது குற்றம்,' எனின், அதற்கு விடை வருகின்ற சூத்திரத்தான் விளங்கும்.''[1]

என்பதும் இவை போன்ற பிறவும் தெய்வச் சிலையார் உரைநடையையும், அவர் காட்ட விரும்பும் கருத்தை விளக்கும் தெளிவையும் நன்கு காட்டுகின்றன என அறியலாம்.

இவர்களையன்றித் தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய மற்றொரு சிறந்த உரையாசிரியர் **பேராசிரியர்** ஆவர். அவர் பொருளதிகாரத்தில் சில இயல்களுக்கே உரை எழுதிச் சென்றார் என்றாலும், அவ்வுரை மற்றவற்றினும் சிறந்து நன்கு பொருள் செறிந்த உரையாகச் செல்லுகிறது என்பதைக் காணல் தகும்:

பேராசிரியர் உரைநடைத் திறத்திற்கு இரண்டு ஏதுக் காட்டி முடிப்போம்: செய்யுளியல் 176-ஆம் சூத்திரத்திற்கு உரை கூற வந்த அவர், பல்வேறு வகையில் இடந் தலைப்பாடு, பாங்கற் கூட்டம் முதலியன காட்டித் தாம் கொண்டதை நிறுவுகின்றார். அந்நிலையில் அவர்,

''மற்று, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகனைப் பாங்கன் கண்டு, 'இவ்வேறுபாடு எற்றினானாயிற்று?' என்று வினவுமன்றே? அதனால், பாங்கற் கூட்டம் நிகழ்ந்த பின்னரன்றி இடந்தலைப்பாடு நிகழாவாம் பிறவெனின், அற்றன்று; யாழோர் கூட்டம் உலகியலாதலான் இல்லதன்றுமாகவே உலகத்தார் நிறையுடையராகி மறை வெளிப்படாமல் ஒழுகுவாரும், மறை வெளிப்படுத்து விளம்பும்

1. கரந்தைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு பக். 213.

பாங்கனை உடையாரும் இல்லாதாருமெனப் பல வகையராதலின், வினுதல் ஒரு தலையென்றென்பது; அல்லதூஉம், தன் இடந் தலைப்பாடு நிகழாதாயினே துணை வேண்டுமென்பது. என்னை? துணையின்றி நிகழும் களவு சிறப்புடைத்தாகலானும், பாங்கன் கழறுமென்று அஞ்சி அவனை முந்துற மறைத் தொழுகு மாகலானு மென்பது. களவொழுக்கம் இந் நான்கு வகையானும் அடங்கும்.''[1]

என்று மேலே செல்கின்ருர். இனி,

'''புறக்காழன' எனவே, அல்வழி வெளிறென்ப தறியப்படும். அவை பனையுந் தெங்கும் கமுகும் முதலாயின புல்லெனப்படும்; இருப்பையும் புளியும் ஆச்சாவும் முதலாயின மரமெனப்படும். இங்ஙனம் வரையறை கூறிப் பயந்த தென்னை? புறத்தும் அகத்தும் கொடி முதலாயின காழ்ப்பின்றியும் அகின் மரம்போல்வன இடையிடை பொய்பட்டும் புல்லும் மரனும் வருவன உளவாலெனின்,—இரண்டடித் தும் ஏகாரம் பிரித்துக் கூறினமையானும் 'என மொழிப' என்று இரு வழியும் சிறப்பித்து விதந்தமை யானும் சிறுபான்மை அவையும் புல்லும் மரனு மென அடங்கு மென்பது.''[2]

எனப் புல்லையும் மரத்தையும் தொல்காப்பியர் காட்டிய வழியே சென்று நன்கு விளக்கும் நிலை எண்ணத்தக்கது. இனி இலக்கியம் இலக்கணம் இரண்டினுக்கும் உரை எழுதிய நச்சினர்க்கினியர் உரைநடை நயம் காணல் சிறப்புடைத்து.

''எழுத்தென்றது யாதனை எனின், கட்புலனுகா உருவுங் கட்புலனுகிய வடிவுமுடைத்தாக வேறு

1. கழகப் பதிப்பு, பக். 396
2. ஷெ பக். 471

வேறு வகுத்துக்கொண்டு தன்னையே உணர்த்தியுஞ் சொற்கு இயைந்தும் நிற்கும் ஓசையையாம். கடலொலி சங்கொலி முதலிய ஓசைகள் பொருள் உணர்த்தாமையானும், முற்கு, வீளை, இலதை முதலியன பொருளுணர்த்தினவேனும் எழுத்தாகாமையானும் அவை ஈண்டுக் கொள்ளாராயினர். ஈண்டு உருவென்றது மனனுணர்வாய் நிற்கும் கருத்துப் பொருளை. அது செறிப்பச் சேறலானும், செறிப்ப வருதலானும், இடையெறியப் படுதலானும், இன்பதுன்பத்தை யாக்கலானும், உருவும் உருவுங் கூடிப் பிறத்தலானும், உந்தி முதலாகத் தோன்றி எண்வகை நிலத்தும் பிறந்து, கட்புலனுந் தன்மையின்றிச் செவிக்கட்சென்று உறும் ஊறுடைமையானும், விசும்பிற் பிறந்து இயங்குவதோர் தன்மை உடைமையானும், காற்றின் குணமாவதோர் உருவாம் வன்மை மென்மை இடைமை கோடாலானும் உருவே யாயிற்று. இதனைக் காற்றின் குணமே என்றல் இவ்வாசிரியர் கருத்து. இதனை விசும்பின் குணமென்பாரும் உளர்.''[1]

என்று தொல்காப்பியப் பாயிரத்திலேயே எழுத்தின் தன்மை பற்றி விளக்கி, மேல் அவ்வெழுத்ததிகாரத்திற்குத் தெளிந்த நல்ல உரை எழுதிச் செல்லுகின்றார். நச்சினார்க்கினியர் உவமையால் எடுத்ததை விளக்கும் திறனை 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' என்பதன் உரையில் நன்கு கண்டு கொள்ளலாம்.

''இறைவன் இயங்கு திணைக்கண்ணும் நிலைத் திணைக்கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந் தாற்போல அகரமும் உயிர்க்கண்ணும் தனிமெய்க் கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாகவே நிற்கு

1. தொல். எழுத்து நச்சி: கழகப் பதிப்பு பக். 89

மென்பது சான்றோர்க் கெல்லாம் ஒப்ப முடிந்தது.''[1]

என்ற அவர் உரையில் அவர் கொண்ட கடவுட் பற்றும் நன்கு விளங்கும். இனிப் பொருளதிகாரத்து ஐந்து இயல் களுக்கும் அவர் உரை சிறந்ததாகும்; சொல்லுக்குச் சொல் பொருள் நலம் காண்கின்றார். 'மெய் தொட்டுப் பயிறல்' என்பதில் 'தொடும்' என்னாது 'பயிறல்' என்ற தால் பெற்ற சிறப்பினை அவர் உரை வழிக் காணலாம்:

''இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர்ப் பெரு நாணினளாகிய தலைமகள் எதிர் நிற்குமோ எனின், தான் பிறந்த குடிக்குச் சிறந்த ஒழுக்கத்திற்குத் தகாதது செய்தாளாதலின், 'மறையிற் றப்பா மறையோ னொருவனை, மறையிற் றப்பிய மறை யோன்' போலவும், 'வேட்கை மிகுதியான் வெய் துண்டு புண் கூர்ந்தார்' போலவும், நெஞ்சும் நிறை யும் தடுமாறி, 'இனிச் செயற்பால தியாது?' என் றும், 'ஆயத்துள்ளே வருவான் கொல்லோ'! என்னும் அச்சங் கூரவும், 'வாரான் கொல்லோ!' எனக் காதல் கூரவும், புலையன் தீம்பால் போல மனங்கொள்ளா அனந்தருள்ளும் உடையாளாய், நாணுமறந்து காதலீர்ப்பச் செல்லும்; சென்று நின்றாளைத் தலைவன், 'இவ்வொழுக்கம் புறத்தார் இகழப் புலனாய் வேறுபட்டாள் கொல்லோ!' எனவும், 'அங்ஙனம் மறை புலப்படுதலின் இதனி னாங்கு வரைந்து கொள்ளி னன்றி இம்மறைக்கு உடம் படாளோ!' எனவும் கருதுமாறு முன் போல நின்ற தலைவியை மெய்யுறத் தீண்டி நின்று குறிப் பறியு மென்றற்குத் 'தொடும்' என்னாது, 'பயிறல்' என்றார்.''[2]

என்று உவமை வழியும் பிறவழிகளிலும் காட்டும் உரையும்

1. தொல். பொருள். நச்சி. கழகப் பதிப்பு, பக். 45
2. ஷை பக். 19, 20

நடையும் சிறந்தன வாகும். இவர்தம் உரைப்போக்கும் மேற்கோள்களும் இவர் காலத்தால் பிந்தியவர் என்பதைக் காட்டுகின்றன. இவர் சிந்தாமணி, பத்துப்பாட்டு, கலித்தொகை முதலிய இலக்கியங்களுக்கும் உரை கண்டார் என்பதை அறிந்தோம். அவற்றுள் இரண்டொன்று காணலாம்:

''இதன் கருத்து; இச்செய்யுட்கு அங்கமாகிய வருணனைகள் கூறி, அதற்குரிய தலைவனைக் காட்டுகின்றார், இத்துணையும் அவன் தோன்றற்குக் காரணம் கூறி, அதற்கு முற்பிறப்பில் அன்னப் பார்ப்பைப் பிரித்த தீவினை வந்து குரவரைப் பிரித்தலும் கூற வேண்டுதலின், திருவிழுக் குற்றமை முற் கூறுகின்றா ரென்றுணர்க. திருவிழுக் குறுதலாவது, கட்டியங்காரற்கு அரசளித்தலும் அமைச்சர் சொற் கேளாமையுமாம்.''[1]

என்று **சீவக சிந்தாமணி**யின் பாடலுக்குப் பொருள் கூறுவதோடு அதில் ஆசிரியர் காட்ட நினைந்த கருத்துக்களும், அக்கருத்துக்கள் வழி அடுத்துவரும் நிகழ்ச்சிகளின் எடுத்துக் காட்டும் சிறப்பும் பொருந்த உரை வகுத்துள்ளார். இவ்வாறே பத்துப்பாட்டிற்கும் அவர் கூறிய உரை நயம் ஒன்று காணலாம். முல்லைப்பாட்டிற்கு விளக்கம் கூற வந்த அவர்,

''இப்பாட்டிற்கு முல்லையென்று பெயர் கூறினர், முல்லை சார்ந்த கற்புப் பொருந்தியதனுல்: இல்லறம் நிகழ்த்துதற்குப் பிரிந்து வருந்துணையும் ஆற்றியிருவென்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்திய இயற்கை

---

1. சீவக சிந்தாமணி, (ஆரும் பதிப்பு), டாக்டர். ஐயர், பக். 105.

> முல்லையா மென்று கருதி இருத்தலென்னும் பொருடர முல்லையென்று இச்செய்யுட்கு நப்பூதனார் பெயர் கூறினமையின், கணவன் வருந்துணையும் ஆற்றியிருந்தாளாகப் பொருள் கூறவே அவர் கருத்தாயிற்று. 'தானே சேறல்' (தொல். அக. சூ, 27) என்னும் வழியால், அரசன் தானே சென்றது இப் பாட்டு.''[1]

என்று பாட்டின் பெயருக்கே பொருள் விளக்கிச் செல்லும் அவர் உரை நடை சிறந்தது. இவ்வாறு தொல்காப்பியத்துக்கு உரை கண்ட முற்கால உரையாசிரியர்களது உரை நடைப் போக்கைக் கண்ட நமக்கு இது சிலப்பதிகார உரை நடையினுக்கு மாறுபட்டதாகவும், இறையனார் களவியலுரைக்கு வேறுபட்டதாகவும், எளிமையான நடை பெற்றதாகவும், தான் தோன்றிய காலத்திற்கு ஏற்ப வடமொழிக் கொள்கை, சொற்கள் பொருந்தியதாகவும் இருக்கக் காண்கிறோம். இவர்தம் உரைநடைகளே பழங் கால இலக்கிய இலக்கணங்களை நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றனவாதலின், இவை இன்றேல் தமிழ் இலக்கிய வரலாற்றில் எத்தனையோ இருண்ட காலங்கள் தோன்றி இருக்கும் என்பது உறுதி. இவ்வுரையாசிரியர்கள் காட்டும் எத்தனையோ மேற்கோட் பகுதிகளும், நூல்களும் இன்று நம்மால் அறியக்கூடாத நிலையில் இருக்கின்றன. அவைகளெல்லாம் இந்த உரையாசிரியர்கள் காலத்தில் சிறந்தவையாய் இருந்திருக்கலாம். எனவே, மறைந்த இலக்கிய இலக்கண நூல்களை நாம் இழந்த நிலையிலேயும் அவற்றுள் சிறந்த சிலவற்றையும் அவற்றின் பெயர்களையும் நமக்கு நினைப்பூட்டி நிற்பதோடு, நூலாசிரியர்தம் உள்ளப் பாங்கினை உற்று அறிந்து, அவரவர் பாடிய பாடல்களுக்கும் சூத்திரங்களுக்கும் ஏற்ற பெற்றி அறிந்து உரை கண்டு நின்ற இவ்வுரையாசிரியர்களுக்குத் தமிழ்

உலகம் என்றென்றும் கடமைப்பட்டதாகும். இப்பகுதியில் அக்காலத்தில் வாழ்ந்த சிறந்த உரையாசிரியர்களாகிய அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் ஆகிய இவர்தம் உரை வளத்தினைக் கண்டு மேலே செல்லலாம்.

சிலப்பதிகாரத்துக்கு உரை செய்தவர் **அடியார்க்கு நல்லா**ராவர் அவர் காலத்தையும் ஓரளவு அறுதியிட்டு முன்னமே கண்டோம். அவர்தம் உரைநடையும் மற்ற உரையாசிரியர்களுடைய நடையை ஒட்டியதாகவே அமைகின்றது. அவர் இசை, நாடகம் முதலியவற்றிற்கு விளக்கம் காட்டுங்கால் எத்தனையோ நூல்களையும் கருவிகளையும் பழக்க வழங்கங்களையும் காட்டிக்கொண்டே செல்கின்றார். அவர் காலத்தில் அத்துணை இசைக் கருவிகளும் நடன அமைப்பு முறைகளும் இருந்தன என அறிய அவர் உரையின்றி வேறு கிடைக்கவில்லை. அவர் உரை சிலப்பதிகாரத்துக்கு முழுதும் இல்லை. பத்தொன்பதாவது காதையாகிய ஊர் சூழ் வரியுடன் அவர் உரை முடிகின்றது. பின் உரை இல்லாமைக்குக் காரணம் யாதோ அறியோம். அதற்குள் அவர் வாழ்நாள் எல்லையினின்று விளிந்தாரோ என நினைக்க வேண்டியுள்ளது. இருக்கும் அந்த ஓர் உரையே இடைக்காலத் தமிழ் நாட்டை உலகுக்குக் காட்டும் ஒளி விளக்காய் இருக்கின்றது. சிலப்பதிகாரத்துக்கு அரும்பத உரையாசிரியர் தம் அரும்பத உரையும் உண்டு.

"அடியார்க்கு நல்லாருரையில் காணப்படாத பல மேற்கோள்களும் சில நூற்பெயர்களும் இவ்வுரையிற் காணப்படுகின்றன. வாக்கியங்களின் முதலிறுதிகளையேனும், முதலைமட்டு மேனும், சொற்களை யேனும் எழுதிப் பொரு ளெழுதுவதும், ஒன்றையு மெழுதாது பொருளை மட்டும் எழுதிக்கொண்டு போவதும் இவ்வுரையாசிரிய

ருடைய கொள்கையாக இருக்கின்றன."[1] என டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் முன்னுரையில் குறித்துள்ளார்கள். இனி அடியார்க்கு நல்லார் உரைக்கு இரண்டு மேற்கோள் கண்டு செல்வோம்;

"வாளாது 'மண் மடந்தை' என்னுது, 'கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை' என்று மிகுத்துக் கூறினுர். அத்தன்மையாளைப் போர்த்த நீலப் படாத்தைத் தன் தேசினுல் நீக்கிய ஒளி என்றற்கு எனவே, செம்பியன் மரபுயர்ச்சி கூறியவாருயிற்று."[2]

"இனிக் 'கரியவன் புகையினும்' என்பதற்குச் சனி வாரம் புகையினு மெனவுமாம். இனிப் புகையினும் தோன்றினும் படரினும் சுரப்ப எதிர நீர் வாய்த்தலை ஒவிறந் தொலிக்கு மொலியல்லது ஆம்பி முதலிய ஒலித்தல் செல்லாமைக்குக் காரணமாகிய காவிரி என முடிப்பினும் அமையும். புகையினும் தோன்றினும், படரினும் என்ற உம்மைகள், மழை பெய்தொழில் மாற இவற்றில் ஒன்றே அமையுமாகவும், இவையெல்லாம் சேரினும் கடல் வளனெதிர நெரிக்குமெனக் காவிரியின் சிறப்பை விளக்கி நிற்றலிற் சிறப்பும்மைகள்."[3]

"ஆடித்திங்களென்பது தோன்றக் குடகாற்றுக் கூறினுர். நாணும் மடனும் பெண்மையவாதலின், இவற்றைக் கழிந்தே கடை கழிய வேண்டுதலிற் 'கடைகழி மகளிர்' எனப் பொது மகளிர்க்குப் பெயர் கூறினுர்; இவர்க்குக் காதல் பொருளின் கண்ணதாகலிற் 'காதலஞ் செல்வர்' என்ருர் 'தம்மேற் காதலை யுடைய செல்வரோடு' எனவு

1. சிலப்பதிகாரம். (6 ஆம் பதிப்பு), டாக்டர். ஐயர் அவர்கள் முன்னுரை, பக். 19.
2. ஷை (ஐந்தாம் பதிப்பு) பக். 152
3. ஷை பக். 275

மாம்; அம்; சாரியை, நாவாய்—தோணி முதலாயுள்ள சாரசரங்கள்.[1]

'மடந் தங்கிய நெஞ்சத்தையுடைய கஞ்சனுர் செய்த வஞ்சங்களைக் கடந்தவனைத் திசை நான்கினுமுள்ள தேவர்கள் போற்ற ஆரணம் தொடர்ந்து முழங்கப் பஞ்சவர்க்காக நூற்றுவர்பால் தூது நடந்தவனை ஏத்தாத நா என்ன நாவே.'[2]

இவையே அடியார்க்கு நல்லார் உரையில் நாம் காணும் சில மேற்கோள்கள்.

இறுதியாகப் பரிமேலழகர் உரை வளம் கண்டு முடிப்போம்: இவர் குறள், பரிபாடல் இரண்டிற்கும் உரை எழுதியுள்ளமை அறிவோம். அவற்றுள் குறள் உரையே நன்கு உலகறியப்பட்டதாகின்றது. இவர் எழுத்தின் வழிச் சென்று காண்போம்:

உரைப்பாயிரமாக இவர் தொடங்கும் உரையே சிறந்ததாக அமைகின்றது.

''இந்திரன் முதலிய இமையவர் பதங்களும் அந்தமிலின்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்தற்குரிய உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள் வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின், நூற்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்.''[3]

மேலும் இரண்டு உரைநலம் கண்டு முடிப்போம்: 'இருள்சேர் இருவினையும்' என்ற குறளின் உரையில்,

1. சிலப்பதிகாரம்—ஐந்தாம் பதிப்பு, பக். 372
2. ஷெ. பக். 457.
3. கழகப் பதிப்பு, பக். 1.

''இன்ன தன்மைத்தென ஒருவராலுங் கூறப் படாமையின், அவிச்சையை இருள் என்றும், நல் வினையும் பிறந்தற் கேது வாகலான், 'இருவினையுஞ் சேரா' என்றுங் கூறினர். இறைமைக் குணங்கள் இலராயினரை உடையரெனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின், அவை முற்றவுடைய இறைவன் புகழே 'பொருள் சேர் புகழ்' எனப்பட்டது. புரிதல்-எப்பொழுதும் சொல்லுதல்.''[1]

எனச் சொற்குச் சொல் விளக்கம் தருதல் நன்கு விளங்கும்.

இனி, அதிகாரத் தலைப்பைக்கொண்டு, அதற்கு விளக்கந்தரும் வகையில் பல தலைப்புக்கள் நன்கு எடுத் தாளப் பெறுகின்றன. அவற்றுள் 'கள்ளாமை'க்கு இவர் கொள்ளும் பொருள் காண்போம்:

''கள்ளாமை, அஃதாவது, பிறருடைமையா யிருப்ப தியாதொரு பொருளையும் அவரை வஞ் சித்துக் கொள்ளக் கருதாமை. கருதுதலும் செய்த லோடொத்தலின் 'கள்ளாமை' என்றார். இல்வாழ் வார்க்காயின், தமரொடு விளையாட்டு வகையால் அவரை வஞ்சித்துக் கோடற்கு இயைந்த பொருள் களை அங்ஙனம் கொள்ளினும் அமையும்; துறந்தார்க் காயின் அதனைக் கருதிய வழியும் பெரிய தோரிழுக்காமாதலின், இது துறவறமாயிற்று. புறத்துப்போகாது மடங்கி ஒரு தலைப்பட்டு உயிரையே நோக்கற்பாலதாய அவர் மனம், அஃ தொழிந்து புறத்தே போந்து, பஃறலைப் பட்டு உடம்பின் பொருட்டுப் பொருளை நோக்குதலே யன்றி, அதுதன்னையும் வஞ்சித்துக் கொள்ளக் கருது தல் அவர்க்குப் பெரியதோரிழுக்காதல் அறிக. இவ் வாறு வாய்மை முதற் கொல்லாமை யீறாய நான்கதி

1. திருக்குறள். கழகப் பதிப்பு, பக். 5

**காரத்திற்கும் ஒக்கும். பொருள்பற்றி நிகழும் குற்றத்தை விலக்குகின்றதாகலின், இது காமம் பற்றி நிகழ்வதாகிய கூடா ஒழுக்கத்தின் பின் வைக்கப் பட்டது.''[1]**

என்று ஒரு சொல்லுக்குப் பல துறையில் ஆய்ந்து பொருள் காண்கின்றார் பரிமேலழகர். இப்படியே பலப் பலவாக உரை நயத்தினையும், அமைப்பையும், பிறவற்றையும் கண்டுகொண்டே செல்லின் உரைநடையின் அடுத்த காலத்தை எட்டிக் காண்பதென்பதுகூட இயலாது. எனவே, இக்காலத்தில் வாழ்ந்த உரையாசிரியர்களது உரைத் திறனை இந்த அளவோடு நிறுத்தி, மேலே செல்லுதல் அமைவுடைத்தாகும் எனக் கருதுகின்றேன்.

தமிழர் பொற்காலமெனச் சிறந்த பிற்காலச் சோழர் காலத்தே இவ்வாறு பல்வேறு இடங்களில்—தமிழ் நாட்டுப் பல பகுதிகளில்—தோன்றி, பழம்பே ரிலக்கியங்களுக்கும் இலக்கணங்களுக்கும் தெளிவான விளக்கங்கள் தந்து தமிழை வளர்த்ததோடு, தமிழ் இலக்கியத்திலேயே தொல்காப்பியரால் சொல்லப்பட்டு இடையில் இல்லையாய் மறைந்த உரைநடை இலக்கியத்தினைப் போற்றிப் புரந்து நாட்டுக்கு அளித்த இந்த உரையாசிரியர்கள் இலரேல் தமிழ் இன்று இருக்கும் நல்ல நிலையில் இருந்திராது என்பதை வரலாற்றாளர் நன்கு அறிவர். தமிழ் உரை நடை இலக்கியமே இந்தப் பதினோராம் நூற்றாண்டிற்கும் பதினான்காம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்திலே தான் பல்வேறு வகையில் நன்கு வளர்ச்சியடைந்தது என்னலாம். இக்காலத்திலேயே, இவ்வுரை நடையை ஒட்டி வேறொரு வகையில் தமிழ் நாட்டில் வளர்ந்த உரை நடையை இனிக் காண்போம்.

1. திருக்குறள், கழகப் பதிப்பு, பக். 101

# VI

## கல்வெட்டுக்கள்

தமிழ் நாட்டில் மிகு பழங்காலந் தொட்டு வீரர் வழிபாடு வழக்கத்தில் இருந்து வந்ததை நன்கு அறிவோம். போர்க்களத்தே தம்மை மறந்து, தம் வாழ்வைத் தியாகம் செய்து, நாட்டுக்காக உயிர் விடும் நல்லவரைப் போற்றும் நாகரிகப் பண்பாட்டு வழக்கம் தமிழ் மக்களிடம் நெடுங் காலமாகவே பழக்கத்தில் இருந்து வந்ததைத் தமிழ் நாட்டு இலக்கியங்களும் அவற்றின் வழி எழுந்த வரலாறுகளும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. அவ் வீரர்களை மக்கள் எவ்வாறு வழி பட்டார்கள்? மறைந் தாரைப் போற்ற மக்கள் பல்வேறு வழிகளைக் கையாளு வதைக் காண்கின்றோம். நம் நாட்டில் வாழும் கிறித்த வர்கள், இறந்தவர்களைப் புதைத்து, அப்புதையிடத்தின் மேல் இறந்தாரைப் பற்றிய புகழுரைகளை எழுதிய கற்களை நிலைநாட்டி வழிபடுவதைக் காண்கிறோம். மற்றும் சமயத்துறையில் வல்லவரை அடக்கம் செய்து, 'சமாதி' கட்டி, அதன் மேல் கற்களில் அவர்தம் சிறப்புக்களைப் பொறித்து வைப்பதையும் காண்கின்றோம். இந்த நிலையில் பழங்காலத்தில், தொல்காப்பியர் காலத்துங்கூட வீரர்களைப் பரவிவந்துள்ள சிறப்பினைக் காண்கின்றோம்.

> 'ஆடவர்
> பீடும் பெயரும் எழுதி அதர்தொறும்
> பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்'[1]

என்றும்,

---

1. அகம். 7

**பீடும் பெயரும் எழுதி அதர்தொறும்**
**இனிநட் டனரே கல்லும்.'**

என்றும் வழங்கும் பழம் பாடல்களுடைய அடிகள் இவ்வாறு சிறந்த வீரர்தம் பெருமையையும் புகழையும் எழுதி, வழியிடைகளிலே கண்டார் உணர்ந்து போற்றும் வகையில் அமைத்து, அதற்குப் பீலியும் மாலையும் சூட்டி வழிபட்டார்கள் என்பதைக் காட்டுகின்றன. இவ்வாறு போர்க்களத்தில் புறங்கொடாது செயலாற்றிச் சிறந்த வீரரையன்றி அக்காலத்தில் நெல்லும் பூவும் இறைத்து வேறொரு தெய்வத்தையும் தமிழ் மக்கள் வணங்கவில்லை எனவும், அவர்தம் வீர வழிபாடு நாட்டில் எங்கும் காணும் நல்ல வழிபாடாய் இருந்ததெனவும் **மாங்குடி கிழார்** கூறுகின்றார்.

**ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி**
**ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்**
**கல்லே பரவி னல்லது**
**நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே.'[1]**

என்னும் அவர் அடிகள் இவ்வுண்மையைப் புலப்படுத்தும். எனவே, மிகு பழங்காலம் தொட்டுக் கருங்கல்லாகிய சிலையிலே புகழை நல்ல எழுத்துக்களால் பொறித்து நிலைநாட்டினமை புலனாகும். இந்தக் கல்லில் எழுத்து வடிக்கும் வழக்கம் பிற்காலத்தில் பல்கிப் பெருகியது. தமிழ் நாட்டிலே இடைக்காலத்தில் பலப்பல பெருங் கோயில்கள் எழலாயின. மலையே காண முடியாத தஞ்சை நாட்டிலே வானளாவிய கோபுரங்களையும் மதில்களையும் கொண்ட நூற்றுக் கணக்கான பெருங்கோயில்களை இடைக்காலத்தில் தமிழ் நாட்டைச் சிறக்க ஆண்ட சோழர்கள் நிறுவினார்கள். அவர்களுக்கு முன் வாழ்ந்த பல்லவர்கள்

---

1. புறம். 335

அத்துறையில் ஓரளவு கருத்திருத்தினார்கள். அவர்கள் குடைந்த குகைக் கோயில்களிலும் பிறவிடங்களிலும் கல்லில் எழுத்துக்களைச் செதுக்கி வைத்துள்ளார்கள். கல்லில் உருவங்களையும் சித்திரங்களையும் செதுக்கும் கலை நாட்டுக்கு மிகப் பழமையானதுதான் என்றாலும், எழுத்துக் களைப் பொறிக்கும் நிலை பல்லவர் காலத்திலே வளர்ந்து, பிற்காலச் சோழர் காலத்திலே சிறந்து, இற்றை வரையிலே ஓரளவு வாழ்கின்றது என்பதை வரலாற்றாளர் நன்கு அறிவர்.

உருவத்தைக் கல்லில் வடிப்பது கடினமே. ஆயினும், அதனினும் கடினம் எழுத்தைக் கல்லில் செதுக்குவது. தமிழ் எழுத்துக்களின் அமைப்பு நேர்க்கோடுகளால் ஆனதன்று; எத்தனையோ வளைவுகளை உடையது. அந்த வளைவு களையெல்லம் மிகச் சிறிய அளவிலேயே கருங்கல்லில் உளி யால் பொறிப்பதென்பது அவ்வளவு எளிதன்று. பொறிக்கும் போது புள்ளியோ, வளைவோ, காலோ நிலை கெடினும் பொருள் மாறுபாடு ஏற்படும். ஆயினும், தமிழ் நாட்டில் அந்தக் கலையைப் புலவர்கள் நன்கு வளர்த்தார்கள். அதனால் இடைக்காலத்தில் தமிழும் உரைநடையும் தழைத் தோங்கின என்னலாம்.

முதன் முதல் பொதுக் கல்வெட்டுக்களைத் தமிழில் வெட்டியவர் பல்லவர்களே. ஆயினும் அவர்கள் முதலில் தமிழில் கல்வெட்டுக்களை வெட்டவில்லை. அவர்கள் வழங்கிய பிராகிருதத்திலும், பின்பு வடமொழியிலும் வெட்டிக் கடைசியாகவே ஏழாம் நூற்றாண்டின் இடைக் காலத்திலேதான் அவர்கள் தமிழில் கல்வெட்டுக்களை வெட்டத் தொடங்கினார்கள். பின் வந்த தஞ்சைச் சோழர் களோ, அவ்வெட்டுக்களை மிகவும் விரிவுபடுத்தித் தமிழ் நாடெங்கணும் நிலை பெறச் செய்தார்கள். அக்கல்

வெட்டுக்கள் மூன்று கூறுபாடுகளைக் கொண்டவை. முதற் பகுதியில், அக்கல்வெட்டுத் தோன்றிய காலத்து அரசனைப் பற்றிப் பாராட்டப்பட்டிருக்கும். அப்பகுதி பிற்காலச் சோழர் ஆட்சியில் பெரும்பாலும் அகவற்பா அமைப்பி லேயே அமைந்தது. இரண்டாவது பகுதி, இன்னவர் இன்ன அறத்திற்காக நன்கொடை தந்தது என்ற சிறப்புக் குறிக்கப் பெற்றிக்கும். கடைசி பகுதியிலோ, அவ்வறத்தை என்றும் அழியாது பாதுகாக்க வேண்டிய அவசியம் பற்றியும், அவ்வாறு காவாவிடின் நேரும் இன்னல் பற்றியும் குறித்தி ருக்கும். பின்னவை இரண்டும், உரை நடைகளாகவே பெரும்பாலும் அமைந்திருக்கும். இந்தப் பெருங் கல் வெட்டுக்களே இடைக்காலத் தமிழ் நாட்டு வரலாற்றை உலகுக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றன என்பர் ஆராய்ச்சியாளர்.

இவ்வாறு முதலில் அரசர் பெருமையைக் கூற வருகின்ற பகுதியை இலக்கண நூலோர் **'மெய்க்கீர்த்தி'** என்பர். அரசன் புகழ் மெய்ப்புகழாகப் போற்றப்படு கின்றமையின், அது மெய்க்கீர்த்தியாயிற்றுப் போலும்! முதற்பகுதியில் அவ்வவ்வரசர்கள் செய்கின்ற போர்களையும், வெற்றிகளையும், வேறு சிறப்புச் செய்திகளையும் காணலாம். அது பற்றி நாம் இங்கு ஆராய வேண்டா. அது வரலாற்றுக்குத் தேவையானது. மேலும், அது அகவற்பா வகையில் அமைவது. பின்வரும் உரை நடைப் பகுதிகளே ஈண்டு நாம் நோக்கத்தக்கவை. இப்பகுதிகளிற் சிலவற்றை நாம் காணின், அக்கால உரை நடையை ஒருவாறு உணர்ந்த வராவோம்.

இக்கல்வெட்டுக்க ளெல்லாம் உரை நடையாலானவை தாம். என்றாலும், எழுத்துக்களைப் பொறிக்கும் போது எத்தனைத் தொல்லைகள் உண்டாகின்றன! அவ்வாறு பொறிக்கும் போது சில பெயர்களும், சொற்றொடர்களும்,

அவற்றின் பொருள்களும் மாறுபட்டு நிற்கின்றன. அவற்றின் மாறுபாட்டையெல்லாம் நோக்கின், சிலவிடங்களில் இதுவும் தமிழ் மொழிதானா என்ற ஐயங்கூடச் சில சமயங்களில் உண்டாகி விடும். இக்கல்வெட்டுக்களைப் படி எடுத்து, ஒழுங்குபடுத்தி, எழுத்துக்களைக் கோவைப்படுத்தி மற்றவர்களுக்கு விளங்க வைப்பதில் உள்ள தொல்லையை அத்துறையில் பணியாற்றும் வல்லவர்களே உணர்வார்கள். சொற்கள் பிழைபடப் படியெடுக்கப் பெறின் உண்டாகும் பொருட்கேட்டையும், அதனால் விளையும் மாற்றங்களையும் கல்வெட்டுக்களை ஆராய்பவர் உணர்வர். அவை பற்றியெல்லாம் சென்னை அரசாங்கக் கோயில் சாசனங்களை வெளியிட்டு முன்னுரை எழுதிய **திரு. தி. நா. சுப்பிரமணியம்** அவர்கள் நன்கு எடுத்துக் காட்டுகிறார்கள். 'எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்; பாடினவன் பாட்டைக் கெடுத்தான்,' என்ற ஒரு முதுமொழி நாட்டில் உண்டு. அது போன்றே படி எடுப்பவர் சற்று வேறுபடினும், அதைப் படிப்பவர் மாறுபடினும் எல்லாம் கெடுதலாகவே முடியும். திரு. சுப்பிரமணியம் அவர்கள் காட்டும் இரண்டொரு மேற்கோள்களைக் காண்போம்:

"அவைகளை ஊன்றிக் கவனித்தால், ஒரு விஷயம் தெளிவாக விளங்கும். அவற்றைப் படித்துப் பிரதி செய்தவர்கள் சாசனங்களிலே பயின்று வந்த எழுத்துக்களையும் வாசகப் போக்கையும் நன்றாக அறிந்து, சரியாகவே படித்திருக்கிறார்கள்; ஆனால், பிரதி செய்யும்போது மட்டும் அப்படியே எழுத்துக்கு எழுத்துச் சரியாகப் பிரதி செய்யவில்லை; தாங்கள் எழுதுகின்ற விதம் கொச்சையாகப் பல பிழைகளுடன் பிரதி செய்திருக்கிறார்கள். உதாரணமாக **'நான்'**, **'நடக்க'** என்பன போன்றவற்றை **'ஞன்'** **'ஞல்'** **'ணடக்க'** என்றெல்லாம் பிரதி செய்திருக்கிறார்கள்.

'**போதாதென்று**' என இருப்பதைப் '**பொருதென்று**' என எழுதியிருக்கிறுர்கள்."

"சாசனங்களைக் கல்லிலே வெட்டியவர்களும் இத்தகைய பிழைகளைச் செய்திருக்கிறுர்கள். அவற்ருேடு இவைகளும் சேர்ந்து கொண்டன. ஒவ்வொரு தடவையும் பிரதி செய்யும் போது இத்தகைய பிழைகள் கூடிக் கொண்டே போய்க் கடைசியில் சாசனப் போக்கே உருத் தெரியாமல் மாறி விடுகிறது.

"சேந்த மங்கலத்திலே **காடவராயன்** எடுப்பித்த கோயில் 'வாணிலை கண்ட வீர ஈச்வரம்' எனப் பெயர் பெற்றது. அந்தப் பெயரைப் பிரதி செய்தவர்கள் 'வானில் கண்ட வீர ஈச்வரம்' என்று எழுதக் கடைசியிலே அது, 'வா நீலகண்ட வீரேச்வரம்' என மாறி விட்டது. அதே மாதிரி சாசனங் களிலே அதிகமாகப் பயிலப்பட்டு வரும் சொல்லான '**பள்ளித் தாமம்**' என்பது '**பள்ளித் தர்மம்**', '**பள்ளித் தற்மம்**', '**பள்ளித் தறுமம்**' என்பன போலப் பற்பல விதமாக எழுதப் பட்டிருப்பதைக் காணலாம்.

"இக்குறை காணப்படுவது தமிழ்ப் பகுதியிலே தான்; சாசனங்களின் நடு நடுவே சிறந்த எழுத்துக்களில் உள்ள சமஸ்கிருதப் பகுதியைப் பிழை இல்லாமல் கிரந்த எழுத்துக் களில் பிரதி செய்திருப்பதைக் காணலாம். ஆனுல், சில இடங்களில் அந்தப் பகுதியும் தமிழ் எழுத்தில் எழுதப் பெற்றிருக்கின்றது. அப்போது தமிழ்ப் பகுதியில் குறிப் பிட்ட பிழைகள் அங்கும் புகுந்து விட்டன," என்கிருர்.[1]

இவ்வாறு சாசனப் பகுதியில் உள்ள தமிழ்ப் பகுதி களின் நிலைமாற்றத்தையும் தடுமாற்றத்தையும் காணுங்

1. தென்னந்தியக் கோயில் சாசனங்கள், பாகம். I, பக். XXI (முன்னுரை)

கால், அவர்கள் இச்சாசனங்களை வெளிக் கொண்டுவர எவ்வளவு பாடுபட்டிருக்கவேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இத்தனை பாடுகளும் பட்டும் சாசனங்களாகிய கல்வெட்டுக்கள் தமிழில் வெளிவரவில்லையானல், இடைக்காலத் தமிழ் நாட்டைப்பற்றி ஒன்றும் அறிந்து கொள்ளவே வழி இராதன்றோ!

இனி, இச்சாசனங்களை இவ்வாறு உலகறியச் செய்தவர் யாவர்? தமிழரா? தமிழ் நாட்டு மன்னரா? தமிழ் நாட்டு மக்களா? இந்தியரா? இல்லை, என்றே, யார் யாரோ, எங்கெங்கோ, மூலை முடுக்குகளிலெல்லாம் வெட்டி வைத்த இக் கல்வெட்டுக்களைப் பாரறியச் செய்த பெருமை ஆங்கிலேயருக்கே உரியது. ஆங்கிலேயர் ஆளும் காலத்தில் நாட்டுக்கலை வளர்வதற்குச் சில நன்மைகளும் செய்திருக்கின்றனர். அவற்றுள் ஒன்று இக் கல்வெட்டு ஆராய்ச்சி. ஆயினும், தோன்றிய நாளிலிருந்து இன்று வரை இக் கல்வெட்டுக்களை அழியாமல் காத்து வைத்தவர்கள் மக்களே யாவார்கள். இன்று பழம்பெருங் கோயில்களைப் புதுப்பிக்க வருகின்றவர்கள், கல்வெட்டுக்கள் தாங்கிய பல மதிற்சுவர்களை இடித்துத் தரை மட்டமாக்கி, தங்கள் கருத்துப்படி புதுப்புதுச் சுவர்களைக் கட்டலாம். ஆயினும், கடந்த சில ஆண்டுகளாக, இக் கல்வெட்டின் அருமை அறிந்தபின் யாரும் அவ்வளவு எளிமையில் எக்கோயிலையும் இடிக்க முடியாது. 'பழம் பொருள் பாதுகாப்புப் பகுதி' (Archaeological Dept.) அவற்றைப் பாதுகாத்துப் போற்றிப் புரக்கின்றது.

பண்டைக் காலத்திலும் பிற்காலத்திலும் தமிழ் மன்னரும் இவ்வகையில் இக்கல்வெட்டுக்களைக் காப்பாற்றியே வந்தனர். பண்டைக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட கோயில் மேற்பார்வையாளர்கள் இக்கல்வெட்டுக்களுக்கு எண்ணெய் பூசியும், வேறு பழுது நேராமல் பாதுகாத்தும்

வந்தார்களாம். சிதையும் நிலையில் உள்ள சில கல்வெட்டு களைச் செப்புத் தகடுகளில் படி எடுத்து வைத்தார்களாம். பழுதுற்ற கோயில்களைப் புதுப்பிக்கத் தொடங்குமுன் அவற்றிலுள்ள கல்வெட்டுக்களை ஓலைகளில் எழுதி வைத்துப் பின் பணி முடித்ததும் அப்படியே செதுக்கி வைப்பார்களாம். இவற்றைச் சில சாசனங்களே நமக்குக் காட்டுகின்றன. திருக்காலிவல்லக் கோயிற் சாசனம், "ஸ்வஸ்தி ஸ்ரீ, திருமண்டபமிழிச்சி யெடுப்பதற்கு முன்புள்ள சிலாலேகைப்படி" என்றே தொடங்குகிறது. அப்படியே திருவல்லக் கோயிலின் வானவன் மாதேவி யார் சாசனம் ஒன்றும் 'ஸ்ரீவிமானம் இழித்துவதற்கு முன்புள்ள சிலாலேகைப்படி' எனத் தொடங்குகிறது. எனவே, படி எடுத்து மறுபடியும் பொறிக்கும் வழக்கம் நாட்டில் பழங்காலந்தொட்டு இருந்து வந்தது என்பதை அறியலாம்.

இவ்வாறு பாதுகாக்கப்பட்ட கல்வெட்டுக்களை வெளிக் கொணர்ந்து காட்டியவர் ஆங்கிலேயர் என்றோம். அவரைப் பற்றித் தென்னிந்தியக் கோவிற் சாசன முன் னுரை நன்கு விளக்குகிறது. ஸ்காத்துலாந்து தேசத்து **லூலி** என்னும் தீவில் கி. பி. 1753 ல் பிறந்து, 1782 ல் இந்தியாவிற்குப் பொறியாளராக (Engineer) வந்த அறிஞர் **லெப்டினன்ட் கர்னல் காலின் மக்கென்சி** என்பவரே அவ்வறிஞராவார். அவர் வாழ்வின் பெரும்பாகம் தென் னாட்டிலேதான் கழிந்தது. சென்னை 'சர்வேயர் ஜெனரல்' பதவி வகித்த அவர், குமரி முதல் கிருஷ்ணைவரையில் பலமுறை செல்லவேண்டியவரானார். அக்காலத்திலே தான் அவர் தேடித்தேடி சாசனங்களைப் பிரதி செய்து தம் பணியையும் குறைவின்றி நடத்தி வந்தார். இந்தப் பிரதி வேலை முதலியவற்றிற்குச் சம்பளத்தில் உடன் உதவிக்காகத் தனியாக வேறு சிலரையும் நியமித்திருந்

தார். 1818 ல் அவர் 'இந்திய சர்வேயர் ஜெனர'லாக உயர்வு பெற்றுக் கல்கத்தாவிற்குச் சென்றகாலை அனைத்தையும் கொண்டு சென்றார். அங்கு அவர் அவற்றைத் தொகுத்து வெளியிட நினைத்தார். அங்குச் சென்ற மூன்றாம் வருடம் (1821) அவர் மறைந்தார்.

பின்பு அவருடைய கையெழுத்துப் பிரதிகளை அவர்தம் மனைவியாரிடமிருந்து அக்காலத்தில் கவர்னர் ஜெனரலாய் இருந்த **ஹேஸ்டிங்ஸ் பிரபு**, கம்பெனி உத்தரவு பெற்று, 10,000 பவுன் விலை கொடுத்து வாங்கினார். பிறகு **எச். எச். வில்சன்** என்பார், அவற்றின் பட்டியல் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பிறகு, தென்னிந்திய மொழிச் சாசனங்கள் சென்னைக்கு 1828 ல், அனுப்பப்பட்டன. நெடுநாள் கழிந்து, கி. பி. 1858 ல், இன்றைக்குச் சரியாக ஒரு நூற்றாண்டுக்கு முன்னே, * **ரெவரெண்டு வில்லியம் டெய்லர்** என்பவர் அவற்றுக்கு ஒரு பட்டியல் தயாரித்தார். இவ்வாறு மக்கென்சி திரட்டிய கல்வெட்டுக்களில் தமிழ் எழுத்துக்களில் உள்ளவை ஏறக்குறைய ஆயிரம் இருக்குமாம். இந்தச் சாசனங்களின் தொகுதியைத்தான் இந்தக் 'கோயிற்சாசனம்' என்ற தொகுப்புக்கள் இரண்டும் கொண்டுள்ளன என அறிகிறோம்.[1] இந்த மேலை நாட்டவரைத் தவிர்த்து ஜெர்மன் நாட்டவரான **டாக்டர் உல்சு** போன்றாரும் இங்கு வந்து **ரிப்பன் பிரபுவின்** இசைவு பெற்றுப் பல வகையில் இத் தென்னிந்தியக் கல்வெட்டுக்களை வெளியிட்டு, பல குறிப்புரை எழுதினார்கள் எனவும் அறிகிறோம்.[2]

இவ்வாறு மேலை நாட்டினர் பலரால் ஆய்ந்தெடுக்கப்பட்ட சாசனங்கள் இன்று நம் நாட்டில் நின்று நிலவிப்

* இந்த நூலின் முதல் பதிப்பு 1958ல் வெளிவந்தது.

1. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், முன்னுரை பக். xix

2. தமிழ்ச் சாசனங்கள்—வ. தங்கைய நாடார், பக். 5

பல உண்மைகளை உலகுக்கு உணர்த்தி, தமிழ் நாட்டு வரலாற்றைத் தொடர்பு கெடாமல் வாழ வைக்கின்றன. நாம் அவை எவ்வாறு வரலாற்றுக்கு வழி காட்டியாக அமைகின்றன என்பதை இங்குக் காண வேண்டா; அவற்றின் உரைநடைப் போக்கு அமைந்த வகையையும் நிலையையுமே காணல் வேண்டும். கல்வெட்டுக்களின் முதற்பகுதிகள் மெய்க்கீர்த்திகளாய், அரசர்தம் புகழ் பரப்பும் அகவற் பாக்களில் அமைந்தன எனக் கண்டோம். அப்பகுதி நமக்குத் தேவை இன்றேனும், தொடர்ந்து வரும் நிலைகாண ஒன்றைக் காட்டிப் பின் தொடரும் உரைநடையை நோக்குவோம். இராஜேந்திரன், குலோத்துங்கன் போன்றார் மெய்க்கீர்த்திகள் மிக நீண்டு நிற்கின்றன. இராசராசன் மெய்க்கீர்த்திகளிலும் சில அத்தகையன. எனினும், நாம் இங்கு மிகச் சிறியதான இராசராசன் மெய்க்கீர்த்தி ஒன்றைக் காணலாம்:

'ஸ்வஸ்தி ஸ்ரீ
திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்கை பாடியும்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமும் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்களர் ஈழ மண் டலமும்
இரட்ட பாடி ஏழரை இலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீரா யிரமுந்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
எழில்வள ரூழியு ளெல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீ ராசராச தேவர்க்கு யாண்டு

என்று இந்த அளவில் மெய்க்கீர்த்தி அமைகின்றது. இது பேரரசன் இராசராசசோழன் காலத்தில் வடவார்க்காட்டு மாவட்டத்தில் உள்ள உக்கல் என்னும் ஊரில் **கண்ணன் ஆரூரன்** என்பான் செய்த அறத்தைக் குறிப்பது. முதற்பகுதி இவ்வாறு அகவற்பாவென்னுமாறு அமைய, அடுத்துவரும் செய்திகளெல்லாம் பின்வருமாறு உரை நடையாகவே வருகின்றன:

> ‘உயகூ-ஆவது, ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக் காளியூர்க் கோட்டத்துத் தனியூர் ஊசலாகிய ஸ்ரீ விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலத்தின் மேலைப் பெருவழியில் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருநாமத்தால் கிணறுந் தொட்டியும் சமைப்பித்தான் உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் பணிமகன் சோழ மண்டலத்துத் தென்கரை நாட்டு நிந்தாவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆவூருடையான் கண்ணனாரூரன். இவனே ஸ்ரீ ராஜராஜ கிணற்றில் தொட்டிக்கு நீர் இறைப்பார்க்கு அருண்மொழித்தேவன் மரக்காலால் நிசதம் நெல் ஐ உங ஆக, திங்கள் கூ (6)க்குஙயகூம், ஸ்ரீ ராஜராஜன் தண்ணீர் அட்டுவார்க்கு நிசதம் நெல் ஐ உங ஆக, திங்கள் கூ (6)க்கு ஙயகூம், இப்பந்தலுக்குக் குசக்கலம் இடுவார்க்குத் திங்கள் ‘க’ (1)க்கு நெல் கூ (6) ஆக, திங்கள் கூ (6)க்கு நெல் ஙகூ (36)ம், ராஜராஜன் கிணற்றுக்கும் தொட்டிக்கும் சேதத்துக்கும் ஆண்டாண்டு தோறும் புதுக்குப் புறமாக வைச்ச நெல் உசயஉஐ ஆக கூயகூ கூஉ? இந்நெல்லுக்கு இவன் பக்கல் இவ்வூர் ஸபையோம் இறை திரவியமும் கிரய திரவியமும் கொண்டு இறை இழிச்சி’

என்று எழுதப் பெற்றுள்ளது. இதன் தொடர்ச்சியைக் கல்வெட்டில் படி எடுக்க முடியவில்லை போலும்! இந்தக் கல்வெட்டினால் அக்காலத்தில் வாழ்ந்த உரைநடை நிலையும்,

மக்கள் பழக்க வழக்கங்களும், அரச ஆட்சி அமைப்பும், பிறவும் நன்கு விளங்குகின்றன. உரைநடை முன் கண்ட உரையாசிரியர்கள் உரை நடைக்குப் பெரிதும் மாறுபட்டிருப்பதைக் காண்கின்றோம், பல வடமொழிச் சொற்களை இங்குப் பெய்து எழுதியிருக்கிறார்கள். எண்களை எழுதும் பழந்தமிழ் முறையும் அளவினைக் குறிக்கும் பல முறைகளும் நன்கு தெரிகின்றன. இந்தக் கல்வெட்டின் காலம் இராச ராசன் காலமாகும். இது கி. பி. 1014ல் பொறிக்கப்பெற்ற தென்பர். அந்த நூற்றாண்டு தொடங்கித்தான் மேலே கண்ட உரையாசிரியர் பலரும் தோன்றி இலக்கிய இலக்கணங்களுக்கு நல்ல உரைகளைக் கண்டுள்ளார்கள். எனினும், அந்த உரை நடைக்கும் இக் கல்வெட்டு உரை நடைக்கும் வேறுபாடு தெரிகின்றது. இவையெல்லாம் அரசர் இசைவு பெற்று வெட்டப்பட்டவை. எனவே, அவர்கள் இசைவில் வடமொழி மொழிக்கு அதிக ஆதிக்கம் இருந்து என அறிய வேண்டியுள்ளது. புலவர்கள் - மன்னவருக்குத் தலை வணங்காத அறிவறிந்த புலவர்கள் - கால வெள்ளத்தாலும், அவ்வக்கால மொழி அமைப்பாலும் ஓரளவு பற்றப்பட்டவர்களே என்றாலும், அவர்களெல்லாரும் தம் கருத்துப்படி வடமொழி அதிகம் கலவாத வகையிலேயே நல்ல தமிழில் உரையெழுதிச் சென்றார்கள். இவ்வாறு ஒரே காலத்தில் இருவகை உரை நடைகளை நாம் காண முடிகின்றது. இதன் காரணத்தை அடுத்து வரும் அதிகாரங்களிற் காணலாம். இங்கு இன்னும் இரண்டொரு கல் வெட்டுக்களைக் கண்டு மேலே செல்லலாம்:

> **''ஸ்ரீ திருபுவநச் சக்கிரவிற்த்திகள் ஸ்ரீ ராச ராசதேவருக்கு யாண்டு 'பதினாருவதற்கெதிராம் ஆண்டு நாள் இருநூற்றெழுபத்திரண்டு' காங்கய ராயனும் திருமஞ்சனம் அழகியானும் தென்னவன்**

பிரமராயனும் ஆளுடையனுயனுய ஞயநாற் கோவிலுக்கு ஸ்ரீ காரியம் செய்வார்களும் சமுதாயம் செய்வாற்களும் கோவில் நாயகம் செய்வாற்களும் சாமுதாயம் செய்வாற்களும் செய்யத் திருவாய் மொழிந்தருளினபடி; உய்யக் கொண்டார் வள நாட்டு அம்பர் நாட்டு அம்பரருவந்தை அரயன் சிவேதவன பெருமானுன தொண்டமான் பெரும் பெற்றப் புலியூற் முடித்தலைக் கொண்ட பெருமாள் திருவீதி மேலைத் திருவீதி கீழைச் சிரகில் யெடுப் பித்த அறப்பெருஞ்செல்வி சாலையில் உண்ணும் ஆது லற்கு அரிசியும் கறி விறகு உள்ளிட்ட விஞ்சனத் துக்கும் அடுவார்த் தண்ணீர் வார்பாறக்குஞ் சாலை அழிவு கொரவும் உன்னிட்டு வேண்டுவன வையாத் துக்கு இரைமிகுதி கொண்டு செய்ய இவன் காணி யான நிலத்துத் தந்த ராசாதிராச வளநாட்டு பாண்டூரான குலோத்துங்கச் சோழன் வல்லத்து நிலமாய் ராசராசன் அம்பர் யென்னும் பெறவேணு மிடுக்கச் சொன்ன நிலம் நாற்பத்தி நாலேகாலும் பதினுராவதி னெதிருமாண்டு பிசானமுதல் யிச்சாலைக்கிக் காணிக்கைக் கொள்ளவும். இந்த நிலத்துக்கு இவன் தந்த சாதனம் திருக்கை ஒட்டி யிலே ஒடிக்கி வைத்துக்கொண்டு இப்படிக் குலோத்துங்கச் சோழன் திருமாளிகையிலே கல் வெட்டவும் கடவதாகப் பெறவேணும் யென்று இவன் நமக்கு சொன்னமையில் யிப்படி செய்யக் கடவதாகச் சொன்னேம். இப்படி செய்யப் பண்ணு வது, யெழுதிநான் திருமந்திர ஓலை நெரியுடைய சோழ மூவெந்த வெளாயென்றும் திருவாய் மொழிந்தருளி நார் இவை செதிராயன் எழுத்தென்றும் இவை காலிங்கராயன் யெழுத்தென்றும் இவை விழுப்பாதி ராயன் யெழுத்தென்றும் இவை செதிகுலராயன் யெழுத்தென்றும் இவை காங்கெயராயன் யெழுத்

தென்றும் பிரசாதம் செயிதருளிவந்த செய்யும்படி கல் வெட்டியது''.[1]

''திறபுவனச் செக்கிறவற்தி கொனேறி மயிக்-கொண்டான் பட்டாலியில் ஆளுடையாற் பால்வெண்ணிசுவற முடையானுக்கு அமுதுபடிக்கி நாள் ஒன்றுக்கு வீரராஜெந்திரன் சந்தி ஒண்ணுக்கு அரிசி நாநாளிக்கி வெஞ்சனம் உட்ப்பட நெதம் மூணு படி நெற்க் குறுணி நாநாளியாக ஆண்டு ஒன்றுக்கு நெல் நாற்பத்தி யங்கலத்துக்கு விட்ட பொன் குறுப்பநாட்டு விசயமங்கலத்துக்கு வட்டவூறில் மயிற்காணத்தாரது வீர களஞ்சும் தட்டார் பொன் களஞ்சும் கொல்லன் பொன் துலேக்களஞ்சும் தச்சன் பொன் துலேக்காலே மஞ்சாடியும் ஆக பொன் துலே முககலேஞ்செமுக்காலே மஞ்சாடியும் ஆண்டு அதிராட்டி கொண்டு இவ்வமுதுபடி சந்திராத்த வரை செல்வதாக செம்பிலும் சிலேயுலெயும் கொள்வார்களாக நம்மொலே குடுத்தொம். இத்தன்மம் நந்தம ரெற்பொய்ற் பட்டாரும் பாற்படுத்திக் குடுக்க. இவை குலதீபமுவெந்த வெளா நெழுத்து நாலாவது நெதரி-4வதுள். இவை வணரய தெவ நெழுத்து. இவை செதிஞலிதெவன் நெளுத்து.''[2]

இவை போன்ற ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்களேப் படியெடுத்திருக்கிமுர்கள். இவற்றைப் படிப்பது கூடக் கடினமாய் இருக்கின்றது. இவற்றில் உரை நடை நன்கு காணப்படுகிறது. என்ருலும், எழுதும் வகையில் பற்பல எழுத்துக்கள் நிலேகெட்டுப் பொருள் அறிந்து கொள்ள இயலா வகையில் அமைவதைப் பார்க்கிறேம். தெ, தொ

1. தென்னிந்திய கோயிற் சாசனங்கள், Vol I, பக். 32, 33. சிதம்பரம் கோயில் கல்வெட்டு No. 266 of 1913.

2. ஷை Vol. I, பக். 288. கோவை. தாராபுரம் தாலுக்கா, பட்டாலி உயில், No. 260 of 1920.

போன்ற குற்றெழுத்துக்கள் **தே, தோ** போன்ற நெட்டெழுத்துக்களுக்குப் பதிலாக எல்லாவிடங்களிலும் உபயோகப்பட்டு வந்துள்ளதைக் காண்கிறோம். இதைத் தவறு எனக் கொள்ளலாம் என்றாலும், 'ஆண்டு எய்தும் எகரம் ஒகரம் மெய்ப்புள்ளி' என்ற நன்னூல் சூத்திரப்படி குறிலுக்கு எகர ஒகர உயிர் எழுத்தின்மேல் புள்ளி இட்டும் நெடிலை அவ்வாறு புள்ளியிடாது எழுதியும் இரண்டுக்கும் ஒரே கொம்பை (ெ) உபயோகித்தும் வந்தார்கள் என்பது தெரிகின்றபடியால், அதன்படி இது தவறு அன்று என்றும் சொல்லலாம். ஒரு நூற்றாண்டுக்கு முன் வந்த அச்சு நூல் நூல்களிலுங்கூட இந்த வேறுபாடு இருக்கக் காண்கிறோம். என்றாலும், பிற தவறுகளைக் காணும்போது 'எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்' என்ற பழமொழி எவ்வளவு மெய்யாய் இருக்கிறது என நினைக்கத் தோன்றுகிறது. 'ற்க் போன்ற தவறுகளும் 'யெழுதி' எனச் சொல் தொடங்கும் தவறுகளும், 'செயிதருளி' என்பன போன்ற பிழைகளும், 'சிலையுலெயும்' போன்ற தவறுகளும் 'நெளுத்து' போன்ற தவறுகளும் இன்னும் பலவும் காண்கின்றன. சிறந்த தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்த பிற்காலப் பெருஞ்சோழர் ஆட்சியில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்களில் இத்தகைய தவறுகள் காண்பது பொறுக்கமுடியாத ஒன்றன்றோ! 'பரிமேலழகரும், சேனாவரையரும், இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் நல்ல தமிழில் ஒருபுறம் செம்மைத் தமிழ் நலம் ஓம்பிய காலத்திலேயா இத்தகைய தவறுபட்ட உரை நடை தோன்றிற்று!' என எண்ணத் தோன்றுகிறது. ஆனால், இவற்றை வெளியிட்ட திரு. சுப்பிரமணியம் அவர்கள் கூறியவாறு, இத்தவறுகளெல்லாம் இவற்றைச் செதுக்கிய கல்வியறிவில்லாத கல்லுளித் தொழிலாளியாலும், படியெடுத்தவர்களாலும், காலப் போக்கில் சில சில எழுத்

துக்கள் கெட்டமையாலும் நேர்ந்த பிழைகள் என்பதை ஆய்பவர் நன்கு உணர்வார் அல்லரோ? நாட்டில் எத்தனையோ வாணிப நிலையங்களில் அறியா மக்கள் தவறுதலாகப் பல சொற்களைப் பயன்படுத்துவதைக் காண்கிறோமே! 'கதவைத் திரக்க' என்றும், 'வரக் கோறுகிறோம்' என்றும் பலப்பல விதமாகத் தமிழ்க் கொலை செய்யும் நாள் நம் நாள் அல்லவா? வெறும்பலகைகளிலும் பத்திரிகைகளிலும் எழுதும் விளம்பரங்களே இவ்வாறாயின், கற்சுவர்களில், கல்வியே அறியாத—சில வேளைகளில் தமிழே தாய் மொழியல்லாத—கல் தச்சர்களைக் கொண்டு பொறிக்கப்பெறும் உரை நடை எப்படி அமையும்? ஒரு முறை கல்லில் செதுக்கிவிட்டவற்றைப் பின்னர் அழித்து வேறு எழுதவும் இயலாது என்பதறிவோம். எனவே, அறிஞர்கள், எழுதிய பின் இத்தகைய பிழைகளைக் கண்ட போதும், செய்வதறியாது சிந்தை தடுமாறியிருப்பார்கள். அதற்காக அழகிய கோயில்களையே இடித்துத் தள்ள முடியுமா? இப்படியே படி எடுப்பவர்கள்—படி எடுப்பது எப்படி என்பதே தெரியாத அந்தப் பழங்காலத்தில் படி எடுப்பவர்கள்—எப்படியாவது எடுத்தால் போதும் என்று எடுத்து வைத்துவிட்டிருப்பார்கள். எனவே, இவ்வாறு பல வகையில் பிழைகள் நேர்ந்துவிட்டன. எனினும் அப்பிழைகளையெல்லாம் நீக்கி, செப்பம் செய்து, நல்ல தமிழில் எழுதுவோமானால், இக்கல்வெட்டு உரை நடை சிறந்த உரை நடையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனினும், இவ்வுரை நடையில் வடமொழிச் சொற்கள் அதிகம் கலந்திருக்கக் காண்கிறோம். அவ்வடமொழிச் சேர்க்கையும் முன் உள்ள மெய்க்கீர்த்திகளைக் காட்டிலும் பின்னுள்ள உரை நடையிலேயே அதிகம் பரவியுள்ளன: அக்காலம், வடசொற்களை அதிகமாகக் கலந்து பேசினும் எழுதினும் பெருமதிப்பு இருந்த காலம் போலும்!

ஒரு கல்வெட்டைப் பிழையற நல்ல முறையில் எழுதினால் எப்படி அமையும் என்பதைக் காட்டி இப்பகுதியை முடிப்போம்:

> "ஆண்டு 19 வது நாள் இருநூற்று நாற்பத் திரண்டினில் உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர் கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலி னுள்ளால் முடிக்கொண்ட சோழன் திருமாளிகை யில் வடபக்கத்துத் தேவராத்துச் சுற்றுக் கல்லூரி யில் தானஞ் செய்தருளாவிருந்து உடையார் ஸ்ரீ இராசராசேசுவர முடையார் கோயிலில் ஆசாரிய போகம் நம் உடையார் சர்வ சிவ பண்டித சைவாசார்யருக்கும், இவ்வுடையார் சிஷ்யரும் பிற சிஷ்யருமாய் ஆர்யதேசத்தும் மத்திய தேசத்தும் கௌட தேசத்தும் தாம் உள்ளாராய், யோக்கியராய் இருப்பார்க்கே ஆண்டுதோறும் இத்தேவர் கோவிலில் ஆடவல்லான் என்னும் மரக்காலால் உள்ளூர்ப் பண்டாரத்தே நிறைச் சளவாக இரண்டாயிரக் கல நெல் ஆண்டாண்டு தோறும் சந்திராதித்தவரை பெறத் திருவாய் மொழிந்தருளத் திருமந்திர ஓலை செம்பியன் விழுப்பரையன் எழுத்தினால்—திருவாய்க் கேள் விப்படி கல்லில் வெட்டுவித்தது. இது".[1]

என்று நல்ல தமிழிலே இக்கல்வெட்டின் உரை நடை அமைகின்றது. இவ்வாறே கல்வெட்டு உரை நடை வட மொழிச் சொற்களைச் சற்று அதிகமாகக் கொண்டு அக் காலத்தில் எழுதப்பெற்று அமைந்து சிறந்தது என்க.

1. தென்னிந்திய சாசனம், Vol. II. Part, I, கி.பி. 1030. தஞ்சைப் பெரிய கோயில் நடுவிடத்து மூலத்தானத்தெற்குச் சுவர்.

# VII

## தமிழும் வடமொழியும்

தமிழ் மொழி தொன்மை வாய்ந்தது என்பது அனைவரும் அறிந்ததே. தொல்காப்பியர் காலத்தை இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னது என்று அறுதியிடுகின்றமையின், அதற்கு முன்பே நல்ல இலக்கியங்கள் தமிழில் இருந்திருக்க வேண்டும். அதற்கு முன்னர் இந்தியா முழுவதும் இத்தமிழ் மொழி பரவியிருந்தது எனக் கொண்டாலும், தொல்காப்பியர் காலத்தில் வடநாட்டிலே தமிழ் மொழி வழக்கிழந்து, ஆரியமொழி கால் கொண்டதென்பதை வரலாற்றுளர் நன்கு அறிவர். ஆகவே, இன்றுள்ள நாட்டு மொழிகளுள் தமிழ அல்லாத பிற மொழிகளுள்—சிறப்பாக வடநாட்டு மொழிகளுள் — ஆரிய மொழி தொன்மை வாய்ந்ததாகும். அதாவது தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே அது வடநாட்டில் சிறக்க நிலை பெற்றதோடு தென்மொழியாகிய தமிழிலும் கலக்கும் வாய்ப்பினைப் பெற்றுவிட்டது. தொல்காப்பியத்திலேயே அந்த ஆரிய மொழி வடமொழியாய் நின்று எவ்வாறு இலக்கண எல்லைக்குட்பட்டுத் தமிழொடு கலந்தது என்பதைக் காண இயல்கிறது. அந்நாள் தொட்டு இந்நாள் வரை அவ்வடமொழி கலப்பு நீங்காமல் இருக்கின்றது. கால வேறுபாட்டு எல்லைக்கு உட்பட்டு அதன் கலப்பு மிகுந்தும் குறைந்தும் இன்றளவும் வாழ்கின்றது. எனவே, தொல்காப்பியர் காலந்தொட்டு வரும் தமிழ் உரை நடை வளத்தைக் காணும் நமக்கு அதன் கலப்பைப் பற்றியும், அதனால் உண்டான நலக்கேடுகளைப் பற்றியும் அறிய வேண்டிய தேவை உண்டாயிற்று. கடந்த மூவாயிர

பிரமாண்டுகளாகப் பாட்டிலும் உரை நடையிலும் அவ் வடமொழிக் கலப்புச் செய்த மாற்றத்தையும் பிறவற்றை யும் காணலாம்.

தமிழில் வழங்கும் சொற்களைப் பிரிக்கும் காலத்தில் **இயற்சொல், திரிசொல், திசைசொல், வடசொல்** என நான்கு வகையாகப் பிரித்தனர். அவற்றுள் வடசொல் என்பது ஆரியமொழியிலிருந்து தமிழில் வந்து வழங்கிய சொல்லாகும். ஆரியத்தை வடமொழி என்று கூறுவது மரபு; அது வடக்கிருந்து வந்ததாகலானும், தமிழில் பிற மொழி களைக் காட்டிலும் அது காலத்தாலும் அளவாலும் பெரிதும் பயின்றுவந்த காரணத்தாலும், அதைத் தனியாகப் பிரித்தார் கள் எனக் கொள்ளலாம். அவ்வாறு வழங்கும் ஆரியமொழி யையே தமிழர் வடமொழியாகக் கொண்டு தம்மொழியோடு கலக்கத் தொடங்கினர். அவ்வாறு தொடங்கிய காலம் எது என்பதைத் திட்டமாகக்கூற இயலாதேனும், அக் காலம் தொல்காப்பியர் காலத்துக்கு முற்பட்டது என்று கொள்வது பொருத்தமானதாகும். அம்மொழியைத் தமிழில் எடுத்தாளப் பெறுவது தடுக்கப் பெருவிடினும் அவ் வெழுத்துக்களை அப்படியே எடுத்தாளலாகாது என்ற வரை யறை மட்டும் திட்டமாகத் தொல்காப்பியத்தில் செய்யப் பெற்றுள்ளது. ஆரியச் சொற்கள் தமிழில் கலக்கும் போது அவை வடசொற்களாகின்றன. எனினும் அவற்றுள் வட மொழி எழுத்துக்கள் இருத்தல் கூடாது என்பதை,

> **' வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ**
> **எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.'**
>
> **(தொல், எழுத்து. எச்ச. 5)**

எனத் தொல்காப்பியர் நன்கு எடுத்துக் காட்டுகின்ருர். இதற்கு உரை எழுத வந்த சேனுவரையர் 'வடசொற்

கிளவியாவது, வடவெழுத்திற்கே உரியவெனப்படும் சிறப்பெழுத்தின் நீங்கி, இருசார் மொழிக்கும் பொது வாகிய எழுத்தான் இயன்ற சொல்லாம்,' என விளக்கு கின்றார். இந்தப் பொது எழுத்துக்கள் எவை எவை என்பதை நன்னூல் பதவியல் பத்தொன்பதாம் சூத்திரம் நன்கு விளக்குகிறது.

**' இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும்**
**அல்லா அச்சுஐ றருக்கும் முதல்ஈறு**
**அவ்வாதி நான்மைகள் அவ்வாகும் ஐயும்**
**பொதுவெழுத் தொழிந்த நாலேழும் திரியும் '**

(நன் பத. 19)

இவ்வாறு இரு மொழிக்கும் பொதுவாகிய எழுத்துக் களும், தமிழுக்கே உரிமையான சிறப்பெழுத்துக்களும் ஆரிய மொழிக்கே உரியவான சிறப்பெழுத்துக்களும் உள்ளன. பொது எழுத்துக்காயின் ஆரிய மொழிச்சொற் களை அப்படியே தமிழ் மொழி எழுத்துக்களாலமைத்துக் கொள்ளுதலும், பிறவாயின் திரித்து அமைத்துக் கொள் ளுதலும் முறையென்பதைத் தொல்காப்பியம், நன்னூல் என்ற இரண்டு இலக்கண நூல்களும் நன்கு எடுத்து விளக்குகின்றன. இவை உரைநடையில் பெரும்பாலும் பயின்ற வரும் என்பதையும், இவற்றைச் செய்யுளிடத் தும் ஏற்றுக்கொள்ளுதல் தவறு இல்லை என்பதையும் சேனாவரையர் 'சிதைந்தன வரினும் இயைந்தன வரை யார்,' (எச்ச. 6) என்ற சூத்திர உரையில் நன்கு காட்டி யுள்ளார். எனவே, உரைநடையில் ஆரிய மொழிச் சொற்கள் தமிழ் எழுத்துக்களால் அமைக்கப்பெற்றுத் தொல்காப்பியர் காலந்தொட்டே தமிழில் பயின்று வந்தன என்று கொள்ளுதல் முறையாகும்.

இனி, இவ்வடமொழிக் கலப்பு, காலந்தோறும் எவ் வாறு மாறியும், பிறழ்ந்தும், உறழ்ந்தும் வந்துள்ளது என்ப

தைக் காண்போம். சங்க காலத்தில் உரைநடையைப் பற்றி அதிகம் நாம் அறிய முடியவில்லையாயினும், செய்யுள் நடையில் வந்த பல பாடல்கள் நம்முன் நிற்கின்றன. இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியர் வாழ்வுக் கதையே அவரை வடமொழியொடு பிணைத்துப் பேசுகிறது. அக்கதை உண்மை அன்று என்றாலும், நாம் மேலே கண்ட அவர் காட்டிய எழுத்துக்கள், அக்காலத்தில் வடமொழி தமிழில் வழங்கி வந்தது என்பதைக் காட்டத் தவறவில்லை. எனினும், தொல்காப்பியத்தை இந்திரன் இயற்றிய **ஐந்திர வியாகரணத்** தொடும், **பாணினி**யத்தொடும் தொடர்பு படுத்தி ஆராய்ச்சி செய்வது மிகவும் பொருந்தாது.[1]

'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என வரும் தொல்காப்பியப் பாயிரத்தின் தொடரைக் கொண்டு, வடமொழி இலக்கணமாகிய ஐந்திரத்தில் வல்லவர் தொல்காப்பியர் எனக்கொள்வது ஓரளவில் பொருத்தமானாலும், சம்பந்தப்படாத பாணினியத்தைப் பற்றி ஈர்த்து அதன் ஆசிரியராகிய பாணினி முனிவரை இவரொடு தொடர்பு படுத்துவது பொருந்தாது. தொடர்பு படுத்துவதற்காகவே பொருந்தாத இரண்டொரு மேற்கோள்களைக் காட்டுதலும் பொருத்தமானதாகாது. ஆங்கிலத்தில் 'Noun', 'Verb' 'பெயர், வினை' என்ற சொற்களின் அடிப்படையிலேயே மொழியியங்குவதால் அம்மொழி தமிழ்ப் பெயர் வினை அடியாகப் பிறந்தது எனக் கூறுதல் எப்படிப் பொருந்தாதோ, அப்படியே பாணினி, தொல்காப்பியர் இருவரும் காட்டும் பெயர் வினைச் சொற்களைக் காட்டிப் பாணினியத்திலிருந்து தொல்காப்பியம் பிறந்தது என

1. **இலக்கியச் சிந்தனைகள்—S. வையாபுரிப் பிள்ளை. (பக், 27, 34. 55, 57)**

லும் பொருந்தாது.[1] அது போன்றே எழுத்து ஒலி உண்டாகும் முறையைக் காட்டுவதும் பொருந்தாது.[2] இவை எல்லா மொழிகளுக்கும் பெரும்பாலும் பொதுவான கருத்துக்கள். ஒலி பிறக்கும் முறை ஒன்ருகத் தானே இருக்க முடியும்? ஆகவே, இவை போன்ற சில பொருந்தாத கருத்துக்கள் வழி வடமொழிப் பாணினியத்தைப் பின்பற்றியவர் தொல்காப்பியர் எனக் காட்டி அவரைக் கி. மு. 150 க்குக் கொண்டுவர நினைத்தல் சிறிதும் பொருந்தாது. அவர் ஆய்வின்படி எல்லா மொழிகளின் பிறப்புக்களையுமே ஒன்ருகப் பிணைக்க முடியும். இதனுல், தொல்காப்பியத்தைக் கண்டே ஆங்கிலமும் இந்தியும் எழுதப்பட்டன என்னலாம். மேலும், அவர் வாதப்படி தொல்காப்பியத்தைக் கண்டுதான் பாணினி இலக்கணம் எழுதிஞர் எனக் கொள்ளல் தவறு இல்லை. இரண்டிலும் ஒத்த கருத்து வருவதால் ஒன்றை ஒன்று பார்த்து எழுதியது எனல் பொருந்துமா? அதுவும், உலகில் அனைவரும் ஒப்ப ஏற்ற கருத்துக்களை ஒவ்வொரு மொழியாளரும் ஒரே வகையிலேதானே கூறுவார்கள்? இரண்டும் இரண்டும் நான்கு என்பது எம்மொழிக்கும் பொருந்தியது தான். அதனுல், தமிழிலிருந்து இக் கணக்கை மற்றவர் கற்ருர்கள் என்பது எவ்வளவு தாழ்வு! இலக்கணமும் கணக்குப் போன்றதே. அனைத்து மொழிக்கும் சொல், பிறப்பு முதலியவற்றில் பல பொது விதிகள் இருக்கும். சில மொழிகளில் பல ஒற்றுமை அமைப்புக்கள் உள்ளன. அவற்ருல் ஒன்றிலிருந்து மற்ருென்று பிறந்தது என்பது பொருந்தாத வாதமாகும்.

இனி, தொல்காப்பியப் பாயிரத்திலோ நூலிலோ வாராத—பேசப்படாத—நினைக்க முடியாத பாணினிபற்றி

1. தமிழ்ச்சுடர் மணிகள்—வையாபுரிப் பிள்ளை, பக். 30
2. ௸ பக். 31

நாம் கவலைப்பட வேண்டா. பாயிரத்தில் வரும் **'ஐந்திரம்'** என்ற சொல் **இந்திரன்** எழுதிய ஐந்திர வியாகரணமாகிய வடமொழி இலக்கணம் என்றுதான் ஏன் கொள்ள வேண்டும்? தொல்காப்பியர் காலத்தில் வடசொற்கள் வழங்கினமையாலேயே அவர் வடமொழி இலக்கணத்தைக் கற்றார் எனல் பொருந்தும். இன்று 'இந்தி' அறியாத தென்னாட்டவர் அவர் தம் மொழிகளில் இந்தியை வழங்க—இந்திச் சொற்களை எடுத்தாள—தத்தம் எழுத்துக்களை உபயோகிக்கின்றனர். அதற்கென ஒரு வரையறை அமைக்கின்றனர் என எண்ணுவோம். அவர்கள் 'இந்தி வியாகரணம்' கற்றவராகத்தான் இருக்க வேண்டும் என்ற நிலை உண்டோ? அது போன்றதே ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்பது. ஐந்திரம் என்பது ஐந்திறமாக நின்று தமிழில் உள்ள எழுத்துச் சொல் பொருள் யாப்பு அணி என்ற ஐம்பொருள்களைக் குறிக்கின்றன எனக்கொள்ளலாமே? எழுதும் காலத்து ஓலையில் ரகர றகரங்கள் வேறுபடுதலும், வேறு சிலவும் மறைக்கப் படுதலும் காண்கிறோம். எனவே, தமிழ் நாட்டிலே வாழ்ந்து தமிழ் இலக்கியங்களைக் கற்ற தொல்காப்பியர், தமிழ் மொழியில் உள்ள ஐந்து வகை இலக்கண அமைப்புக்களையும் நன்கு ஆய்ந்தவர் எனக்கொள்ளுவது மிகப் பொருத்தமாகும். யாப்பும் அணியும் இல்லை யென்பார்க்குச் செய்யுள் இயல் உவம இயலைக்காட்டி ஐந்திறம் நிறைந்த நூல் இது எனக் கூறுதல் பொருந்துமே! ஐந்திறம் 'அறிந்த' என்றோ, 'பயின்ற' என்றோ, 'வல்ல' என்றோ கூறுது. 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனக் கொள்ளுதல் மிகவும் பொருத்தமானதேயாகும். எனவே, தொல்காப்பியர் காலத்திலே வடமொழி தமிழிலே வந்து வழங்கியிருந்து, அவ்வழக்குக்கு ஏற்ற இலக்கணமும் இருந்த போதிலும், தொல்காப்பியர் வடமொழி இலக்கண

நூலை அறிந்து, இலக்கணமற்ற தமிழ் மொழிக்கு வடமொழி இலக்கணம் பற்றித் தம் நூலை இயற்றினர் என்று கூறுவதும், அதனால் அவர் காலத்தால் பிற்பட்டவர் எனக் காட்டுவதும் சிறிதும் பொருந்துவனவாகா.*

இனித் தொல்காப்பியனார் காலத்தில் வடநாட்டு வழக்கங்கள் இங்கு வந்து கலந்துவிட்டதைக் காண்கின்றோம். அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற வகுப்பும், அவரவர்களுக்கு உரிய செயல்களும், அதில் பேசப் பெறுகின்றன. இப்பகுப்பு முறை ஆரியர்களுக்குள் இருந்த வேறுபாட்டு முறையே என்பது அவரவர்களுக்கு வரையறுத்துள்ள தொழில் முறைப்பாடுகளால் நன்கு விளங்கும். சிலர் இவற்றைத் தமிழ்ப் பாகுபாடு என்றும், தொல்காப்பியர் காலத்துக்கு முன் ஆரியர் தம் வகுப்பு முறை தமிழகத்தில் இடம் பெறவில்லை என்றும் கூறுவர். அவர் கூற்று ஆராய்தற் குரியதாகும். மேலும் பாயிரத்தில் வரும் 'நான்மறை முற்றிய அதங்கோட்டாசான்' என்பதற்கு உரை எழுத வந்த நச்சினார்க்கினியர் நான்மறையென்பது வடமொழி வேதங்களைக் குறியாது எனவும், 'அவை சின்னாள் பல்பிணிச் சிற்றறிவினோர்க்குப் பின்னால் வேதவியாசரால் சொல்லப்பட்டன,' எனவும் கூறுவதை ஒட்டி, வேதமும் அதன் பழக்கவழக்கங்களும் தமிழ் நாட்டில் தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னரே புக ஆரம்பித்தன எனக் கொள்ளலும் உண்டு. எப்படியாயினும், தொல்காப்பியர் காலத்தில் ஆரியர்தம் கலப்புத் தமிழ் நாட்டில் உண்டாகி விட்டதென்பதும், அது பேரளவினதாக இல்லாது அருகியே இருந்ததென்பதும், அவர்தம் ஆரிய மொழிகளிலுள்ள சொற்களைத் தமிழில் பெயர்த்து எழுதும் வழக்கம் உண்டு என்பதும்,

* ஐந்திரம் என்ற நூல் இருந்ததே ஐயத்துக் குரியது என ஆராய்ச்சி கூறுகிறது.

அவ்வாறு எழுதும் போது அவ்வாரிய மொழி எழுத்துக் களைக் கையாளாது தமிழில் உள்ள எழுத்துக்களின் வழியே அம்மொழிச் சொற்களை எழுதி வந்தார்கள் என்பதும் எனவே அவ்வாரிய மொழி தமிழில் சிதைந்து வழங்கும் போது வடமொழி எனப் பெயர் பெற்றது என்பதும், பிற திசை மொழிகளிலும் இது அதிகமாக வழங்கியமையால் மற்ற திசை மொழிகளோடு சேர்த்து எண்ணப் பெறாது தனியாகவே 'வடமொழி' எனவே வழங்கி வந்தது என்பதும் நாம் அறிவனவாகும்.

தொல்காப்பியர் காலத்தை விட்டு, இன்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டு எல்லைக்குட்பட்ட சங்க காலத்திலும் வடமொழி வழக்கில் உள்ளது எனக்காண் கிறோம். சில ஆரிய நாட்டு வழக்கங்களும், **இராமாயணம் பாரதம்** போன்ற கதைகளும் தமிழ் நாட்டுச் சங்க இலக்கி யங்களில் இடம் பெற்றிருப்பதைக் காண்கிறோம்- சங்கப் பாடல்களை யாத்த புலவருள் சிலர் வடமொழிவாணரோ என்னுமாறு அவர்தம் பெயர்கள் அமைத்திருப்பதைக் காண்கிறோம். ஆரிய அரசன் பிருகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தியதாகக் **கபிலர்** பாடிய பாடல் ஒன்று (குறிஞ் சிப்பாட்டு) பத்துப் பாட்டில் இடம் பெற்றிருக்கிறது. அத்துடன் அகப்பாடலால் தமிழர்க்கும் வடக்கே கங் கைக் கரையில் ஆண்ட மௌரியர்களுக்கும் நந்தர்களுக்கும் தொடர்பு இருந்ததாக அறிகிறோம். எனவே கடைச் சங்க காலத்துக்கு முன்பே—இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே — தென்னுட்டுக்கும் வடநாட்டுக் கும் நெருங்கிய தொடர்பு இருந்தது என அறிகிறோம். எனவே, இந்த இரு மொழிகளும் தம்முள் கலக்க வழி இருந்தது. சங்ககால இலக்கியங்களுள் ஒரு சில வட சொற்கள் உள்ளன. என்றாலும் அவையெல்லாம் தொல் காப்பியர் வகுத்த இலக்கண முறைப்படியே வழங்கி

வந்தன என்பது பொருந்தும். அவ்வாறு வழங்கிய சொற்களும் மிகச் சிலவே என்பதையும் காணலாம்.

சங்க காலத்தில் வடமொழிச் சொற்கள் அதிகம் இல்லையேனும், அதை ஒட்டிய வள்ளுவரது குறள் எழுந்த காலத்திலும், காப்பிய காலத்திலும் வடமொழிச் சொற்களும் வடநாட்டுப் பழக்க வழக்கங்களும் அதிகமாகக் கலந்துள்ளமையைக் காண்கிறோம். ஏறக்குறையச் சங்க காலத்தை ஒட்டித்தான் வடநாட்டுப் பெருஞ்சமயங்களாகிய பௌத்தமும் சமணமும் தமிழ் நாட்டில் குடி புகுந்தன என்னலாம். வடநாட்டில் இருந்த ஆரிய சமயமாகிய வைதிக சமயம் அவற்றுக்கு முன்பே தமிழ் நாட்டில் புகுந்து வாழத் தொடங்கினாலும், அதனால் மக்களைத் தன் வழிப் படுத்திக்கொள்ள முடியவில்லை. இவை இரண்டும் தமிழ் நாட்டில் பெருஞ்சமயங்களாய் நின்று அரசர்களைத் தம் வசம் ஈர்த்துச் சில நூற்றாண்டுகள் தமிழ் நாட்டில் ஆணை செலுத்தின. அத்தகைய சிறந்த நிலையில் வாழ்ந்த பௌத்தமும் சமணமும் தத்தம் கொள்கைகளை வடமொழியிலிருந்து தமிழுக்குக் கொண்டு வந்தன. அதனால் அந்தக் காலத்தில் பல வடமொழிச் சொற்கள் தமிழில் இடம் பெறலாயின. பழக்க வழக்கங்களும் அப்படியே. எனவேதான் கடைச்சங்க இலக்கியங்களில் காணாத பல வட வடமொழிச் சொற்களும், வழக்கங்களும் திருக்குறளிலேயும், சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற காப்பியங்களிலேயும் காண்கின்றன. திருவள்ளுவர் சமண சமயத்தவர் என்பது சிலர் கொள்கை; இளங்கோவடிகள் சமணர்; மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் பௌத்தர். எனவே, அவர் தம் மதக் கருத்துக்கள் தமிழ் நாட்டில் பரவத் தொடங்கிய காலத்தில் அவரவர் தத்தம் கருத்துக்கேற்ற சொற்களை மூலநூல்களிலிருந்து கொண்டிருப்பர். எனினும், அறிஞர் வையாபுரிப் பிள்ளை அவர்

கள் காட்டியது போன்று[1] அத்தனைச் சொற்களையும் வட மொழிச் சார்பு படுத்தத் தேவையில்லை. சிலர், பிள்ளை அவர்கள் பல நல்ல தமிழ்ச்சொற்களையெல்லாம் வட மொழிப்படுத்தி அதனால் பெருமை தேடிக்கொண்டார் என்பர். இது தமிழ் நாட்டு இயற்கை போலும்! தமிழ் நாட்டிலே பிறந்து தமிழால் வாழ்ந்த அறிஞர்களில் சிலர் தமிழ்மொழியைப் பிறருக்கு விற்று, எல்லாவற்றையும் பிற மொழிச் சொற்களாக்கிக்கொண்டிருக்கும் நல்ல பணி ஆற்றும் காலத்தில், எங்கிருந்தோ வந்த 'கால்டுவெல்' போன்ற பெரியவர்கள்தாம் தமிழ்ச்சொற்களே அவை என்று அறுதியிட வேண்டியுள்ளது.[2] எனவே, பிள்ளை அவர்கள் காட்டும் அத்தனையும் வடமொழிச் சொற்களாகா. ஏர், நீர், கோட்டம், குடி முதலாய சொற்களையும் அவர் வட மொழியாக்குகின்றார் என்றால் அவர் கருத்து என்னையோ! எனினும், தமிழ்மொழிக்கு இத்தனை மாறுபாடுகளையும் வென்று உண்மை நிலை காட்டி ஒளிரும் வாய்ப்பு உண்டு என்பது வந்த பிற நாட்டார்தம் பணிகளாலேதான் விளங்கு கிறது.

தமிழில் உரை நடை தோன்றிய சிலப்பதிகார காலத்தில் வடசொல் ஆட்சி தமிழில் அதிகமாகக் கலக்கத் தொடங்கிற்று. ஏறக்குறைய அதே காலத்திலேதான் தென்னிந்தியத் திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பிற கன்னடம், தெலுங்கு முதலியவற்றிலும் பிறவற்றிலும் வடமொழி கலக்கத் தொடங்கியது என்னலாம். ஆனால், அவை அம்மொழியினை ஏற்று, அதனொடு கலந்து செறிந்து வளர்ந்து, தம் நிலை மாறி, வடமொழிச் சிதைவு

1. தமிழ்ச்சுடர் மணிகள் பக். 71.

2. Comparative Grammar of Dravidian Languages by Caldwell

சிதைவுகளோ என்னுமாறு வளர்ந்துவிட்டன; பண்டைய திராவிடச் சொற்களும், அவற்றின் வேர்ச்சொற்களும், அமைப்பு முறையும் நீங்க, பிற மொழிகளெல்லாம் வட மொழி வகையைப் பின்பற்றி வளர்ந்து இன்று தம் இன மொழியாகிய தமிழிலிருந்து வேறுபட்டனவாகி, அவை தனித்தனி வாழ்கின்றன. பின் தோன்றிய மலையாள மொழியும் அப்படியே மாறிவிட்டது. தமிழ் மட்டும் பழங்காலந்தொட்டே ஆரிய மொழிச்சொற்களை எடுத் தாண்டபோதிலும்,அதற்கெனவரையறை செய்துகொண்டு, தன்னிலையினின்று மாருத வகையில் இன்று வரை வாழ் கிறது. அதனாலேதான் இன்றும் இந்திய நாட்டுப் பெரும் பரப்பில் பிறவெல்லாம் இந்திபற்றி எதிர்ப்புக் காட்டா திருக்க, இத்தமிழ் நாட்டில் மட்டும் எதிர்ப்பு உணர்ச்சி இருக்கக் காண்கிறோம். நாட்டில் மொழி வளர்ந்த வர லாற்றைக்காணும் நல்லறிஞர்கள் இவ்வுண்மையை உணர் வார்கள் அல்லரோ?

இனிக் காப்பிய காலத்தை அடுத்துத் தமிழ் நாட்டு வரலாற்றில் ஓர் இருண்ட காலமே உருவாயிற்று. அக் காலத்தில் பிற சமயங்கள் மட்டுமன்றி, பிற அரசுகள், கொள்கைகள் அனைத்தும் புகுந்தன. அதனால், தமிழ் வாழ்வே சிதைந்தது என்னலாம். பிற ஏழாம் நூற்றாண் டில், பல்லவர் காலத்தில் தெளிந்த தமிழ் நாட்டைக் காணும் போது எத்தனையோ மாறுபாடுகளை நாம் காண் கின்றோம். மொழி வகையில் நோக்கும்போது வடமொழி தமிழில் அதிகமாகக் கலந்துள்ளது. மேலும், இரண்டை யும் வேறுபடுத்தி நோக்கும் நிலையில் நாடு இல்லை என்பதை,

**‘ ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் ’**
**‘ ஆரியமும் தீந்தமிழும் ஆயி னுன்காண் ’**

என்னும் அடிகளால் ஏழாம் நூற்றாண்டின் இடைக்காலத்

தில் வாழ்ந்த **திருநாவுக்கரசர்** பாடிய தேவாரத்திற் காண்கின்ருேம். இந்த நூற்ருண்டு தொடங்கிப் பிற்காலச் சோழர் பாண்டியர் காலம் வரையில் ஆரியமும் அதன் வழி ஆரிய மக்களும் தமிழ் அரசர்களோடு தொடர்பு கொண்டவர்களாய்த் தங்கள் கொள்கைகளையும் மொழியையும் வளர்க்கப் பெரும்பாடு பட்டிருக்கிருர்கள் என்பதை வரலாறு காட்டுகிறது. அக்காலத்தில் எழுந்த உரை நடை நூல்களும், செய்யுள் நூல்களும் வடமொழிச் சொற்களை அதிகமாக எடுத்தாள்வதைக் காண்கிருேம். அக்கால இலக்கியங்களே வைதீக சமயமாகிய ஆரிய சமயத்தையும் அதனேடு பின்னுல் தொடர்பு படுத்தப்பட்ட சைவ வைணவ சமயங்களையும் பற்றிய இலக்கியங்களாக அமைந்துவிட்டன. பாடும் முறையுங்கூடச் சங்க காலத்திலிருந்து மாறுபட்டுவிட்டது. இப்படி இடைக்காலத்தில் தமிழ் நாட்டில் வடமொழி ஆட்சி செலுத்தியது என்னலாம். இக்காலத்தில் வடமொழிச் சொற்கள் தமிழில் மிக அதிகமாகக் கலந்தன. சில இலக்கியங்கள் வடமொழிகளிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டன. பல சமணத் துறவியர் மொழிபெயர்ப்பு இலக்கியங்களைச் செய்தனர். அதன் எல்லை விரிவடைந்து நிலை கெடும் என்று கண்டுதானே—அன்றி ஏனே—நன்னூலார் அக்காலத்தில் ஒரு இலக்கண நூலை எழுதி, அதில் வடமொழியை ஆளுவதற்கு வரம்பையும் குறித்துச் சென்ருர். ஈண்டு உரை நடை வகையில் வடமொழி கொண்ட தொடர்பைக் காண்போம்.

கி. பி. எட்டாம் நூற்ருண்டின் இலக்கியம் எனப்படும் இறையனுர் களவியல் உரை நூலில் பல வடமொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. அந்த வடமொழிக் கலப்பைக் கொண்டேதான் அதன் ஆசிரியர் நக்கீரர்

என்றாலும், அதன் காலம் எட்டாம் நூற்றாண்டே என அறுதியிட முடிகின்றது. அடுத்துப் பின்னால் வந்த பல உரையாசிரியர்கள் தங்கள் கால நிலைக்கு ஏற்பப் பழந் தமிழ் இலக்கிய இலக்கணங்களுக்குப் புதுப்புது வகையான உரைகளைக் காண முயன்றிருக்கின்றார்கள். அந்த வேறு பாட்டு உணர்வுக்குக் காரணம் காலக்கோளாறேயன்றி, அவர்தம் கருத்துக் கோளாறு அன்று. இன்று புலவர்கள் ஆராய்ச்சி வழி அத்தகைய குறைகளைப் போக்க முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறார்கள் என்னலாம். எனி னும், இன்னும் சிறந்த ஆராய்ச்சி தேவையாகும்.

தமிழில் வடமொழியை அதிகமாகக் கலந்து எழுது பவனே புலவனென அக்காலத்தில் மதிக்கப்பட்டான் போலும்! இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பலர் தமிழ் நாட்டில் 'தமிழில் பேச வராது' எனக் கூறி, ஆங்கிலத்தில் பேசுவதுதான் பெருமை என எண்ணிக்கொண்டிருந்ததைக் கண்ட நமக்கு அன்றைய உணர்ச்சியின் பொருளை விளங்கிக்கொள்ளுதல் எளிதாகும். நாடாளும் மன்னரும் புலவரும் அக்கருத்தை உடையவர்களாய் இருந்த மையின், அம்மொழி தமிழரிடைத் தமிழ் நாட்டில் சிறந்து வாழ்ந்தது என்னலாம். அம்மொழிவாணருக்கு **'இரணிய கருப்பம்'**, **'துலாபாரம்'** போன்ற பொற்றருமங்களும் **'தேவதானம்**, **'பிரமதேயம்'** போன்ற நிலத் தருமங்களும் அக்கால மன்னர்கள் வாரி வழங்கியுள்ளார்கள். எனவே, அக்காலத்தில் சிறப்பாகப் பல்லவர், பிற்காலச் சோழர் காலத்தில் வடமொழி தமிழில் கலந்ததோடு மட்டுமன்றி, தமிழினும் மேம்பட்டது என்னுமாறு சிறந்தும் வளர்ந்தது. அதன் தலைவர்களே நாட்டில் உயர்ந்தவர்கள் என்று போற்றப் பட்டார்கள். அக்காலத்தில் **மணிப் பிரவாளம்** என்னும் வடமொழியும் தமிழும் விரவிய ஒரு

நடையில் - புது மொழியை - உரை நடையை எழுதினர். எட்டாம் நூற்றுண்டிலெழுந்த இறையனுர் களவிய லுரையில் பல வடமொழிச் சொற்கள் எடுத்தாளப் பெற்றி ருப்பதை அதன் கழக வெளியீட்டின் முன்னுரையில் (பக் 5) குறித்துள்ளனர்.[1] இவ்வாறே பல வடசொற்கள் அக்காலத்திலேயே சங்க காலத்தினும் வேறுபட்ட வகை யிலே தமிழில் வந்து வழங்கியுள்ளன. இன்னும் இரண் டொரு நூற்றுண்டுகள் செல்லச் செல்ல மேலே கூறியபடி வடமொழி தமிழினும் மேம்பட்டதொரு மொழியாக மதிக்கப் பெற்று, அதிகமாகத் தமிழ் நூல்களுள்ளும் உரை களுள்ளும் கலந்துள்ளன என்பதை விளக்கும் இரண்டோர் எடுத்துக் காட்டுக்கள் கண்டு மேலே செல்லலாம்.

வைணவ நூல்களுக்கு இடைக்காலத்தில் பல உரைகள் வெளி வந்தன. நம்மாழ்வாருடைய ஆயிரத்துக்குக் கண்ட உரைகளைப் **'படிகள்'** என வழங்குவர். அவற்றுள் சிறந்தது **'ஈடு'** என்னும் உரையாகும். அதன் விளக்கம் பற்றி முன்னமே குறித்துள்ளோம். அந்த உரை மணியும் பவளமும் கோத்ததை ஒத்த மணிப்பிரவாள நடையில் இயங்குகிறது. அதன் கிரந்த எழுத்துக்களையும் இக்காலத்தில் பெரும்பாலோரால் படிக்க இயலாது. அதனுடைய மொழி பெயர்ப்பைத் தமிழில் சென்னைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டிருக்கின்றனர். அதிலே ஒரு சில தொடர்களைக் கண்டாலே அதில் உள்ள வட மொழியின் வேகம் நன்கு தெரியும்.

**'திருமகள் கேள்வனுய், அடையப்பட்ட எல்லா விருப்பத்தையும் உடையவனுய், மங்களம் பொருந்**

---

1. சிட்டர் (6), பிராமணன் (7), காரணிகன், (8) குமார சுவாமி (8) மூர்த்திரபுரீடம் (10), சுவர்க்கம் (16), வாசகம் (59).

திய எல்லா நற்குணங்களையும் உருவமாக உடைய ஞன சர்வேஸ்வரன், 'மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து' என்கிறபடியே தொடர்ந்து வருகின்ற பிறவிகளில் தோள் மாறி நித்திய சம்சாரியாய்ப் போந்த இவரை அடியை அடைந்து உள்ளந் தேறி 'ஈறு இல் இன்பத்து இருவெள்ளம் யான் மூழ்கினேன்', என்று முதலிலே தம் திருவாயால் சொல்ல வல்லராம் படியாக முதலடியிலே சிறந்த திருவருளைச் செய்தருளினுன்.'[1]

என்ற உரை நூலின் தொடக்கமும்,

'நம் தரிசனத்துக்குத் தத்துவங்கள் மூன்று; அவையாவன: சித்தும் அசித்தும் ஈஸ்வரனும். ஆயின்; 'எல்லாப் பொருள்களும் பிரம்மம் ஆகவே இருக்கின்றன. பொருள் ஒன்றே; இரண்டாவது இல்லை,' என்று கூறப்படுகையில் 'மூன்று' என்றல் என்னை?' எனின், பிரகாச பிரகாரிகள் ஐக்கியத்தால் ஒன்று என்னலாய், சொரூப பேதத்தால் பல என்னலாயிருக்கும்.'[2]

என்ற தொடரும்,

'மேல் திருவாய் மொழியில் இறைவன் எல்லை இல்லாத இனியன் என்றுர்; அவனுடைய ஆர்ஜவ குணத்தைச் சொல்லுகிறுர் இத்திருவாய் மொழியில்; 'பத்துரை அடியவரில்' சௌலப்யமும், 'வளவேழ் உலகில்' சௌசீல்யமும் அருளிச் செய்தார்; இத்திருவாய் மொழியில் ஆர்ஜவகுணத்தை அருளிச் செய்கிறுர். இவற்றிற்கு வேறுபாடு என்ன?'[3]

என்ற தொடரும், ஒரு சில எடுத்துக்காட்டுக்களாகும். மூலமோ, பேரறிஞர்களாலும் பயில முடியாத ஒன்று. இந்த நிலை ஒரு கோடியேயாகும். எனினும், அந்தக்

1. தொகுதி 1, பக். 7; 2, ஷை பக். 13. 3, ஷை பக். 305.

காலத்தில் பல இலக்கியங்களும் தோன்றின என்பதை மறுக்க இயலாது. ஆனால், அத்தனையும் சமய சம்பந்தமான இலக்கியங்களாகவே அமைந்து விட்டன. எனவே, அவற்றுள் சமயக் காழ்ப்பும், சமய வெறியும் தலை தூக்கி நிற்கக் காணலாம். இவையெல்லாம் இடைக் காலத்தில் தமிழின் மேல் வடமொழி செலுத்திய ஆதிக்கவாடையைக் காட்டுகின்றன வல்லவா?

அக்காலத்திலே உண்டான மற்றோர் இலக்கியம் கல்வெட்டு இலக்கியம் எனக் கண்டோம். அதிலும் அதிகமாக வடமொழி வாடை வீசக் காண்கின்றோம்.

> **"போக பூமி இதுவென்னப் போகமெல்லாம் வந்தீண்டி ஏகவாணை அரசுரிமை ஏழ் பொழில்களும் பெற்றதென்னப் பாற்கடலிற் கார்க்கட லிப்படி வாழ முடி சூடி ஆர்த்தவமராபிஷேகச் (சல) தியரசர் திளைத்தோட எவ்வுலகமும் இருள் நீங்க வந்த கோமானிவனென்று கவ்வைதீரக் கலிகாலத் தாதி காலங் காட்டினனென இவன் காக்கும் அகில லோகங்களும் அடியடையக் குலைபடுவன தெங்கு களே; கோட்படுவன இளங்கமுகே."**

என்ற தொடர் கொண்ட கோவிராஜகேசரி வன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராசாதிராச தேவர் சிறப்புப் பற்றிய கல்வெட்டும்[1] பிறவுமாம். அக்காலத்தில் வடமொழி மாற்றி அமைத்த மொழி பெயர்ப்பு நிலை இஃதாக, மாற்றாத வகையிலே அப்படியே சொல் அமைப்புக்களைக் கொண்டே இயங்கும் ஈட்டு உரைப் பகுதிகள் ஒரு சில காண்போம்.

---

1. 'கடல் சூழ்ந்த பாரேழும்' என்ற தொடக்கத்தது.

கீழ்வருவன ஈட்டு உரையில் கிரந்த எழுத்துக்களை மாற்றித் தமிழ் வட மொழி எழுத்துக்களை அமைத்து எழுதியவை.

ஈட்டு முன்னுரை :—(திருவாய் மொழிக: ச முன்னுரைப் பகுதி)

''பரத்வத்தையும் பஜனீயதையையும் சௌலப்யத்தையும் அனுபவித்து ஹிருஷ்டராய்த் தாமாய்ப் பேசினுர் கீழ். இதில் தாமான தன்மையழிந்து ஒரு பிராட்டி தசையை ப்ராப்தராய் ஹர்ஷத்தாலே சொல்லும் பாசுரம் போய் ஆற்ருமையாலே சொல்லும் பாசுரமாய்ச் செல்லுகின்றது. 'அயமபர கார காரகநியம்' என்னுமா போலக் கீழ்ப் போந்த ரீதி ஒழிய வேறென்ருயிறேயிருக்கிறது? முற்காலத்திலே அல்பம் விவட்சிதனுய் இருப்பானெருவன், 'வீதராகராய் இருப்பார் பரிக்ரகித்துப் போருகிறது ஒன்ருய் இருந்தது. தத்துவபரமாக அடுக்கும் ஒன்று இத்திருவாய் மொழியளவும் அதிகரித்து இத் திருவாய் மொழி அளவிலே வந்தவாறே இது காமுக வாக்யமாய் இருந்ததீ!' என்று கைவிட்டுப் போனுனும். 'நிசித்யாசிதவ்ய' என்று விதிக்கிற பகவத் காமம் என்று அறிந்திலன், பாக்கிய ஹானியாலே. 'அயர்ப்பிலன் அலற்றுவன் தழுவுவன் வணங்குவன்' என்ற இது அனுபவிக்கிருர் என்று பிள்ளான் பணிக்கும் என்ற இது இவருக்கு 'முனியே நான்முகன்' அளவும் உள்ளது மானசானுபவமாகையாலே அத்தொடே சேர விழுமிறே? அனுபவிக்கப் பாரிக்கிருர் என்கிறவிடம் இத்தொடே போரச் சேர்ந்திருக்கும்.''

ஈடு—'அஞ்சிறைய'—5-ஆம் பாட்டு. 'நல்கித்தான் காத்தளிக்கும்.'

''[நல்கி] விபூதிரக்ஷணம் பண்ணும் போது கர்த்தவ்ய புத்தியாவன்றிக்கே பேறு தன்னதாகக் கிடீர்

ரக்ஷிப்பது. எனக்குத் தன்பக்கல் உண்டான வியா மோகம் தனக்கு விபூதியிலே உண்டாயிற்று ரக்ஷிப் பது (தான்) அபேக்ஷிப்பாரின்றிக்கே யிருக்கத் தானே ரக்ஷிக்கும் அவன். [பொழிலேழும்] கீழும் மேலும் ஒன்ருக நினைத்துச் சொல்லுகின்றதாதல், ஸ்வசரீர ரக்ஷணம் பண்ணுவது ஸ்நேகபுரஸ்ஸர மாகையிறே ['நல்கித்தான்' இத்யாதி] நாம ரூப விபாகா நர்ஹமாய் கிடந்தவன்று யாரிடமிருந்து அபேக்ஷிக்க இத்தை உண்டாக்கிற்று சக்திய வஸ்தப் பிரபை [நீரு பூத்த நெருப்பு] போல, தான் என்கின்ற சொல்லுக்கு உள்ளேயாய்த் தன்னையிட்டு விவரிக்க வேண்டின அன்று, தன் மேலே ஏறிட்டுக் கொண்டு நோக்கினுயிற்று. [காத்தளிக்கும்] காத்துக் கொடுக்கு மென்னுதல் ['வினையேற்கே நல் கத்தானுகாதோ'] இல்லாதவன்று உண்டாக்கினுய், உண்டாக்கினதற்குப் பலம் கர்மத்தை எறிட்டுக் கை விடுகையோ? ஸ்வஜன ரக்ஷணம் பண்ண லாகாதோ? நாட்டுக்கிட்ட நினைப்பு அந்தப் புரத்துக்கு அரிதாக வேணுமோ? ['வினையேற்கே'] கடலிலே ஏற்றமிட்டுத் தண்ணீர் அரிதாம்படியான பாபத்தைப் பண்ணுவேனே. ['நாரணனைக் கண்டக்கால்'] ஜீவ சமூகத்தினுடைய ஸ்வரூபஸ்திதி யாதிகள் ஸ்வாதீனமாய் இவை ப்ரகாரமாக, தான் பிரகாரியாய், இவற்றிலே ஒன்று குறையிலும் தம் இழவாம்படி இருக்கையாலே நாராயணன் என்று விருதூதித் திரிகிறவரைக் கண்டக்கால், இப்போர் யோக ரூடியோ என்றிருந்தோம் மஹா விருட் சத்தோ பாதியோ என்று கேளுங்கள். [கள்ளி, மல்கு நீர் இத்யாதி] உன் செயல் பரார்த்தமாய் இருந்ததீ; பெருகா நின்றுள்ள நீரை உடைத்தான நீர் நிலம் உண்டு—கொடித் தோட்டம் அதிலே [இரை தேர்] பெடையின் வாய்க்கு அடங்குவது தேடா நின்றது. புள்ளுப் பிள்ளைக்கு இரை கேடும்

**எனக் கடவதிறே? கயலுகளா நிற்கச் செய்தேயிறே.**
**பிள்ளை வாய்க் கடங்குவது தேடுகிறது ''**

இது வடமொழி பெற்றிருந்த ஆதிக்கத்தை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. இது போன்றே பிற இலக்கியங்களிலும் இவ்வகை மேற்கோள்களைக் காணலாம். பிற்காலத்தில் வந்தவராகிய குமர குருபர அடிகளார் தம்மை வடமொழி வல்லுநர் என மற்றவர் நினைக்கும் வகையில்,

**' பால லோசன பானுவி லோசன**
**பரம லோசன பக்த சகாயமா**
**கலா காலதிரி சூலக பாலஏ**
**கம்ப சாம்ப கடம்பவ னேசனே '**

என்னும் அடிகளை எழுதியுள்ளார். இப்படியே நேற்று வரையில் வடமொழிச் சொற்களை அதிகமாகப் பயன் படுத்தும் வகையில் மொழி வளர்ந்தது. இந்த நிலையில் இலக்கண அமைப்பிலேயும் சில மாறுபாடுகளைக் கொண்டு வந்து புகுத்த நினைத்தார்கள் மிகவும் பிற்காலத்தில் வந்த **சாமிநாத தேசிகர்** போன்ற பெரியவர்கள்.

'ஐந்தெழுத்தாலொரு பாடை அமைந்தது.' என்று தமிழைக் கூறி, அதைப் பழித்துரைத்தனர். அது வட மொழியிலிருந்து வந்த மொழிதான் என நிறுவ நினைக்கும் அளவுக்கு அந்தப் பிற்காலப் புலவர் கருத்துக்கள் சென்று விட்டன. ஆயினும், அத்தகைய இலக்கிய இலக்கணப் புலவர் தம் கொள்கைகளும் நூல்களும் கால வெள்ளத்தை எதிர்த்து நிற்க மாட்டாதனவாக அழிந்து விட்டன என்னலாம். இன்று தமிழ் நாட்டில் மட்டுமன்றி, தமிழ் அறிந்த பிற பகுதிகளிலுங்கூடத் தொல்காப்பியமும் நன்னூலும் தெரியும் அளவுக்கு—ஏன்—ஒரு சிறு அளவுக்குக்கூட—

பிற இலக்கண நூல்கள் தெரிவதில்லை. அவற்றின் பெயர்கள்கூடத் தமிழ் அறிஞர்களுக்கே தெரியாத வகையில் அவை மறைந்து விட்டன என்னலாம். இவ்வாறு இடைக்காலத்தில் தமிழினும் மேம்பட்டதாகக் காட்டிக் கொண்டு இலக்கிய இலக்கணம் பெற்று வளர்ந்த வட மொழி இந்த நூற்றுண்டில் சிறிது தன் இடம் விட்டுச் சென்று விட்டது என்னலாம்.

இருபதாம் நூற்றுண்டுக்கு இடையிலே மொழி வரலாற்றை அறியும் திறனே ஒரு பெருங்கலையாக வளர்ந்து வருகின்றது. மேலை நாட்டு அறிஞர்கள் இத் துறையில் பல காலமாகவே தங்கள் கருத்திருத்தி ஆவன செய்து வருகிறுர்கள். அந்த முறையில் இந்தப் பாரத நாட்டிலும் பல மொழி ஆராய்ச்சியாளர்கள் தோன்றி வளர்ந்து வளம் கண்டு வருகிறுர்கள். சென்ற நூற்றுண்டில் வாழ்ந்த **கால்டுவெல்** போன்றுர் 'இது தமிழ்ச் சொல்' 'இது வடசொல்' எனப் பகுத்துக் காட்டிய வழியே இன்று பலர் ஆராய்கின்றனர். இன்று கலந்து வழங்கிய வடமொழிச் சொற்களை மறுபடியும் நீக்கித் தனித் தமிழில் பேச வேண்டும் என்ற உணர்வு தலைதூக்கியுள்ளது. இப்பணிக்கு வழி காட்டிகளுள் முதன்மையானவர் ஆசிரியர் **மறைமலை அடிகள்** என்னலாம். இன்று ஆரிய மொழிச் சொற்களாகியவை இவை என்று ஆராய்வதில் பலர் முன்னிற்கின்றனர். ஆனுல், அதிலும் இரு துருவ எல்லைக் கற்கள் தெரிகின்றன. ஒரு சிலர் எல்லாவற்றையும் வடமொழிச் சொற்களெனவும், சிலர் எல்லாவற்றையும் தமிழ்ச் சொற்களெனவும் காட்டி, அவற்றை விளக்கு முகத்தான் வேடிக்கையான விளக்கங்களையும் பகுப்புக் களையும் கையாளுவார்கள். இதில் காய்தல் உவத்தல் இன்றி நோக்கின், தமிழ்ச் சொற்களிலிருந்து வடமொழிச் சொற்களைத் திட்டமாகப் பிரிக்க இயலும்.

இனி, இக்காலத்தில் பிற மொழிச் சொற்களைக் கலத்தல் வேண்டுமா வேண்டாவா என்று ஆய்வு ஒருபுறம் நடக்கின்றது. இது தேவையே இல்லை. தமிழில் 'நீர்' இருக்க 'ஜலம்' என்றும், 'சாறு' இருக்க 'ரசம்' என்றும், உள்ளதை விட்டு வேற்று மொழியில் கடன் வாங்குதல் தமிழருக்கு மானமாகும். ஆனால், அதே வேளையில் விஞ்ஞானம் அல்லது அறிவியல் வளர்ந்து வரும் வேகத்தில் எத்தனையோ புதுப்புதுச் சொற்கள் தேவையாய் உள்ளன. அவற்றுள் சில நம் தமிழிலேயே உள்ள சொற்களொடு பொருந்துமாயின், மாற்றி அமைக்கலாம். இல்லையாயின், அதற்காகப் புரியாவகையில் வலிந்து சொல்லாக்கிப் பொருள் கொள்ளத் தேவை இல்லை. உள்ளவற்றை—வேற்று மொழிச் சொற்களை—தொல்காப்பியர் காட்டிய இலக்கணப்படி பிறமொழி எழுத்துக்கள் கலவாமல் தமிழ் எழுத்துக்களைக் கொண்டு ஆக்கிக் கொள்ளலாம். இந்த நிலை எந்நாட்டுக்கும் எம்மொழிக்கும் பொதுவான ஒன்றுதான். என்றாலும், அதனால் உள்ளதை விடுத்தோ—நல்ல முறையில் மொழி பெயர்ப்பு இருந்தால் கொள்வதை விடுத்தோ—வடமொழியையோ வேற்று மொழியையோ தமிழ் கடன் வாங்கத் தேவையில்லை.

இப்படி வரலாற்று எல்லைக்கு அப்பாற்பட்ட காலந் தொட்டு, ஆரியமாகிய வடமொழி தமிழில் கலந்த போதிலும் தமிழ் தன் நிலை கெடாததாய் வரம்பினைக் கடவாத வகையில் வேற்று மொழிக் கலப்பு இல்லாமலே வாழ இயலும் என்பதை நிலை நாட்டி வந்துள்ளது. அதே வேளையில் 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழு வல' என்ற இலக்கண முறைப்படி தேவையான—இன்றி யமையாத—சொற்களை ஆரியத்தில் மட்டுமன்றி—எம் மொழியிலிருந்தும் பெற்று, அதைத் தமிழ் எழுத்தால் தமிழே ஆக்கி மொழி வளர்த்து நலம் பெறுதல் தமிழர் தலையாய கடனாகும்.

# VIII

## பிற்கால உரையாசிரியர்கள்

பதினைன்காம் நூற்றாண்டிற்குப் பின் மேலே கண்ட கல் வெட்டுக்களோ, பேரிலக்கிய இலக்கண உரை நூல்களோ அதிகமாக வளரவில்லை என்னலாம். தமிழ் இலக்கியத்தில் அதற்கு முன் வடமொழி அதிகமாக புகுந்ததைத் **'தமிழும் வடமொழியும்'** என்ற தலைப்பிலே கண்டோம். இந்தப் பதினைன்காம் நூற்றாண்டிற்குப் பின் நேர்ந்த நாட்டு மாறுபாடுகளால் வடமொழியாளரோடு முகலாயர் ஆட்சியாலும் பின் வந்த ஆங்கிலேயர் ஆட்சியாலும் தமிழ் இலக்கியத்துறையிலும் மாறுபாடுகள் தோன்றின என்னலாம். கிறித்துவ மகமதிய சமய நெறிகள் மேலைக் கடற்கரை வழியாகப் பழங்காலத்திலேயே தமிழ் நாட்டில் கால் கொண்டிருந்தன என்றாலும், அவை இரண்டும் அவ்வளவாக வளரவில்லை என்னலாம். பின் தமிழக ஆட்சி அச்சமயங்களைச் சேர்ந்தோர் கைகளில் மாறிய காலத்திலேதான் அவை நம் நாட்டில் அதிகமாகப் பரவலாயின. அப்பரவலுக்கு ஏற்ற வகையிலே அவ்வச் சமயங்கள் பற்றிய நூல்களும் வெளிவந்தன என்னலாம். ஆனால், அதே வேளையில் தமிழ் நாட்டில் பழஞ்சமயங்களாய் இருந்த சைவ வைணவ சமயங்களிலும் பலபெரியவர்கள் தோன்றிப் பாட்டிசைத்தும் உரை எழுதியும் சமயத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்த்தார்கள் என்று கொள்ளுவது பொருத்தமாகும். சென்ற இரண்டொரு நூற்றாண்டுகளிலே மேலை நாட்டார் தமிழ் மொழிக்கு - சிறப்பாக உரை நடை வளர்ச்சிக்குப் - பாடுபட்டார்கள் எனக் காண்கின்றோம். அதே காலத்திலும் அதற்கு இரண்டொரு நூற்றாண்டுகளிலும் தமிழ் நாட்டில் உரைநடை வளர்ந்த

நிலையைக் கண்டு, பின் அப் பிற சமயத்தவர்களான மேலை நாட்டு அறிஞர்கள் செய்த தொண்டினையும் சிறிது நோக்கு **வோம் :**

இந்தக் காலத்தின் இலக்கிய வளர்ச்சி **நிரம்ப அழகிய தேசிகர்** வழித் தொடங்குகிறது எனக் குறிக்கின்றார் **திரு. வ. சு. செங்கல்வராயப் பிள்ளை** அவர்கள்.[1] இவர் ஒரு பெரும் புலவர். இனிய பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுடன் உரையசிரியராயும் இருந்திருக்கிறார் எனக் கொள்ளல் பொருந்தும். இக்காலத்தில் வாழ்ந்த சிறந்த இலக்கணப் புலவர்கள் **வைத்தியநாத தேசிகரும் சாமிநாத தேசிகரும்** ஆவார்கள். அவர்கள் எழுதிய **இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து** என்னும் இரண்டும் இன்று தமிழ் நாட்டில் வழக்கிழந்து விட்டன. காரணம் என்ன? இவ்விரு வரும் தம் காலத்தில் தமிழ் நாட்டில் வடமொழிக்கு இருந்த செல்வாக்கினை எண்ணி, தமிழின் அடிப்படை இலக்கண அமைதிகளையும் முறைகளையும் மறந்து, தம் விருப்பப்படி இலக்கணத்தை எழுதத் துணிந்து விட்டனர். இந்த இருவரோடு இணைந்தவராகச் சொல்லக் கூடிய புலவர் **சுப்பிரமணிய தேசிக**ராவர்- அவர் எழுதிய நூல் **'பிரயோக விவேகம்'** என்பதாகும். இம்மூவருள் சாமிநாத தேசிகர் தம் நாட்டையும் மொழியையும் மறந்து, தமிழ் இலக்கணத்தையே மாற்றும் வகையில் தம் நூலை எழுதி யுள்ளார் என்பதைத் திரு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்கள்.[2]

1. History of Tamil Prose, P. 34

2. 'Although he was a great Tamil Scholar, he seems to have had very crooked notions, in some cases about his own Tamil Language and literature, (History of Tamil Prose, p 36)

இவ்வாறு மேலே காட்டிய மூவரும் இலக்கண நூலை எழுதியுள்ளார்கள். அதுபற்றி இங்கு நாம் ஆராயத் தேவை இல்லை. எனினும், இவர்கள் இலக்கண நூலுடன் உரை நடையிலேயும் நூலை எழுதி உதவினார்கள் என்பதே நாம் இங்குக் காணவேண்டியதாகும்.

இம்மூவரும் தத்தம் இலக்கண நூல்களுக்குத் தாமே உரை எழுயுள்ளதைக் காண்கிறோம். தமிழ் மரபுப்படி நூல் எழுதுபவரே உரை எழுதும் வழக்கம் இல்லை. 'உரைகாரர்' என்றே தனியாக வேறு ஒருவர் இருப்பதைக் காண்கிறோம். தொல்காப்பியம் முதலிய பேரிலக்கண நூல்களுக்கும், பத்துப் பாட்டுப் போன்ற பேரிலக்கிய நூல்களுக்கும் அவற்றின் ஆசிரியர்களே உரை எழுதி விட்டிருப்பார்களாயின், பின்னால் இத்தனை உரை நடை நூல்கள் தோன்றியிரா. அத்துடன் புதுப் புதுக் கருத்துக்கள் காலத்துக்கு ஏற்ப மாற்றமும் ஏற்றமும் பெற்றுக் காட்டக்கூடிய நிலையில் அமையா. எனவே, கருத்து வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் இடம் தேடக் கருதிய தமிழ் நாட்டில் தம் நூலுக்குத் தாமே உரை எழுதுகின்ற வழக்கத்தைப் புலவர் மேற்கொள்ளவில்லை. ஆனால், இந்த மூவரும் அம்மரபுக்கு மாறாகத் தாமே தம் நூலுக்கு உரையும் எழுதினர் என்றால், அதற்குக் காரணம் என்ன ?

இம்மூவருடைய கருத்துக்களும் நாம் மேலே கண்டபடி தமிழ் இலக்கண முறைக்கு மாறுபட்டனவேயாகும். எனவே, இவர்களைப் பின்பற்றி யாரும் சென்றிருக்க மாட்டார்கள். ஏன்? உரை எழுதவுங்கூட யாரும் முன் வந்திருக்கமாட்டார்கள். இந்நிலையில் தம் கொள்கையை எப்படியும் பரவச் செய்யவேண்டும் என நினைத்த இம்மூவரும், தாமே அவற்றிற்கு உரை எழுதினர். இவர்தம் உரையும் நூலும் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடாத வகையில்

னிலை கெட்டன என்றாலுங்கூட, இவர்தம் தமிழ் உரை நடை நன்கு அமைந்துள்ளது. இவர்தம் எழுத்து, தமிழ் உரை நடை வரலாற்றில் இடம் பெறத் தக்கதாகவே அமைந் துள்ளது என்னலாம். இவர்களது உரைநடைத் திறனை விளக்க இரண்டோர் எடுத்துக் காட்டுக்கள் கண்டு மேலே செல்லலாம்.

'அறநூல் முதலியன நான்கற்குங் கருவி எழுத்து முதலைந்தே. அவற்றுள்ளும் நான்கற்குங் கருவி சொல்லே. அச்சொல்லிற்குக் கருவி யதுவே. ஆகையால் எல்லாவற்றினுஞ் சொல்லே சிறப்பென் பது நோக்கி, மூன்றியலாகிய இந்நூலுட் சொன் மாத்திரமே சில சொற்றனமென்பது தோன்ற இயம்பில னென்றும். வடநூலாருந் தலைமை பற்றிய வழக்கால் அவ்வைந்தனையும் சொல்லென்று வழங் குவர்.

'முக்காற்பார்த்து நல்லோர் பலருடனும் பல காலும் பயின்று பிறர்க்கறிவித்தன் முதலான வெல்லாமடங்கப் பல்காற் பழக்கமென்றும். இங்ஙனம் பழகமாட்டாரென்பது, தோன்றப் பழகினுமென்றும். இங்ஙனம் பழகிற் றெரியாத தொன்றில்லையென்பது தோன்ற உளவேலென்றும்.[1]

'குற்றமற்ற இயல்பினையுடைய பொருளென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, மனத்தான் நோக்கு தற்கு எட்டாத வீடு துறவறமாகிய காரண வகை யாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறு தற்கு எட்டாமையின் அதனை விடுத்து, விரித்துக் கூறும் உலக நடையானும், வேத நடையானும் அறமும் பொருளும், இன்பமுமென மூன்று வகைப் படும். அங்ஙனம் விரித்துக் கூறப்படும் பொருளே

1. இலக்கணக் கொத்து, பாயிர உரை, பக். 14
—சுவாமிநாத தேசிகர்.

தொகுத்துக் கூறுந் தமிழ் நடையான் அகப்பொருளும் புறப்பொருளுமென இரண்டு வகைத்தாய்க் குணமும் அலங்காரமுமெனக் கூறுபட வந்த அணியான் உளதாகிய சிறப்பினைப் பொருந்திச் செய்யுளிடத்தே சார்ந்து விளங்கும் இயல்பினை யுடைத்தாம்.'[1]

இவ்வாறு இவர்களது உரை நடை செல்ல, இவர்கள் காலத்தவராகவும், சாமிநாத தேசிகர் தம் மாணவராகவும் கொள்ளப் பெறும் **சங்கர நமச்சிவாயப் புலவர்** தமிழ் உரை நடைக்குச் சிறந்த தொண்டு செய்தார் என்னலாம். இவர் பல உரை நடை நூல்கள் எழுதவில்லை என்றாலும், இவர் செய்த ஒரே தொண்டு சிறந்த தொண்டாகும். பழங்கால உரையாசிரியர்கள் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களுக்கும் இலக்கியங்களுக்கும் உரை எழுதினமை போன்று, இவர் பிற்காலத்தில் **பவணந்தியாரால்** செய்யப் பெற்ற மரபு கெடாத இலக்கண நூலாகிய நன்னூலுக்கு நல்ல உரை எழுதிச் சென்றுள்ளார். இவர்தம் உரையே நன்னூலுக்குச் சிறந்த உரையாகப் போற்றப் பெறுகின்றது. இவரது உரையை வைத்தே சிவஞான முனிவர் சில இடங்களில் சேர்ப்பன சேர்த்து உரையை மேலும் சிறக்கச் செய்துள்ளார். நன்னூலுக்கு நல்ல விருத்தி உரைகாரர் சங்கர நமச்சிவாயரேயாவர்; **காண்டிகை, விருத்தி** என்ற இருவகை உரைகள் உள என்று கூறிய நன்னூலின் இலக்கணத்துக்கு எடுத்துக்காட்டாக அந்நூலுக்கு யாரும் எழுதாது வைத்த குறையைத் தம் விருத்தி உரையால் நீக்கி வைத்தவர். எனவே, இவரது உதவி உரை நடை வளர்ச்சிக்கு மட்டுமன்றி இலக்கண வளர்ச்சிக்கும் பெருந்துணை

1. இலக்கண விளக்கம் - பொருளதிகாரம் 2-ஆம் சூத்திரம் உரை, பக். 2. —வைத்தியநாத தேசிகர்.

புரிந்தது என்னலாம். இன்றளவும் இவரது உரையே சிறந்த உரையாக நன்னூலுக்கு அணிசெய்கிறது என்பதை யாரே மறுக்கவல்லார்? பழங்கால உரையாசிரியர்களோடு ஒத்து எண்ணத் தக்கவர் இவர் என்று கூறி மேலே செல்லலாம்.

பதினெட்டாம் நூற்றுண்டில் சிறந்த உரையாசிரியராய் விளங்கியவர் சிவஞான முனிவரே என்றால் மறுப்பவர் யாரும் இலர். நெல்லை மாவட்டத் தென்கோடியில் தோன்றிச் சிறக்கத் தமிழ் கற்று, செய்யுள் இயற்றுவதிலும், உரை நடை ஆக்குவதிலும், தருக்க வாதம் செய்வதிலும், சமய நெறி காட்டுவதிலும் சிறந்து விளங்கிய ஒப்பற்ற ஞாயிறாய் இவர் விளங்கினர் என்பதை நாடு நன்கு அறிந்துள்ளது.[1] இவர் பாடல்களின் செழுமையைக் காஞ்சிப்புராணம், சோமேசர் முதுமொழி வெண்பா, அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் போன்றவற்றால் நன்கு உணரலாம். சிவஞான முனிவர் இனிய பாடல்களை யாத்ததோடு அமையாது, பல நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார். மேலே கண்ட சங்கர நமச்சிவாயர் தம் நன்னூல் விருத்தி உரையை உடன்கொண்டு மேலாக இவர் தமது ஆராய்ச்சித் திறம் கொண்டு பல வினாவிடைகள் மூலம் சில சூத்திரங்களுக்குப் பொருந்தும்

1. The famous Authinam of Thiruvavaduthurai had produced very many great sages, poets and writers in its days but it produced none equal to Sivagnanayogi. The Tamil writers do not think that any praise is too lavish when bestowed upon him. He was a great poet and rhetorician, a keen logician and philosopher and commentator and a great Sanskrit scholar. (History of Tamil Prose, p. 39)

உரைகளையேற்றுப் பொருந்தா உரைகளுக்கு மறுப்புக் கூறும் திறம் நோக்கத் தக்கதொன்றாகும். இவர்தம் நன்னூலின் இலக்கண விளக்கங்கள் சங்கர நமச்சிவாயரது சுடர் விளக்கினை நன்றாகத் தூண்டி விட்டு ஒளி காலச் செய்கின்றன. இரண்டொன்று காண்போம்.

'மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை.'

என்ற நன்னூல் (261) சூத்திரத்திற்கு விருத்தி உரையாக,

'மக்கள் தேவர் நரகர் எனப்படுதல் அவ்வவ் யாக்கையும் உயிரும் கூடி நின்ற வழி ஆதலின், அவை பிரிந்த வழியும் வேறு கருதிய வழியும் அவருயிரையும் உடம்பையும் உயிரில்லாதனவாகிய அஃறிணையாகக் கொள்ளப்படுமென்க. விலங்கு முதலியவற்றின் உயரினங்களு மன்ன.'

எனச் சங்கர நமச்சிவாயர் நன்கு விளக்குகின்றார். அவ் விளக்கைத் தூண்டும் முகத்தான் சிவஞான முனிவர்,

'மக்களாகப் பிறந்து புண்ணிய பாவமியற்றிப் புண்ணிய மிகுதியால் தேவராயும் பாவ மிகுதியால் நரகராயும் பிறத்தலின், மக்கள் தேவர் நரகரெனச் சாதன சாத்திய முறையே வைத்தாரென்க. அன்றியும், ஆசிரியர் தொல்காப்பியர், ''உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே,'' என முன்னர்க் கூறிப் பின்னர் ''இவ்வென வறியு மந்தந் தமக்கில வாகிய தெய்வஞ் சுட்டிய பெயர்' முதலியனவும் ''உயர்திணை மருங்கிற்பால் பிரிந் திசைக்கும்'' எனக் கூறலின், உயர்திணைப் பாற்படுத்து. 'மக்கள் தேவர் நரகர் உயர்திணை' என முறை தெரிந்து ஓதினாரெனக் கோடலுமா மென்க.'

என்று தமது சமய, தருக்க, இலக்கிய இலக்கணப் புலமை நலமெல்லாம் தோன்ற எழுதியிருப்பது அறிந்து அறிந்து மகிழத்தக்கதன்றோ! இதே போன்று சூத்திரத்துக்கும்

சொற்களுக்கும் பிறர் காணும் விளக்கங்களும் உரைகளும் பொருந்தாதனவென இவர்கள் கூறும் கூற்றுக்களும் சிறந்தனவாம்,

இலக்கணத்தில் வைப்பு முறைகளை ஆய்ந்து விளக்கம் தரும் வகையில், தமிழில் சொற்களைப் பெயர் வினை இடை உரி என்ற வைப்பு முறைக்கு இவர் காட்டும் காரணத்தையும் அதன்வழி இவர் உரை நடையையும் கண்டு மேலே செல்லலாம்:

> **''இச்சொற்களைப் பெயர் முதலாக வைத்தது என்னை எனின், பெயர்ச்சொல் பொருளை விளக்குதலானும், வினைச்சொல் பொருளது புடை பெயர்ச்சியை விளக்குதலானும், இடைச்சொல் பொருளையும் பொருளது புடை பெயர்ச்சியையும் தம்பாலன்றித் தத்தங் குறிப்பால் விளக்குதலின் பெயர்ச்சொல் வினைசொற்களும் ஆகாது அவற்றின் வேறுமாகாது இடைநிகரவனவாய் நிற்றலானும், உரிச்சொல் பொருட் பண்பாகிய இசை, குறிப்பு, பண்பு மூன்றனையும் விளக்கிப் பொருட்குரிமை பூண்டு நிற்றலானும், திசைச் சொல் கொடுந்தமிழ் மொழியாயும் அன்னிய மொழியாயும் வருதலானும், வடசொல் அந்நிய மொழியேயாய் வருதலானும், இம்முறை வைக்கப்பட்டன என்க.''**

இவரே தொல்காப்பியப் பாயிரத்துக்கும் அதன் முதற் சூத்திரத்திற்கும் விருத்தி உரைகள் எழுயிருக்கின்றார். அவை புலவர்களாலே நன்கு போற்றப்படுகின்ற காரணத்தால், அவற்றுள் இரண்டோர் இடங்களைக் காணல் ஏற்புடைத்து என எண்ணுகின்றேன்.

> **''இங்ஙனம் வழக்கும் செய்யுளும் பயின்றார்க்கு, அவற்றின்கண் ஒரு நிகரனவாய சொற்களும் ஒன்றோடொன்று ஒவ்வாதுமாகிய செய்கை வேறுபாடுகளும் சொன் முடிபு பொருண் முடிவு வேறுபாடுகளும்**

நோக்கும் வழி, 'இவையெல்லாம் வழா நிலையோ? சில வழுவமைதியோ? வழுவோ? கட்டளை யில்லையோ?' எனவும் ஆசங்கை நிகழுமன்றே? அவ்வாசங்கை நீங்க எழுத்து முதல் மூன்றும் ஆராய்ந்து செந்தமிழியற்கை சிவணுதற்கு, இந்நூல் ஒருதலையான் வேண்டப்படும் என்பதூஉம், அவை பயிலாதார்க்கு ஆசங்கையே நிகழாமையின் இந்நூல் பயன்படாது என்பதூஉம் விளக்கிய, 'ஆயிரு முதலின் நாடிச் சிவணிய கண்டு எண்ணித் தொகுத்தான்,' என்றார். எனவே, வழக்கும் செய்யுளும் ஆராய்ந்து பின்னர் இந்நூல் கேட்டற் பாற்று என்பது பெறப்பட்டது.''[1]

'' 'நாடிச் சிவணிய' என்பது 'ஓதி உணர்ந் தான்' என்பது போலக் காரண காரியப் பொருட்டாய் நின்றது. 'சிவணிய' என்பது 'செய்யிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இஃது உணரமாட்டாதார், 'நாடிக்கண்டு எண்ணித் தொகுத்தான்' எனக்கூட்டி, ஒரு வினைமுதல் வினை யாக்கி நாடிய ஆராய்ச்சியிற் குறைபாடு உடைய வற்றிற்கு, முந்து நூல் கண்டு என்றும், 'ஆயிரு முதலிற் செந்தமிழ் இயற்கை சிவணிய' எனக் கொண்டு கூட்டியும் இடர்ப் படுப.''[2]

'' 'அற்றேல்' அகத்தியம் நிறைந்த தொல் காப்பியன்' என்னுது 'ஐந்திரம் நிறைந்த தொல் காப்பியன்' என்ற தென்னை?' எனின், அகத்தியம் நிறைந்தமை எல்லாரானும் தெளியப்பட்டமையின், வடமொழியிலும் வல்லவனுயினுன் என்பது விளங்கிய அங்ஙனங் கூறினுர் என்பது. இவ்வாறு அன்றி ஐந்திரத்தின் வழித் தோன்றிய நூல் என்பது விளங்கிய ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்

1. தொல். பாயிரவிருத்தி, பக். 5.
2. ஷெ பக். 6.

எனவே, ஐந்திரம் முதல் நூல் என்று அமைந்திருப்ப, முந்து நூல் கண்டு எனக் கூறியது எற்றுக்கு எனவும் கூறி மறுக்க.''[1]

'' 'அற்றேல், ஐகாரக் குறுக்கம் மொழி இடை கடைகள் என்னும் இடம் காரணமாகக் குறுகி இசைப்பது போலக் குற்றிய லிகர குற்றிய லுகரங்களும் இடமும் பற்றுக்கோடும் காரணமாகக் குறுகி இசைத்தலின் இவற்றை இயல்பு என்றது என்னை?' எனின் அறியாது கடாயினுய். அவை காரணமாகக் குறுகி இசைப்பனவாயின், இங்கு, ஏது. தாது என்னும் வடமொழி இறுதி உகரமும் அவ்விடமும் பற்றுக் கோடும் உடைமையின் அவை காரணமாகக் குறுகி இசைத்தல் வேண்டும், காரணம் உள்வழிக் காரியம் உண்டாதல் ஒருதலையாகலின்; அங்ஙனம் இசையாமையின், இடமும் பற்றுக் கோடும் குற்றிய லிகர குற்றியலுகரங்கள் நிற்றற்குச் சார்பு ஆவனவே யன்றி, குறுகி இசைத்தற்குக் காரணம் ஆகா எனக்கொள்க 'அஃதேல், வடமொழியின் அறுவகை யிடமும், வல்லெழுத்துப் பற்றுக் கோடும் குற்றியலுகரத்திற்குச் சார்பு ஆகாமையின், இலக்கண வழுவாம்;பிற' எனின், ஆகாது; குற்றியலுகரம் இடமும் பற்றுக்கோடும் சார்ந்து அன்றி நில்லாது என்றது அல்லது, இடமும் பற்றுக் கோடும் குற்றியல் உகரத்திற்குச் சார்பாய் அல்லது வாரா என்னும் யாப்புறவு இன்மையின். குற்றியல் உகரம் தமிழ்ச் சிறப்பெழுத்தாகலின், வடமொழியின் வாராது ஆயிற்று. இக்குற்றியல் இகரக் குற்றியல் உகர உண்மை அறியாத உரையாசிரியர்,

' இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே '

என்றதற்கு இடைப்படினும் குறுகும் என உம்மையை மாற்றி, இறந்தது தழீஇயிற்று ஆக்கு

1. தொல் - பாயிரவிருத்தி-பக். 8.

> வர். அஃது ஆசிரியர் கருத்தொடு முரணும் என்பது இக்கூற்றான் அறிக. இன்னும், 'புணர்ச்சி வேற்றுமை பற்றி வேறு ஆயிற்று' என்பார்க்குக் களவு, கனவு முதலியனவற்று உகரமும் புணர்ச்சி வேறுபட்டுக் குற்றியல் உகரத்திற்கு உரிய விதி முழுவதும் பெறு தலின், அதனையும் குற்றியலுகரம் எனக் கோடல் வேண்டும்; அவ்வாறு கொள்ளாமையின், அவர்க்கும் அது கருத்தன்று என மறுக்க.''[1]

இவ்வாறு இலக்கணப் புலமை நிரம்பிய சிவஞான முனிவர் சமயத்துறையிலும் தருக்க முறையிலும் சிறந்த புலமை பெற்றவர் என்பதை இவர் சிவஞான போதத்துக்கு எழுதிய **'பாடியம்'** என்கிற உரை நன்கு எடுத்துக் காட்டும். அது **'திராவிட மாபாடியம்'** என்னும் பெயருடன் உலக வழக்கில் வழங்குவது ஒன்றே தமிழில் அது போன்ற வேறு உரை இல்லை என்பதை நன்கு எடுத்துக் காட்டும். **மெய்கண்ட தேவர்** எழுதிய மூன்று நான்கு அடிகளாலாகிய பன்னிரண்டு சூத்திரங்களுக்கு அத்துணை விளக்கமாக உரை எழுத வல்ல திறன் சிவஞான முனிவருக்கே கைவரப் பெற்ற திறன் என்பதை அப்பாடியத்தை ஆராய்வார் நன்கு உணர்வர். சைவ சித்தாந்தத்தின் நுண்ணிய கருத்துக்களைக் காட்டும் நிலையும், அதை மறுப்பாரை மறுக்கும் திறனும், பிற எடுத்துக்காட்டுக்களும் அதைப் பயில்வாரே நன்கு அறிவர். இங்கு இரண்டொன்று காணல் நலம் பயப்பபதாகும்:

> ''மறைப்பாவது, அநாதியாய மூல மலத்தின் காரியமாகலின், அது முதல்வனாற் செய்யப்படுங் காரியமென்பது என்னையெனின், கூறுதும்—முதல்வனுவான் முற்றுணர்வுடைமையின், உலகத்துயிர்கள் படுந்துன்ப முழுவதும் உணர்ந்தோனாகியும்,

1. முதற்சூத்திர விருத்தி, பக் 38, 39.

பேராற்றலுடைமையான், உயிர்களையெல்லாம் ஒருங்கே வீடு பேறடைவிக்க வல்லவனாகியும், சிவன், சங்கரன் முதலிய பெயர்களானும் அறியப்படுவதாய், விருப்பு வெறுப்பின்றி, எல்லா உயிர்கண்மாட்டும் ஒப்ப நிகழ்வதாய், தொடர்பு பற்றாது, பிறர் துன்பங்கண்டுழி அதனை அக்கணமே நீக்குதற்கு விழையும் மனவெழுச்சியாகிய பெருங்கருணையுடைமையான், அவற்றை ஒருங்கே வீடுபேறடைவித்தற்கண் ஒருப்பாடு மிக்குடையனாகியும் இத் தன்மைகளெல்லாமுடைய இறைவன் உயிர்களால் அநாதி முதல் ஈட்டப்பட்டுப் பல்வேறு வகைப்பட்ட துன்பங்களையெல்லாம் விளைவிக்கும் வினை வலியினையும், எல்லாப் பெருங்கொடுமைக்கும் மூலமாகிய சகச மல சத்திகளையும், அவற்றான் பெருந் துன்பங்களையும் கெடுத்து, எல்லா உயிர்களையும் ஒருங்கே வீடுபேறு அடைவியாமைக்குக் காரணம். குடங்கையினேந்திய தீயின் சூட்டினை நிகழவொட்டாது தனக்கு மாறாகிய மந்திர முச்சரிக்குங்காறுந் தடுத்து நிற்குங் குளிகை போல; அம்முதல்வனைச் சிறப்பியல்பான் உணரும் மெய்யுணர்வு தோன்றுங்காறும் அவனது பெருங்கருணை உயிர்கண்மாட்டு ஒருங்கே நிகழாத வண்ணம் தடுத்து நிற்கும் உயிர்க் குற்றமாகிய அவ்வம்மல சத்தியின் வழி நின்று அவற்றை நடத்துவதாகிய இவனது சங்கற்பமேயன்றிப் பிறிதில்லையென்பது பெறப்படுதலின், அங்ஙனம் நடத்துவதாகிய முதல்வனது சங்கற்பமே ஈண்டு மறைப் பெனப்படும்.''

*(பாடியம். 2 ஆம் சூத்திர உரை, பக். 126)*

தர்க்க வகைக்கு ஓர் எடுத்துக்காட்டு கண்டு மேலே செல்வோம்:

'அற்றேல், கண்ணிந்திரியம் எதிர்முக மாத்திரையானன்றிச் சென்றியைந்து காண்பதாயின்,

மரத்தின் நுனிக்கொம்பினையும், சேய்மைக்கண்ண தாகிய சந்திரனையும் ஒருங்கு காண்டலும், பளிங்கு முதலியவற்றின் உள் வைத்த பொருளைத் தடை யின்றிக் காண்டலுங் கூடுமாறென்னையெனின், கூறுதும்—கண் முதலிய இந்திரியங்கள் விளக்கொளி போல விடயத்தின் இயைந்தன்றி விளக்குதலின்மை யானும், இயைபு வேண்டாத வழுச் சுவர் முதலிய வற்றான் மறைந்த பொருளையுங் காண்டல் வேண்டு மென்பது மேற்கூறினுமாகலானுங் கண்ணிந்திரியத் திற்குக் காணுங்கால் விடயத்தோ டியைபுண்மை நியமமென்பது பெறப்பட்டது; படவே நுனிக் கொம்பினையுங் காண்டலும், பளிக்கு முதலிய வற்றின் உட்பொருளைக் காண்டலும் இயைந்தே காணும்மென்பது பெற்றாம். ஆண்டு நுனிக்கொம் பினையுந் திங்களினையும் ஒருங்கு கண்டேனென்று அநுபவ நிகழ்தல், தாமரையிதழ் நூற்றினையும் ஊசியான் ஒருங்கே போழ்ந்தேனென நிகழும் அநுபவம் போல விரைந்து செல்லுங் கால நுட்ப மறியாமையின் நிகழும் அபிமான மாத்திரையே எனவும், பளிங்கு முதலியன தூயவாகலாற் சுவர் முதலியன போலத் தடை செய்வனவன்மையின், அதிசூக்குமமாகிய கண்ணொளி விளக்கொளி போல அவற்றின் உட்சேறல் கூடுமெனவும் நுண்ணுணர் வான் ஓர்ந்துணர்க.''

(பாடியம், 2-ஆம் சூத்திர உரை, பக். 240—41.)

இக்காலத்திலே வாழ்ந்த மற்றோர் உரையாசிரியர் **சைவ சொக்கப்ப நாவல**ராவர். இவர் **தஞ்சைவாணன் கோவைக்கு** உரை எழுதியுள்ளார். இவரையன்றித் திருத்தணிகை கந்தப்பையர் மக்களாகிய விசாகப் பெரு மாளையர், சரவணப் பெருமாளையர் என்ற இருவரும் தமிழ் உரைநடைக்குத் தொண்டு செய்தார்கள் என்ப தைத் **திரு. வ. சு. செங்கல்வராயப் பிள்ளை** அவர்கள் நன்கு

காட்டியுள்ளார்கள்.[1] இவர்கள் எழுதிய இலக்கண உரை நடை விளக்கங்களையும், பிற உரைநடைகளையும் அவர் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார். இவர்கள் காலத்திலே தான் பிற சமயங்களை வளர்க்க வந்த மேலை நாட்டுக் கிறித்தவப் பாதிரிமார் தத்தம் சமய உண்மைகளைக் காட்டும் உரைநடை நூல்களையும் பிற சிறு உரைநடை நூல்களையும் எழுதினர். அவைகளைப் பின்னர்க் காண் போம்.

மேலே கண்ட உரையாசிரியர்களெல்லாம் சைவ சமயச் சார்புடையவர்களாகவே உள்ளார்கள். ஆனால், வைணவ சமண சமயச் சார்புடைய நூல்களும் நாட்டில் வளராமல் இல்லை. சமணர்கள் **ஸ்ரீ புராணம்** முதலிய உரை நடை நூல்களையும் வைணவர்கள் **அஷ்டாதச ரஹஸ்யம், குருபரம்பரைப் பிரபாவம்** முதலிய உரைநடை நூல்களையும் எழுதியுள்ளனர். இவை வெளி வந்த காலம் நாம் காணும் இக்காலத்தை ஒட்டியதாகவே இருக்க வேண்டும். இக் காலத்திலும் வடமொழி ஆதிக்கம் மிக்கு இருந்தது என மேலே நாம் கண்டபடியால், இந்த வைணவ சமய உரை நடை நூல்களிலும் வடமொழிச் சொற்கள் அதிகமாகக் கலந்துள்ளன என்னலாம். நாம் முன் கண்ட ஈட்டு உரை போன்ற வகையிலே இவ்வைணவ நூல்கள் செல் கின்றன. இதற்குக் காரணம், பல வடமொழிக் கருத்துக் களைத் தமிழில் கொண்டு வந்து புகுத்த நேர்ந்ததே என் பதைத் **திரு. செல்வக்கேசவராய முதலியார்** நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்.[2] இவர், 'பதினெட்டாவது நூற்றாண் டின் இறுதி வரையில் தமிழ்ச் சிறுவர்கள் கற்கலான வசன நூல்களை விரல் விட்டெண்ணுமிடத்து, **'அவிவேக பரிபூரண குரு கதை'** ஒன்று எனச் சுண்டு விரல் ஒன்றை

1. History of Tamil Prose, P 42
2. **தமிழ் வியாசங்கள்**, பக். 110

மாத்திரமே மடக்கலாம்; மற்றை விரல்கள் நிமர்ந்தே நிற்கும்"[1] என்று கூறுவதால், உரை எழுதும் வகையில் வந்த தமிழ் உரை நடை வளர்ச்சி ஒரு புறம் நிகழ, இது போன்ற கதைகளை உரை நடையில் எழுதும் பழக்கம் பதினெட்டாம் நூற்றாண்டில் தொடங்கிற்று என்பதை நன்கு உணரலாம். இந்தத் துறையில் அடுத்து அறிஞர் சிலர் நல்ல தொண்டு செய்திருக்கின்றனர் என்பதையும் காணலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றி வாழ்ந்த **தாண்டவராய முதலியார்** தமிழ் உரை நடைக்கு ஒரு புதுப் பாதை வகுத்துள்ளார். அவர் **'கதா மஞ்சரி'** என்னும் கதை நூல் தொகுப்பு ஒன்றைத் தமிழ் உரை நடையில் தந்துள்ளார். இக்கதைகள் அனைத்தும் உரை நடையில் இளம்பிள்ளைகளும் கற்கும் வகையில் அமைந்தன எனக் கொள்ளல் வேண்டும். எனவே, உயர்ந்த உரையாசிரியர்கள் போன்று கற்றோர் மட்டும் பயின்று அறியும் உரை நடைகளையே கண்டு வந்த நமக்குச் சென்ற நூற்றாண்டிலேதான் சிறுவரும் சிறிது கற்றவருங்கூடப் படித்து அறிந்துகொள்ளும் வகையில் உரைநடை நூல் தோன்றிற்று என்பதைக் காண முடிகின்றது. இவர் இயற்றிய மற்றோர் உரை நடை நூல் இன்றும் நாட்டில் நிலவுகின்றது. அதுதான் **'பஞ்சதந்திரக் கதைகள்'**. இவ்வாறு இன்று இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் மிகச் சிறந்ததாகப் போற்றப்பெறும் சிறு கதை, பெருநாவல் முதலிய தோன்றுவதற்குக் காரணமாய் உள்ள அந்தச் சிறு கதை பெருங்கதைகளை உரைநடை ஆக்கித் தந்த தாண்டவராய முதலியார் அவர்களுக்குத் தமிழ் உலகம் என்

1. தமிழ் வியாசங்கள், பக். 111

றென்றும் கடமைப்பட்டுள்ளது. இவர் இவ்வாறு உரை நடை மட்டுமின்றிப் பல பாடல்களையும் எழுதியுள்ளார் எனவும் அறிகிறோம். இன்று நாட்டில் உலவும் பலப் பல சங்கப்பாடல்களை ஏட்டிலிருந்து எடுத்து ஆராய்ந்த சிறந்த புலவர் இவரே என அறிஞர் காட்டியுள்ளனர்.[1] தொல்காப்பியம், திவாகரம், கல்லாடம், திருக்குறள் பரிமேலழகர் உரை போன்ற நூல்களை எடுத்துத் தொகுத்துத் தமிழ் வளர உதவி நின்றார் இவரே. திரு. வ. சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள், அக்காலத்தில் எழுந்த உரை நடை வளத்தையும், தாண்டவராய முதலியார் பணியையும் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

தாண்டவராய முதலியாருக்கு முன்னமே **மதுரைக் கந்தசாமிப் புலவர்** தமிழ் மொழிக்குச் செய்த உரை நடை தொண்டைத் திரு. செல்வக் கேசவராய முதலியார் அவர்கள் நன்கு எடுத்துக்காட்டியுள்ளார்.[2] இவர் **'விவகார சங்கிரகம்'** என்ற நூலை மொழி பெயர்த்துள்ளார் என அறிகிறோம். இவருடைய உரைநடை பெரும்பாலும் வடமொழிச் சொற்களைக்கொண்டே அமைந்துள்ளது எனவும் அறிகிறோம்.

இவ்வாறு சென்ற சில நூற்றாண்டுகளில் நம் தமிழ் நாட்டில் தமிழ் வளர்த்த புலவர்கள் ஒரு புறம் இருக்க, தமிழ் வாழும் பிற நாடுகளிலிருந்து வந்த பிறரும் தமிழுக்கு அரண் செய்தார்கள் எனக் காண்கின்றோம். அவருள் தலை சிறந்தவர் **யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர்** அவர்கள்.[3] நல்ல நடையில் கதை, உரைநடை

1. History of Tamil Prose, p. 43.
2. தமிழ் வியாசங்கள், பக் 112.
3. ஷை பக் 46.

முதலிய எழுதுவதற்கு நாவலர் தம். '**பெரிய புராண வசனம்**' என்னும் நூல் வழிகாட்டியாய் உள்ளதெனத் திரு. செல்வக்கேசவராய முதலியார் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.[1] நாவலர் இவ்வாறு பெரிய புராணம், **திருவிளையாடற்புராணம்** முதலியவற்றை உரைநடை யாக்கியுள்ளார்; மற்றும் சிறுவர்களுக்குப் பயன்படக்கூடிய **பால பாடம், சைவ வினு விடை** போன்றன இவர் தம் உரை நடை நூல்களாகும். இவை அனைத்தும் சைவ சம்பந்தமான நூல்களாய் அமைந்த காரணத்தால், பிறரால் நன்கு பயிலப்படாதனவாக அமைந்து விட்டன என்னலாம். சைவர்களுக்குள்ளும் சமயப் பற்றுள்ளவர்களுங்கூட முதல் நூலைப் பயின்று அறியவேண்டுமென்ற உள்ளத்தோடு, முதல் நூல்களையும் அவற்றின் உரைகளையும் நாடி நிற்கின்றமையின், இவை அதிகமாக வளர்ச்சியுறவில்லை. அத்துடன் இவருடைய சமயக் கொள்கை உயர்ந்த நிலையிலே போற்றப்பட்டமையின், சாதாரண சைவசமயிகளுங்கூட இவருடையதைப் பின்பற்ற முடியவில்லை. இவருடைய நடை பற்றித் திரு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள் காட்டிய மேற்கோளையே நானும் காட்டி அமைகின்றேன்:

> 'அன்பானது, குடத்துள் விளக்கும் உறையுள் வாளும் போல ஒருவர் காட்டக் காணற்பாலதன்று; அவ்வன்புடைமையால் வெளிப்படும் செயல்களைக் கண்ட வழி, 'இவை உண்மையால் இங்கே அன்பு உண்டு,' என்று அநுமித்துக் கொள்ளற் பாலதாம். (பெரியபுராணம், சூசனம். செய். பக். 128)[2]

---

1. தமிழ் வியாசங்கள் பக். 113.
2. History of Tamil Prose, P. 48.

இவரும் வடமொழியை அதிகம் உபயோகித்தார். என்றாலும், இவருக்கு முன் உபயோகித்தவர்களைப் போன்று அத்துணைப் பேரளவில் உபயோகிக்கவில்லை என்னலாம்.

**'தினவர்த்த மானி'** என்ற பத்திரிகை தோன்றிய காலமும் அதுவாகும். எனவே, பத்திரிகை வழித் தமிழ் உரைநடையை வளர்க்கத் தொடங்கிய காலத்தின் தொடக்க நாளாகிய அந்நாளை நாம் மறக்க முடியாது. அதில் **வீராசாமி செட்டியார்** என்பவர் சில சில பழமொழிகளை அமைத்து உரைநடையில் பல பொருள்களை எழுதி வந்தார் என அறிகிறோம்.[1] இவையெல்லாம் **விநோதரச மஞ்சரியில்** தொகுக்கப் பெற்றுள்ளன என அறிகிறோம்.

தமிழ் உரை நடையில் இதுவரை காணாத ஒரு புது வகை இலக்கியத்தை நாம் இப்போது எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ் நாட்டில் பல்வேறு அரசியல் போராட்டங்களுக்கும், பிற நாட்டார் மொழி ஆதிக்கம் முதலிய வற்றிற்குமிடையே இந்த இரண்டொரு நூற்றாண்டுகளில் தமிழ் உரைநடை ஓரளவு வளர்ந்தது எனக் கண்டோம். அவற்றுள் ஒரு வகை உரைநடையே **'நாட்குறிப்பு.'** தத்தம் வாழ்வில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், அந் நாட்களில் நடைபெறும் நாட்டு நடப்பு உலக நடப்பு முதலியவற்றையும் முறை தவறாமல் ஒழுங்காகக் குறித்து வைப்பார் தொகை தமிழ் நாட்டில் மிகக் குறைவானது. ஏன்? இல்லை என்றே கூடச் சொல்லிவிடலாம். மேலை நாட்டில் ஒரு சிலர் இத்தகைய பழக்கங்களை மேற்கொண்டுள்ளனர் என அறிகிறோம். ஒரு சில நூற்றாண்டுகளாக அந்தப் பழக்கம் மேலை நாட்டில் நிலவி வந்த போதிலும், தமிழ் நாட்டில் அவ்வாறு திட்டமாக நாட்குறிப்பைக் குறித்து வைக்கும் வழக்கம் இல்லை என்

1. தமிழ் வியாசங்கள், பக். 114.

பதை அறிவோம். எனினும், அத்துறையில் ஒழுங்காகக் கருத்திருத்தியவர் ஒருவரே. அவர் அப்பணியைத் திறம் படச செய்து தம் நாட்குறிப்பை ஓர் இலக்கியமாக—வரலாற்றுக் காப்பியமாக—வாழும் வகையில் எழுதிவைத்து விட்டார் எனின், அது மிகையாகாது, ஆம்! அத்தகைய பெரியாரே **ஆனந்தரங்கம் பிள்ளை** அவர்கள்.

தமிழ் நாட்டு மண்ணில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக் காரருக்கும் உரிமை பற்றிப் போராட்டம் நடந்த அந்தப் பதினெட்டாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் வாழ்ந்தவர் இவர். பிரெஞ்சு அரசாங்கத் துணையாளராகவும் மொழி பெயர்ப்பாளராகவும் புதுச்சேரியில் இருந்து பணியாற்றிய இவர், தம் நாட்களில் நடந்த சாதாரண வீட்டு நிகழ்ச்சி தொடங்கி நாட்டு உலக நிகழ்ச்சிகள் வரையில் அனைத்தையும் அன்றாடம் தவறாது எழுதி வைத்துள்ளார். இவரது அத்தகைய குறிப்புக்கள் இருபத்தைந்து ஆண்டுகளுக்குத் தான் இருக்கின்றன. என்றாலும், அக்குறிப்புக்கள் அக்காலத்திய தமிழ் நாட்டையே நன்கு விளக்குகின்றன என்னலாம். அவற்றை பிள்ளை அவர்கள் தமிழ் உரை நடையில் எழுதியுள்ளார்கள். உரை நடை தெள்ளத் தெளிந்த தமிழ் நடையில் இல்லை என்றாலும், இந்நடையை நாம் அறிய வேண்டுவது அவசியம். இது போன்று தமிழில் முன்னும் பின்னும் எப்போதும் ஒரு குறிப்பு நூல் இருந்ததில்லை. இதில் வடமொழி, ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகள் அதிகமாக விரவியுள்ளன என்பதைப் பயில்வோர் நன்கு அறிவர். மற்றும் தமிழ் நாட்டு மக்கள் வழக்கத்திலுள்ள கொச்சைச் சொற்களும் விரவியுள்ளன. இரண்டோர் எடுத்துக் காட்டுக்கள் அமைவுடையனவாம் எனக் கருதுகின்றேன்.

**1740 மே 16-ரௌத்திரி, வைகாசி, 7-ஆம் தேதி திங்கட்கிழமை.**[1]

"காலமே துவக்கி சாயங்கால பரியந்திரம் ஆற்காடு வேலூர் வந்தவாசியிலே யிருந்தும் பின்னை

1. நாட் குறிப்பு, தொகுதி (1) பக். 89.

யும் சுத்துப் பட்டிலேயிருந்தும் பிராம்மணரும், கோமுட்டிகளும். தத்துவாதிகளுமாய் வந்த பேர் ஆயிரம் சனத்துக்கு அதிகமே உண்டு. அதிய செட்டியார் ஆனந்த செட்டி மனுஷன் வெள்ளைச் செட்டியும் நம்முடைய சகலாத்து மத்ததுகளை எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தார். அவர் சொன்ன சேதி என்னவென்றால், நிசாம் பின்னை இருபதினாயிரம் குதிரையுடன் பிரகாலே வருகிற தாகவும் முன்னே நாற்பதினாயிரம் ஐம்பதினாயிரம் குதிரையை அனுப்பி வைத்தாரென்றும் அந்தக் குதிரைகள் கணவாய்க் கிட்ட வந்திருக்கிறதென்றும் கணவாயிலே அப்துல் நபியினுடைய பிள்ளை களுடனே சண்டை செய்து அப்துல் நபியினுடைய பிள்ளைகளையெல்லாம் முறிஞ்சிபோய் அதன் பேரிலே அப்துல் நபிகான் சமாதானம் பேசி லக்ஷத்தைம் பதினாயிரம் ரூபாய் தீர்த்துக்கொண்டு திரமத்துக ளெல்லாம் கொடுத்து பேட்டி பண்ணிக்கொண்ட தாகவும், மராட்டியர் இப்புறம் வருகிறது ஊர்ச் சிதமாய்த்தானே சொன்னார்களென்று சொன்னால் நாவாபு அசனல்லி—டக்கோ சாயபு இவர்களெல்லாம் இரண்டாயிரங் குதிரையுடனே போய் கணவாய் மகாபத்திரமாய் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றும், இப்படிப்பட்ட சேதிகளாய்ச் சொன்னார். இருக்கிறதானால் காரியமோ பாதியாயிருக்கிற தென்று சொன்னார்.''

**ஒக்டோபர் 16 அற்பசி 3, சோமவார நாள்:** [1]

''காலமே எட்டு மணிக்கு சின்ன துரையவர் களுக்குப் பெரியதுரையவர்கள் பெரிய துரைத்தனம் கொடுத்து 21 பீரங்கி போட்டு சகலமான வெள்ளைக் காரர் குமிசெலியேர் மற்றப்பேர் அனைவரும் வந்து

1. நாட் குறிப்பு, தொகுதி, 1, பக். 137.

பேட்டி பண்ணிக்கொண்டார்கள். சாவியும் ஒப்பிச்சுப் போட்டு தம்முட அதிகாரமும் அவர் வசம் பண்ணினுர்கள்.''

**ஒக்டோபர்-22, அற்பசி 10, செவ்வாய்க்கிழமை:**[1]

''காலமே சீர்மையாகிய பிரான்சுக்கு ஒரு கப்பல் பாயெடுத்து ஓடிப்போனுன் அந்தக் கப்பல் பேர் பினிச்சு: கப்பல் கப்பித்தான் பேர் முசேபுரோ சேல். இந்தக் கப்பலிலே ஏற்றிய தட்டு 1001, செம் மரம் பாரம் 2000, மிளகு பாரம் 600, பின்னேயும் சில்லறை தினுசுகளும் ஏற்றி காலமே கப்பல் பாயெடுத்துச் சீர்மைக்குப் பயணம் போனுன். கோட்டைக்குப் பதினெரு பீரங்கியும் போட்டுப் பாயெடுத் தார்கள்.''

இக்காலத்தில் வாழ்ந்த **இராமலிங்க அடிகளாரது** '**மனு முறை கண்ட வாசகம்**' என்ற உரை நடை நூல் சிறந்த தாகும். அதுவும் மற்றும் அவர் எழுதிய பிற உரை நடை களும் கடிதங்களும் அக்கால உரை நடையை நன்கு நமக்குக் காட்டுகின்றன. இந்த நாளிலே எழுதிய **வேதநாயகம் பிள்ளே** யின் **பிரதாப முதலியார் சரித்திரம்** என்ற பெருங்கதை உரை நூலைப் பற்றி அடுத்த பகுதியில் காண்போம். இன்னும் பலர் இக்காலத்தில் சிறு உரை நடை நூல்களும் இயற்றி யுள்ளனர். அவர்களின் பெயர்களேயும் எழுத்துக்களேயும் எடுத்துக் காட்டிக்கொண்டே செல்லின், எல்லே விரியும். எனவே, இக்காலத்தில் தமிழ் நாட்டு அறிஞர் வளர்த்த உரை நடை பற்றிய ஆய்வினே நிறுத்தி, ஏறக்குறைய இதே காலத்தில் நம் நாட்டுக்கு வந்த மேலே நாட்டு அறிஞர்கள் தமிழ் இலக்கியத்தை—சிறப்பாக உரை நடையை—எவ் வெவ்வாறு வளர்த்தார்கள் என்பதை இனிக் காணலாம்.

---

1. ஷை பக். 181.

# IX

# மேலை நாட்டார் தொண்டு

கடந்த சில நூற்றுண்டுகளிலே தமிழில் ஏற்பட்டுள்ள உரை நடைத் தோற்றத்தையும், அதன் வளர்ச்சியையும் கண்டோம். அதே காலத்திலேதான் தமிழ் நாட்டிலும் பரந்த பாரதத்திலும் கிறித்துவம் அதிகமாகப் பரவலா யிற்று. அச்சமயச் சார்புடைய அரசாங்கம் இந்திய நாட்டில் நிலைத்து நின்ற காரணத்தால், அரசாங்கத்துணை கொண்டும் பிற வகையிலும் அச்சமயத்தை வளர்க்கப் பலர் பாடுபட்ட னர். மேலை நாடுகளிலிருந்து தம் மெய்ச்சமய நெறி பரப்ப வந்த கிறித்தவப் பாதிரிமார் பலர், அவர்கள் சமய நெறியை வளர்க்க வந்த வேளையில் தாங்கள் தங்கும் நாடுகளின் மொழியையும் நன்கு கற்று, அம்மொழிகளில் வல்லவர் களாகி, அம்மொழிகளிலேயே தங்கள் சமய உண்மையை அவ்வந் நாட்டு மக்களுக்கு எடுத்து விளக்கினுர்கள்; அத் துடன் கற்ற மொழியில் உள்ள சிறந்த இலக்கியங்களையும் போற்றி வந்தார்கள். தமிழ் நாட்டுக்கு வந்து தங்கள் சம யத்தைப் பரப்பிய மேலை நாட்டுக் கிறித்தவப் பாதிரிமார்கள் அவ்வாறே தமிழ் மொழியைக் கற்று, தங்கள் சமயத்தை இம்மொழிவழிப் பரப்பினுர்கள். அத்துடன் இங்குள்ள பல நல்ல இலக்கியங்களைக் கற்று அவற்றைத் தத்தம் மொழியிலும் மொழி பெயர்த்தார்கள். ஒரு சிலர் தமிழ் மொழியிலேயே சில இலக்கிய இலக்கண நூல்களையும் எழு தினர். சிலர் **கம்பராமாயணம்** போன்ற இலக்கியங்களைப் பயின்று, அதே போலத் தம் சமய உண்மைகளை எடுத்துக் காட்டும் சில இலக்கியங்களையும் எழுதினர். **குறள்,**

**நாலடியார்** போன்ற அறநெறி இலக்கியங்களை மட்டுமன்றித் **திருவாசகம்** போன்ற சமய இலக்கியத்தையும் **டாக்டர் ஜி. யூ. போப்பு** என்பார் மொழி பெயர்த்துள்ளார். இன்னும் திராவிட மொழிக் குடும்பம் பற்றித் தெரியாதிருந்த தமிழக மக்களுக்கு அம்மொழிக் குடும்பம் பற்றிய வகைகளையும், அமைப்புக்களையும், இயல்புகளையும், பிறவற்றையும் நன்கு எடுத்துக்காட்டியவர் **'கால்டுவெல்'** என்ற மேலை நாட்டுச் சமயப் போதகரேயாவர்.

இவ்வாறு அன்றிச் சிலர் உரை நடை நூல்கள் எழுதியும் வெளியிட்டுள்ளனர். இவர்கள் காலத்திலேதான் அச்சு யந்திரம் தோன்றியதாதலால், எல்லா மொழிகளும் அவ் வச்சுக் கலையின் துணை கொண்டு நன்கு வளர்ந்தன என்னலாம். எனவே, அந்தத் துறையிலும் தமிழை அச்சிட்டு வளர்த்த பெருமை மேலை நாட்டவருக்கு உண்டு. இங்கு நாம் அவைகளைப் பற்றியெல்லாம் அதிகமாக ஆராய்ச்சி செய்ய வேண்டுவதில்லை. அவருள் உரை நடைக்குத் தொண்டாற்றிய ஒரு சிலரைப் பற்றியும், அவர்வழி உரை நடை வளர்ந்த சிறப்பியல்பையும் மட்டுமே ஈண்டுக் காண்போம் :

தமிழ் வளர்ச்சியைப் பல் வேறு சமய நெறி நின்று ஆராய்ந்த அறிஞர் **திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி** அவர்கள், அத்தமிழ் மொழி கிறித்தவ சமயத்தவரால் எவ்வெவ்வாறு போற்றி வளர்க்கப்பட்டது என்பதைத் தெளிவாகக் **'கிறிஸ்தவமும் தமிழும்'** என்ற தமது நூலில் சிறந்த எடுத்துக் காட்டுக்களோடு விளக்கியுள்ளார். மேலை நாட்டிலிருந்து வந்த கிறிததவப் பெரியார்கள் மட்டுமன்றித் தமிழ் நாட்டிலேயே தோன்றித் தமிழையே தாய் மொழியாகக்கொண்ட கிறித்தவர்தம் தொண்டுகளையும் அந்நூலில் தொகுத்தளித்துள்ளார். அவர், அறிந்த புலவர் ஒருவர் பின் ஒருவராக எடுத்துக்கொண்டு அவரவர் இலக்கிய வழியும், இலக்கண

வழியும், செய்யுள் வழியும், உரை நடை வழியும், மொழி பெயர்ப்பு வழியும் செய்த தொண்டுகளை எடுத்துக் காட்டி யுள்ளார்; இடையிடையே பலப்பல மேற்கோள்களையும் அவர்தம் எழுத்துக்களையும் எடுத்துக் காட்டி விளக்கத் தவறவில்லை. எனவே, மேலை நாட்டாரது விரிந்த தமிழ்த் தொண்டைக் 'கிறித்தவமும் தமிழும்' என்ற நூலில் சிறக்கக் காணலாம். ஈண்டு நாம் அம்மேலை நாட்டார் தமிழ் உரை நடை வளர்ச்சிக்கு எவ்வெவ்வாறு பாடு பட்டுள்ளனர் என்பதை மட்டும் கண்டு மேலே செல்லலாம்.

தொல்காப்பியர் காலந்தொட்டுத் தமிழில் உரை நடை நூல்கள் இருந்தன என்பதற்குச் சான்றுகள் கிடைக்கின் றன. என்றாலும், முடிந்த நிலையில் உரை நடை நூல் என்று கூறும் ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. **சிலப்பதிகாரம்** போன்ற உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுட்கள் இரண் டொன்று அக்கால உரை நடை நிலையை நமக்குக் காட்டு கின்றன. பின்பு இடைக்காலத்தில் தோன்றிய உரை நடை களெல்லாம், முன்னைய செய்யுளுக்குப் பொருள் காணுமுகத் தான் அமைந்த உரை நடைகளாகவே அமைகின்றன. பிற் காலத்தில் வந்த **தாண்டவராய முதலியார்** போன்றவர்கள் பஞ்சதந்திரக் கதை போன்ற ஒரு சில உரை நடை நூல்களை எழுதினர் என முன் அதிகாரத்தில் கண்டோம். எனினும், அவர்கள் உரை நடை எழுதுமுன் தமிழில் உரை நடை நூல் வந்துவிட்டது. அந்த முதல் தமிழ் உரை நடை நூலை நமக்கு எழுதி உதவியவர் ஒரு மேலை நாட்டு அறிஞரே ஆவர்.

'தமிழில் தனி உரை நடை நூல் ஐரோப்பியரால் முதல் முதல் எழுதப்பட்டது என்பது மறுக்க முடியாத உண்மை.'[1] என்று திரு. சீனி. வேங்கடசாமி அவர்கள் சொல்லி, தம்

1. கிறித்தவமும் தமிழும், பக். 21.

கொள்கைஎய நிலைநாட்டு முகத்தான் மேலைநாட்டு அறிஞர்களை நமக்கு அறிமுகப்படுத்துகிறார்கள். தமிழில் முதன் முதல் உரை நடை நூல் எழுதியவர் **வீரமாமுனிவரே** எனப் பலரும் எண்ணியிருப்பதைத் தவறு எனக் காட்டி, பதினேழாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் வந்து, இங்கே வாழ்ந்த **ராபர்ட்-டி-நோபிலி** என்ற **தத்துவ போதக சுவாமியார்** அவர்களே முதல் முதல் தமிழில் தனி உரை நடை நூல்கள் எழுதியவர் எனக் காட்டுகின்றார். பின்பு அவரை ஒட்டி **வீரமாமுனிவர், சீகன்பால்கு ஐயர், போப்பு, கால்டுவெல்** போன்றார் தமிழ் உரை நடை நூல்களை எழுதித் தமிழ் இலக்கியப் போக்கிலேயே ஒரு திருப்பு மையத்தை அமைத்தனர் என்பதைக் காண்கின்றோம். இவருள் சிலர் பாடல்கள் பாடியுள்ளாரேனும், பெரும்பாலோர் உரை நடையிலேயே தத்தம் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள் என அறிகிறோம். அவர்தம் உரை நடைகளை அப்படியே காணுமுன், அவர்கள் உரை நடையை அதிகமாகப் பயன்படுத்த நேர்ந்த காரணத்தைக் காண்போம் :

தமிழில் மிகு பழங்காலந் தொட்டு, உரை நடைக்கு இலக்கணம் இருப்பினும், புலவர் பலரும் செய்யுளிலேயே தத்தம் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். சாதாரணமாக ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளும் கருத்துரைகளெல்லாங்கூடச் சங்க காலத்தில் செய்யுள் நடையிலே இயல்வதைக் காண்கிறோம். கணவன் இறந்த பின் கனல் முழுக நினைக்கும் **பூதப் பாண்டியன் தேவியார்,** கடந்ததைக் கருத்தில் நினைந்து ஏங்கும் **பாரி மகளிர்,** அரசனுக்கு அறிவுறுத்த வந்த **வெண்ணிக்குயத்தியார்** போன்ற பெண்டிர் உட்படப் பலரும் செய்யுளிலேயே தத்தம் கருத்தைத் தெரிவித்துள்ளனர். காரணம் என்ன? அவர்கள் சிறந்த புலவர்களாய் இருந்தமை ஒன்று. அத்துடன் அக்காலத்தில் ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதும் பழக்கம் சுருங்கச்

சொல்லி விளங்க வைக்கும்முறையில் அவர்களைச்செய்யுளையே எழுதவைத்திருக்கும் என்பது மற்றொன்று.[1] ஆம்! சொல்ல வேண்டிய பொருளைச் செய்யுளில் சுருக்கமாகச் சொல்லிவிட லாம். ஆனால், அது பலருக்கும் விளங்காது. என்றாலும், எழுதுவது சற்றுக் கடினமாகக் கருதிய காரணத்தாலும் அக் காலத்தில் பலர் கற்றறிந்தவராய் இருந்ததனாலும், செய் யுளையே உரை நடையினும் அதிகமாக அக்காலப் புலவர்கள் இயற்றினார்கள்.

மேலை நாட்டிலிருந்து வந்த அறிஞர் பலரும் மக்களுடன் மிக நெருங்கிப் பழகியதோடு, தத்தம் கருத்தை எளிய வகை யில் பலருக்கு விளக்கித் தத்தம் சமயத்தை வளர்க்க நினைத் தனர். எனவே, அவர்கள் தங்கள் நாட்டில் எளிமைக்கும் பயன்படும் உரை நடை வழக்கையே இங்கேயும் கையாண் டார்கள் எனல் பொருந்தும். மற்றும், அவர்கள் நாடுகளில் அச்சுப்பொறி போன்ற நல்ல வெளியீட்டுச் சாதனங்கள் உருப்பெறத் தோன்றிய நாளிலே அவர்கள் இங்கு வந்தமை யும் மற்றொரு காரணமாகும். உரை நடையில் தங்கள் கருத்தை எளிய முறையில் எழுதி ஆயிரக் கணக்காக அச் சிட்டு, கற்றார்க்கும் மற்றார்க்கும் வழங்கி, அதன் வழியில் தங்கள் சமயம் வளர்க்கக் கருதியும் உரை நடையை விரும்பி எழுதினார்கள் எனக் கொள்ளலாம். மேலும், அவர்கள் நாடு களில் அன்றும்—ஏன்—இன்றுங்கூடச் செய்யுள் நடையி லும் உரை நடையே சிறந்த வகையில் அதிகமாக எழுதப் படுவதைக் காண்கிறோம். அதே நிலையில் அந்நாடுகளிலி ருந்து தமிழ் மண்ணில் சமயப் பணியாற்ற வந்த மேலை நாட்டு அறிஞர்கள் செய்யுளிலும் உரை நடையையே தங்கள் பணிக்கு ஏற்ற சாதனமாகக் கொண்டார்கள் என்பது பொருத்தமானதாகும்.

---

1. கிறித்தவமும் தமிழும், பக். 17.

தமிழில் முதல் முதல் உரை நடை எழுதிய மேலை நாட்டு அறிஞர் ராபர்ட்-டி-நோபிலி என்னும் தத்துவ போதக சுவாமி அவர்கள் என்பதை மேலே கண்டோம். இவர் இத்தாலித் தேசத்தைச் சேர்ந்தவர். இவர் நம் தமிழகத்துக்கு வந்ததற்குக் காரணம், சமயப் பணியேயாகும். பல இந்துக்களைத் தம் கிறித்தவ சமயத்துக்குத் திருப்பவே இவர் இங்கு வந்தார். இங்கு மதுரையில் இவர் நம் சமயத் துறவிகள் போன்றே வாழ்க்கை நடத்தினர்; இங்கு வந்த பிறகு தமிழ், வடமொழி இரண்டையும் நன்கு கற்று, அவற்றில் நன்கு எழுதிப் பேசிப் பழகினர். எனவே, தமிழில் இவர் உரை நடை எழுதுவதில் சிறந்தவராய் விளங்கினர் என்பது சொல்லவும் வேண்டுமோ! இவர் எழுதிய நூல்களைக் 'கிறித்தவமும் தமிழும்' நமக்குத் தொகுத்துத் தருகின்றது.[1] இவர் இயற்றியதை **ஞானேபதேச காண்டம், மந்திர மாலை, ஆத்தும நிர்ணயம், தூஷண திக்காரம், சத்திய வேத லட்சணம், சகுண நிவாரணம், பரம சூட்மமாபிப்பிராயம், கடவுணிருணயம், புனர் ஜென்ம ஆட்சேபம், நித்திய ஜீவன் சல்லாபம், தத்துவக் கண்ணுடி, ஏசுநாதர் சரித்திரம், தவசுச் சதம், ஞான தீபிகை, நீதிச் சொல், அநித்திய நித்திய வித்தியாசம், பிரபஞ்ச விநோத வித்தியாசம், தமிழ் போர்ச்சுகீசிய அகராதி** என்னும் பதினெட்டு நூல்களாகும். இவை யாவும் உரைநடைகளேயாகும். இவரும், இவர் போன்ற பிற மேனுட்டவரும் அக்காலத்தில் நாட்டில் இருந்த வடமொழி ஆதிக்க வழியே தம் நூல்களை இயற்றியுள்ளன ரென்பது இவர் தம் நூற்பெயர்களிலிருந்தும் இவர் தம் மொழி நடையிலிருந்தும் நன்கு விளங்கும். இவரது நடையைக் காண நாமும் இரண்டொரு மேற்கோள் கண்டு செல்வோம். இவரது உரைநடை நலத்துக்கு எடுத்துக் காட்டாகத் திரு. சீனி வேங்கடசாமி அவர்கள் இவரு

1. கிறித்தவமும் தமிழும், பக். 69.

-டைய ஞானோபதேச காண்டத்திலிருந்து இரண்டு பகுதிகளைத் தம் நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். நாமும் அதிலே ஓரிரு பகுதிகளைக் கண்டு மேலே செல்வோம். அப்படியே பிற மேலை நாட்டு உரை நூலாசிரியர்களுடைய எழுத்துக்களைக் காணின் ஓரளவு அவர்கள் செய்த தொண்டும், அவர்கள் காலத்துத் தமிழ் உரைநடை வழக்கும் நன்கு விளங்கும்.

தத்துவபோத சுவாமிகளின் உரைநடையில் ஒரு சில பகுதிகளைக் காணலாம்:

> ''இதிலே அவசியமாயறிய வேண்டிய விசேஷமுண்டு. அதேதென்றால் காரணமானது காரியத்துக்கு நன்மையெல்லாம் கொடுக்கிறதென்கிறது. காரியத்தைக் காரணமான துண்டாக்குகிற தென்று சொல்லப்படும். காரணத்திலே கொடுக்கப்படுகிற நன்மை காரியத்திலே இரண்டு வகையாயிருக்கலாம். ஒரு வகையாவது: காரியத்திலே இருக்கிறதெல்லாம் காரணத்திலே சரியாயிருக்கிறது. இந்த வகையிலே அக்கினி அக்கினியைச் செனிப்பிக்கும். சிங்கத்தைச் சிங்கமானது பிறப்பிக்கும். மனுஷனும் மனுஷனைப் பிறப்பிப்பான். இப்படிப்பட்ட காரண காரியத்தை விசாரிக்கும்போது காரணத்திலேயிருக்கிற நன்மையெல்லாங் காரியத்திலே சரியாயிருக்கிறதொழிய ஏற்றக் குறைச்சலாயிராது. இப்படிப்பட்ட காரண காரியத்தை அனுரூப காரணமென்றும், அனுரூப காரியமென்றுஞ் சொல்லத் தகும்.''

இவருடைய நீண்ட வாக்கிய அமைப்பிற்கு ஓர் உதாரணம் காண்போம்:

> ''ஆகையினாலே அந்த ஸ்தலத்திலே நிர்மல ஜலமுள்ள பீசோன், சேயோன், திகிரீஸ், ஏவுபிருத்தே என்ற நாலு நதிகள் பரவியோட, அவைகளுடைய தரங்கங்

களின் வேகத்தினாலே புறத்திலே ஒதுக்கப்பட்ட வச்சிர வயிடூரியங்கள் விளங்க, புஷ்பராக முதலான செம்பு ரத்தினங்கள் அங்கங்கே பிரகாசிக்க, பச்சை நீல மாணிக்கங்கள் அதினுடைய கரைகளைச் சிங்காரிக்க, கோமேதகம் பவளம் முத்து முதலானவைகள் அங்கங்கே சுவாலித்திருக்க, ஒன்றோடொன்று பின்னினாற்போல அலைகள் கரையிலே மோத, அஞ்ச மிதுனங்கள் நீந்த, தாமரை நெய்தல் முதலான புஷ்பங்கள் சலத்தையலச்சரிக்க, நானாவிதங்களான மச்சவினங்கள் நான்கெல்லையினும் மோடித் திரிந்து விளையாட, அப்படிப்பட்ட நதிகளுடைய மட்டோடு பரம்பியோடுகிற பிரவாகங்களினாலே அந்தஸ்தலமானது மிகவும் மதுரமான தாய் வேடிக்கையோடே பொருந்தியிருக்கிற பல பல விருக்ஷங்களாலே அலங்கரிக்கப் பட்டதுமாயிருந்து, கர்த்தரானவர் தாமேயுண்டாக்கின அப்படிப்பட்ட சிங்கார வனத்திலே கண்ணுக்குப் பிரியமானவைகளுமாய், பற்பல வர்ணங்களிலே விளக்கப் பட்டவைகளுமாய், ஸ்பரிசத்துக்கு மிருதுவானவைகளுமாய், கனிந்த பழங்களுடைய பாரத்தினாலே கவிழ்ந்திருக்கிற கப்புக் கவர்களுள்ள விருக்ஷங்களுடைய சாலைகள் அங்கங்கே ஒழுங்காகக் காணபித்திருக்க, பல பல வர்ணங்களைக் கொண்டிருக்கிற வாசனையுள்ள புஷ்பங்கள் விகசித்திருக்க, அவைகள் உதிர்ந்து பட்டுப் பட்டாவளி போலத் தரையெல்லாஞ் சிங்காரிக்க, மலர்ந்திருக்கிற புஷ்பங்களிலே ஒழுகும் தேனையும் வீசுகின்ற வாசனையையும் மதுகரங்கள் நுகர, எண்ணப்படாத பக்ஷி சாதிகள் காதுக்கின்பமாய்க் கூவுகிற குரல்களினாலே மதுரமான நாதகீதம் பண்ணுகிறாப்போல பாடிக் கொண்டிருக்க, மான், கலை, முயல், மரை முதலான வேடிக்கையுள்ள மிருகங்கள் பயமில்லாமல் அங்கே

யும் இங்கேயும் ஓடி விளையாட, சவ்வாது கஸ்தூரி முதலான பரிமளங்களைப் பிறப்பிக்கின்ற மிருகங் களினுலே ஆகாசத்திலேயும் பூமியிலேயுஞ் சுகந்தங்கள் வீச, சிங்கம், புலி, கரடி முதலான துஷ்ட மிருகங்கள் தமது துஷ்டகுணமெனப்பட்ட யாவையும் மறந்து, பயங்கர சொரூபியாயிராமல், சாந்த குணத்தைக் கொண்டிருந்து சாது மிருகங் களாய் அங்கேயுமிங்கேயுந் திரிய, பல பல புஷ்பங் களுடைய மதுரமான பரிமளங்களை மதுகரங்கள் பானம் பண்ணுகிறுப்போல யிருக்க, குளிர்ச்சியான தென்றல் வீச, சூரியனுனது தனது உக்கிரமான உஷ்ணத்தை மனுஷனிடத்திலே தைக்கப்பண்ணுமல் சகலத்துக்கும் மிதமான பிரகாசத்தைப் பரம்பப் பண்ண, தொங்குகின்ற மேற்கட்டிகள் போலே கவிழ்ந்திருக்கிற பரமண்டலமானது இரத்தின மாணிக்கங்களைத் தோற்கடிப்பது போலே நிரை நிரையே பதிக்கப்பட்ட நட்சத்திரங்களுடைய சொல்லப் படாத அலங்காரங்களினுலே விளக்கப் பட்டிருக்க, இதெல்லாம் மனுஷனுனவன் பார்த்துக் கர்த்தருடைய அளவறுக்கப்படாத பெலத்தையும் பரம சாமர்த்தியத்தையும் தப்பில்லாச் சிரமத்தை யும் கொண்டிருக்கிற விமரிசையையும், கரை காணுத கருணையையுங் கண்டுபிடித்துச் சகலத்தை யும் உண்டாக்கி நடத்திக் கொண்டு வருகிற கர்த்தனை அகோராத்திரம் இடை விடாமற் கொண்டாடுகிறதுக்கும் அவர் பேரிலே குறையற்ற பக்தியை வைக்கிறதற்கும் அவருடைய சித்தத்தின் படியே குறையற்ற பிரகாசமாய் மனுஷன் நடக்க முழுமனதோடு துணிகிறதற்கும் முன் சொல்லப் பட்ட பொருள்களுடைய வேடிக்கையுள்ள தெரிசன மானது பரிபூரண காரணமாயிருந்ததென்று அங்கீ கரிக்கக் கடவோம்.''

இந்த நீண்ட பெருவாக்கியம் காண்பவருக்கு இவர் தம் தமிழ் எழுத்தின் திறன் நன்கு விளங்கும். இனி இவரை அடுத்து, **பெஸ்கி** எனப்பட்ட **வீரமாமுனிவர்** செய்த உரைநடைத் தொண்டைக் காண்போம்:

வீரமாமுனிவர் இத்தாலி நாட்டிற்பிறந்து **'பெஸ்கி'** **(Beschi)** என்ற பெயர் கொண்டவராய்த் துறவு நிலையை மேற்கொண்டு, தம் கிருத்து சமயப் பணிவழித் தமிழ்நாடு வந்தவர், இங்கே மதுரையைத் தமக்குரிய இடமாக அமைத்துக்கொண்டார். ஈண்டு மதுரையிலே இவர் தமிழ் மொழியைக் குற்றமறக் கற்றறிந்தார். இவர் சைவ உணவையே உண்டு வந்தார் என்பர். நெற்றியில் இந்துக்கள் போலக் கோபி சந்தனம் அனிந்துகொள்வா ராம்; தமிழ் நாட்டு முறைப்படி வேட்டி உடுத்துவாராம்; அது காவி நிறத்ததாய் இருக்குமாம்; புலித்தோலாசனத் தில் உட்காருவாராம். இவ்வாறு தமிழ் நாட்டுத் துறவி யர் நிலையிலேயே இவர் வாழ்ந்தார் என அறிவதோடு, இவர் சிறந்த தமிழ்ப் புலமையும் பெற்று விளங்கினர் எனவும் அறிகிறோம்.

இவர் பல பாடல்களைப் பாடியதோடன்றி, பேரிலக் கியங்களும் இலக்கண நூலுங்கூட எழுதியுள்ளார். இவர் எழுதிய **தொன்னூல் விளக்கம்,** இலக்கணம் பற்றியதாகும். அதில் இவர் **'எ'** கர **'ஒ'** கரங்களுக்குத் தொல்காப்பியர் காலத்திலிருந்து வந்த புள்ளி வைக்கும் குறியீட்டை மாற்றி மேல் நீண்ட கோடு அமைக்கும் வழியை யிட்டு அமைத்தார் என அறிகிறோம். இலக்கணம் மட்டுமன்றித் தமிழில் முதல் முதல் அகராதி எழுதியவரும் இவரே. **நிகண்டு, திவாகரம்** போன்ற பழங்காலச் சொற்பொருளு ணர்த்தும் நூல்கள் இருப்பினும், மேலைநாட்டு அகராதி முறையை அடிப்படையாகக்கொண்டு இவர் **'சதுரகராதி'**

என்ற ஒன்றை எழுதினர். இதுவே தமிழில் தோன்றிய முதல் அகராதி என்பர். இவர் பல செய்யுள் நூல்களை இயற்றியுள்ளார். **தேம்பாவணி** அவற்றுள் சிறந்தது. **திருக்காவலூர்க் கலம்பகம்** போன்ற சிற்றிலக்கியங்களையும் இயற்றியுள்ளார். இவர் எழுதிய உரைநடை நூல்கள் **வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பேதக மறுத்தல், ஞானம் உணர்த்தல், திருச்சபைக் கணிதம், வாமன் கதை, பரமார்த்த குரு கதை** என்பன. இவை அனைத்தும் சிறந்த வகையில் போற்றப்படுகின்றன. இவருடைய செய்யுள் நூல்களில் பழங்கால இலக்கியங்களாகிய திருக்குறள், கம்பராமாயணம், சிந்தாமணி போன்றவற்றின் சாயல்களை நன்கு காணலாம். உரைநடை நூல்கள் மொழிக்கே புதியனவானமையின், இவர் தம் தனிப்போக்கு நெறியிலே அவற்றை அமைத்துள்ளார். எனினும், இவர் எடுத்து விளக்கும் பொருள்கள் தமிழ் நாட்டுப் பழங்கால வாழ்வில் காட்டப்பட்ட பொருள்களாகவே அமைகின்றன என்னலாம். அவற்றுள் சிறந்ததாகிய '**அறன்**' என்னும் பொருள் பற்றிய. திரு. சீனி. வேங்கடசாமி அவர்கள் எடுத்துக் காட்டிய இவர் உரைநடைப்பகுதியிலிருந்து நாமும் சிறிது கண்டு மேலே செல்லலாம்.

''வேதநூன் முதலெவ்வகை நூலுக் கல்லாதுணரவுஞ் சொல்லாலுணர்த்தவும் வல்லவராகி, மெய்ஞ்ஞானத் திருக்கடலாகிய வொருமெய்க் கடவுடன் றிருவடிமலரே தலைக்கணியெனக் கொண்டேத்தி, இருளிராவிடத்து விளங்கிய வொருமீன் போலவும், பாலைச்சுரத் தரிதலர்ந்த பதுமம் போலவும் மெய்யாஞ் சுருதி விளக்கா திருளே மொய்த்த நாட்டின் கண்ணுங் கடவுளேற்றிய ஞானத் திருவிளக் கெரிப்பத் தெளிந்து, உணர்ந்தெங்கும் ஒரு

1. கிறித்துவமும் தமிழும் பக். 89.

விளக்கென நின்றுயர்ந்த திருவள்ளுவருரைத்த பல வற்றொன்றை நான் தெரிந்துரைப்பத் துணிந்தேன். அந்நாயனுர் தந்த 'பயன்' எனும் பெருங்கடலாழத் தின் மூழ்கி யாங்குடையரு மணி யொருங்கெடுத் தொருசிறு செப்பினடைத்தாற் போலத் திருவள்ளுவரது பயனெல்லாம் விரித்துப் பகரும்படி நான் வல்லனல்லேனுகையின், அக்கடற்றுறை சேர்ந்தொரு மணியெடுத்துக் காட்டலுணர்ந்தேன். அவர் சொன்ன குறளி னென்றே யிங்ஙன நான் விரித்துரைப்பத் துணிந்தேன். அஃதாவது,

' மனத்துக்கண் மாசில னுதல் லனைத்தறன்
ஆகுல நீர பிற '

என்பது, இல்லறந் துறவறமென்ற இவ்விரண்ட னுள்ளும் அடங்கி நிற்குமெல்லாவறங்களும் மனத் தின் தூய்மையாற் பெறும் பெருமையே தரும் மெனவும், மனத்திதினுள் மாசு கொண்டவன் செய்யுந் தவமுந் தானமு மற்றை யாவுமறத்தினரவ மாவதன்றி யறத்தின் பயனுளவல்லவெனவு மக்குறளிரு பயனிவையென விரித்துக் காட்டுதும். விரிப்பவே, மெய்யும் பொய்யும் விளக்கி யுட்பயன்றரு மெய்யறத்தின் நன்மையே வெளியா விஃதொன்றுணர்ந்து நாமதற் கொப்பநடந்தா லிது வீடெய்தும் வழியெனக் காணப்படும். பெரும் பொருணேர்ந்து பொய்ம்மணி கொள்வது கேடா யினும் பொருளை நேர்ந்தும் உடலினை வாட்டியும் உயிரை வருத்தியு மேற்கதி வீட்டிற் செல்லாச் சில பொய்யறங்களை யீட்டுவத்திலுங் கேடாமன்றே? இதனை விலக்கித் தனது உயிராக்கங் காப்பது வேண்டி யிருக்குறட் பயனுராய்வது நன்றே.''[1]

1. கிறித்தவமும் தமிழும், பக். 84.

இதன் உயர்ந்த நடையும், சந்தி பிரியா வகையில் இலக்கிய இலக்கண உரையாசிரியர்களது நடைபோன்ற அமைவும், இவ் வீரமாமுனிவர் தமிழில் பெற்ற புலமையையும் சிறப்பையும் நன்கு எடுத்து விளக்குகின்றன வன்றோ! இவ்வாறு உயரிய நடையிலே இலக்கிய இலக்கணங்கள் எழுதியது மட்டுமன்றி, அனைவரும் விரும்பி எளிதில் பயிலக்கூடிய வகையில் **'பரமார்த்த குருவின் கதை'** என்ற ஒரு கதை நூலும் இவர் எழுதியுள்ளார். அந்தக் கதை படிப்போருக்கு இனிமை தருவதோடு, அந்த நடையும் மேலே கண்டபடி மிடுக்கு நடையில்லாததாய், எளிமையுடையதாய் அமைந்திருப்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அவற்றையெல்லாம் விரிப்பிற் பெருகும் என்று அஞ்சி, இந்த அளவோடு இவரைப் பற்றி நிறுத்தி மேலே செல்லலாம். ஆம்! இத்தாலி நாட்டு வீரமாமுனிவர் தமிழ் முனிவரேயாய் இருந்து இலக்கியம், இலக்கணம், செய்யுள், உரை நடை ஆகிய அனைத்துத் துறையினும் பாடுபட்டுத் தமிழை வாழ வைத்தார் என்பது பொருந்தும்.

செர்மனி தேசத்திலே பிறந்த **இரேனியுஸ் ஐயர்** **(Edward Raenius)** என்ற பாதிரியாரும் தமிழ் நாட்டுக்கு வந்து, பாளையங்கோட்டையில் இருந்து, பலநாள் தமிழ்ப் பணி கலந்த சமயப்பணியாற்றி வந்தார். அவர்தம் சமய உண்மைகளைத் தமிழில் விளக்கினாலன்றி மக்கள் புரிந்து கொள்ளமாட்டார்களல்லவா! எனவே, அவர் மற்றவர்களைப் போன்று தம் சமய மெய்க் கருத்துக்களையெல்லாம் தமிழ்ப்படுத்தினார். அதை **'வேத உதாரணத் திரட்டு'** என்ற ஒரு தொகுப்பு நூலாக்கி வெளியிட்டார். அது உரை நடையாலாயது. எனவே, தமிழ் உரை நடை வளர்ச்சியில் அந்த மேலை நாட்டு அறிஞருக்கும் பங்கு உண்டு என்பது தெளிவு.

**போப்பு ஐயரைப்** பற்றி அறியாதார் இரார். ஆங்கில நாட்டிற் பிறந்து தம் அருஞ்சமயத் தொண்டு கருதித் தமிழ் நாட்டு நெல்லையிலும். தஞ்சையிலும், உதகையிலும் பல ஆண்டுகள் அரும்பணி செய்த இவர், தக்க நல்லாசிரியர்களிடம் தமிழைப் பயின்று, அத்தமிழ் நலத்தால் கட்டுண்டவர். குறள், நாலடியார் போன்ற இலக்கிய நூல்களேயன்றித் திருவாசகம் எனும் சைவ சமய நூலையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் இவர். இவர் **'தமிழ்ச் செய்யுட் கலம்பகம்'** என்ற ஒரு தொகுப்பு நூலை வெளியிட்டதாகவும் அறிகிறோம்.[1] மொழி பெயர்ப்பு, தொகுப்புப் பணியேயன்றி, இவர் உரை வளர்ச்சிக்குச் செய்த பணியும் சிறந்த பணியேயாகும். சமயப் பணிக்கான சில சில துண்டுப் பிரசுரங்களை இவர் எழுதி வெளியிட்டதோடு, சமய உண்மைகள் பொதிந்த கட்டுரைகள் பலவும் வெளியிட்டுள்ளார் எனவும் அறிகிறோம். இவர் உரை நடைக்கு ஒரு சான்று கண்டு மேலே செல்லலாம்.

"இந்தச் சபையோருக்குள்ளே சிலர் வேதத்திலே தேர்ந்தவர்களும் யோக்கியமுள்ளவர்களுமாயிருந்து மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கத் தொடங்கின போது இவர்களைக் கடவுள் தாமே தெரிந்து கொண்டு இவர்களுக்குத் தகுந்த வரத்தைக் கொடுத்தாரென்று வெஸ்லி ஐயர் எண்ணி, இது நல்ல காரியமென்று சொல்லி அவர்களுக் குத்தரவு கொடுக்கிறதை அநேகர் கண்டு, குருப்பட்டமடைந்தவர்கள் தவிர மற்றவர்கள் பிரசங்கம் பண்ணலாமாவென்று சொல்லி விசனப்பட்டார்கள். வெஸ்லி ஐயரோவெனில் பராபரன் தாமே ஒரு மனிதனைத் தம் ஊழியத்துக்குத் தெரிந்து கொண்டால் நான் பராபரனை எதிர்த்து நிற்கக் கூடுமா

1. கிறித்தவமும் தமிழும், பக். 106.

வென்று மாறுத்தரஞ் சொல்லித் தேவபக்தியுள்ள அநேகருக்குப் பிரசங்கிக்க உத்தரவு கொடுத்து வந்தார்.''[1]

**டாக்டர் கால்டுவெல்** *அவர்கள் திராவிடமொழி ஒப்பிலக்கணத்தை எழுதி உலகில் தமிழ்க் குடும்பத்தின் புகழை உயரச் செய்தவராவர். அயர்லாந்து நாட்டில் பிறந்த இவர், தம் சமயப் பணிக்காகவே தமிழ் நாடு வந்து, நெல்லை மாவட்டத்திலிருந்து நெடுங்காலம் பணியாற்றியவர். இவரது உயர்ந்த ஒப்பிலக்கணம் உலகம் உள்ளளவும் சிறந்ததாகப் போற்றப்படும் ஒன்றாகும். இவர் உரை நடைக்குச் செய்த தொண்டையே நாம் இங்கு நினைத்துப் பார்க்க வேண்டும்.* **நற்கருணைத் தியான மாலை, தாமரைத் தடாகம்** *என்னும் இரு நூல்களையும்,* **ஞானஸ்நானம், நற்கருணை** *என்னும் இரு கட்டுரைகளையும் இவர் எழுதினார் என அறிகிறோம்.*[2] *இவரது உரை நடைக்கும் ஒரு சான்று காணல் நன்று என எண்ணுகிறேன் :*

''சகல ஞானத்தையும் ஈகிறவரே, நான் எனது இருதயத்தை எப்படி ஆராய்ந்தாலும், உமது விருந்துக்கு என்னை எப்படி எத்தனப்படுத்தினாலும், உம்முடைய உதவியும் ஆசீர்வாதமும் இல்லாமல் என் முயற்சிகளெல்லாம் விருதாவாய்ப் போகும்; நீரே என் கண்களைத் திறந்து என் இருதயத்தை இளகச் செய்யாவிட்டால், என் பாவங்களை நான் அறிந்து கொள்வ தெப்படி? நீரே விசுவாசந் தராவிட்டால், நான் கிறிஸ்து ரட்சகரின் கிருபையைச் சார்ந்து அவர் மேலேயே முழு நம்பிக்கையை வைப்ப தெப்படி? நீரே உம்முடைய ஆவியினாலே என்னைச் சுத்திகரியா விட்டால், அசுத்தமும் தீவினையும்

1. கிறித்தவமும் தமிழும், பக். 108.
2. ஷை பக். 110.

என்னில் நிலைக்கும். ஆகையால் என் தேவனே! உம்மிடத்தில் வருகிறேன். நீரே என் இருதயத்தை எனக்குக் காண்பித்து, உமது பந்தியைச் சேருதற் கேற்ற குணங்களையும் ஆயத்தத்தையும் எனக்குத் தாரும். கேட்கிற எனக்குக் கொடும்; தேடுகிற நான் கண்டடையச் செய்யும்; தட்டுகிற எனக்கு வாசலைத் திறந்தருளும். ஆமன்.''

இவர்களேயன்றி, இன்னும் சில மேலை நாட்டு மக்களும் நம் நாட்டுக்குச் சமயப்பணி கருதியும் அரசியல் அலுவலேற்றும் வந்த காலை இங்குள்ள தமிழ் மொழி, பண்பாடு, கலை நலம், பிற இயல்புகள் ஆகியவற்றைக் கண்டு, கற்று, பின்பற்றி வாழ்ந்ததோடு அவற்றையெல்லாம் வியந்து போற்றி ஆங்கிலத்திலேயே எழுதியும் வைத்துள்ளார்கள். அவை பற்றி கண்டு நாம் ஆராய வேண்டா. இது நிற்க.

இம்மேலை நாட்டு மக்கள் உரை நடைக்குச் செய்த தொண்டுகளை எண்ணும் போது, இவர்கள் சமயத்தினைச் சேர்ந்த தமிழ் நாட்டுக் கிறித்தவர்தம் நல்ல உரைநடைத் தொண்டும் நமக்குத் தெரிகின்றது. **மாயூரம் வேதநாயகம் பிள்ளை** அவர்கள் உரை நடைக்குச் செய்த தொண்டு சிறந்ததாகும். இவர் செய்யுளில் சில நூல்களும், சில கீர்த்தனைகளும் இயற்றியிருக்கிறார். இவர் செய்த இரண்டு உரை நடை நூல்களும் தமிழ் உரை நடைப் பாதையிலே சிறந்த இடத்தைப் பெற்றுள்ளன. அவை **பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி சரித்திரம்** என்பன. அவற்றில் இவர் தம் கால நிலைக்கு ஏற்பப் பல வட சொற்களைப்பெய்து எழுதினர். அவற்றுள் முன்னதை அண்மையில் வெளியிட்ட **சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்** அவ்வட சொற்களையெல்லாம் விலக்கித் தனித் தமிழ்ச் சொற்களையெல்லாம் பெய்து அச்சிட்டுள்ளனர். அவர்தம் தனித் தமிழ்த் தொண்டு போற்றத் தகுவதே. என்றாலும். இவ்

வாறு அச்சிடுவோர் தம் கருத்துப்படி சொற்களை மாற்றி அமைத்துவிட்டால், பின் உரை நடை ஆய்வு நெறி நிற்பாருக்குப் பெரிய இடையூறு நேரும்; அதன் ஆசிரியர் வடமொழி கலந்து வழங்கும் கால எல்லையிலிருந்து எப்படி உரை நடை இயற்றினர் என்பதை எடுத்துக்காட்டமுடியாது; உரை நடை வரலாறே அதனால் நிலைகெடும். எனவே, அடுத்த பதிப்பிலாவது கழகத்தார் வேதநாயகம் பிள்ளை அவர்கள் எழுதிய உரை நடையை அப்படியே வெளியிடுவார்களென நம்புகிறேன். இவர்களேயன்றி, இன்னும் பல கிறித்தவத் தமிழ்த் தொண்டர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தொண்டு செய்வதைக் கற்றவர் நன்கு அறிவர்.

இம் மேலை நாட்டார் தமிழகம் வந்த காலத்திலே உரை நடை வளர மற்றொரு வாய்ப்பும் இருந்தது. அதுதான் அச்சு இயந்திரத் தோற்றம். ஓலையில் எழுத்தாணிகொண்டு தனித்தனி படி எடுக்கும் தொல்லையை நீக்கியதோடு ஓரே சமயத்தில் நூற்றுக் கணக்கான ஆயிரக்கணக்கான படிகளை எடுக்கும் வாய்ப்பு இவ்வச்சுயந்திர வளர்ச்சியினால் வந்ததேயாகும். இதை நம் நாட்டில் கொண்டு வந்து புகுத்தியவரும் இம்மேலை நாட்டினரேயாவர். ஏசுவின் திருத்தொண்டினைப் பரப்பிய அந்த நல்லவரே முதன்முதல் தமிழ் அச்சுப் புத்தகத்தினை வெளிக்கொணர்ந்தவர். இங்கே தமிழ் நாட்டில் அச்சுப் புத்தகங்கள் வெளி வரு முன்பே, அங்கு மேலை நாட்டில் தமிழ் நூல்களை-அவர் தம் சமய சம்பந்தமான நூல்களை-அச்சிட்டு இங்கே கொண்டு வந்து மக்களுக்கு வழங்கிய அறப்பணியாளர் பலர், ஒல்லாந்து தேசத்தில் தமிழில் 1686ல் **மலையாளத்துத் தாவர நூல்** என்று ஒன்று அச்சிடப்பெற்றதாகக் குறிக்கின்றனர்.[1] அதில் மரஞ்

---

1. **கிறித்தவமும் தமிழும், பக். 33.**

செடிகளின் பெயர்கள் மட்டும் தமிழில் இருந்தனவாம். ஜெர்மனி நாட்டில் பின்பு சில தமிழ் நூல்கள் அச்சேறின போலும்! இத்தாலி நாட்டு உரோமாபுரியிலும் தமிழ் நூல்கள் அச்சிடப் பெற்றன. முதல் தமிழ் அச்சுப் புத்தகமாகக் கி. பி. 1577 ல் **'கிறிஸ்தவ வேதோபதேசம்'** என்னும் நூல் தமிழ் நாட்டில் வைப்புக் கோட்டை என்னும் ஊரில் அச்சிடப்பெற்றதாக அறிகிறோம்.[1] 1575 ல் தமிழ்ப் புத்தகம் முதல் முதல் அச்சிடப்பெற்றது என அறிஞர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் கூறுகின்றார்கள்.[2] அதை அடுத்துக் **கிறித்தவ வணக்கம்** அச்சிடப் பெற்றது போலும்! இவை இரண்டும் தமிழ் நூல்களே என்பதை ஆசிரியர் சீனி. வேங்கடசாமி அவர்கள் நன்கு விளக்குகிறார்கள். பின்னர்ப் பலப்பல நூல்கள் வெளி வந்துள்ளன.

இவ்வாறு தம் சமயம் பரப்ப வந்த மேலை நாட்டுக் கிறித்தவ மக்கள் தமிழால் கட்டுண்டு, தாமே தமிழராகி, தமிழ் மொழி வளரப் பல வகையில் உதவி நின்றார்கள் என்னலாம். அவர்களது உயரிய துணை இல்லையாயின் இன்று நாட்டிலே வளர்ந்துள்ள இத்துணை உரை நடை நூல்களும் பிறவும் வளர்ந்திருக்குமா என்பது எண்ணத் தக்கதாகும். எனவே, தமிழ் நாட்டு மக்கள் இம்மேலை நாட்டு அறிஞர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டவர்கள் என்பதை மறத்தலாகாது.

1. கிறித்தவமும் தமிழும் பக். 34, 35.
2. இலக்கியச் சிந்தனைகள், பக். 128.

# X

# இருபதாம் நூற்றாண்டின் விடியலிலே

தமிழ் உரை நடையின் பெருவளர்ச்சி இருபதாம் நூற்றாண்டை ஒட்டியே அமைந்தது என்னலாம். சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் அறிஞர் பற்பலர் தோன்றித் தமிழ் இலக்கியத்தையே வளம்படுத்தினர். இருக்குமிடம் தெரியாது மறைந்து கிடந்த சங்க இலக்கியங்களும், காப்பியங்களும் இக்காலத்திலேதான் ஒன்றின்பின் ஒன்ருக வெளிவரலாயின. இலக்கண நூல்களும் அவற்றின் உரைகளும் இருந்த இடத்திலிருந்து வெளிக்கிளம்பித் தங்களை மக்களுக்கு அறிமுகம் செய்துகொண்ட காலமும் இதுதான். அத்துடன் நாளிதழ் திங்கள் இதழ் என்னும் வகையில் தமிழில் பத்திரிகைகள் தோன்றி நாட்டு மக்களுக்கு அறிவையும் உணர்வையும் ஊட்டத் தொடங்கிய காலமும் இதுதான். யாழ்ப்பாண நாட்டிலிருந்து தமிழ்ப் புலவர் சிலர் இங்கு வந்து தமிழ் வளர்த்த காலமும் இதுவே. மற்றும் தமிழின் தொன்மை பற்றியும் செழுமை பற்றியும் தமிழரல்லாப் பிறரும் அறிந்து கொள்ளும் வகையில் ஆங்கிலத்திலே சிற்சில நூல்கள் எழுதி வெளியிட்டனர். பல கட்டுரைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் தமிழ் மொழி பற்றி வெளி வரலாயின. சுருக்கமாகக் கூறின், இன்று தமிழ் நாடு வளர்ச்சி பெற்றுள்ளமைக்கு அடிப்படையாயமைந்தவர்கள் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும் வாழ்ந்த புலவர்களேயாவார்கள் எனக் கூறலாம்.

ஈண்டு உரை நடை அளவில் நாம் நோக்குவோம். உரை நடை இந்த நூற்றாண்டின் விடியலிலே ஓரளவு நன்கு

வளர்ச்சி அடைந்தது என்பதைக் காணல் வேண்டும். முற் பகுதியில் கண்ட ஆறுமுக நாவலர் மட்டுமன்றி, யாழ்ப் பாணத்திலிருந்து தமிழ் பரப்ப வந்தவர் என்னுமாறு தொண்டு செய்த **சி. வை, தாமோதரம் பிள்ளை, கனகசபைப் பிள்ளை** போன்றுர் தமிழின் வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். தமிழ் நாட்டு வரலாற்றை முதன்முதல் இந்த நூற்றுண்டின் தொடக்கத்திலே தொகுத்து எழுதி, **'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்'**[1] என்னும் நூலை ஆங்கிலத் தில் வெளியிட்ட பெருமை கனகசபைப் பிள்ளை அவர்களேயே சாரும். இவ்வாறே சி. வை. தாமோதரம் பிள்ளை அவர் களும் சில நூல்களை நன்கு அச்சிட்டு உதவினுர்கள். அவர்கள் **கலித்தொகை** பதிப்பித்தபோது, அதன் முன்னுரை யிலே தமிழ் நூல்கள் கேட்பாரற்று நலிவுறும் நிலையைக் காட்டியிருப்பதை, அறிஞர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் **தமிழ்ச்சுடர் மணிகள்** என்னும் தமது நூலிலே நன்கு எடுத்துக்காட்டி, திரு. சி. வை. தாமோதரம் பிள்ளை அவர் களுடைய தமிழ் உள்ளத்தை நன்கு புலப்படுத்தியுள்ளார் கள். நானும் அவர்தம் முன்னுரைப் பகுதியை எடுத்துக் காட்டி, அவர் உள்ளத்தைக் காட்டுவதோடு, நம் ஆராய்ச்சிக் காலத்து உரை நடைப் போக்கையும் காட்டலாம் என நினைக்கின்றேன்.

**"ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும்போது இதழ் முரிகிறது. ஒற்றை புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோ என்றுல், வாலும் தலையு மின்றி, நாலு புறமுங் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது......"**

1. The Tamils 1800 years ago.

"பழைய சுவடிகள் யாவும் கிலமாய் ஒன்றோ டொன்றுய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதி வைப்பாரும் இலர், துரைத்தனத்தாருக்கு அதன்மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப்பெற்ற வித்வான் களை அவள் மாமி எட்டியும் பார்க்கிருள் இல்லை. திருவுடையீர்! நுங்கருணை இந்நாள் தவறிஞல், பின்பு தவம் புரிந்தாலும் ஒரு தரம் அழிந்த தமிழ் நூற்களை மீட்டல் அரிது. யானை வாய்ப்பட்ட விளாம்பழத்தைப் பின் இலண்டத்துள் எடுத்து மென்? ஓடன்றோ கிட்டுவது? காலத்தின் வாய்ப் பட்ட ஏடுகளைப் பின் தேடி எடுப்பினும் கம்பையும் நாராசமுந்தான் மீரும்."[1]

என்றும் இன்னும் பல வகையிலும் கேட்பாரற்றுச் செல் லுக்கு இலக்காகி நிற்கும் நல்ல தமிழ் ஏடுகளை வெளிக் கொணர வேண்டிய இன்றியமையாமையை வற்புறுத்து கிருர். அவர் வேண்டுகோளின்படி பல தமிழ் இலக்கி யங்கள் வெளி வந்தன: அத்தொண்டில் தளராது உழைத் துப்பாடுபட்ட நல்ல தமிழறிஞர் **டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்** அவர்களைத் தமிழுலகம் என்றென்றும் மறவாது. அவர்கள் நாடெலாம் உழன்று நல்ல தமிழ் நூல்களைத் தேடித் தொகுத்து வெளியிட்டதோடு, தமிழ் உரை நடை யையும் வளர்த்தார்கள் என்பது பொருந்தும். ஒவ்வொரு நூலின் விளக்கத்தையும், முன்னுரையையும் நல்ல தமிழில் - உரை நடையில் - எழுதியுள்ளார்கள். மற்றும், **'என் வாழ்க்கைச் சரித்திரம்'** போன்ற உரை நடை நூல்களையும் பின்னுட்களில் எழுதி வெளியிட்டிருக்கிருர்கள். எனவே, அவர்கள் சிதைந்த ஏடுகளைச் செப்பனிட்டு வெளியிட்ட பணியோடு, தமிழ் உரை நடை வளர்ச்சி பெறவும் சிறந்த

1. தமிழ்ச்சுடர் மணிகள், பக். 216.

தொண்டு செய்திருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியுமோ?

1887-ஆம் ஆண்டிலே ஐயர் அவர்கள் அலைந்து தேடிக் கொணர்ந்து வெளியிட்ட **சிந்தாமணி** முதற்பதிப்பின் முன்னுரையில் ஒரு பகுதியை ஈண்டுக் காட்டல் நலமெனக் கருதுகிறேன்.

> "எழுத்துஞ் சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு வேறுபட்டுக் சில முற்றிருந்த இந்நூலுரைப் பழைய பிரதிகள் பல வற்றையும் பலகால் ஒப்பு நோக்கி இடையறாது பரிசோதனை செய்து வந்த பொழுது, கவிகளின் சுத்த வடிவத்தையும் உரையின் சுத்த வடிவத்தை யும் கண்டு பிடிப்பதற்கும், உரையிலும் விசேட உரை இன்னது பொழிப்புரை இன்னதென்று பிரித் தறிதற்கும், மேற்கோள்களின் முதலிறுதிகளைத் தெரிந்துகோடற்கும், பொழிப்புரையை மூலத் தோடு இயைத்துப் பார்த்தற்கும், பிழையைப் பிழையென்று நிச்சயித்துப் பரிகரித்தற்கும், பொருள் கோடற்கும் எடுத்துக் கொண்ட முயற்சி யும் அடைந்த வருத்தமும் பல. அப்படி யடைந்தும், சிலவிடத்துள்ள இசைத்தமிழ் நாடகத் தமிழின் பாகுபாடுகளும், மற்றுஞ்சில பாகமும் நன்றாக விளங்கவில்லை. அதற்குக் காரணம் அவ்விசைத் தமிழ் நாடகத் தமிழ் நூல் முதலியவைகள் இக் காலத்துக் கிடையாமையே."[1]

எனக் காட்டுகிறார்கள் ஐயர் அவர்கள். இவ்விருவரது உரை நடையை நோக்குங்கால் இன்று நம் வழக்கத்தில் உள்ள உரை நடை அமைப்பு, பெரும்பாலும் இந்த நூற்றாண்டின் விடியலிலே உருவாகிவிட்டது எனக் கொள்ளல் பொருத்தமானதென்பது விளங்கும்.

1. சீவக சிந்தாமணி, ஆறாம் பதிப்பு, பக். 7.

இந்தக் காலத்திலே பல நாளிதழ்கள் உருவாயின. இக்காலத்தின் தமிழ் வளர்ச்சியில் — சிறப்பாக உரை நடை வளர்ச்சியில்—நாளிதழ், திங்கள் இதழ், கிழமை இதழ் போன்றவைகளுக்குப் பெரும் பங்கு உண்டு. இன்று நாட்டில் உலவுகின்ற **சுதேச மித்திரன்** தமிழ்த் தினசரி அக்காலத்தில் தோன்றியதுதான். என்றாலும், இன்று உள்ள அதன் தமிழ் நடைக்கும் அன்றைய நடைக்கும் மிக்க வேறுபாடு உள்ளது என்பதைப் பெரியோர்கள் அறிவார்கள். காலநிலைக்கு ஏற்ப மாறிச் செல்லும் கடப்பாட்டில் இன்று ஓரளவு தமிழ் நலத் துறையில் அதன் நடை செல்கிறது என்றாலும், அன்று அது அத்தமிழ் நடையில் செல்லவில்லை என்பதைக் காலஞ்சென்ற **திரு. வி. க.** போன்ற பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். திரு. வி, க. வின் நாளிதழாகிய **'தேச பக்தன்'** நடையை 'நையாண்டி' செய்யும் வகையில் சில நிகழ்ச்சிகள் நடந்ததாகவும், பின் தம் வாழ்நாளிலேயே அவ்விதழ் தம் நடையைப் பின் பற்றத் தொடங்கியது கண்டு மகிழ்ச்சி அடைந்ததாகவும் அவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். எவ்வாறாயினும், தமிழ்ப் பத்திரிக்கைத் தொழிலில்—அதிலும் நாளிதழ் நடத்தும் பெரும்பொறுப்பில்—முதல் நின்று அதை இடைவிடாது இன்று வரை நடத்தி வரும் அவர்களுக்கு—அதன் உரிமையாளர்களுக்கு—தமிழ் மக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள், அன்று தொட்டு இன்று வரை தமிழ் நாட்டு இலக்கிய வளர்ச்சியில்—சிறப்பாக உரைநடை வளர்ச்சியில்—இதற்குப் பெரும்பங்கு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்த நாளிதழைத் தவிர்த்து, அக்காலத்தில் **'தினவர்த்தமானி'** என்ற ஒரு நாளிதழும் நடந்து வந்ததை அறிகிறோம். அதில் வெளி வந்த பல பொருள்களைத்

திரட்டி **வீராசாமி செட்டியார்** என்பவர் **'விநோதரச மஞ்சரி'** என்ற பெயருடன் ஒரு நூலை வெளியிட்டதாகத் **திரு. செல்வக்கேசவராய முதலியார்** அவர்கள் குறிக்கிறார்கள்.[1]

**'ஜநவிநோதினி'** என்ற திங்கள் இதழ் அக் காலத்தில் பல ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்று வந்த ஓர் இதழாகும். அவ்விதழ் **'சுதேச பாஷாபிவிர்த்தி சங்கத்தார்'** பாதுகாக்கப்பட்டதென அறிகிறோம்.[2] அதில் கதைகளும் கட்டுரைகளும் மாணவரும் மற்றவரும் அறிந்து கொள்ளும் வகையில் வெளி வந்தன என அறிகிறோம்.

அவைகளேயன்றி வேறு பல பத்திரிகைகளும் அக் காலத்தில் தோன்றித் தமிழ் உரைநடையை வளர்த்தன எனல் மிகப் பொருந்துவதாகும். எனவே, இது வரை இருந்தது போலன்றி, இதழ் வகையில்—செய்தியை விளக்கவும், சிறு கதை முதலியன தொகுக்கவும் பயன் படும் வகையில்—ஒரு புதுமுறையில் தமிழ் உரை நடைப் பணி இக்காலத்தில் உருப்பெறலாயிற்று என்னலாம். ஆம்! அன்று அமைக்கப்பெற்ற அந்த அடிப்படையின் மேலேதான் இன்று தமிழ் நாட்டில் காணப்பெறும் நூற்றுக்கணக்கான நாள், திங்கள், கிழமை இதழ்களும் பல ஆயிரக்கணக்கான கதை கட்டுரை நூல்களும் எழுதப் பெறுகின்றன என்பதை யாரும் மறுக்க இயலாது. பிற துறைகள் அனைத்திலும் இந்த நாளிதழ், கதை நூல் துறைகளே தமிழில் உரைநடையை அதிகமாக வளர்த்தது என்னலாம். தமிழில் மட்டுமன்றி, எம்மொழியின் உரை நடை வளர்ச்சிக்கும் இத்துறைகள் பெரிதும் பயன் பட்டன—படுகின்றன என்பதை உலகம் அறியும். எனவே தமிழ் உரைநடை வளர்ச்சியில் இந்த இருபதாம் நூற்றாண்டின்

1. *தமிழ் வியாசங்கள்,* பக். 114.
2. ஷை பக். 116.

விடியற் கால நிகழ்ச்சி ஒரு சிறந்த திருப்பு மையமாய் அமைந்துள்ளது என்பது தேற்றம்.

இக்காலத்தில் தமிழ் உரை நடையையும் மொழியையும் வளர்க்கப் பயன்படும் வகையில் சிற்சில அகராதிகளும் வெளி வந்தன. வீரமாமுனிவர் இயற்றிய சதுரகராதியை முன்னர்க் கண்டோம். **உவின்ஸ்லோ** பாதிரியார் எழுதிய பேரகராதிக்கு ஒத்ததாகச் சிற்றகராதி ஒன்றைப் **போப்பு** அவர்கள் 1859ல் வெளியிட்டதாகவும், 1870ல் அவற்றின் அடிப்படையில் மற்ருேர் அகராதி உருவாக, 1888ல் **மல்லாகம் விஸ்வநாதப் பிள்ளை** அவர்கள் அதன் நல்ல பதிப்பை வெளியிட்டார்கள் என்றும் அறிகிருேம்.[1] தரங்கம் பாடியிலுள்ள கிருத்துவ சபையார், 1897ல் மற்ருேர் அகராதியை வெளியிட்டனராம். பின்பு யாழ்ப்பாணப் புலவர் **கதிரைவேற் பிள்ளை** அவர்களும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரும் வெவ்வேறு அகராதிகளை வெளியிட்டார்கள். இவ்வாறு இந்தக் காலம் தமிழ் உரைநடைக்கும் செய்யுளுக்கும் ஆக்கம் தரும் வகையில் அகராதிகள் தோன்றிய காலமாய் அமைந்துள்ளது.

**'நாவல்'** என்னும் நவீனம் தோன்றிய காலமும் இது என்பதைக் கண்டோம். **மாயூரம் வேதநாயகம் பிள்ளை** அவர்கள் எழுதிய **பிரதாப முதலியார் சரித்திரம்** பற்றி முன்னரே கண்டோம். அந்தக் கதை மக்களால் விரும்பி ஏற்கப்பட்டதாயிற்று. அச்சுப் பொறிகள் வந்து விட்ட காரணத்தாலே இக்காலத்தில் பல படிகளை அச்சிட்டு வழங்க ஏற்பாடு செய்ய வசதி இருந்தது. எனவே, இக் கால உரைநடைநூல்கள் மக்களிடையில் மிக அதிகமாகப் பரவலாயின. எனவே, இத்துறையில் இன்னும் சிலரும்

1. இலக்கியச் சிந்தனைகள்—வையாபுரிப் பிள்ளை, பக். 167.

கருத்திருத்தியிருப்பர். அவர் அனைவரையும் நம்மால் இங்கு எடுத்துக்காட்ட முடியாமற் போயினும், இரண்டொருவரை நம்மால் மறக்க இயலாது. அவருள் **'கமலாம்பாள் சரித்திரம்'** என்னும் உரைநடை நவீனம் எழுதிய **திரு. இராசம் ஐயரும், 'பத்மாவதி சரித்திரம்'** எழுதிய **திரு. மாதவையரும்** மிக முக்கியமானவர்கள். இவ்வாறு தமிழ் நாட்டு அறிஞர் இந்த நூற்றுண்டின் விடியலிலே பல வகையில் உரைநடையை வளர்த்தார்கள் என்பது கண்கூடு.

ஒரு பக்கத்தே முன்னர்க் கண்ட கிருத்துவ சமயத்தவர் இக்காலத்திலும் உரைநடை வளர்ச்சிக்கு உதவினுர்கள் என்பதும் மிகையாகாது. அவர்தம் **விவிலிய நூல்** பல வகையில் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்றது. சைவம் வளர்த்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களே ஒரு காலத்தில் அம்மொழி பெயர்ப்புப் பணியில் ஈடுபட்டார் என அறிகின்றோம். என்றாலும், முதலில் வந்த மொழி பெயர்ப்புக்கள் பெரும்பாலும், வடமொழிச் சார்பு பற்றியே அமைந்தன. அக்காலத்தில் வடமொழி நாட்டில் அதிகமாக ஆதிக்கம் செலுத்தியதில்லை என்றாலும், தமிழ்நாட்டில் வாழ்ந்த பல கிறித்துவ சமயத் தொண்டர்கள் மலையாள நாட்டிலும் தமிழ் நாட்டிலும் மாறி மாறிப் பழகிய காரணத்தாலும் இந்நாட்டுப் பகுதிகளிலும் பொதுவாகச் சாதாரண வழக்கிலுள்ள வடமொழிச் சொற்கள் அவர்களை ஈர்த்தமையாலும் ஒரு வேளை அவர்கள் அந்த வகையான மொழி பெயர்ப்புக்களை விரும்பினுர்களோ என நினைக்க வேண்டியுள்ளது. எப்படி ஆயினும், நாளாக ஆக, அவர்களே அத்தகைய வடசொற்கள் மிக்குக் கலந்து மொழி பெயர்க்கப்பட்ட தமிழ் விவிலிய நூல்கள் மக்கள் மனத்தைக் கவரவில்லை என்பதை உணர்ந்தார்கள். ஆகவே அடுத்தடுத்துச்

சிறிது திருந்திய வகையில் நல்ல தமிழில் மொழி பெயர்ப்பு நூல்களை ஆக்க முயன்றுர்கள். என்றுலும், அவர்கள் முழு வெற்றி பெறவில்லை என்னலாம். இன்றளவும் அவர்தம் விவிலிய நூலுக்குத் தூய தெளிந்த தமிழில் சிறந்த ஒரு மொழி பெயர்ப்பு நூல் இல்லாததை அவர்களே உணர்ந்து கூறியுள்ளார்கள். இன்று சிறந்த தமிழறிஞர் சிலர் அச் சமயத்தில் உள்ளமையின் ஒரு வேளை இனிச் சிறந்த தமிழ் மொழி பெயர்ப்பு வர வாய்ப்பு ஏற்படலாம்.

இக்காலத்தில் வாழ்ந்த ஆறுமுக நாவலர் தம் உரை நடை, சமயச் சார்பு பற்றியிருந்த காரணத்தால், வட மொழிச் சொற்கள் அதிகமாகவே கலக்கப் பெற்றதாக இருப்பதைக் காணலாம். மேலும் வடசொற்களைக் கலந்து எழுதலாமா கூடாதா என்ற ஆராய்ச்சி அக்காலத்தில் எழ வில்லை. எனவே, அவர் உரை நடையில் அதிக வடமொழிச் சொற்கள் இடம் பெறுகின்றன. தமிழ் உரை நடைக்கு அவர் செய்த தொண்டு அளவிடற்கரிது. உரை நடையில் பல இலக்கியங்களைப் பெயர்த்து எழுதியது மட்டுமன்றி, அவைகளை அழகுற அச்சிட்டு வெளிக் கொணர்ந்த பெருமை யும் அவர்களையே சாரும். தமிழ் நூல்களைப் பிழையில்லா மலும், திருத்தமாகவும், அழகாகவும் முதன் முதல் அச்சிட்ட பெருமை அவர்களையே சாரும். **'நாவலர் பதிப்பு'** என்பது இன்றும் தனி மதிப்புடையதென்பதை யாரும் அறிவர் அவர் உரை நடையில் பல நூல்கள் எழுதியுள்ளார். சிறப் பாகச் சைவ சமய நூல்கள் பல அவர் வழி உரை நடையில் வெளிவந்தன. சமய உண்மைகளைக் கூறும் அவர்தம் உரை நடை சில போழ்து சற்றுக் கடினமானதாய் இருப்பினும் புராண சம்பந்தமான கதைகளைக் கூடிய வரை எளிய நடை யிலேயே எழுதியுள்ளார் என்றே சொல்ல வேண்டும். இங்கு

அவர் பெரிய புராண உரை நடையில் ஒரு சிறு பகுதி காட்டி அமையலாம் என நினைக்கின்றேன் :

> "அதுகண்டு, தந்தையாராகிய சடையனர், ஆதி சைவ குலத்திலே தம்முடைய கொள்கைக்கு ஏற்பப் பந்துவாய்ப் புத்தூரிலிருக்கிற சடங்கவி சிவாசாரியாரிடத்திலே, அவருடைய புத்திரிக்கும் தம்முடைய புத்திரருக்கும் விவாகம் பேசி வரும் பொருட்டு, சில முதியோர்களை அனுப்பினர். அவர்கள் சடங்கவி சிவாசாரியாரிடத்திற் போய்ப் பேசி, அவர் உடன் பட்டது கண்டு, சடையனரிடத்துத் திரும்பிப் போய்த் தெரிவித்தார்கள். அப்போது சடையனர் மகிழ்ச்சி கொண்டு, விவாகத்துக்குச் சுப தினமும் சுப முகூர்த்தமும் நிச்சயித்து, தம்முடைய ஞாதிகள் சிநேகர்கள் யாவரையும் விவாக பத்திரம் அனுப்பி அழைப்பித்தார். பின்பு நம்பியூயாரூராகிய சுந்தரமூர்த்தி நாயனர் விவாக தினத்திற்கு முதற் றினத்திலே சமாவர்த்தனம் பண்ணி, ரக்ஷாபந்தனஞ் செய்து, மற்ற நாள் நித்திய கருமங்களை முடித்துக் கொண்டு, திருமணக் கோலங் கொண்டு, குதிரைமேல் ஏறி, மகாலங்காரத்தோடு புத்துதூரிலே சடங்கவி சிவாசாரியார் வீட்டிலே திருக் கல்யாணப் பந்தருக்குமுன் சென்று, குதிரையினின்றும் இறங்கி, உள்ளே போய், ஆசனத்தில் இருந்தார்."[1]

இவ்வாறு நாவலர் தம் உரை நடை வடமொழி கொண்டு எளிமையோடு இயங்குகின்றது. என்றாலும், அவர் தமிழைக் கண்ணெனப் போற்றி வளர்த்தவர் என்பதை அனைவரும் அறிவர். அவர் கால நிலையும், அவர் சமயக் கோட்பாடுமே அவரை வடமொழிச் சொற்களை அதிகம் கலக்கச் செய்தன. இன்று அவருடைய உரை நடை

1. நாவலர்—பெரியபுராண வசனம், பக். 10, 11.

நூல்கள் அதிகமாக வழக்கத்தில் இல்லாததற்குக் காரணம் அவை பெரும்பாலும் சமயம் பற்றியனவாயிருத்தலேதான். இது நிற்க.

நாவலரைப் போன்றே சமய நெறி வளர்த்த மற்றொரு பெரியார் அருட்டிரு **இராமலிங்க அடிகளார்** ஆவார். அவர் தம் பாடல்கள் **'அருட்பா'** என்னும் தொகுதியாக மக்கள் உள்ளங்களில் இடம் பெற்று விளங்குகின்றன. பலர் அவற்றை இன்று படித்து நலம் பெறுகின்றனர். அவர் தம் பாடல்கள் எளிமை வாய்ந்தன. அவர் பாடல்களேயன்றிச் சில உரை நடை நூல்களையும் செய்துள்ளார். சமயச் சார் பான உரைநூல்க ளானமையின், நாம் நாவலர் உரையிற் கண்டபடி அவருடைய உரையிலும் வடமொழி சொற்கள் அதிகம் இருக்கக் காணலாம். உரை நடை நூலுள் சிறந்தது **'சீவகாருண்ய ஒழுக்கம்'** என்பதாகும். மக்கள் வாழ்வில் எளிமையும் தூய்மையும் மேற்கொண்டு வாழ்ந்து எவ்வு யிரையும் ஒத்து நோக்க வேண்டும் என்ற கொள்கையை அவர் கடைப்பிடிப்பவர். இக்கருத்துக்களை நன்கு வலியு றுத்தும் உரை நடைப் பகுதியே சீவகாருண்ய ஒழுக்கம். அதிற் சில பகுதிகளைக் கண்டு மேலே செல்லலாம்.

> **'எளிமை: பசித்த ஜீவர்களுக்கு ஆகாரத்தால் பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுள்ளவர் களுக்குச் சுதந்திரமற்ற ஜீவர்களது எளிமையை நீக்கத் தயவு வாராம லிராது. பசியினால் வருந்து கின்ற எளிமைக்கு மேற்பட்ட எளிமையே இல்லை. எளிமையைச் சில நாள் சென்று மாற்றிக் கொள்ளக் கூடும். பசியை அவ்வாறு மாற்றிக் கொள்ளக் கூடாது. எளிமையோடு தேகத்தை வைத்திருக்கக் கூடும்; பசியோடு வைத்திருக்க முடியாது.''[1]**

1, திருவருட்பா, ஆறும் பகுதி, பக். 11.

> "தேக முழுதும் நரம்புகள் தோன்றப் பசியினால் இளைத்து உயிரொடுங்கி மூர்ச்சை முடிய காலத்தும் அயலாரைக் கேட்பது துணியாமற் கடவுளை நினைத்து நினைத்து, நெருப்பிற் படுத்து நித்திரை செய்யத் தொடங்குவாரைப் போல, அடிவயிற்றிற் கொடிய பசி நெருப்பை வைத்துப் படுக்கத் தொடங்குகின்ற விவேகிகளுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசியை ஆற்றுவதே—ஜீவகாருண்யம்."[1]

இவ்வாறு சமயத்துறையில் மூழ்கி நின்ற அறிஞர் பலருடைய தமிழ் இலக்கியம்—சிறப்பாக உரை நடை இலக்கியம்—இந்த நூற்றாண்டின் விடியலிலே தோன்றி வளர்ந்ததென்பது கண்கூடு. இப்படியே பலப்பல மேற்கோள்கள் எடுத்துக் காட்டிக்கொண்டே போகலாமேனும் விரிவஞ்சி இவ்வளவோடு நிற்கலாம். எனினும் இப்படிச் சமய இலக்கியங்கள் உரை நடையில் ஏன் தோன்றின? அக்காலத்தெழுந்த கிறித்தவ சமய நெறிக்குமாறாக, நாட்டில் நெடுங்காலமாக வாழ்ந்த சைவ வைணவ நெறிகளைப் பாதுகாக்க நினைத்தமையினாலே இவ்வாறான இலக்கியங்கள் தோன்றின என்பர் அறிஞர், நாட்டில் வேற்றுச் சமயம் வளர்வதைக் கண்ட அறிஞர் தம் முயற்சியால் இத்துணை இலக்கியங்கள் தோற்றிய அதே காலத்தில் நாட்டு இலக்கியங்களிலும் உரை நடையிலும் வேற்று மொழி விரவி நிலை கெடுமோ என்ற நிலையில் அந்த விரவு நிலையைத் தடுக்கவும் சிலர் முயன்றனர். அவருள் தலையானவர் ஆசிரியர் **மறைமலை அடிகளாவர்.** இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நாம் மேற்கண்ட பல வடமொழிச் சொற்கள் சமயத்துறையிலும், பத்திரிகைத் துறையிலும், பிற துறைகளிலும் அதிகமாக வழங்கத் தொடங்கின அவற்றின் கலப்பால் தமிழில் உள்ள பல சொற்களும்

---

1. திருவருட்பா, ஆறும் பகுதி, பக். 24.

மறைந்துவிடுமோ என்று எண்ணக் கூடிய அளவிற்குக் கலப்பு ஏற்பட்டது என்னலாம். எனவே, அறிஞர் மறை மலை அடிகளார் போன்ற ஆய்வாளர்கள் அதைத் தடுக்க வேண்டுமெனக் கருதினுர்கள். அடிகளார் **'வேதாசலம்'** என்ற தமது பெயரையே மாற்றி **'மறைமலை அடிகள்'** என அமைத்துக் கொண்டனர். மற்றுேர் அறிஞராகிய **'சூரிய நாராயண சாத்திரியார்'** என்பவர் தம் பெயரைப் **'பரிதிமாற் கலைஞன்'** எனவே ஆக்கிக் கொண்டார். மறை மலை அடிகளார் தம் பெயரை மாற்றிக் கொண்டதோடமையாது தமிழில் எழுதும் ஒவ்வொரு நூலையும் தனித் தமிழாகவே எழுத முற்பட்டார். சமயத் துறையில் இவர் ஆறுமுக நாவலருக்கு இளைத்தவர் அல்லர் என்னலாம்; **'நடராசன்'** என்னும் **'கூத்தரசனை'**த் தம் வீட்டிலேயே குடி அமர்த்தி விழா வாற்றுபவர்; அவனது ஆடலுக்கு அரும்பொருள் கண்டு போற்றுபவர். எனினும், அவர் தம் சமய உண் மைகளை விளக்க நினைத்த அந்த நிலையிலேயும் தனித் தமிழையே கையாண்டார். அவர்தம் நூல்கள் தனித் தமிழ்க் கடல்கள். இன்று தமிழ் நாட்டில் பெரிய அளவில் காணப் பெறும் தனித் தமிழ் இயக்கத்திற்கு வித்திட்டவர் மறை மலை அடிகளேயாவர். அவர் வழித் தமிழில் உரை நடை நல்ல வளம் பெற்றதோடு தனித் தமிழ் மரபும் வளரலாயிற்று.

இன்று நாட்டில் எத்தனையோ பேர் மொழி—நாடு—பற்றிப் போராடத் தயாராய் இருக்கலாம்—இருக்கின்ற னர். எனினும், அன்று—இந்த நூற்றுண்டின் விடியலிலே—யாரும் நினைக்காத நிலையிலே, தாம் ஒருவராய்த் தனி நின்று தனித்தமிழில் அனைத்தையும் எழுத முடியும் என்று காட்டி, அதைக் கடைசி வரையில் தம் வாழ்வின் குறிக்கோளகக் கொண்டிருந்த பேராசிரியர் மறை மலை அடிகளாரைத் தமிழர் என்றென்றும் போற்றக் கடமைப்

பட்டவர். அவர் தமிழுக்கும் சமயத்துக்கும் பல வகையில் நற்றொண்டு செய்து வந்தார் என்றாலும், சிறப்பாகத் தமிழ் உரைநடைக்கு அவர் செய்த தொண்டைக் காண்பதே ஈண்டு நமக்கு ஏற்றதாகும்.

ஆசிரியர் மறைமலை அடிகளார் பல உரைநடை நூல்களை எழுதியுள்ளார். சமய உண்மைகளையும், தமிழின் பெருமை இனிமை நலங்களையும், இன்றைய விஞ்ஞான அறிவியற் கருத்துக்களையும் எடுத்து விளக்கும் வகையில் அவர் பல நூல்கள் உரைநடையில் எழுதியுள்ளார். உரை நடை நூல்களேயன்றிப் பழைய சிறந்த உரையாசிரியர்களை விஞ்சும் வகையில் அவர் தம் உரைகளிலுள்ள குற்றங்குறைகளை எடுத்துக்காட்டிப் பத்துப்பாட்டில் **'முல்லைப்பாட்டு', 'பட்டினப்பாலை'**போன்ற நூல்களுக்குச் சிறந்த உரை விளக்கமும் எழுதியுள்ளார். அவர் எழுதிய உரை நூல்களுள் சிறந்தவை. **மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம், கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா, வேளாளர் நாகரிகம், சிந்தனைக் கட்டுரைகள், முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், அறிவுரைக் கொத்து, கோகிலாம்பாள் கடிதங்கள், குமுதவல்லி, சாகுந்தலம், தொலைவில் உணர்தல்** என்பவையாகும். நாடகம், தருக்கம் போன்ற நூல்களையும் அவர் எழுதியுள்ளார். சுருங்கக் கூறின், இன்றைய தமிழ் நாட்டுத் தனித்தமிழ் எழுச்சியின் தந்தையார் மறை மலை அடிகளாரேயாவர் எனக் கூறலாம். எனவே, அவருடைய தனித்தமிழ் உரைநடையில் இரண்டொரு பகுதிகள் கண்டு இப்பகுதியை முடிப்போம்.

"இங்ஙனம் அந்த அம்மையைத் தொலைவி லிருந்தே அறிதுயிலிற் செலுத்தித் தாம் எண்ணிய

எண்ணங்களின்படி அவள் எண்ணவுஞ் செய்யவும் புரிந்து, அம்மருத்துவரும் அவர் தோழரும் அவள் பால் ஆராய்ந்து பார்த்த இருபத்தைந்து ஆராய்ச்சி களிற் பதினெட்டு நிகழ்ச்சிகள் செவ்வையாகவே முடிந்தன; மற்றதில் நான்கு மட்டும் சிறிது வழுவின. இவைகளைக் கொண்டு தொலைவிலிருந்தே பிறர்க்கு அறிதுயில் வருவித்துத் தாம் எண்ணியபடியே அவரும் எண்ணுமாறும் நடக்குமாறுஞ் செய்தல் சிலர்க்கு இயலுமென்பது நன்கு பெறப்படுதல் காண்க.''[1]

''இனி அடிகள் அமைச்சராயிருந்த பொழுது எல்லாச் செல்வ வளங்களும் உடையராய், எல்லா இன்பங்களும் நுகர்ந்திருந்தாரென்பது, மேற் குறித்த இரு புராணங்களாலும் விளங்குவதோடு, திருவாசகம் திருக்கோவையாரில் அவர் ஆங்காங்கு அருளிச் செய்திருக்கும் குறிப்புக்களானும் நன்கு புலப்படும். இவர் பிறவியிலேயே உளந்தூயராய்ச் சிவபெருமான் திருவடிக்கண் மெய்யன்பு பூண்டு ஒழுகினமையின், உலக வின்பங்களை ஆரத்துய்த்து அவற்றின்கண் உவர்ப்பு வரப் பெற்றாராய்த் தம்மைத் திருவருணெறிக்கட் படுவித்துத் தம்பிறவி வேர் அறுப்பானாகிய மெய்க்குரவனைத் தேடி யடையும் வேட்கை மீதூரப் பெற்றார். ஞானாசிரி யனைப் பெறுதற்கு மேன்மேலெழும் வேட்கை ஒரு பால் ஈர்க்க, அரசன் தம்மேல் வைத்த அமைச்சியற் றொழிற்கடன் மற்றொரு பால் ஈர்க்க, இங்ஙனம் இவ் விரண்டன் இடையே சிவபிரான் திருவருள் உதவியை எதிர் நோக்கியபடியாய் அடிகள் ஒழுகி வரலானார்.''[2]

1. தொலைவில் உணர்தல், பக். 103
2. மாணிக்க வாசகர் வரலாறு, பக். 2

'இனி, நப்பூதனார் என்னும் நல்லிசைப் புலவர் 'முல்லை' என்னும் அகவொழுக்கத்தினை விரித்துச் செய்யுள் இயற்றுகின்றார் ஆகலின், அதனோடு இயை புடைய வஞ்சி யொழுக்கத்தை அரசன் பகைமேற் சென்று பாசறையிலிருக்கும் இருப்புக் கூறுமுகத் தால் இதன்கண் அமைத்துக் கூறுகின்றார். இவ்வாறு தாம் எடுத்துக்கொண்ட பொருளுக்கு மாறுபடாமல் இவ்வாசிரியர் வேறு பொருளை இதன்கட்பொருத்தி உரைக்கும் நுணுக்கம் மிகவும் வியக்கற்பால தொன்றாகும்.''[1]

இவ்வாறு இந்த நூற்றாண்டின் விடியலிலே தமிழ் உரைத் தொண்டின் பணி தொடங்கி, இன்று நாம் வியக் கத்தக்க வகையில் வளர்ந்துள்ளது.

1. முல்லைப்பாட்டு ஆராய்ச்சி உரை, பக். 33

# XI

## நேற்றும் இன்றும்

இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் தமிழ் உரை நடை நன்கு வளர்ச்சியுற்றுள்ளதென்பதை இன்று அனைவரும் நன்றாக அறிந்துள்ளனர். பல நூற்றுக்கணக்கான திங்கள், கிழமை, நாள் இதழ்கள் தோன்றித் தமிழ் உரை நடையை வளர்த்து வருகின்றன. பல இதழ்கள் அரசியல் கட்சிக் கொள்கைகளைப் பரப்புவதற்காகத் தோன்றியனவாயினும், அவற்றாலும் தமிழ் வளர்கின்றது என்பதை யாரே மறுக்கமுடியும்! இலக்கியத்துக்காகவும், சமய வளர்ச்சிக்காகவும் ஒரு சில இதழ்களே நாட்டில் உள்ளன. அவை வெளியிடும் எண்ணிக்கையும் ஒரு சில நூற்றுக்கணக்கிலேதான் அமையும். ஆயினும் அரசியல் அடிப்படையிலே அமையும் இதழ்கள் வேகமான உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் பீடு நடையில் தமிழ் உரை நடையைக்கொண்டு வளர்கின்றன. அவ்வாறாய அரசியல் இதழ்கள் பல ஆயிரக் கணக்கில் நாட்டில் இன்று உலவுகின்றன. தத்தம் கட்சிக் கொள்கைகளைப் பரப்ப உதவும் நாள் இதழ்கள் அக் கொள்கைகளை வளர்ப்பதோடு, செய்திகளைத் தரும் வகையிலும் பணி ஆற்றுகின்றன என்னலாம். புத்தம்புதிய செய்திகளை நாள்தோறும் தாங்கிய இதழ்கள் உரை நடையை வளர்ப்பனவே. அவற்றுள் ஒரு சிலவற்றின் நடை, இலக்கிய நடையில் இயங்கவில்லை என்றாலுங்கூட, பெரும்பாலானவை தமிழ் மரபு கெடாத இலக்கிய வரம்பிற் குட்பட்ட உரை நடையையே கையாளுகின்றன என்னலாம். நன்றாகக் கற்றவர் மட்டுமன்றிச் சாதாரணமாக

எழுத்துக் கூட்டிப் படிக்கப் பழகுபவர்கள்கூட இத்தகைய நாளிதழ்களைப் படித்துத் தம் அறிவை வளர்த்துக்கொள்கின்றனர்கள். எனவே, நாளிதழின் உரை நடை உயர்ந்த இலக்கிய நடையல்லாவிடினும், நாட்டில் கல்வியைப் பரப்ப அந்த நடையே பெரிதும் உதவுகிறது என்னலாம்.

இந்த இதழ்களைத் தவிர்த்து, சிறுகதை, நாடகம் போன்ற கலை வளர்க்கும் இதழ்களும் நாட்டில் அதிகம். இன்றைய கலைகளில் பெரிதாகப் போற்றப்பெறும் சினிமாக் கலைக்கெனத் தனி இதழ்களும் உள்ளன. அவைகளெல்லாம் நாடகம், கதை முதலியவற்றை நாட்டில் வளரச் செய்கின்றன. இந்த நூற்றுண்டின் தொடக்கம் வரையிலே சிறுகதையோ, பெருங்கதையோ நாட்டில் இலக்கியங்களாகப் போற்றி வளர்க்கப்படவில்லை என்பதை வரலாறு காட்டும். ஆனல், இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் **ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார்** போன்றுர் பெருநவீனங்களாகிய பெருங்கதைகளை உரை நடையில் எழுதி வெளியிட்டார்கள். அவைகள் மிக அதிகமான அளவில் நாடெங்கும் பரவலாயின. ஆயினும், அக்காலத்தில் சிறு கதை இலக்கியம் அதிகமாகப் பரவவில்லை என்னலாம். இந்நூற்றுண்டின் இடைக்காலத்தில்-பல கலை இதழ்களும் பொழுது போக்கு இதழ்களும் தோன்றிய காலத்தில்—சிறு கதைகள் பல்கிப் பெருகலாயின. இச்சிறு கதை இதழ்களுள் சில ஐம்பதாயிரத்துக்கும் மேலான எண்ணிக்கையில் வெளியாகின்றன. உரை நடை வளர்ச்சியில் இந்த இதழ்களுக்குப் பெரும் பங்கு உண்டு என்னலாம்.

நாடகமும் இக்காலத்தில் ஓரளவு வளர்ந்து வந்துள்ளது. மிக அதிகமான அளவில் நாடகங்கள் இலவேனும் சென்ற நூற்றுண்டுகளைவிட, இந்த நூற்றுண்டில்

நாடக நூல்கள் தமிழில் அதிகமாக வளர்ச்சியுற்றன வென்றே அறிகிறோம். அந்தத் துறையில் பெரிதும் கருத் திருத்தி ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடக நூல்களை இயற்றிப் புகழ் பெற்றவர் **பம்மல் சம்பந்த முதலியார்** என்பவரேயாவர். அவர் நாடகங்களை எழுதியது மட்டுமன்றித்தாமே அந்த நாடகங்களை முன்னின்று நடிக்கச் செய்தும் நடித்தும் நாட கத்தை வளர்த்தார் என்னலாம். அவருடைய நாடகங்களில் நல்ல இலக்கிய உரை நடையைக் காணமுடியாது. பல நாட கங்களின் பாத்திரங்கள் கலப்பு மொழியையும் கொச்சை மொழியையுமே உபயோகிப்பார்கள். நாட்டில் சாதாரண மக்களின் மனதைக் கவர வேண்டுமாயின், அத்தகைய கொச்சை மொழியிலேதான் அது இயலும் என அவர் நினைத்திருப்பார். இன்றும் வாழ்கின்ற அறிஞராய அவர், நாடகம் எழுதத் தொடங்கிய அந்த நாளில் தமிழ் நாட்டில் கொச்சை மொழியே சாதாரண மக்கள் மொழியாய் இருந்ததை அறிந்து, அதன்படியே தம் நாடகப் பாத்திரங் களின் பேச்சுக்களையும் அமைத்துவிட்டார். எனினும், சிறந்த தம் உரை நடைப் பகுதிகள் விளக்கமாகவும் தெளி வாகவும் செல்கின்றன என்னலாம்.

இவரையன்றிப் பரிதிமாற் கலைஞரெனத் தம் பெய ரைத் தனித் தமிழில் மாற்றி அமைத்துக்கொண்ட மதுரை விளாங்குடி சூரியநாராயண சாத்திரியார் அவர்கள் சில நாடகங்களை இயற்றியுள்ளார். **'நாடக இயல்'** என்ற நாடகம் பற்றிய ஓர் இலக்கண நூலும் அவர் வழி நாடு பெற்றது. அவரும் சிறந்த நாடகப் பாத்திரங்களின் உரை நடையை ஓரளவு இலக்கிய அமைப்பில் அமைத்த போதிலும், சாதாரண பாத்திரங்களின் பேச்சையெல்லாம் கொச்சைத் தமிழிலேதான் அமைத்தார் என்னலாம். இவ் வாறு கொச்சைத் தமிழின் உதவி அந்த வேளைக்கு மக்களால் பெரிதும் விரும்பப்பட்டுப் பெருமதிப்பை ஆசிரியர்களுக்குத்

தேடித் தந்தாலும், இலக்கிய வளர்ச்சி வரலாற்றில் அவை கருகிய மொட்டுக்களாகவே மதிக்கப் பெறும். இருவர்தம் உரை நடைகளுக்கும் இரண்டோர் எடுத்துக்காட்டுக்கள் கண்டு மேலே செல்லலாம்.

**சம்பந்த முதலியார் நாடக உரை நடை:**

'இதென்னமோ சமாசாரம் தெரியலே! என்னமோ லேகியம் தித்தீச்சிக்கின்னு இருந்துண்ணு எடுத்து சாப்பிட்டேன், வயித்தியர் பொட்டியிலேயிருந்து; அது நம்மெ தள்ளுது—பூர்ணுதிலேகியம்—நல்ல லேகியம்.'[1]

'என்ன அம்மணி! எனக்கொண்ணுந் தெரியாதே! நான் தூங்கிக்கினு இருந்தேன். கூச்சல் கேட்டு என்ன விஷயமிண்ணு ஓடி வந்தேன்; தூக்கமெல்லாம் கெட்டுது. என்ன சேதி!'[2]

'அரசே, இது வரையில் நான் பட்டது வருத்தமன்று! இப்பொழுதுதான் எனக்குத் துக்கமாக இருக்கிறது. தம்முடைய வாயால் இவ்வண்ணம் கூறுகிறீர் நான் இதற்கோ பாத்திரன்? மகாராஜாவின் கட்டளையைக் கேட்டவுடனே இறந்திருப்பேன். ஆயினும், தம்மைக் கடைசீ முறை பார்த்து விட்டு பிறகு தற்கொலை புரியலாமென்று வந்தேன்.'[3]

'சத்திய சீலரே! மெச்சினேன் உமது பேரன்பை. உம்மைக் கொல்ல எனக்குச் சிறிதும் மனமில்லை, ஆயினும், நீர் வேண்டுவதை மறுக்கலாகாதென வுடன் பட்டேன், எடும் வாளை!'[4]

1. மனோகரன், பக். 49
2. ஷை பக். 16
3. ஷை பக். 71
4. ஷை பக். 85

**வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் நாடக உரை நடை:**

'ஐயா! குலாந்தகரே! நுமக்கேற்ற நண்பர் சுக சரீரர்! அவருக்கேற்ற நண்பர் நீர்! ஆனால், அவர் சரீரத்துக்குள் சுகமுண்டு; உம்முடை சரீரத்திலோ அஃதில்லை'[1]

'ஆ! அவ்வாறே செய்கிற்பேன். அதற்கையமில்லை என்னுயிர் நாதனே! இன்று பிற்பகலொரு விடயம் நிகழ்ந்தது. அதனை நின்பாலுரையாது யார் பாலுரைக்கப் போகிறேன்,'[2]

"சாமி! ஒரு சமாசாரம்—இந்தக் குலாந்தக எசமான் வீட்டிலே நம்ம மகராசா எதிரி பாண்டியன் ஊரிலிருந்து இரண்டு வீரர்கள் வந்திருக்கிறார்களாம். அவர்களிலே ஒருத்தன் நம்ம மகராசா மகள் கலாவதியம்மாவை முத்தமிட்டிட்டானும். அதைப் பார்த்துக் கொண்டிருந்த குலாந்தக எசமான் இன்றைக்கு அரண்மனையிலே நம்ம மகாராசா அவர்களிடத்திலே தெரியப்படுத்தினர். அது என் காதிலே விழுந்தவுடனே இங்கே எசமான்களிடத்திலே தெரியப்படுத்த வேண்டுமென்று ஓடி வந்தேன்."[3]

இவ்வாறு கொச்சைத் தமிழ் கலந்த உரை நடையும், வேறு வகையில் அமைந்த உரை நடையும் கலந்து வரும் நாடகங்களே இவர்கள் நாடகங்கள். சம்பந்த முதலியாருடைய பெரும்பான்மையான நாடகங்கள் இந்த வகையிலே செல்ல, வி. கோ. சூ. அவர்களுடைய உரை நடை இடத்திற்கு ஏற்ப ஓரளவு கொச்சையானாலும், அவரது நாடகவியல் போன்றவற்றிலும் பிறவற்றிலும் உயர்ந்த நடையைக் காண முடிகின்றது. இந்த உரை நடையில் நாம் மற்றொன்

1. கலாவதி, பக். 75;
2. ௸ பக். 163;
3. ௸ பக். 177.

றும் காணல் வேண்டும். வடமொழிச் சொற்கள் அதிகமாக உபயோகித்திருப்பதையும் நம்மால் எடுத்துக்காட்டாதிருக்க முடியவில்லை.

இந்த நூற்றுண்டின் தொடக்கத்திலே பிற சமயங்களோடு போட்டியிட்டு வளர வேண்டியிருந்த சைவம் வைணவம் என்ற இரு உள்நாட்டுச் சமயங்களும் மொழித் தூய்மையை மறந்து, சமய வளர்ச்சிக்காகப் பல வடமொழிக் காப்பியங்களின் துணையை நாடின. முன் சில நூற்றுண்டுகளிலே சில இலக்கியங்கள் தமிழில்—செய்யுள் நடையில்—மொழி பெயர்க்கப்பட்டன. ஆனல், இந்த நூற்றுண்டில் அவை பெரும்பாலும் உரை நடையில் மாற்றி அமைத்து எழுதப்பெற்றன. ஒரு சிலரே அறிய முடிந்த பா நடையிலும் பலரும் அறிந்துகொள்ளும் வகைக்கு உரை நடை பயன்பட்டது என்பது பொருத்தமே. எனவே, அப்படிச் சமயக் கதைகளை உரை நடையாக்கும்போது வடமொழிச் சொற்களை அப்படியே பெய்தார்கள். தனித் தமிழ் நடையை வளர்த்த முன் கண்ட அறிஞர் மறைமலை அடிகளார் காலத்தில் இவ்வாறு வடமொழி கலந்தும் எழுதும் வழக்கமும் அதிகமாய் இருந்தது. சாதாரண மக்கள் மட்டுமன்றிப் பேராசிரியர்களாய்ப் பணியாற்றிய **திரு. செல்வக் கேசவராய முதலியார்** போன்றவர்தம் உரை நடையிலும் அந்த வடமொழிக் கலப்பை அதிகமாகக் காணலாம். அவர் உரை நடை பற்றியே **'வசனம்'** என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் ஒரு சில இடம் காணின் இவ்வுண்மை நன்கு விளங்கும். எனவே, இரண்டு காணலாம்:

**"பத்தொன்பதாவது நூற்றுண்டின் பிற்பகுதியில் பாலியர்களும் பாலிகைகளும் படித்தற்கான பல வசன நூல்கள் ஏற்பட்டன. இவற்றில் கண்டதும் கேட்டதுமான சிலவற்றை எடுத்துரைப்பது**

தகுதி. துரைத்தனக் கலாசாலையில் சுதேச பாஷைகளின் விசாரணைத்தலைவராக இருந்த வால்டர் ஜாயிஸ் என்பவர். சில தமிழ்ப் புலவர்களுடைய உதவியால் மூன்று வாசக பாடங்களை உருப்படுத்தினர். இரண்டாவது மூன்றாவது வாசக பாடங்களில் பல பாடங்கள், இங்கிலீஷிலிருந்து சிறுவர்களுக்கேற்ற வாறாக மொழி பெயர்க்கப்பட்டவை. இவை பல்லாண்டு பல்லாண்டாக வாழாவிடினும், பல வருஷ காலம், சிறுவர் சிறுமியர் மாத்திரமேயன்றிப் பல தமிழ்ப் புலவரும், தமிழ் வசனம் வாசிக்கவும் எழுதவும் அறியத்தக்க சாதனங்களாகி இருந்தன.''[1]

''சில வருஷங்களாகச் சில அபிநவ கதைகளும் சில வசன நாடங்களும் சில வியாசங்களும் வெறுங் கதைகளும் சிலர் எழுதி வருகின்றனர். சில நாடகங்களும் வியாசங்களும் நேரான மொழிபெயர்ப்புகளாகவும் எழுதப் பட்டு வருகின்றன. இங்கிலீஷின் சாரமாகவும் சில எழுதப்படுகின்றன. இவற்றில் கொள்ளத்தக்கனவும் தள்ளக்கனவும் இன்னும் தீர்க்கமாக ஏற்படவில்லை. பழையன கழிதலாய்ப் புதியன புகுதலாய்க் காலதேச வியல்பு மாறி வரினும், சத்துள்ளனவாய் எஞ்சி நிற்கும் காலங் கண்ட பழம் பனுவல்களே புலவர் போற்றுவன. புலவர் போற்றுவன பழம் பனுவல்களேயாயினும் புலவர் திலகரானவர்கள் புதுக்கால் வெட்டாமல் இரார்; புதுக்கால் பயன் தருவதாயின், காலக்கிரமத்தில் போற்றப்பட்டு வரும். இல்லையாயின் தானே தூர்ந்து போய்விடும்.''[2]

''நூனடை செவ்வி பெறுதலான இந்தச் சித்தி, தொட்டுக் காட்டியும் சுட்டிக் காட்டியும் விளக்குவதான ஓர் வித்தை யன்று. தொட்டுக் காட்டாத

1. தமிழ் வியாசங்கள், பக். 113
2. ஷை பக். 117

வித்தை சுட்டுப் போட்டாலும் வராது' என்கிற விதி,இதற்கு முற்றும் பிரயோகமாகாது. கவிகள் போலவே கட்டுரை எழுதுவோரும், கருவிலே திரு வுடையவர். நாநலமுடைமை பிறவிக் குணங்களில் ஒன்று. 'தெய்வப் புலவனுக்கு நா உணரும் (சித்திர ஓடாவிக்குக் கை உணரும்),' என்பது கவிநடைக்கு மாத்திரமேயன்றிக் கட்டுரை நடைக்கும் பொருந்து வதாகும். சிறந்த வசன நடையின் திறங்களைக் கூர்ந்து உய்த்துணர்ந்தவர் கண்டபடி வசனத்தில், உரிய சொற்களாகிய நன்மொழி யுணர்த்தியும், நவின்றோர்க்கினிமை தருவதான ஓசையூட்டியும், செவ்வி செய்த நடையாகிய நவநீதம் தெய்வப் புலவர் எனப்படும் வாக்கிகட்கே கைவல்யம்''[1]

''இங்ஙனம் இழுமென் மொழியான் விழுமியது நுவலும் நோக்கம் இல்லாதவன் நூலெழுதப் புகுதற்பாலன் அல்லன். அவன் அது செய்வது வெறுஞ் சட்டி தாளிப்பதே. தனது மனத்தின் இயல்பான போக்குக்கு மாறான பொருள்களின் கூறு பாடுகளை விரித்தற்பொருட்டும் ஒருவன் நூலெழுதப் புகுதற் பாலன் அல்லன். அவன் அது செய்தல் அகாரியமே. மனப் போக்கொடு மாறுகொள்ளாமல் பொருந்திய விடத்தும், கூறலுற்ற பொருளின் கூறு பாடுகளைப் பூர்வோத்திரமாய்த் தீர்க்கமாக அறியா யாதவன் எழுதலான நூல், சென்று தேய்திறுத லாகும். அந்நூல் குறை குடமே. பிறருடைய நடையின் போலியாக எழுதப் புகுவது, அன்ன நடை நடக்கப் போய்த் தன்னடையும் கெடுவதே. பிறர் பின்பற்றத்தக்க நூனடை தீர்ந்த நடையாகக் கொள்ளப்படாது. பிறர் நடையைப் பின்பற்றிய நூல், திட்பமும் நுட்பமும் இல்லாததேயாகும். பிற நூற்பொருளையும் பிற நூல் நடையையும்

1. தமிழ் வியாசங்கள், பக். 120

பின்பற்றித் தொகுத்த நூல்கள், ஒட்டிட்டுத் தைத்த உடைகள் போலாம். அவை ரம்மியம் தரு வதும் இல்லை; நூற்கணக்கில் வைத்து எண்ணப்படு வதும் இல்லை.''[1]

இவ்வாறு ஒரு புறம் தனித்தமிழ் இயக்கமும் மறுபுறம் கலப்பு மொழியியக்கமும் விரவிக் கலக்க, நேற்றும் இன்றும்-கடந்த ஐம்பது ஆண்டு காலமாகத் தமிழ் உரை நடை நன்கு வளர்ந்து வருகிறது என்பதை நாம் நன்கு அறிகிறோம்.

காலஞ் சென்ற **நமச்சிவாய முதலியார்** அவர்கள் தமிழ் உரை நடை வளர்ச்சிக்குச் செய்த தொண்டினை நாம் மதிப் பிடமுடியாது. முதல் வகுப்புத் தொடங்கிப் பள்ளி வகுப்புக் களைத் தாண்டி, கல்லூரி வகுப்புக்கள் வரையிலும் அவர் பலப்பல பாடநூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். பள்ளிக் கூடங்களிற் பயிலும் சிறு பிள்ளைகள் உரை நடையைச் சொல் சொல்லாகப் பகுத்து உணர்ந்து, அவ்வுணர்ச்சிவழித் தாமே வாக்கியங்களை ஆக்கிக் கொள்ளும் வகையில் இலக் கண அமைதி கூடிய சிறு சிறு வாக்கியங்களை எழுதி வழி காட்டியவர் திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களாவர்: இன்று எத்தனையோ நூலாசிரியர்கள் பலப்பல பாட நூல்களை எழுதி வெளியிட்டு வருகின்றார்கள். அவர் அனை வரும் தமக்கெல்லாம் முன்னோடியாய் நின்று வழிகாட்டிய நமச்சிவாய முதலியாருக்கு என்றென்றும் கடமைப்பட்டவ ராவர்.

இருபதாம் நூற்றாண்டின் உரை நடையின் தந்தையார் எனப் போற்றத்தக்க பெருமை பெற்றவர் **திரு. வி. க.** என்றால், அதை மறுப்பார்யாருமிலர். இன்று தமிழ்நாட்டில் வாழும் பல எழுத்தாளர்களை அவர்தம் எழுத்துக்களே

1. தமிழ் வியாசங்கள், பக். 125, 126

உருவாக்கின என்பது மிகையாகாது. யாருக்கும் அஞ்சாது, எந்த அடிமைப் பணிக்கும் தம்மை உரிமையாக்காது தனித்து இருந்து, குடும்ப வாழ்வு குலைந்த போதும் தம் அண்ணனார் ஆதரவில் இருந்து, சாது அச்சகம் அமைத்து, சளையாது உரை நடையில் பலப் பல நூல்கள் எழுதிய இராயப் பேட்டை முனிவர் திரு. வி. கல்யாணசுந்தரனாரைத் தமிழ் உலகம் மட்டுமன்றி, அரசியல் உலகமும், தொழிலாளர் உலகமும், பெண்டிர் உலகமும் என்றென்றும் போற்றக் கடமைப்பட்டன. அவர் தமிழ் நடை-சிறப்பாக உரை நடை-எல்லாராலும் போற்றப் பெறுவது. இன்று வாழ்கின்றவருள் பல்லோர் அவர் உரை நடையைப் பின் பற்றுபவர் என்னலாம். அவர் நடையில் ஒரு புது அழகு—பொலிவு, விளங்கக் காணலாம்.

சிறு சிறு வாக்கியங்களாக—பேச்சு நடையை ஒத்த வகையில்—தமிழ் உரை நடையைத் திரு. வி. க. அவர்கள் எழுதுவார்கள். அவர் எடுத்து விளக்காத பொருள் இல்லை என்னலாம்—கடவுள் நெறி, காதல் வாழ்வு, பெண்மை நலம், தொழிலாளர் வாழ்வு, மாணவர் வருங்காலம், அரசியல் அலைகள், இயற்கை எழில் இத்தனையும் அவர்தம் எழுத்தோவியங்களில் காணலாம். அவருடைய உரை நடையில் துடிதுடிப்பு மிளிர்வதைக் காணலாம். சிறு சிறு வாக்கியங்களாயினும், அவற்றால் தெளிந்த கருத்துக்களை அவர் விளக்க முன்னிற்பதைப் பயில்வார் நன்கு அறிவர்.

> **''போர் இரு வகை. ஒன்று அறப்போர்; மற்றொன்று மறப்போர், அறப்போர் தன்னலமற்றது; மற்றையது தன்னலமுடையது. தன்னலமற்ற அகிம்சா தர்மப் போர் கொலையாகாது. மற்றப் போர் கொலையின் பாற்படும். விளக்கம் பகவத் கீதையிலும் திருக்குறளிலும் பார்க்க.''[1]**

1. இந்தியாவும் விடுதலையும்; பக். 16

என்ற அவர் தம் இனிய எளிய நடை உயர்ந்த பொருளை விளக்குவதைக் காணலாம். உயர்ந்த பொருள்களையும் அவர்தம் உரைநடை எளிமையில் நன்கு விளக்கும் திறம் வாய்ந்த தென்பதைக் கீழ் வரும் பகுதியால் உணரலாம்.

**"தத்துவம் என்பது மாயா காரியம். மாயையே இயற்கை. இயற்கை இறைவனது உடல் -போர்வை. இறைவனுக்கு இருவித நிலையுண்டு; ஒன்று இயற்கையை உடலாகக் கொண்டது; மற்றொன்று இயற்கையைக் கடந்து நிற்பது. இசை நாதத்தின் வாயிலாக எல்லாத் தத்துவங்களிலும் கலந்து நிற்பது. அவ்வத் தத்துவத்தில் நின்று இசையெழும்போது, அஃது அவ்வத் தத்துவ சொரூபமாகவே பயன் விளைக்கும். அதன் சுய சொரூபம் நாதத்தாலேயே விளங்கும். நாதம் வரை சென்ற மக்களே இசையின் நுட்பம் உணர்ந்தவர்களாவார்கள்."[1]**

இவ்வாறு அவர் உரை நடைக்குப் பல எடுத்துக்காட்டலாம். இந்த முறையிலேதான் இன்று உரை நடை வளர்ந்துள்ளதை அனைவரும் அறிவோம். மறைமலை அடிகளைத் திரு. வி. க சிறக்கப் போற்றினாலும், அவர் நடையில் தூய தனித் தமிழ் மணம் வீசவில்லை என்பதையும் அறிய வேண்டும்.

பாக்களுக்குச் சீரும், தொடையும், அடியும் எப்படிச் சிறந்து நிற்கின்றனவோ, அப்படியே உரை நடைக்குச் சொல்லாட்சியும், பத்திப் (Para) பிரிவும் மிக முக்கியமானவை. நல்ல சொற்களைக்கொண்ட சிறு சிறு வாக்கியங்களாக அமைத்து, அவற்றால் பொருள் அமைதி கருதிச் சிறு சிறு பத்திகளை அமைக்கும் திறன் திரு. வி. க. அவர்களிடம் மிக்கிருக்கக் காணலாம். சென்ற இரண்டொரு

1. இந்தியாவும் விடுதலையும் பக். 66, 67

நூற்றுண்டுகளில் உரை நடை வளர்ச்சி பெற்றுலுங்கூட அந்நாளிளெல்லாம் பத்தி பிரிக்கும் வகை அவ்வளவு அதிகமாகப் போற்றப் பெறவில்லை. மற்றும், வாக்கியங்களெல்லாம் நீண்டனவாகச்—சில பக்கங்கள் செல்லும் அளவிலே கூட—அமைந்துள்ளன. எல்லாராலும் அவ்வாக்கியங்களைப் படித்து அறிதல் கூடுமோ? எனவே, சின்னஞ்சிறு வாக்கியங்களைக் கொண்டே ஆசிரியர் தம் உள்ளக் கருத்தை வெளியில் காட்ட இயலும். திரு. வி. க. அத்துறையில் தாமாகவே சென்று எளிமையாக வெற்றி பெற்றுர். இன்று அவர் வழிச் சென்று பல பத்திரிகாசிரியர்களும், பேராசிரியர்களும் நல்ல பயன்களைப் பெறுகின்றுர்கள் என்பது கண்கூடு.

இன்று—இருபதாம் நூற்றுண்டின் இடையிலேதான் தமிழ் உரை நடை என்பது என்ன என்று ஆராயக்கூடிய அறிவு மனப்பான்மையும் மக்கள் உள்ளத்தில் இடம் பெற்றுள்ளது. மேலை நாட்டிலே பல ஆண்டுகளாக எழுதி வைக்கப்பெற்ற உரை நடை இலக்கணங்களை ஆய்ந்து, அவ்விலக்கண நெறி பிறழா வகையில் தமிழ் உரை நடை அமைந்துள்ளதா எனப் பகுத்துப் பார்க்கவும் தொடங்குகின்றனர். எனவே. இந்த நூற்றுண்டின் இடைக்காலமாகிய இற்றை நாளில், உரை நடை வளர்ச்சியும் உரை நடை பற்றிய ஆராய்ச்சி வளர்ச்சியும் மிக அதிகமாக வளர்வதைக் காண இயல்கின்றது.

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்,' என்ற கனவினைக் கண்டார் பாரதியார். அக்கனவு இந்த நாளில் நிறைவேறி வருவதைக் காண்கிறோம். இத்துறையிலும் தமிழ் உரை நடை வளர்ச்சியுறுகின்றது. அறிவியற்றுறை நூல்கள் பல நல்ல தமிழில் மொழிபெயர்க்கப் பெறுகின்றன. ஆங்கில நாட்டுக் கதைகளும் பிற வெளி நாட்டுக் கதைகளும் தமிழில் மொழிபெயர்க்கப் பெறுகின்றன.

இந்திய நாட்டில் உள்ள வங்காளி, மராத்தி, இந்தி, மலையாளம் போன்ற பிற மொழிகளிலிருந்து சிறு கதைகளும் பெருகதைகளும் மொழிபெயர்க்கப் பெறுகின்றன. பல்வேறு பிற நாட்டார் கருத்துக்கள் தமிழில் உரை நடையாக்கப்பெற்று வெளிவருகின்றன விண்வழி இயங்கும் விஞ்ஞானக் கருத்துக்கள் வரை இன்று அனைத்தும் மொழிபெயர்க்கப் பெறுகின்றன. எனவே, இன்றைய உரைநடை மொழிபெயர்ப்பால் நன்கு வளர்கிறது என்னலாம்.

உரிமை பெற்ற இந்திய அரசாங்கமும், அதன் உறுப்பு ஆட்சியாக அமையும் சென்னை அரசாங்கமும் தமிழும் பிற நாட்டு மொழிகளும் வளரப் பேருதவி செய்கின்றன. வெளி வரும் நல்ல உரைநடை நூல்களுக்குப் பரிசுகள் தருகின்றன. ஒன்றும் அறியாச் சாதாரண மக்களும், குழந்தைகளும் உணர்ந்துகொள்ளுகின்ற வகையில் சிறு சிறு எளிய நூல்களை எழுத வைத்துச் சிறந்தவற்றிற்குப் பரிசுகள் வழங்குகின்றன. அரசாங்கத்தார் மட்டுமன்றிச் சில தனித்த சபைகளும் கழகங்களுங் கூடக் கட்டுரைப் போட்டி முதலியன நடத்திச் சிறந்த எழுத்தாளர்களுக்கு நல்ல வகையில் பரிசளித்துத் தமிழ் உரைநடையை வளர்த்து வருகின்றன. எனவே, இன்றைய உரைநடை வளர்ச்சியில் அனைவரும் பங்கு பெறுகின்றனர்.

இவ்வாறு உரைநடை வளரும் நிலையில் தமிழ் அறிஞர் தம் பங்கினை நல்ல முறையில் செய்து உதவுகின்றனர். இந்த நாளில் மக்கள் படிக்கும் பழக்கத்தை அதிகமாக வளர்த்துக்கொண்டார்கள்; நாட்டில் போதிய நல்ல நூல்கள் இல்லையே என்ற குறையை நீக்கும் வகையிலே அறிஞர் பலர் பலப்பல நூல்களைப் பலப்பல வழிகளில் எழுதி வந்துள்ளார்கள். திருந்திய வகையில் நல்ல

உரைநடை நாட்டில் இன்று வளர்ந்து வருகிறது என்ன லாம். சிறப்பாக அறிஞர் சிலர் உயர்ந்த வாழ்வு நலக் கருத்துக்களையும் வளர்கின்ற கலை பற்றிய கருத்துக்களை யும் நல்ல உரைநடையில் எழுதி உதவுகின்றனர். அவர் களுள் **டாக்டர். மு. வரதராசனார், டாக்டர். ரா. பி. சேதுப் பிள்ளை, திருவாளர்கள். அண்ணாத்துரை, கி. வ. ஜகந்நாதன்** போன்றவர்களின் பணி போற்றத்தக்கதாகும், தமிழ் நாட்டில் இன்று நூற்றுவருக்கு மேற்பட்ட நல்ல எழுத் தாளர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரைப் பற்றியும் தனித்தனியாக ஆராயின் நூல் விரிவடையும். எனவே, இந்த அளவோடு இன்றைய உரைநடை வளர்ச்சியைப் பற்றிய ஆய்வினை நிறுத்துவோம்.

இவ்வாறு தொல்காப்பியனார் காலத்துக்கு முன் தொடங்கி அமைதியாக அசை போட்டு வளர்ந்து வந்த உரைநடை, இந்த இருபதாம் நூற்றாண்டின் இடையில் பல வகையில், பல நிலையில், பல துறையில், பல முறையில் வளர்ந்து ஓங்கி நிற்கிறது என்னலாம். 'இதன் வளர்ச்சி— உரைநடையின் சிறப்பு—மேலும் மேலும் செழித்துச் சிறக்க!' என வாழ்த்தி நாமும் இந்த நூலை முடிப்போம்.

# BOOKS REFERRED


Atkins. J. W. H. —Literary Criticism in Antiquity

Bonary Dobree —Modern Prose Style

Caldwell —Comparative Grammar of Dravidian Languages

Chengalyaraya Pillai —History of Tamil Prose

Gardiner, A. H. —The Theory of Speech and Language

Herbert Read —English Prose Style

Hudson, W. H. —1. An Introduction to the Study of Literature

—2. Some Principles of Literary Criticism

James Reeves —The Critical Sense

Kanakasabai Pillai —Tamil 1800 years ago

Marjerie Boulton —The Anatomy of Prose

Sri Philip Sidney —Apology for Poetry

Dictionary of World Literary Terms

Encyclopaedia Britanica

Oxford Dictionaay

Tamil Lexicon

The Concise Oxford Dictionary of Current English

# எடுத்தாண்ட தமிழ் நூல்கள்

| | |
|---|---|
| தொல்காப்பியம் | —உரைகள் |
| அகநானூறு | |
| புறநானூறு | |
| ,, | டாக்டர் உ. வே. சா. முன்னுரை |
| பரிபாடல் | |
| ,, | டாக்டர் உ. வே. சா. முன்னுரை |
| பத்துப்பாட்டு | |
| ,, | டாக்டர் உ. வே. சா. முன்னுரை |
| பதிற்றுப்பத்து | |
| சீவக சிந்தாமணி | |
| சிலப்பதிகாரம் | (உரை) |
| குறுந்தொகை | |
| திருக்குறள் | —வை. மு. சடகோபராமாநுஜாசாரியார் முன்னுரை |
| இறையனார் களவியல் உரை | |
| அப்பர் தேவாரம் | |
| சுந்தரர் தேவாரம் | |
| நேமிநாதம் | —குணவீர பண்டிதர் |
| திருவாய்மொழி | —ஈட்டு உரை |
| நன்னூல் | —சங்கர நமச்சிவாயர் உரை |
| இலக்கண விளக்கம் | —வைத்தியநாத தேசிகர் |
| இலக்கணக்கொத்து | —சாமிநாத தேசிகர் |
| தொல். பாயிர விருத்தி | —சிவஞான முனிவர் |
| தொல். முதற்சூத்திர விருத்தி | |
| சிவஞான பாடியம் | |

| | |
|---|---|
| மதுரைக் கலம்பகம் | —குமரகுருபரர் |
| வெண்பாப் பாட்டியல் | —கா. ர. கோவிந்தராச முதலியார் முன்னுரை |
| தொண்டை மண்டல சதகம் | |
| நாட்குறிப்பு | —ஆனந்தரங்கம் பிள்ளை |
| சிவசமயவாத உரை மறுப்பு | —சிவஞான சுவாமிகள் |
| ஞானோபதேச காண்டம் | —தத்துவபோத சுவாமிகள் |
| 'அறன்' | —வீரமாமுனிவர் |
| போப்புக் கட்டுரை | |
| கால்டுவெல் கட்டுரை | |
| திருவருட்பா உரைப் பகுதி | —இராமலிங்க சுவாமிகள் |
| பெரிய புராண வசனம் | —ஆறுமுக நாவலர் |
| தமிழ் வியாசங்கள் | —செல்வக்கேசவராய முதலியார் |
| தொலைவில் உணர்தல் | —மறைமலை அடிகள் |
| மாணிக்கவாசகர் வரலாறு | ,, |
| முல்லைப்பாட்டு ஆராய்ச்சி | ,, |
| கலாவதி | —வி. கே. சூரியநாராயண சாத்திரியார் |
| மனோகரன் | —ப. சம்பந்த முதலியார் |
| இந்தியாவும் விடுதலையும் | —திரு. வி. க. |
| தமிழ்ச் சாசனங்கள் | —வ. தங்கைய நாடார் |
| தென்னிந்திய சாசனங்கள் | |
| சிந்தனைக் கட்டுரைகள் | —வையாபுரிப் பிள்ளை |
| தமிழ்ச் சுடர் மணிகள் | ,, |
| சோழர் வரலாறு | —சதாசிவ பண்டாரத்தார் |
| கலைக் களஞ்சியம் | |
| தமிழக வரலாறு | —அ. மு. ப. |
| சுதேசமித்திரன் | —தீபாவளி மலர் |